
# உயிர்ச்சுடர்

தமிழ் நிவேதா



## நூல் விவர அட்டவணை

| | |
|---|---|
| நூலின் பெயர் | : உயிர்ச்சுடர் |
| ஆசிரியர் | : தமிழ்நிவேதா |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| முதற் பதிப்பு | : செப்டம்பர், 2008 |
| மொழி | : தமிழ் |
| தாளின் தன்மை | : 11.6 K.g. வெள்ளைத் தாள் |
| நூலின் அளவு | : 1 x 8 கிரவுன் |
| அச்சு எழுத்து | : 11 புள்ளி |
| மொத்தப் பக்கங்கள் | : 224 |
| பைண்டிங் | : சாதா அட்டை |
| நூல் வெளியிடுவோர் | : அருணோதயம்<br>5/3, கௌடியா மடம் சாலை,<br>இராயப்பேட்டை,<br>சென்னை-14. |
| கணினி அச்சு | : வேலன் லேசர்<br>சென்னை-18. ✆ 94441-01753 |
| அச்சிட்டோர் | : ஜீ.எம்.கிராபிக்ஸ்<br>சென்னை-14. |

**விலை: ரூ.70.00**


667444
894.8113 THA

CONNEMARA PUBLIC LIBRARY
10 FEB
CHENNAI

# உயிர்ச்சுடர்

CONNEMARA PUBLIC LIBRARY
10 FEB 2009
CHENNAI-600 008

# உயிர்ச்சுடர்



## 1

இருள் பிரிந்தும் பிரியாததுமான விடிகாலை நேரம். நெருக்கமாய் அமைந்திருந்த அந்த காலனி வீடுகளில் ஒன்றிலிருந்து எம்.எஸ்ஸின் சுப்ரபாதம் ஒலித்துக் கொண்டிருந்தது. பூஜை அறையிலிருந்து கிளம்பிய பூ வாசமும், சாம்பிராணி மணமும் வீட்டை நிறைத்தது. தெய்வப் படங்களுக்கு கற்பூர ஆரத்தி காண்பித்த பின்னர். பூஜை அறை வாயிலில் நின்றிருந்த மனைவியிடம் பிரசாதத்தை கொடுத்த சதாசிவம் பிள்ளை. ''நந்தினி எழுந்தாச்சா?'' என்றார்.

''இந்நேரத்துக்கு அவ என்னிக்கு எழுந்திருக்கா? பொழுது விடிஞ்சப்புறம் பெட் காபியோட போனாதான் எழுந்திருப்பா.''

பேசியபடியே பில்டர்காபியை கலந்து கணவனிடம் கொடுத்துவிட்டு வாசலில் கோலம் போடப் போனாள் சுந்தரி. வாய் கந்த சஷ்டி கவசத்தை முணுமுணுக்க பழகிய கைகள் கோடுகளை இழுத்தன. சில நிமிடங்களில் வாயிலில் இலையும் கிளையுமாய் விரிந்து கிளைகளில் கிளிகள் கொஞ்சின. ஒரு நேர்த்தியான ஓவியனின் லாவகத்துடன் வரையப்பட்ட கோலத்தை ரசித்துப் பார்த்த சதாசிவம் பிள்ளை. சுந்தரி எழுந்து உள்ளே போனதும் அன்றைய பேப்பரைப் பிரித்தார்.

கோல டப்பாவை பூஜை அறையில் வைத்துவிட்டு ''நந்தினி'' என குரல் கொடுத்தபடியே மகளின் அறைக்கு சென்றாள் சுந்தரி. தலைவரை போர்வையை இழுத்து விட்டு அவள் ஆழ்ந்த உறக்கத்திலிருக்க, ''நந்தினி நேரமாச்சு. எழுந்திரு'' என்றபடி அவள் போர்வையை விலக்கினாள். கறுப்பு போர்வைக்கு நடுவே அவள் முகம் மேகத்திடையே மின்னும் நிலவாய் தெரிய, ''போம்மா'' என்றபடி புரண்டு படுத்தாள் நந்தினி.

''பொழுது விடிஞ்சாச்சு நந்தினி. பல் தேய்ச்சுட்டு வா. காபி குடிக்கலாம்'' என்று மகளை உலுக்கிய சுந்தரி அவள் அசையாமல் இருக்கவே, ''எப்படியோ போ'' என முணு முணுத்தபடி, கணவனின் அழைப்புக்கு பதில் சொல்லப் போனாள்.

காலை டிபனையும், மதியத்திற்கு சாதமும் செய்து முடித்து கணவருக்கும், மகளுக்கும் டிபன் பாக்ஸில் எடுத்து வைக்கும் போது ''காபி'' என்றபடி நந்தினி சமையலறைக்கு வந்தாள்.

''கொஞ்சம் சீக்கிரமா எழுந்தா என்ன நந்தினி? தினமும் லேட்டா எழுந்திருக்கறது. அப்புறம் காலேஜுக்கு நேரமாச்சுன்னு கால்ல வெந்நீரை கொட்டிட்டுப் பறக்கறது. இவ்வளவு பெரிய பெண் சமையலில் கூட மாட ஒத்தாசை செஞ்சா என்ன? நானெல்லாம் உன் வயசில.''



''அம்மா முடிஞ்சா ஒரு காபி கொடு. இல்ல நான் குளிக்கப் போறேன். உன் லெக்சரைக் கேட்க இப்ப எனக்கு நேரமில்லை.'' நந்தினி எழுந்திருக்கவும் பதில் பேசாது டம்ளரில் காபியை நிறைத்து அவள் எதிரே வைத்தாள் சுந்தரி.

அடுத்த பத்து நிமிடத்தில் நந்தினி காபியை குடித்து விட்டு, குளித்துத் தயாராகி நீல ஜீன்சும், காட்டன் குர்த் தாவும் அணிந்து கையில் புத்தகங்களுடன் டேபிள் மீதிருந்த டிபன்பாக்சை எடுத்துக் கொண்டு வாயிலுக்கு ஓடினாள்.

''நந்தினி. டிபன் சாப்பிட்டுவிட்டு போடீ'' என்றாள் சுந்தரி பின்னாடியே வந்து.

''எனக்கு நேரமாச்சு. சாயங்காலம் சாப்பிட்டுக்கறேன்'' என குரல் கொடுத்தபடி ஓடிச் சென்று கல்லூரி பஸ்சில் ஏறினாள் நந்தினி.

''ஒரு நாளைப் போல லேட்டா எழுந்தா எப்படி நேர மிருக்கும்? வெறும் வயித்தோடவா படிக்கப் போவாங்க? பசியோட போனா என்னத்தை கவனிக்க முடியும்? உடம்பு தான் பலவீனமாகும். அவளுக்கா தெரிய வேண் டாமா?'' கணவரிடம் குறைப்பட்டாள் சுந்தரி.

''விடு சுந்தரி. இந்த வயசுலதான் எதைப் பத்தியும் கவலைப் படாம தூங்க முடியும். அவளுக்குன்னு குடும்பம். பொறுப்புன்னு ஏற்பட்டா, தானே சரியாயிடப் போறா. இதுக்கு போய் கவலைப்பட்டுட்டு'' என்று மனைவியை சமா தானப்படுத்திவிட்டு அலுவலகம் கிளம்பினார் சதாசிவம்.

சதாசிவம் சுந்தரி தம்பதிகளுக்கு நந்தினி ஒரே பெண். சதாசிவத்திற்கு செக்ரட்ரியேட்டில் வேலை. பழுத்த வைதீக குடும்பத்தில் பிறந்து, அதைப் பின்பற்றி வாழ்பவர். சுந்தரியும் கணவரின் மனம் பார்த்து நடப்பவள். அவர்களுக்கு திருமணமாகி சில வருடங்கள் குழந்தை யில்லாமல் இருந்து பிறகு பிறந்தவள் நந்தினி. எனவே இருவரும் அவளை கண்ணுக்குள் வைத்துப் பார்த்தனர். சதாசிவம் தினமும் எழுந்ததும் குளித்து பூஜையை முடிக்காமல் ஒருவாய் தண்ணீர் கூட குடிக்க மாட்டார். அவர் பூஜைக்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் செய்து விட்டு, மஞ்சள் பூசிய முகமும், நெற்றியை நிறைத்த குங்குமமும், கரையிட்ட கைத்தறி புடவையும், தலையில் ஒரு துளி பூவுமாய் சுந்தரியும் ஒரு அம்மன் சிலை போல் அவர் அருகே நிற்கையில் சதாசிவம் பிள்ளைக்கு மனசு நிறைந்து போகும். ஆண்களின் மனதையும், வயிற்றையும் திருப்திப்படுத்தி, வீட்டைப் பராமரிப்பதுதான் பெண்களின் வேலை என்னும் பரம் பரையில் வந்தவள் சுந்தரி. அதிர்ந்து ஒரு வார்த்தை பேசாதவள். மகளையும் அது போலத்தான் வளர்க்க முற்பட்டாள். ஆனால் நந்தினி வளர வளர தனக்கென்று ஒரு தனித்தன்மையை ஏற்படுத்திக் கொண்டாள். பெரியவளான பிறகும் பெண் பேண்ட், ஷர்ட் என்று அணிவதையும், தெருப் பையன்களுடன் சேர்ந்து கிரிக்கெட் விளையாடுவதையும் பார்த்த சுந்தரி கலங்கிப் போனாள். கால மாற்றங்களை எடுத்துச் சொல்லி சதா சிவம்தான் மனைவியை சமாதானப்படுத்தினார். தனக்கு பிடிக்கவில்லை எனினும் மகளின் பிடிவாதத்திற்கும் கணவரின் அறிவுறுத்தலுக்கும் பணிந்து அவள் நட வடிக்கைகளை கண்டு கொள்ளாமல் இருந்தாள்.



வேலைக்காரிக்கு டிபனையும் காபியும் கொடுத்து விட்டு பாத்திரத்தை ஒழித்துப் போடுகையில் 'பாவம் மதியம் வரை இந்த பெண் சாப்பிடாமல் இருக்குமே!' என்று மனதுள் அங்கலாய்த்தாள் சுந்தரி.

நந்தினி கல்லூரி பஸ்ஸில் ஏறியதும் 'ஹாய்', 'ஹலோ' என்ற குரல்கள் கத்தலாய் கேட்டன. எல்லோருக்கும் உற்சாகமாய் 'ஹலோ' சொன்னபடி சென்று ரேகாவின் அருகே அமர்ந்த நந்தினி அவள் டிபன் பாக்சை பிடுங்கினாள். "வாவ், வெஜ் பிரியாணியா?" என்றபடி ரசித்து சாப்பிடத் தொடங்கினாள்.

"வழக்கம் போல் இன்னிக்கும் நீ சாப்பிடலையா நந்தினி?" என்றாள் சுஜாதா.

"எங்கம்மா தினமும் இட்லி, உப்புமா, இடியாப்பம்னு தான் செய்வாங்க. ஆனா ரேகா அம்மா சைனீஸ் தந் தூரின்னு வெரைட்டியா சூப்பரா செய்வாங்களே" என்றாள் நந்தினி.

"ஆக நீ ஓசி சாப்பாடு சாப்பிட தினம் உங்கம்மாவை அழ வெக்கிறியா?" தாரிகா கேட்கவும், "எங்கம்மா இதுக் கெல்லாம் அழுதா நான் என்ன செய்ய முடியும்? ஐயாம் ட்வென்டி ஒன் இயர்ஸ் ஓல்ட். என்னை பாத்துக்க எனக்குத் தெரியாதா?" நந்தினி அலட்சியத்துடன் தோள்களைக் குலுக்கினாள்.

"ஓ.கே. இன்னிக்கு மதியம் ப்ரீதானே. நாம சினிமா வுக்குப் போகலாமா?" என்றாள் ரேகா.

"ஷ்யூர்."

"என்ன படம்?"

"எந்த தியேட்டர்?"

''எத்தனை மணிக்கு ஷோ.''

''டிக்கெட் வாங்க யார் போவது?'' என எல்லாம் பேசி முடிக்கும்போது கல்லூரி வந்து விட்டிருந்தது. எம்.பி.ஏ. வின் இறுதியாண்டில் இருந்தார்கள் நந்தினியும் அவள் தோழிகளும். ரேகாவும் நந்தினியும் பள்ளியிலிருந்தே ஒன்றாய் படித்து வருபவர்கள். தாரிகாவும் சுஜாதாவும் பி.பி.ஏ. படிக்கும்போது வந்து சேர்ந்து கொண்டார்கள். எல்லோருமே நன்றாகப் படிப்பவர்கள்தான் என்றாலும் நந்தினி கோல்டு மெடலிஸ்டாக இருந்தாள்.

சிரித்தபடியே வகுப்பறைக்கு விரைகையில் ''மதியம் கல்லூரி பஸ் ஸ்டாப்பில் மீட் பண்ணலாம்'' என்றபடி பிரிந்தார்கள்.

மாலை வகுப்புகள் முடிந்ததும் நந்தினி லைப்ரரி போய் முதல் நாள் எடுத்த புத்தகத்தை ஒப்படைத்துவிட்டு பஸ் ஸ்டாப்பை நோக்கி விரைந்தாள். கல்லூரிக்கு எதிரே உள்ள ஸ்டாப்பிங்கில் நின்றிருந்த சுஜாதாவும், தாரிகாவும் அவளைப் பார்த்து கையசைத்தனர். தோழிகளுடன் படம் பார்க்கப் போகும் உல்லாசத்தில் நந்தினி துள்ளிக் குதித்து ரோட்டைக் கடக்க முற்பட்டாள். இரண்டு எட்டுகளை வைத்ததும் திடீரென ப்ரேக்கிட்டு தன்னை முட்டினாற் போல் நின்ற பைக்கைப் பார்த்ததும் ஒரு நிமிடம் திகைத்து தான் போனாள். இன்னும் ஒரு அடி வைத்திருந்தாலும் விபத்து நடந்திருக்கும். ஹெல்மெட் முகம் முழுவதையும் மறைத்திருக்க, நீலநிற சட்டையில் பைக்கில் அமர்ந் திருந்தவனை பார்த்து 'ஸாரி' என பளீரென புன்னகைத் தாள் நந்தினி. அவன் எதுவும் பேசத் தோன்றாமல் இருக்க, சிரித்தபடி அவனை கடந்து போனாள். பின்னால் நின்ற வண்டிகளின் ஹார்ன் சப்தத்திற்கு தன் வண்டியை



ஸ்டார்ட் பண்ணி அவன் நகரும்போது, பஸ் ஸ்டாப்பில் காற்றில் கலைந்து பறந்த கூந்தலை ஒரு கையால் லாவக மாய் ஒதுக்கியபடி தன் தோழிகளிடம் பேசிச் சிரித்தவளை ஒரு சுவாரஸ்யத்துடன் பார்த்தபடி சென்றான்.

தியேட்டர் வாசலில் தாரிகாவின் மாமா டிக்கெட்டுடன் காத்திருந்தார். அவருக்கு நன்றி சொல்லிவிட்டு அவர்கள் உள்ளே போய் அமரவும் படம் ஆரம்பிக்கவும் சரியாக இருந்தது. அது ஒரு காமெடிப் படம். படத்தில் வரும் காமெடி சீன்களுக்கு மிகையாய் சிரித்து, சண்டை காட்சிகளுக்கு ஆர்ப்பாட்டமாய் கை தட்டி சோகமான காட்சிகளில் அளவுக்கு மீறி வருத்தப்பட்டு 'ச்சு' கொட்டி இவர்கள் பண்ணிய கலாட்டாவில் படம் பார்ப்பவர்கள் எல்லாம் திரும்பிப் பார்த்தனர். மூன்று மணி நேரம் வாய்விட்டுச் சிரித்ததில் லேசான மனதுடன் வெளியே வந்தனர். ரேகாவும் சுஜாதாவும் ஒரு ஆட்டோவில் கிளம்ப, தாரிகா அருகிலிருக்கும் தன் மாமா வீட்டிற்குப் போவதாக சொல்லிவிட்டு விடைபெற்று போனதும்,

நந்தினி ஒரு ஆட்டோவை நிறுத்தி தன் வீட்டிற்கு கிளம்பினாள். தெருமுனை திரும்பும்போது அம்மா கவலையுடன் வாசலில் நிற்பது கண்ணில் பட்டது. இன்று சினிமா போவதை வீட்டில் சொல்லவில்லை என்பது அப்போதுதான் நினைவு வந்தது.

எப்பவும் கல்லூரி முடிந்ததும் வீட்டிற்கு வரும் பெண் எப்போதாவது சில மணி நேரம் தாமதமாக வந்தால் அதற்குத் தகுந்த காரணம் இருக்கும் என்று கூடவா தோணாது? வாசலிலேயே காத்திருந்து தன் அக்கறையை எல்லோருக்கும் பறை சாற்ற வேண்டுமா?

அம்மாவின் புலம்பல் தாளாமல் அப்பாவும் இந்நேரம் அவளைத் தேட புறப்பட்டிருப்பார். தேவையின்றி

அலட்டிக் கொள்ளும் அம்மாவை சீண்டிப் பார்க்க வேண்டும் போலிருந்தது. ஆட்டோவிலிருந்து அங்கேயே இறங்கிக் கொண்டாள். வந்த வழியே திரும்பிப் போய், அடுத்த தெருவில் இருந்த அவள் பள்ளித் தோழி மீனுவின் வீட்டிற்குள் நுழைந்தாள். முன் ஹாலில் அமர்ந்திருந்த மீனுவின் பாட்டி "யாரது?" என்றார் தன் கண்ணாடியைத் தூக்கிப் பார்த்தபடி.

"நான் நந்தினி பாட்டி."

"எந்த நந்தினி? சுந்தரியோட பொண்ணா? உட்காரு. என்ன இப்பவெல்லாம் வீட்டுக்கு வர்றதேயில்லயே நீ?"

"மீனு ப்ளஸ்டூ வோட நிறுத்திட்டா நா. காலேஜ் போறேனே. நேரமே இல்ல. மீனு எங்க பாட்டி?"

"அவளும் அவ அம்மாவும் கோவிலுக்கு போயிருக்கா. இன்னிக்கு பிரதோஷம் இல்லியா? ம்... முந்தி நாள் தவறாம கோவிலுக்கு போவேன். இப்ப ஒரு விசேஷம்னா கூட போக முடியறதில்ல. வீட்ல நின்னே கோபுரத்தைப் பாத்து கும்பிடறதோட சரி."

நந்தினி சிரித்தாள். "பாட்டி நீங்க வீட்ல உட்காந்துட்டு கற்பகாம்பாளையும், கபாலீஸ்வரரையுமே நினைச்சிட்டு இருக்கீங்க. ஆனா கோவிலுக்குப் போகிற பலர் வீட்ல பாதியில விட்ட சமையலையும், பக்கத்து வீட்டுச் சமாச்சாரங்களையும் தான் பேசிட்டு இருப்பாங்க. சோ நீங்க கோவிலுக்கு வரலைன்னு உங்க கற்பகாம்பிகை கோவிச்சிக்க மாட்டா."

பாட்டி சிரித்தபடியே எழுந்து போய் சமையல் கட்டை உருட்டி, காய்ந்து போன கொழுக்கட்டையும், தண்ணீர் காபியும் கொண்டு வந்து கொடுத்தாள். பாட்டியின் டிபனையும், சிறு வயதிலிருந்து கேட்டு புளித்துப் போன



பழைய கதைகளையும் கேட்டு ஜீரணித்து விட்டு ஒரு மணி நேரம் கழித்து நந்தினி வீட்டிற்குக் கிளம்பினாள்.

"இருடி, மீனு வர்ற நேரமாச்சு" என்ற பாட்டியிடம், "நாளைக்கு பாத்துக்கறேன் பாட்டி" என்றபடி வெளியே வந்தபோது நன்றாக இருட்டியிருந்தது. நிதானமாய் நடந்து வீட்டின் உள்ளே நுழையும்போது வாயிலைப் பார்த்தபடி அமர்ந்திருந்த அம்மா எழுந்து வேகமாய் அருகில் வந்தாள்.

"நந்தினி. என்னடி இந்த நேரத்துக்கு வர்ற? எங்க போயிருந்த?" என்றாள் படபடப்புடன்.

'ச்சு' என அலுப்புடன் பேக்கை டீபாய் மீது போட்டு விட்டு முகம் கழுவப் போனாள் நந்தினி.

"என்ன நான் கேட்டுட்டே இருக்கேன். நீ பாட்டுக்குப் பேசாம போற? ஏன் இவ்வளவு நேரம்?" அம்மா பின்னாலேயே வந்தாள்.

"அம்மா முதல்ல என்னை பாத்ரூம் போக விடறியா?" டவலுடன் உள்ளே போய் பாத்ரூம் கதவை தாளிட்டு பைப்பை திறந்து விட்டாள் நந்தினி. அம்மா டென்சனுடன் வெளியே காத்திருப்பாள் என்று நினைக்கையில் சிரிப்பு பொங்கியது.

அரை மணி நேரம் கழித்து தலையை துவட்டியபடி வெளியே வந்தபோது அப்பாவும் வந்து விட்டிருந்தார். அம்மா ஒரு மூச்சு அவரிடம் புகார் சொல்லி முடித்ததை காண்பித்துக் கொள்ளாமல் "ஏன் இவ்வளவு லேட் நந்தினி?" என்றார் சதாசிவம் பிள்ளை.

டிபனுடன் வந்த சுந்தரியிடம் "எனக்கு எதுவும் வேண்டாம். சாப்பிட்டு விட்டேன்" என்றவள், அப்பாவிடம் திரும்பும் முன் சுந்தரி குறுக்கிட்டாள்.

''எங்கே சாப்பிட்டாய்? இது என்ன புது பழக்கம் வெளியே சாப்பிடுவது?'' என்று படபடத்தாள்.

''பாருங்கப்பா. எப்பவும் ஒரு சந்தேகத்தோடயே பார்த்தால் எப்படி பதில் சொல்ல முடியும்? இன்னிக்கு மதியம் க்ளாஸ் எதுவும் இல்லை. அதனால் ரேகா, தாரிகா, சுஜாதா, நான் எல்லோரும் சினிமா போனோம். படம் முடிந்து வரும் போது வழியில் நம்ம மீனுவோட பாட்டியை பார்த்தேன். அவங்க கொழுக்கட்டையும், காபியும் கொடுத் தாங்க. சாப்பிட்டு விட்டு வர்றேன். இது தப்பா என்ன?'' மிகவும் நல்ல பிள்ளையாய் நந்தினி அப்பாவிடம் கேட்டாள்.

''அப்புறம் ஏண்டி வந்ததிலிருந்து நான் கேட்டதுக்கு பதிலே சொல்லல?''

''நீ எப்பவும் என்னை சந்தேகத்தோடயே விசாரிக்கிற போது என்னால் எப்படி சொல்ல முடியும்?''

''வயசுப் பொண்ணு வெளியே போய்ட்டு திரும்பி வருகிற வரை நான் மடில நெருப்பை கட்டிட்டு உட்காந் திருக்கேன்'' சுந்தரி பொரும, ''வீட்ல நெருப்பு இருந்தா சமையல் பண்ணு. இல்ல சாம்பிராணி போடு. நீ ஏன் மடில கட்டிக்கற? வெந்து போயிடும். ஜாக்கிரதை'' என்றாள் நந்தினி கிண்டலாக.

''எப்படிச் சொல்றா பாருங்க'' என்ற சுந்தரியிடம் ''இந்த காலத்துப் பொண்ணுங்ககிட்ட அமைதியாத்தான் பேச ணும். கொஞ்சம் விட்டுத்தான் பிடிக்கணும் சுந்தரி. பொறுமையா இரு'' என்றார் சதாசிவம்.

மறுநாள் கல்லூரி லஞ்ச் டைம்ல நந்தினியின் சாம்பார் சாதத்தை காலி செய்தபடி ''உங்கம்மா எப்படி இவ்வளவு சூப்பரா சாம்பார் சாதம் செய்யறாங்க நந்தினி?'' என்றாள் சுஜாதா.



''ஆமா நந்தினி எக்ஸாம் முடிந்ததும் நான் உங்கம்மா கிட்டதான் வந்து சமையல் கத்துக்கப் போறேன்'' என்றாள் தாரிகா.

''செய். நான்தான் அதெல்லாம் செய்யறதில்ல. நீயாவது செஞ்சா ஒருவேளை அவங்க சந்தோஷப் படலாம்.''

''எங்கம்மாவுக்கு நான் நல்லபடியா மார்க் வாங்கி, நல்ல வேலைக்கு போகணும்னுதான் கவலை'' என்றாள் ரேகா.

''அதை ஏன் கேக்கற? எங்க வீட்லயும் அதேதான்'' என்றாள் தாரிகா.

''எங்கம்மா என் கல்யாணத்துக்கு ஆகக்கூடிய செலவைப் பற்றி பட்டியலே போடத் தொடங்கிட்டாங்க. அதுக்கு இந்தப் படிப்பும் வேலையும் எவ்வளவு முக்கியம்ங்கிற அறிவுறுத்தல் வேற'' சுஜாதா அலுத்துக் கொண்டாள்.

''நாம படிக்கறதும் வேலைக்குப் போறதும் யாரையும் எதிர்பார்க்காம வாழணும்ங்கறதுக்காகத்தான். கல் யாணத்தை இதோட முடிச்சு போடுவது அபத்தம்'' என்றாள் ரேகா.

அமைதியாய் இருந்த நந்தினியிடம், ''என்ன நந்தினி உங்க வீட்ல என்ன சொல்றாங்க?'' என்றாள் தாரிகா.

''எதுவும் சொல்லல?''

''அப்படின்னா?''

''நான் வேலைக்குப் போகத்தான் போறேன்னு வீட்ல சொல்லவேயில்ல?''

''ஏன் சொல்லல?'' என்றார்கள் ஒரே குரலில்.

''ஏன்னா என்ன சொன்னாலும், எது செஞ்சாலும் குறை சொல்வாங்க. கல்யாணம் பண்ணிக்கப் போற பொண் ணுக்கு எதுக்கு வேலைம்பாங்க. ரொம்பப் போராடி ஒரு

வேளை ஒத்துக்கிட்டாக்கூட வெளி ஊர் போகக் கூடாதும்பாங்க. அங்கு பாதுகாப்பு இருக்காது. சாப்பாடு சரியிருக்காது. உன்னை விட்டு இருக்க முடியாதுன்னு ஏகப்பட்ட தடைகள் போடுவாங்க. நேத்து சினிமா முடிஞ்சி போறதுக்குள்ள வீட்டுக்கும் வாசலுக்குமாய் அலை மோதறாங்க தெரியுமா?''

''நந்தினி என்ன பேசற நீ?'' என்றாள் ரேகா அதட்டலுடன். ''இதெல்லாம் உன் மேலுள்ள பாசத்தினால தான்னு தெரியல உனக்கு? உன் கையில செல்போன் இருக்கு. நேத்து சினிமா போறேன்னு வீட்டுக்கு ஒரு போன் பண்ணியிருந்தா என்ன? அவங்க கவலைப்படாம இருப்பாங்க இல்ல?''

''உனக்குத் தெரியாது ரேகா. சினிமா போறேன்னு சொன்னாக்கூட உடனே சரி போயிட்டு வான்னு சொல்ல மாட்டாங்க. எந்தத் தியேட்டர்? யார் கூட வர்றாங்க? எதுல போற? திரும்பித் தனியா வராதே. அப்பாவை அனுப்பறேன். ஆட்டோல ஓரமா உட்காராதே. ரோட்டை பாத்து க்ராஸ் பண்ணு. கவனமா நடந்துக்க. இப்படி நூறு நூறு அறிவுரைகள். ஒரு நாளைக்கு எத்தனை முறை இதையே கேட்க முடியும்? தினம் காலேஜ் வர்றப்ப போயிட்டு வர்றேன்னு சொல்லக்கூட பயமா இருக்கு.''

''நீ ஒரே பொண்ணுங்கறதால அவங்க கவனம் பூரா உன் மீது இருக்கிறது. அதை எப்படி தவறு சொல்ல முடியும் நந்தினி?''

''ஐயோ, ஐ ஹேட் திஸ் சுஜாதா. உனக்குத் தெரியுமா? எங்கம்மா உடம்புல ஒரு எரிமலையே தூங்கிட்டு இருக்கு. எப்பப் பாரு வயித்துல நெருப்போடயே உட்கார்ந்திருக்காங்க?



''ஆனாலும் உனக்கு திமிர் அதிகம்தான் நந்தினி. எங்க வீட்ல எங்கக்காவுக்கும் தம்பிக்கும் இருக்கிற கவனிப்பு எனக்கில்லையேன்னு வருத்தமா இருக்கும். உனக்கு பாசமே பாரமா தெரியுதா?'' தாரிகா வலிக்காமல் நந்தினியின் தலையில் குட்டினாள்.

அதற்குமேல் அந்த பேச்சை தவிர்க்க விரும்பிய நந்தினி, ''இன்னிக்கு ஷீலா ஏம்ப்பா க்ளாசுக்கு வரல?'' என்றாள்.

''அவளுக்கு டைபாய்டு பீவராம். பாவம் போய் பார்த்துட்டு வரலாமா?''

''நம்ம சுலோச்சனா மேம் கல்யாணத்துக்கு அடுத்த வாரம் யார் யார் நம்ம க்ளாசில போறாங்க?''

மதிய வகுப்புக்கான பெல் சத்தம் கேட்டதும் எல்லோரும் தற்காலிகமாய் அரட்டைக்கு லீவு விட்டு விட்டு க்ளாசுக்கு விரைந்தார்கள்.

நந்தினிக்கு எக்ஸாம்ஸ் நெருங்கிக் கொண்டிருந்தது. கடைசி நிமிடத்தில் முட்டிக் கொள்வதை தவிர்க்க வேண்டி தினமும் கவனம் எடுத்துப் படிக்கத் தொடங்கினாள். ஞாயிற்றுக்கிழமை கதவை தாளிட்டுவிட்டு மும்முரமாய் படிப்பதில் ஆழ்ந்திருந்தபோது சுந்தரி அறைக் கதவை தட்டினாள்.

''நந்தினி திருச்சியிலிருந்து சித்தப்பா வந்திருக்கார். வந்து பேசு வா.''

''எனக்கு நிறைய படிக்க இருக்கு.''

''எல்லாம் படிக்கலாம். சித்தப்பா பெண் மாலதிக்குக் கல்யாணமாம். ம்.. உன்னை விட ஒரு வயது சின்னவள்.''

''சரி, சந்தோஷம்.'' நந்தினி கதவை சாத்த முற்பட்டாள்.

''இருடி. நான் அவர்களுக்கு சாப்பிடக் கொண்டு வருகிறேன். நீ அதுவரை அவர்களுடன் பேசிக் கொண்டிரு.''

''என்னம்மா, அப்பாவுடன் பிறந்தவர்கள் ஏழு பேர். உன்னுடன் பிறந்தவர்கள் நாலு பேர். ஏதாவது ஒரு கல்யாணம் விசேஷம் மாத்தி மாத்தி வரும். அவங்க கூப்பிட வந்தா நீ பேசி அனுப்பு. வந்தவங்களுக்கு உபசரணை பண்ணிட்டு உட்கார்ந்திருந்தா நான் படிக்க வேண்டாமா?''

''நந்தினி ப்ளீஸ் மெதுவா பேசு. அவங்க காதில் விழப் போகுது. உன்னைப் பத்தி எனக்குத் தெரியும். அவங்க கேட்டா என்ன நினைப்பாங்க? நீ வந்து வாங்கன்னு ஒரு வார்த்தை சொல்லிட்டு வந்துடு.''

நந்தினி மறுத்துப் பேசுமுன் கதவருகே சித்தப்பாவின் குரல் கேட்டது.

''அண்ணி, உள்ளே என்ன செய்யறீங்க?'' என்றபடி வந்தவர், ''அடடே நந்தினியா? நீ இருக்கறதே தெரியாதே! நல்லா வளர்ந்துட்ட. படிப்பெல்லாம் எப்படி போயிட்டு இருக்கு?'' என்றார் அவளிடம்.

''இதுவரை நல்லாத்தான் போயிட்டு இருந்தது'' என்ற நந்தினி மேலே பேசுமுன் ''ஹால்ல போய் உட்கார்ந்து பேசுங்க. நான் டிபன் கொண்டு வருகிறேன்'' என சுந்தரி சமையலறைக்குள் விரைந்தாள்.

வேண்டா வெறுப்பாய் அவர்களுடன் அமர்ந்து சித்தி, அவள் அக்கா, அம்மா என்ற உறவுக் கூட்டத்தின் துளைக்கும் கேள்விகளுக்கு பதில் சொல்லி, அவர்களின் அறுவை ஜோக்குகளுக்கு சிரித்து அவர்கள் கிளம்பிய போது ஒரு நாள் வீணாகக் கழிந்து விட்டதாய் கவலை ஏற்பட்டது.

''நந்தினி கண்டிப்பாய் கல்யாணத்துக்கு வரணும். எதாவது சாக்கு சொல்லி அவளை விட்டுட்டு வந்தீங்க. அப்புறம் பார்'' என உரிமையுடன் மிரட்டி விட்டு அவர்கள் புறப்பட்டுச் சென்றதும் நந்தினி அம்மாவிடம் சிடுசிடுத்தாள்.



''இந்த வீடே சந்தைக்கடையாகி விட்டது. இனி நான் ரேகா வீட்டிலேயே போய் படித்துக் கொள்கிறேன்.''

அவள் கோபத்துடன் போனதும் இந்த பொண்ணுக்கு ஏன் இவ்வளவு கோபம் வருகிறது? என்று சுந்தரிக்கு திகைப்பாக இருந்தது. எவ்வளவு பிரியமாக பேசினார்கள். இவளிடம். கோபப்படும்படி என்ன நடந்தது? வீடு என்றிருந்தால் உறவுகள் இல்லாமல் இருக்க முடியுமா? ஒன்றுமில்லாத விஷயத்திற்கெல்லாம் குதிக்கும் இவள் மணமாகி கணவர், மாமியார் என எல்லோரையும் எப்படி அனுசரித்துப் போவாள்? இந்த வருடம் முடியப் போகிறது. இப்போதிருந்து மாப்பிள்ளைப் பார்க்க ஆரம்பிக்க வேண்டியதுதான். திருச்சிக்கு கல்யாணத்துக்கு போகும்போது உறவினரிடம் சொல்லி வைக்க வேண்டும். கடவுள் புண்ணியத்தில் வருகிறவன் நல்லவனாய், இவள் கோபதாபங்களுக்கு ஈடு கொடுக்கிறவனாய் இருந்தால் போதும் முருகா. பூஜை அறையை நோக்கி கையெடுத்துக் கும்பிட்டாள் சுந்தரி. பூஜை அறை படத்தில் முருகன் தெய்வீகமாகச் சிரித்தான்.




சர்ச்சிலிருந்து ஞாயிறு பூஜைக்கு மணி அடித்தது. இது முதல் மணி. மூன்றாவது மணியில் திருப்பலி தொடங்கி

விடும். கேத்ரின் மகனை எழுப்பினாள். ''கெமி எழுந் திருப்பா.''

''என்ன மம்மி ஸண்டே கூட தூங்க விட மாட்டேங் கிறீங்க?''

''வாரத்துல ஒரு நாளாவது கோவிலுக்குப் போக வேண் டாமா? நீ ஸண்டே மட்டும்தான் வீட்டில் இருக்கிறாய். வா கெமி. சர்ச்சுக்கு போய்ட்டு வந்து ஈவ்னிங் வரை தூங்கு. எழுந்திருப்பா.''

அம்மா எப்படியும் வராமல் விட மாட்டார் என்பது தெரிந்திருந்ததால் அதற்குமேல் எதுவும் பேசாமல் கெமி எழுந்து போய் பல் துலக்கத் தொடங்கினான். இரவு வெகு நேரம் வரை கம்ப்யூட்டர் முன் அமர்ந்து வேலை செய்த தில் கண்கள் திறக்க முடியாமல் எரிந்தன.

குளிர்ந்த நீரை அடித்து முகத்தை கழுவி விட்டு வெளியே வரும்போது ''சித்தப்பா ரெடியா?'' என்றபடி டில்சன் வந்தான்.

''பாட்டி உன்னை கூட்டிட்டு வரச் சொன்னாங்க. தாத்தா, அப்பா, அம்மா எல்லாம் கீழே உனக்காக வெயிட் பண்றாங்க.''

வேகமாக உடைமாற்றி டில்சனை தூக்கியபடி கீழே இறங்கிச் சென்றான் கெமி. இவர்கள் கோவிலின் உள்ளே நுழையவும் பூஜை தொடங்கவும் சரியாக இருக்க. முழங்காலிட்டு ஜெபிக்கத் தொடங்கினர். அதில் முதலில் இருந்தவர் குடும்பத் தலைவர் டேவிட் தேவசகாயம். அவர் மனைவி கேத்ரின். இரண்டு மகன்கள். ஒரு பெண். பெண் ஷெரினா மணமாகி உள்ளூரிலேயே வசிக்க, மூத்த மகன் ராபர்ட், அவன் மனைவி ஜோஸ்பின் மகன்



டில்சனுடன் இவர்களுடனேயே இருந்தான். டேவிட் தேவசகாயம் செய்து வந்த இறால் ஏற்றுமதி தொழிலை ராபர்ட் பார்த்துக் கொண்டான்.

கேத்ரினுக்கு கண் மூடித்தனமான கடவுள் பக்தி என்பதைத் தவிர மற்றபடி நல்ல மாமியார் என்பதால் அந்தக் குடும்பம் அமைதியாகச் சென்று கொண்டிருந்தது. இரண்டாவது மகன் சார்லஸ் கெமிலோ. கம்ப்யூட்டர் என்ஜினியரிங் முடித்துவிட்டு நகரின் பிரபல ஸாப்ட்வேர் கம்பெனியில் நல்ல வேலையில் இருந்தான். அவனுக் கான பெண் தேடும் படலம் மும்முரமாய் நடந்து கொண் டிருந்தது. கத்தோலிக்க கிறிஸ்துவர்கள் அதிலுள்ள உட்பிரிவிற்குள் தங்கள் குடும்பத்திற்கு பொருத்தமாய் சல்லடையிட்டு பெண்ணை தேடினார்கள்.

சக மனிதனை நேசிப்பதற்கு மனசுதான் முக்கியம். மதம் முக்கியமல்ல என்ற கொள்கையுடையவன் கெமி. சடங்கு, சாதி விஷயங்களில் நம்பிக்கையற்றவன். என் றாலும் பெற்றோரின் மனதை புண்படுத்தாமல் இருக்கும் பொருட்டு வெளிப்படையாய் ஆட்சேபிக்காமல் எல்லா வற்றிலும் கலந்து கொள்வான்.

ஜெபம் முடிந்து சலசலத்தபடியே எல்லோரும் கலைய. ''நீங்க எல்லாம் வீட்டுக்குப் போங்க. நான் ஐந்து நிமிடத் தில் வந்து விடுகிறேன்'' என்றபடி தன் வயது தோழியுடன் பேசப் போனாள் கேத்ரின். வீடு வந்த கெமி சோபாவில் அமர்ந்து அன்றைய பேப்பரைப் புரட்டவும், ''கெமி சாப்பிட வர்றியா?'' என ஜோஸபின் குரல் கொடுத்தாள்.

''அம்மாவும் வரட்டும். இருங்கண்ணி'' என்றான் கெமி.

அரை மணி நேரத்தில் கேத்ரின் வந்துவிட எல்லோரும் டைனிங் டேபிளை சுற்றி அமர்ந்தனர்.

பீங்கான் கிண்ணங்களில் சிக்கன் சூப்பும், மட்டன் பிரியாணியையும் எடுத்து வைத்த ஜோஸபினிடம் "நீயும் உட்கார்மா. எல்லோரும் அவர்களே எடுத்துக் கொள்ள லாம்" என டேவிட் தேவசகாயம் சொல்ல. உடனே அவ ளும் மாமனார் அருகே அமர்ந்து சாப்பிடத் தொடங்கினாள்.

"மம்மி எங்களை எல்லாம் பசியோட காக்க வெச்சிட்டு நீங்க உங்க ப்ரண்ட் கூட பேசப் போயிட்டீங்க. அப்புறமா போய் பேசக் கூடாதா?" என்றான் ராபர்ட்.

"நம்ம கெமி விஷயம்தான் பேசிட்டு இருந்தோம்" என்றாள் கேத்ரின்.

"என்ன மம்மி சொன்னாங்க?"

"நம்ம கெமிக்கு திருநெல்வேலி பக்கமாய் ஒரு பெண் சொல்லியிருந்தாள். அழகு, அந்தஸ்து எல்லாம் உங் களுக்குப் பொருத்தமாய் இருக்கும் என்றிருந்தாள். நானும் பெண்ணைப் பார்க்க ஆர்வமாய் இருந்தேன். இப்ப சொல்றா. அவங்க கன்வர்ட் ஆனவங்களாம். பெண்ணின் அம்மா முஸ்லிமாய் இருந்து கல்யாணத்துக்கப்புறம் மதம் மாறினவங்களாம். நான் என் ப்ரண்ட் சொன்னதை வைத்து இந்த இடம் கண்டிப்பாய் முடியும் என்றிருந்தேன். இப்படி கேள்விப்பட்டதும் ஏமாற்றமாகி விட்டது."

"அந்தப் பெண்ணோட அப்பா கிறிஸ்டியன். அம்மா வும் மதம் மாறினதால இப்ப கிறிஸ்டியன். அப்ப அந்த பெண்ணு என்ன மதம்?" என்றான் கெமி.

"இது என்ன கேள்வி? இப்ப அம்மா, அப்பா ரெண்டு பேரும் கிறிஸ்துவர்களா இருக்கறதால பெண்ணும் கிறிஸ் டியன்தான்" என்றார் தேவசகாயம்.

"அப்பாவே பொண்ணு கிறிஸ்டியன்னு சொல்றாரு. அப்புறம் என்ன மம்மி தயக்கம் உனக்கு?"



"என்ன இருந்தாலும் நாம பரம்பரை கிறிஸ்தவர் களாச்சே! எங்க தாத்தா, கொள்ளு தாத்தா காலத்திலிருந்து கர்த்தருக்கு விசுவாசமானவர்கள். காதலித்தவரை மணந்து கொள்வதற்காக மதம் மாறிய அந்தப் பெண்ணின் அம்மாவுக்கு எப்படி முழுமையான அர்ப்பணிப்பு இருக்க முடியும்?" கேத்ரின் ஆணித்தரமாகக் கேட்டதும் சிரித்த படியே எழுந்து கைகழுவப் போனான் கெமி.

அம்மாவின் கூற்றுப்படிப் பார்த்தால் ப்ரிட்டிஷ் காலத் தில்தான் இந்தியாவிற்கு கிறிஸ்துவ மதம் வேரோடியது. அப்போதுதான் பலர் மதம் மாறினார்கள். சிலர் மத மாற்றம் செய்யப்பட்டார்கள். இந்தியர்களும் ஆங்கிலேயரை மணந்து ஆங்கிலோ இந்தியன் என அழைக்கப்பட் டார்கள். இந்த தலைமுறையில் இந்த பெண்ணின் அம்மா மதம் மாறினார் என்றால். சில நூற்றாண்டுகளுக்கு முன் அம்மாவின் பரம்பரையைச் சார்ந்தவர்கள் மதம் மாறியிருக் கலாம். இதையெல்லாம் வெளிப்படையாய் விமர்சிப்பது வீட்டிலுள்ளவர்களை வருத்தப்படுத்தும் என்பதால் மேற்கொண்டு எதுவும் பேசாமல் கண்ணாடி ஜக்கிலிருந்த ஐஸ் வாட்டரை டம்ளரில் சரித்து குடித்தான் கெமி. கெமிக்கு வரும் பெண்ணுக்கு அழகோ, பணமோ கூட முக்கியமில்லை. நம்மைப் போல பழக்க வழக்கங்களும், கிறிஸ்துவுக்குள் விசுவாசம் மிக்கவளாகவும் இருக்க வேண்டும். கேத்ரின் கணவரிடம் சொல்வதைக் கேட்ட கெமிக்கு நேற்று சந்தித்த பெண்ணின் நினைவு வந்தது. அலுவலகத்திலிருந்து கல்லூரி அந்த சாலை வழியாக வரும்போது கால் முளைத்த தேவதையாக வண்டியின் நடுவே வந்து நின்றாள். திகைப்புடன் கெமி வண்டியை நிறுத்த எந்த பதட்டமும் இன்றி விளம்பரப் பற்கள் பளீ ரென்று மின்ன "ஸாரி" என்றபடி அவனை கடந்து போனாள்.

தினமும் சாலையில், அலுவலகத்தில் எத்தனையோ பெண்களை பார்த்தாலும் அந்த முகம் அவற்றிலிருந்து வித்தியாசமாய் தெரிந்தது.

தன்னம்பிக்கையும் கம்பீரமும், நளினமும் அழகுமாய்.

''கெமி நின்னுட்டே தூங்கறியா என்ன?'' ராபர்ட் அவன் தோளில் தட்டினான்.

''நைட் லேட்டா தூங்கினேன். அதனால்தான்'' என்று சமாளித்த கெமி, ''கொஞ்சம் தூங்கப் போகிறேன் எழுப்பாதீங்க'' என்று சொல்லிவிட்டு சென்று படுக்கையில் விழுந்தான்.

உன் பெயர் என்ன பெண்ணே? எலிசபெத்தா, ஏஞ்சலா, ஜூலியா? எங்கே இருக்கிறாய்? என்ன செய்து கொண்டிருக்கிறாய் இப்போது? என் முகம் கூட தெரியாது உனக்கு. முகமறியாத ஒருவன் உன்னை நினைக்கிறான் என்பதை உணர்வாயா நீ? யோசித்தபடி புரண்டான் கெமி.

மாலையில் டீ குடித்தபடி அமர்ந்திருக்கும் போது தான் கெமிக்கு செந்திலின் நினைவு வந்தது. கூட பணிபுரிபவன். அவனுக்குத் திருமணம் என்று வற்புறுத்தி அழைத்திருந்தான்.

''கெமி அடுத்த ஸண்டே நம்ம ஷெரின் மாமனாரின் உறவில் ஒரு பெண் இருக்கிறதாம். அதைப் பார்க்கப் போகலாம்'' என்ற கேத்ரினிடம் ''நோ ஸண்டே ப்ரோகிராம்ஸ் மம்மி. அடுத்த ஸண்டே என் கொலிக் கல்யாணம். திருச்சி போகிறேன்'' என்றான்.

நந்தினி வெள்ளிக்கிழமை கல்லூரி முடிந்து வரும் போது சுந்தரி வீட்டையே புரட்டிப் போட்டிருந்தாள். பெட்ரூமிலிருந்து ஹால்வரை பைகளும், பெட்டியுமாய் அணிவகுத்தன. அவளைப் பார்த்ததும், ''நந்தினி சீக்கிரம் தயாராகு. எட்டு மணிக்கு இரயில். ஏழு மணிக்கு இங்கிருந்து கிளம்பினாதான் சரியா இருக்கும்'' என்றாள்.



''எங்கே கிளம்பணும்?''

''எங்கேயா? சித்தப்பா வீட்டு கல்யாணத்துக்குப் போக வேண்டாமா?''

''அதுக்கு ஏன் இனிக்கே மூட்டை முடிச்சை கட்ற? நாளை இரவு கிளம்பினா, நாளன்னிக்கி போய் முகூர்த்தத்தைப் பார்த்துட்டு, அன்னிக்கு மதியமே கிளம்பி ஞாயிறு இரவு சென்னையில் இருக்கலாம்.''

''பிறத்தியார் மாதிரி முகூர்த்தத்திற்கு போய் நிப்பியா நந்தினி? முதல் நாள் மதியம் பூஜை. இரவு பெண் அழைப்பு, நலுங்கு எல்லாம் இருக்கும்.''

அம்மாவின் புலம்பலும் அப்பாவின் வற்புறுத்தலும் தாங்காமல் திருமணத்திற்கு உடன் வருவதாக ஒப்புக் கொண்டது பெரிய தவறு என்று பட்டது நந்தினிக்கு. இன்னும் மூன்று இரவுகள், இரண்டு பகல்கள் வீணே விரயமாகிவிடும். வெறுமே சாப்பிட்டுவிட்டு, டிரஸ் பண்ணிக் கொண்டு, அறிமுகமற்றவர்களிடம், அறிமுகப் படுத்தப்பட்டு, என்ன படிக்கிறாய்? எப்போது திருமணம் என்ற கேள்விகளுக்கு திரும்பத் திரும்ப ஒரே பதிலை சொல்லிக் கொண்டு.. சே போர்.

''கிளம்பியாச்சா, போகலாமா?'' என்றபடி அப்பா டாக்ஸியுடன் வந்ததும் அவசரமாய் இரண்டு சுடிதார்களையும், பெரிய புத்தகங்களையும் எடுத்து தன் பேக்கில் வைத்துக் கொண்டு சென்று காரில் ஏறினாள் நந்தினி.

கல்யாண வீடு வழக்கமான கலகலப்புடன் இருந்தது. வாயிலில் மாலதி வெட்ஸ் செந்தில் என்ற எழுத்துக்கள்

மின்னின. சித்தப்பாவும் சித்தியும் பம்பரமாய் சுற்றினர். மாலதி அழகாய் ஜொலித்தாள்.

தன் சொந்த பந்தங்களைப் பார்த்ததும் சுந்தரிக்கு உற்சாகம் கரை புரண்டு ஓடியது. ஒவ்வொருவரிடமும் தேடித் தேடி குசலம் விசாரித்துக் கொண்டு மண்டபத்தை மேலும் கீழுமாய் சுற்றி வந்தாள். இரவு பெண் அழைப் புக்கு எல்லோரும் தயாராக, "நந்தினி போய் இந்த பட்டு புடவையை கட்டிட்டு வா" என புதுப் புடவையையும், ஜிமிக்கி, வளையல், செட்டையும் எடுத்துக் கொடுத்தாள் சுந்தரி.

"நான் தயாராயிட்டேன். இதெல்லாம் எடுத்து உள்ள வெச்சிட்டு வாம்மா' என்றாள் நந்தினி.

"இந்த டிரஸ்சிலயா?" என்றாள் சுந்தரி.

நல்ல காஸ்ட்லி சுடிதார்தான். எனினும் பெண்ணின் பெரியப்பா பெண் என்ற வகையில் கல்யாண வீட்டார் போன்ற தோற்றம் தராமல் இருந்தது.

சூழ்நிலைக்கு தகுந்த மாதிரிதான் உடை உடுத்தணும் நந்தினி. காலேஜுக்கு பேண்ட், பாவாடை சரிதான். உறவினர் வீடுகளுக்கு செல்ல சுடிதாரும், கல்யாணத் திற்கு பட்டு புடவையும்தான் பொருத்தமாக இருக்கும். கொஞ்ச நேரம்தான். இரவும் காலையிலும் கட்டி விட்டு பிறகு உடை மாற்றிக் கொள்" என்றாள் சுந்தரி.

"நான் அணிகின்ற உடை என் வசதியைப் பொறுத்து தான் இருக்க வேண்டும். எனக்கு இதுதான் வசதி."

"நந்தினி உனக்கு இந்த புடவை ரொம்ப அழகா இருக்கும். இந்த கல்யாணத்துக்காக எத்தனை கடை ஏறி இறங்கி செலக்ட் செஞ்சேன் தெரியுமா?"



"அவ்வளவு ஆசையா செலக்ட் பண்ணினதுன்னா நீயே கட்டிக்கோம்மா."

"எனக்கே உன்னை புடவையில் பார்க்கணும்னு ஆசையா இருக்கு நந்தினி. கட்டிப் பார்த்தா உனக்கேப் பிடிக்கும். அப்படிப் பிடிக்கலைன்னா கழட்டி வெச்சிடு."

"உன் ஆசைப்படி எல்லாம் உடுத்திப் பார்க்கணும்னா ஒரு பொம்மையை வாங்கி வெச்சுக்கோ. என்னை விட்டுடு."

சுந்தரிக்குக் கோபம் வந்தது. "என்ன பொண்ணே போ. எது சொன்னாலும் எதிர்த்துப் பேசிட்டு. மத்த பொண் ணுங்க எல்லாம் பெத்தவங்க பேச்சை கேட்டு சமத்தா நடந்துக்கறதில்ல? நீ மட்டும் ஏன் இப்படி இருக்கிறாய்?"

நந்தினி பதில் சொல்ல வாயைத் திறந்தபோது சதா சிவம் அறைக்குள் வந்தார்.

"அங்க ஊர்வலம் கிளம்பியாச்சு. இன்னும் உங்க மேக்கப் முடியலையா?"

"நான் ரெடியாத்தான் இருக்கேன். இந்த பொண்ணு தான் புடவை கட்ட மாட்டேன். இப்படியேதான் வரு வேங்கறா."

"இங்க வந்தும் உங்க சண்டை முடியலையா? அவ டிரஸ் விஷயத்துல நீயேன் தலையிடற? அவ இஷ்டத் துக்கு விடுன்னு எத்தனை தடவை உனக்குச் சொல்லி யிருக்கேன்?" என்றார் சதாசிவம் மனைவியிடம்.

"எல்லாம் என்னைச் சொல்லுங்க" என முணுமுணுத்த சுந்தரியின் பின்னால் சிரிப்புடன் நடந்தாள் நந்தினி.

பெண்ணையும், மாப்பிள்ளையும் அழைத்து வந்து, அமர வைத்து நலுங்கு சுற்றினார்கள். சென்னையிலிருந்து

வந்திருந்த அலுவலக நண்பர்களுடன் சேர்ந்து மாப்பிள்ளை செந்திலை கேலி செய்து கொண்டிருந்த கெமி எதேச்சையாக மணப் பெண்ணின் அருகே நின்றிருந்த அவளைப் பார்த்தான். அன்று கல்லூரிச் சாலையில் சந்தித்தப் பெண். சில நிமிடங்களிலேயே மனதில் பதிந்த முகம் அவளுடையது. இங்கு எதிர்பாராமல் பார்க்க நேர்ந்ததில் ஒரு பரபரப்பு உண்டானது. அவளுக்கு திருமண வீட்டார் நண்பர்களாக இருக்குமா? சென்னையிலிருந்து திருச்சி வந்து இருவரும் ஒரே திருமணத்தில் சந்திப்பது என்றால்... மேற்கொண்டு யோசிக்க விடாமல் அவன் அலுவலக நண்பன் வாசுவின் குரல் அவனைக் கலைத்தது.

''சாப்பிடப் போகலாமா கெமி?''

''எஸ்'' என்றபடி அவர்களுடன் நடந்தபோதும் அவளிடம் பேசுவதற்கான சந்தர்ப்பத்தை மனம் எதிர்பார்த்திருந்தது. சில நிமிடங்களில் தானாய் அந்த சந்தர்ப்பமும் வந்தது.

சாப்பிட்டு முடித்ததும் நண்பர்களில் சிலர் ஹோட்டல் அறையில் தங்க போய்விட, சிலர் சினிமாவுக்குச் செல்வதாகக் கூறிச் சென்றனர். கெமி செந்திலுடன் மண்டபத்திலேயே இருந்து கொண்டான். இருவரும் நாளைய ப்ரோகிராம் பற்றி பேசிக் கொண்டிருக்க, செந்திலின் அம்மா அங்கு வந்தார்.

''கெமி ஒரு வேலை செய்றியாப்பா?'' என்றவர், ''எங்க மாமா இப்போதான் வந்திருக்கிறார். அவருக்கு மேலே காலியாய் இருக்கிற அறைக்கு சாவி வேண்டும். சாவி பெண் வீட்டுக்காரர்களிடம்தான் இருக்கிறது. நீ கொஞ்சம் சாவியை வாங்கி மாமாவை அந்த ரூமில் விட்டு விடுகிறாயா?''



''சரி ஆன்ட்டி. பெண்ணுடைய அப்பா யாரோ உறவினரிடம் பேசியபடி வெளியே போனதைப் பார்த்தேன். அவர் வரும்வரை காத்திருக்கலாமா? அல்லது சாவி யாரிடமிருக்கிறது என்று உங்களுக்குத் தெரியுமா?'' என்றான் கெமி.

''ம்... யார் கிட்ட கேட்கலாம்?'' என்று சுற்றிலும் பார்த்த செந்திலின் அம்மா அவர்களைத் தாண்டிப் போன அவளை அழைத்தாள்.

''நந்தினி.''

கெமி அவள் பெயரை மனதுள் குறித்துக் கொண்டான்.

''என்னையா கூப்பிட்டீங்க ஆன்ட்டி?'' என சிரித்தபடி நந்தினி வந்ததும்,

''மேலே கடைசி ரூம் சாவி யார் கிட்ட இருக்குன்னு கேட்டு வாங்கி இந்த தம்பி கிட்ட கொடுத்தனுப்பறியாம்மா?'' என்றாள்.

''எங்கப்பாகிட்டதான் ஆன்ட்டி சாவி இருக்கு'' என்றவள். ''வாங்க, சாவி வாங்கி தரேன்'' என கெமிக்கு முன்னால் நடந்தாள்.

கெமி எங்கே இருக்கிறோம். எதற்கு செல்கிறோம் என்பதையே மறந்து அவள் பின்னால் சென்றவன். அவளைத் தொடர்ந்து மணமகள் அறைக்குள் நுழைய முற்பட்டதும் 'எக்ஸ்க்யூஸ்மி' என்றாள் அவள்.

உணர்வு வந்தாற்போல் அவன் திரும்பியதும், ''நீங்க இங்க வெயிட் பண்ணுங்க வர்றேன்'' என்றபடி உள்ளே சென்றாள்.

நந்தினி என்ன அழகான பெயர்? ஆனால் ஹிண்டு பெண் போலிருக்கே, யோசனையுடன் நின்றிருந்தான் கெமி.

சில நிமிடங்களில் அவள் சாவியுடன் வந்ததும் ''தேங்க்ஸ் நந்தினி குட் நைட்'' என்றபடி திரும்பிச் சென்றான் கெமி.

சரளமாய் அவன் பெயர் சொல்லி அழைத்த விதத்தில் நந்தினி ஆச்சரியமானாள்.

இரவு அம்மாவின் அருகே படுத்து கண்களை மூடு கையில் 'குட்நைட்' என்ற சிரிப்பு வழக்கத்துக்கு மாறாய் வசீகரித்தது.

காலையில் நடந்த திருமண நிகழ்ச்சியில் செந்திலின் அருகே நின்றிருந்த கெமி, தன்னை நந்தினியிடம் அறிமுகப்படுத்திக் கொண்டான். சகஜமாய் அவளை பெயர் சொல்லி அழைத்தான். ஒரு பெண்ணை கவரவோ, அதற்கான அலட்டல்கள், வழிசல்கள் ஏதுமின்றி அவன் ஏற்கனவே பழகிய நண்பனைப் போல் பேசியது நந்தி னிக்கும் அவனிடம் ஒரு மரியாதையை ஏற்படுத்தியது.

தாலிகட்டி, சடங்குகள் முடிந்து பெண்ணும் மாப்பிள்ளை யும் பால், பழம் சாப்பிடச் செல்கையில் ''நந்தினி இந்த கிப்ட் பார்சல்களில் பெண்ணுடையது. மாப்பிள்ளை யுடையது என்று பிரித்து அவரவர் அறைகளில் வைக்க வேண்டும். பெண்ணுடையதை நீ எடுத்துக் கொண்டு போய் விடேன் ப்ளீஸ்'' என்றான் கெமி.

''சரி'' என்றபடி அவனுடன் அமர்ந்து நந்தினி, கெமி, அவனுடைய நண்பன் வாசு மூவரும் பார்சல்களை அடுக்கத் தொடங்கினர். வாசுவுடைய நண்பனின் திருமணத்தின் போது நடந்த ஒரு கலாட்டாவை அவன் வர்ணித்த விதத்தில் மூவரும் வாய் விட்டுச் சிரித்தபடி வேலையை கவனித்தனர்.



மணமகளின் பரிசு பொருட்களை ஒரு பெட்டியில் அடுக்கி நந்தினி சித்தப்பாவிடம் ஒப்படைத்து விட்டு வரும்போது சுந்தரி பிடித்துக் கொண்டாள்.

''நந்தினி இவ்வளவு நேரம் நீ பேசிட்டிட்டு உட்கார்ந் திருந்தியே யார் அது?'' என்றாள்.

கேள்வியின் சந்தேகத்தை உணர்ந்த நந்தினிக்கு கோபம் வந்தது.

''யாரோ உறவினர்கள் போல'' என்றாள் கடுப்புடன்.

''இல்லையே. மாப்பிள்ளையின் நண்பர்கள் என்று சொன்னார்களே!''

''சொன்னார்கள் இல்லையா? அப்புறம் ஏன் எங்கிட்ட வந்து விசாரிக்கற? பெத்த பொண்ணையே நம்பாம அடுத்தவர்கிட்ட விசாரிக்கிற நீயெல்லாம் ஒரு அம் மாவா? சே!''

''என்னடி வாய்கொழுப்பு அதிகமாகுது? ஒரு வயசுப் பெண் முன்பின் அறிமுகமில்லாத ஆட்களிடம் சிரித்துப் பேசியபடி உட்கார்ந்திருந்தால் என்ன ஏதுன்னு பெத்த வங்க கேட்க மாட்டாங்களா?''

''இதுக்குத்தான் நான் வரமாட்டேன்னு சொன்னேன். வற்புறுத்தி கூட்டிட்டு வந்துட்டு இங்கு நிக்காதே. அங்கே பேசாதேன்னு டார்ச்சர் பண்ற.

நான் என்ன உன் பொண்ணா? இல்ல பரோல்ல வந்திருக்கிற கைதியா?''

''பொண்ணுன்னா பொத்திதான் வளர்ப்பாங்க. என்னை எல்லாம் அப்படித்தான் வளர்த்தாங்க. நான் என்ன கெட்டா போயிட்டேன்?''

''மை காட்.'' நந்தினி தலையைப் பிடித்துக் கொண்டாள். ''அம்மா எந்த உலகத்துல இருக்க நீ? நேத்து நடந்த விஷயம் இன்னிக்குப் பழசு. இன்னிக்கு நடைமுறை நாளைக்கு மாறிப் போயிடும். உன்னுடையது ஒரு தலைமுறை முந்திய சமாச்சாரம். இன்னிக்கு அது செல்லுபடியாகாது.''

''எத்தனை யுகமானாலும் பெண், பெண்ணாகத் தாண்டி இருக்கணும்.''

''நிச்சயமா, பெண் பெண்ணாகத்தான் இருக்க வேண்டும். ஆனால் பெண்ணாக இருக்க அவ எப்படியெல்லாம் இருக்கணும்னு நீ சொல்றியோ அதுதான் தப்புன்னு சொல்றேன்.''

''நந்தினி நீ சாப்பிட்டாயா? இல்லாட்டி போ'' என்றபடி சித்தி வந்ததும் நந்தினி விடுபட்ட உணர்வுடன் வெளியே சென்றாள். ''அக்கா சீர்தேங்கா போதுமா பாருங்க'' என சுந்தரியுடன் பேசியபடி, சீர்தட்டுகளை எடுத்து வைக்க இருவரும் உள்ளே சென்றனர்.

நந்தினி சாப்பிடப் போனபோது கெமி சாப்பிட்டு முடித்துக் கை கழுவிக் கொண்டிருந்தான்.

''நந்தினி நீ இன்னும் சாப்பிடலையா?'' என்றான் அவளைப் பார்த்ததும்.

''இல்லை'' என தலையசைத்தாள் நந்தினி.

''சாப்பாடு பிரமாதம் நந்தினி.''

''தெரியுமே!''

''எப்படி?''

''நீங்க சாப்பிட்டு எழுந்ததுமே சாப்பாடு தீர்ந்து விட்டதாகச் செய்தி வந்ததே!'' கெமி சிரித்த சிரிப்பில் அரு



கிலுள்ளவர்கள் திரும்பிப் பார்க்க, பந்தி விசாரித்துக் கொண்டிருக்கும் அப்பா பார்க்கும் முன் அவசரமாய் உள்ளே ஓடினாள் நந்தினி. அவளையே பார்த்தபடி நின்றிருந்த கெமியின் தோளைத் தட்டினான் வாசு.

''மாப்ள, எங்கியோ ட்ராக் மாறுகிற மாதிரி தெரியுதே!''


''இல்லடா நீ வேற.''

''இல்லையா, இருக்குதான்னு நீ வழியறதிலேயே தெரியுதே! எல்லா விஷயத்திலும் உனக்கு நேர் மாறான குடும்பம். ரொம்ப ஆச்சாரம் உள்ளவங்க. அசைவத்தைக் கண்ணால் பார்ப்பது கூட பாவம்ன்னு நினைக்கறவங்க.

ரொம்ப பாதுகாப்பான சூழலில் வளர்க்கப்பட்ட பெண். வந்த இடத்துல ஒரு நாள் ஜாலியா சைட் அடிச்சோம் போனோம்னு இருந்தா ஓ.கே. இல்ல சீரியசான முடிவுக்கு வர்றதா இருந்தா இதையெல்லாம் யோசித்துப் பார்த்துக் கொள்'' உண்மையான அக்கறையுடன் வாசு சொல்வதைக் கேட்டபடியே அவனுடன் நடந்தான் கெமி.

''நாலு மணிக்கே நமக்கு டிரைன். இப்ப கிளம்பினா தான் சரியா இருக்கும்'' என்றபடி அலுவலக நண்பர்கள் வந்தார்கள்.

அவர்களுடன் சேர்ந்து துணிகளை பேக் பண்ணி, மாப்பிள்ளையிடமும், அவன் வீட்டாரிடமும் விடை பெற்று செல்லும்போது கண்கள் அவனையுமறியாமல் நந்தினியைத் தேடின. முன் பக்கம் எங்கும் அவளைக் காணவில்லை. தயங்கி நின்றவனை ''வா கெமி'' என வாசு இழுத்துச் சென்றான். டாக்ஸி கிளம்பி கல்யாண மண்டபம் கண்ணுக்கு மறைந்ததும் எதையோ இழந்து விட்டுப் போகிற உணர்வு அவனைப் பாரமாய் அழுத்தியது.



# 3

நந்தினிக்குத் தேர்வுகள் தொடங்கி விட்டன. பரிட்சைக்கு படிக்கும் வேகத்தில் நாட்கள் விரைந்தன. நந்தினி படிக்கும் மும்முரத்தில் இருந்தபோது சுந்தரி மகளுக்கு வரன் தேடும் மும்முரத்தில் இருந்தாள். உறவினர்களிடமும், தரகர்களிடமும் சொல்லி, அவர்களும் தினம் ஒரு போட்டோவாக அனுப்பிக் கொண்டிருந்தனர். இந்த பையன் படிப்பு போதாது. இந்த ஜாதகம் சரியில்லை, அந்த பையன் நந்தினி அழகுக்கு ஈடில்லை. வெளிநாட்டு மாப்பிள்ளை வேண்டாம். பெரிய குடும்பமென்றால் மகளால் சமாளிக்க முடியாது. ஒரே ஜாதிதான் என்றாலும் உட்பிரிவுகள் வேண்டாம் என தினம் ஒரு வரனை அம்மா நிராகரித்துக் கொண்டிருந்தாள். தன் மகளுக்கு ஒரு அதிசய புருஷனை தேடிக் கொண்டிருந்தாள்.

என் எதிர்காலத்தை தீர்மானிக்க நீங்கள் யார்? என்று நந்தினிக்கு கேட்க வேண்டும் போலிருந்தது. நான் தனி மனுஷி. என்னுடைய லட்சியம் வேறு. விருப்பங்கள் வேறு. என் சொந்தக் காலில் நிற்க வேண்டும். திருமணம் வேண்டும் என்று தோன்றும்போது எனக்குப் பிடித்த என்னுடன் ஒத்துப் போவான் என்று தோணக்கூடிய ஒருவனைத்தான் மணந்து கொள்வேன். யாரோ ஒரு தரகரின் வார்த்தை நம்பி முன்பின் அறியாத ஒருவனிடம் என் வாழ்க்கையை ஒப்படைக்கும் அளவுக்கு நான்



முட்டாள் அல்ல. மனதிற்குள் தீர்மானம் செய்தபடி படிப்பதில் கவனம் செலுத்தினாள் நந்தினி.

ஒரு வழியாய் எல்லா பரிட்சைகளும் முடிந்தன. நன்றாக செய்த திருப்தியில் வெளியே வரும்போது இன்றுதான் கல்லூரியில் கடைசி நாள் என்பது நினைவுக்கு வந்து வருத்தமாக இருந்தது.

ரேகாவும் தாரிகாவும் அவளுடன் வந்து சேர்ந்து கொண்டார்கள்.

''சுஜாதாவை எங்கே ரேகா காணோம்?'' என்றாள் நந்தினி.

"அவ வுட்பியோட வெளியே போயிருக்கா. பரிட்சை முடிந்ததும் அவரே வந்து அழைத்துப் போய் விட்டார்."

"அவ லக்கிப்பா. படிப்பு முடிஞ்சதும் கல்யாணத்துக்கு ஏற்பாடு பண்ணிட்டாங்க. அவரும் நல்ல வேலையில் இருக்காராம். எங்க வீட்ல என்னடான்னா வேலை பாத்தப்புறம்தான் கல்யாணம்ங்கறாங்க'' அலுத்துக் கொண்டாள் தாரிகா.

''நமக்கு விபரம் தெரிந்த வயதிலிருந்து இத்தனை வருடமாய் படித்துக் கொண்டிருக்கிறோம். எதற்கு? அத்தனையும் வீணாக்குவதற்கா? நம்முடைய அறிவு, திறமை எல்லாத்தையும் மூட்டைக் கட்டி ஒருத்தன் காலடியில் கொண்டு போட்டு விட்டு அவனிடம் உன் தினப்படி செலவுகளுக்கு கையேந்தி நிற்பாயா? அவன் பசிக்காக உணவு சமைத்து, அவனுக்கு பிடித்தமாய் உடையணிந்து, அவனை மகிழ்வித்து பிள்ளை பெற்று... இதற்காகவா இத்தனை வருடம் சிரமப்பட்டு படித்தோம்?

இளமை காலம் முழுதும் செலவிட்டுப் படித்த கல்வி முதுமையிலும் உனக்கு கை கொடுக்க வேண்டாமா?'' நந்தினி படபடத்தாள்.

''என்னதான் வேலைக்குப் போன பிறகு திருமணம் செய்து கொண்டாலும் சமைக்காமல், பிள்ளை பெறாமல் இருக்க முடியுமா நந்தினி?'' என்றாள் ரேகா.

''முடியாதுதான். ஆனால் செலவுகளையும், வருமானத்தையும் இருவரும் பகிர்ந்து கொள்வது போல் வேலைகளையும், குழந்தை வளர்ப்பையும் இருவரும் பகிர்ந்து கொள்ள முடியும். அன்றாட செலவுகளுக்கு கணவனை சார்ந்திருந்த பட்சத்தில் அவனுக்கு உன் மீது ஒரு மரியாதை ஏற்படும். என்னதான் அந்நியோன்யமான தாம்பத்யமாய் இருந்தாலும் சுயமரியாதை ரொம்ப முக்கியம் ரேகா.

சிறிது நேர யோசனைக்குப் பிறகு ''நீ சொல்றது சரிதான் நந்தினி'' என்றாள் தாரிகா.

''நாளைக்கு எங்க வீட்டுக்கு ரெண்டு பேரும் வர்றீங்களா?'' எங்காவது வெளியே போகலாம்'' என்றாள் ரேகா.

''நான் ஒரு கம்ப்யூட்டர் கோர்ஸ் சேரப் போகிறேன். மாலையில் வருகிறேன்'' என்றாள் நந்தினி.

நந்தினி வீட்டின் உள்ளே நுழைந்து முகத்தை கழுவு கையில் சுந்தரி காபியுடன் வந்தாள். ''பரிட்சை எல்லாம் இன்னியோட முடிஞ்சதில்லையா? நாளையிலிருந்து இப்படி அலைய வேண்டியதில்லை. வீட்ல சமையல் எல்லாம் கத்துக்கோ'' என்றாள்.

அம்மா ரொம்ப நாட்களாக இந்த தருணத்தைத்தான் எதிர்பார்த்துக் காத்திருக்கிறாள். மகள் வீட்டுடன் இருந்து தன்னுடன் சேர்ந்து சமையல் செய்த கொண்டு, திருப்புகழும், தேவாரமும் பாட கத்துக் கொண்டு, கோவில்களுக்கும், விழாக்களுக்கும் பட்டுப் புடவையுடன் அழகாக வலம் வந்து அம்மாவின் அறியாமையை நினைத்து நந்தினிக்கு சிரிப்பு வந்தது.



''நான் நாளையிலிருந்து புதுசாய் ஒரு கம்ப்யூட்டர் கோர்ஸ் படிக்கப் போகிறேன்.''

''நீ ஆசைப்பட்ட படிப்பெல்லாம் படிக்க வெச்சாச்சி. இன்னும் என்ன படிக்கப் போற? வயசாகலியா உனக்கு? உன் வயசுல எனக்கு நீ பிறந்தாச்சு. உன் சித்தப்பா பெண் மாலதி உன்னை விட சின்னவ. அவ எல்லாம் பெத்தவங்க பேச்சைக் கேட்டு கல்யாணம் பண்ணிக்கலையா? நீ இன்னும் எத்தனை நாளைக்கு இப்படி ஊர் சுத்தப் போற?''

''ஊர் சுத்தறதா? நான் படிக்கப் போறேன்னு சொல்றேன். புரியலையா உங்களுக்கு?''

''அதான் என்ன படிப்புன்னு கேட்கறேன்? பி.சி.ஏ. முடிச்சாச்சு. எம்.பி.ஏ. முடிச்சாச்சு. இன்னும் என்ன படிப்பு?''

''இது மூன்று மாத படிப்புதான்.''

சுந்தரி தனக்குள் ஒரு கணக்குப் போட்டாள். இன்னும் எந்த இடமும் உறுதியாக முடிவாகவில்லை. இரண்டு இடம் ஜாதகம், குடும்பம் எல்லாம் ஒத்து வருகிற மாதிரி இருக்கிறது. எல்லாம் பார்த்து பைனலைஸ் பண்ண மூன்று மாதமாவது ஆகும். அதுவரை நந்தினி வீட்டிலிருந்தால் வருகிறவர்கள் எதாவது சொல்லிக் கொண்டிருப்பாள். எனவே ''நான் அப்பாகிட்டப் பேசிப் பார்க்கிறேன்'' என்றாள் தணிந்து போய்.

அடுத்த நாள் கம்ப்யூட்டர் கோர்சுக்குப் பணம் கொடுத்த சுந்தரி, "மூன்று மாதம்தான்னு சொன்னதாலதான் அப்பா கொடுத்தார்" என்றாள்.

பதில் பேசாது பணத்தை வாங்கிக் கொண்டு வெளியே சென்றாள் நந்தினி. ஒவ்வொரு முறை அவள் காலேஜில் சேரும்போதும் அம்மா அதை எதிர்ப்பதும் சண்டை போடுவதும் பிறகு அவளே அப்பாவிடம் பணம் வாங்கிக் கொடுப்பதும் வினோதமாக இருந்தது. அன்றே பணம் கட்டி கோர்ஸில் சேர்ந்தாள் நந்தினி.

க்ளாஸ் முடிந்ததும் லைப்ரரி போய் விட்டு மாலையில் திரும்பி வருகையில் அதே கவலையுடன் அம்மா வாயிலில் நின்று கொண்டிருந்தாள்.

"ஓ இவர்கள் மாறமாட்டார்கள்" என்ற அலுப்பேற் பட்டது. "காலேஜ் முடிஞ்சாலும் படிப்பு முடியல இன்னும்" என்றபடி அம்மா உள்ளே செல்வதைப் பார்த்ததும் இன் னும் அதிக நாள் இங்கே சமாளிக்க முடியாது என்று தோன் றியது. எதாவது வேலை தேடிக் கொள்ள வேண்டும் விரைவில். தினமும் குற்றவாளியைப் போல் என்னை கண்காணிப்பதைப் பார்க்கும்போது ஒரு சிறைச் சாலை யில் அடைபட்ட உணர்வுதான் வருகிறது. லத்தியடியும், சீருடையும்தான் இல்லை. மற்றபடி இந்த வீடு ஒரு ஜெயில்தான். எரிச்சலுடன் முணுமுணுத்த நந்தினி. புத்தகத்தை அறையில் வைத்துவிட்டு "நான் போயிட்டு வர்றேன்" என குரல் கொடுத்துவிட்டு வெளியே வந்தாள்.

"எங்கே போற?" என்ற அம்மாவின் கேள்வி காதில் விழும் முன் விரைந்து சென்றாள்.

ரேகாவின் வீட்டு பெல்லை அழுத்தியபோது அவள் அம்மா கல்பனா கதவை திறந்து "ஹாய் நந்தினி" என்றாள் சிநேகமாய்.



கல்பனா லூசான பைஜாமாவும் காட்டன் குர்தாவும் அணிந்து ரேகாவுக்கு அக்காவைப் போல் இருந்தாள்.

"ஹாய் ஆன்ட்டி ரேகா இல்லையா?" என்றாள் நந்தினி.

"இருக்கிறாள் வா." என்றாள் வழிவிட்டு. "உன் விடு முறை எப்படிப் போய்க் கொண்டிருக்கிறது நந்தினி?"

"கம்ப்யூட்டர் கோர்சில் சேர்ந்திருக்கிறேன்."

"குட். நீ ரொம்ப புத்திசாலி எப்பவும்."

பேசியபடியே ரேகாவின் அறைக்குள் சென்றார்கள். ஸ்பீக்கர்களில் மைக்கல் ஜாக்சன் அதிர்ந்தது. ஆடிக் கொண்டிருந்த ரேகா திரும்பிப் பார்த்து "வா நந்தினி" என்றாள் மூச்சு வாங்க.

அறையெங்கும் ரேகாவின் உடைகளும் ஆடியோ, வீடியோ சி.டி.க்களும் இறைந்து கிடந்தன. கட்டிலின் மீது கிடந்த டெடிபியர் பொம்மையை நகர்த்தி விட்டு அமர்ந்தாள் நந்தினி.

ஜூஸ் டம்ளர்களுடன் வந்த கல்பனா நந்தினியிடம் ஒரு டம்ளரைக் கொடுத்து விட்டு, "நீ டான்ஸ் பண்ணுவியா நந்தினி?" என்றாள்.

"இல்ல ஆன்ட்டி."

"டான்ஸ் ஆடினால் மனசுக்கும் உற்சாகம். உடலுக்கும் நல்ல பயிற்சி. எனவே மனசுக்கும் உடலுக்கும் இதைவிட பெஸ்ட் எதுவுமேயில்லை?" என்றாள் கல்பனா.

பக்தி பாடல்களைத் தவிர எதையுமே ஒலிக்காத தன் வீட்டு பழைய டேப் ரெக்கார்டரையும், அதிர்ந்து நடந்தால் வீட்டு லெட்சுமி போய் விடுவாள் என பயப்படும் அம்மாவையையும் நினைத்தபடி தலையாட்டினாள்

நந்தினி. ரேகாவின் அம்மா மகளிடம் ஒரு தோழியைப் போல நடந்து கொள்வாள். கூட அமர்ந்து அவள் தோழிகளுடன் அரட்டை அடிப்பாள். தன் அபிப்ராயத்தை நாசூக்காக மகளிடம் வெளிப்படுத்துவாள்.

சாப்பிடும்போது ரேகா சொன்னாள். இந்தியாவிலுள்ள ஒரு கம்பெனிக்கு அதன் சிங்கப்பூர் நிறுவனத்தில் வேலை செய்ய மேனேஜ்மென்ட் செக்ஷனில் ஆள் தேவைப் படுவதாகவும், தனக்கு வெளிநாடு போக இஷ்டமில்லை என்றும் சொன்னாள்.

"ஈ.மெயில் அட்ரஸ் கொடு ரேகா. நா டிரை பண்றேன்."

"நீயா நந்தினி? உங்க வீட்ல நீ சும்மா வெளியே போனாலே பயப்படுவாங்க. வெளிநாட்டுக்கு எப்படி அனுப்பப் போறாங்க?"

"அதை பிறகு பார்க்கலாம். எனக்கு அட்ரஸ் கொடு."


ரேகாவிடம் அட்ரஸ் வாங்கி மெயிலில் தன் ரெஸ்யூமை அனுப்பி வைத்தாள் நந்தினி. சில நாட்களில் டெலிபோனில் இன்டர்வியூ அட்டென்ட் பண்ணுமாறு தகவல் வந்தது. அவர்கள் குறிப்பிட்டிருந்த அலுவலகத்தில் போய் இன்டர்வ்யூ அட்டன்ட் பண்ணிவிட்டு வந்தாள். பிறகு உடனடியாய் தகவல் எதுவும் வராததால் தன் அன்றாட வேலைகளில் ஆழ்ந்து மறந்து போனாள்.

சரியாய் கம்ப்யூட்டர் படிப்பு முடியும் சமயம் சிங்கப்பூரிலிருந்து வேலையில் சேரச் சொல்லி மெயில் வந்தது. இன்னும் சரியாய் முப்பது நாளில் சேர வேண்டும். நல்ல வேளையாய் கல்லூரியில் படிக்கும் போதே எதற்கும் இருக்கட்டும் என்று பாஸ்போர்ட் எடுத்து வைத்திருந்தாள். இனி கிளம்ப வேண்டியதுதான் பாக்கி.



உற்சாகத்தில் துள்ளிக் குதிக்க வேண்டும் போலிருந்தது நந்தினிக்கு. இனி அப்பாவிடம் பணத்திற்கு கையேந்தி நிற்க வேண்டியதில்லை. எங்க போற? எப்ப வருவ? ஏன் லேட்? என்ற அம்மாவின் துளைக்கும் கேள்விகளுக்கு பதில் சொல்ல வேண்டியதில்லை. உறவுகளின் விமர்சனங்களுக்கு காது கொடுக்க வேண்டியதில்லை. 'யே!' முட்டியை உயர்த்தி காற்றில் குத்தினாள் நந்தினி.

# 4



சுந்தரி மகிழ்ச்சியுடன் மகளுக்காக காத்திருந்தாள். நந்தினி வந்ததும் அவள் பேச தொடங்கும் முன் படபடத்தாள். "நந்தினி அடுத்த வாரம் காஞ்சீபுரத்திலிருந்து உன்னை பெண் பார்க்க வருகிறார்கள். பையன் டாக்டர். ஒரே அக்காவுக்கு கல்யாணமாயிடிச்சி. பிக்கல் பிடுங்கல் இல்லை. பையனுக்கு வேலை சென்னையில் தான். போட்டோவில் பார்க்க நல்லா இருக்கான். ஜாதகமும் அபாரமா பொருந்தியிருக்கு" சுந்தரி அடுக்கிக் கொண்டே போக, நந்தினி "அப்பா எங்கம்மா" என்றாள்.

"அப்பா பையனைப் பற்றி விசாரிக்கத்தான் போயிருக்கார். இப்ப வந்து விடுவார்."

ப்ரிஜ்ஜிலிருந்து ஒரு ஆப்பிளை எடுத்து கடித்தபடி அப்பாவுக்காக காத்திருந்தாள் நந்தினி.

இரவு சாப்பாட்டு நேரத்திற்குதான் சதாசிவம் வந்தார். உற்சாகத்துடன் மாப்பிள்ளை பற்றிய விஷயங்களை சொல்லத் தொடங்கியவரை முந்திக் கொண்டு, "அப்பா, உங்ககிட்ட பேசணும்" என்றாள் நந்தினி.

"என்னம்மா?" என்றார் சதாசிவம் வியப்புடன்.

"இன்னும் எதாவது படிக்கிறேன்னு சொல்லப் போறியா? அதெல்லாம் முடியாது" என்றாள் சுந்தரி கண்டிப்புடன்.

"இல்லைமா. கவலைப்படாதே. இனிமே நான் படிக்கப் போறதில்லை."

சுந்தரி ஒரு நிம்மதி பெருமூச்சை விடுமுன் "வேலை பார்க்கப் போகிறேன். வெளிநாட்டில்" என்றாள்.

சதாசிவமும் சுந்தரியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

"என்னம்மா இது விளையாட்டு?" என்றார் சதாசிவம்.

எழுந்து போய் தன் அறை மேஜை மேலிருந்த வேலைக்கான ஆர்டரைக் கொண்டு வந்து அவரிடம் காண்பித்தாள் நந்தினி. படித்துப் பார்த்த சதாசிவம் திகைத்துப் போனவராய் மகளைப் பார்த்தார்.

"நந்தினி என்ன இது? நீயே முடிவெடுத்து அப்ளிகேஷன் போட்டு வேலை கிடைச்சப்புறம் மூணாவது மனுஷங்ககிட்ட சொல்ற மாதிரி எங்கிட்ட வந்து சொல்ற. முன்னாடியே பர்மிஷன் கேட்கணும்னு தோணலியா உனக்கு?"

"கேட்டிருந்தா வேணாம்னு தடுத்திருப்பீங்க."

"ஆமாண்டி. தடுக்கத்தான் செய்வோம். அதுக்கு உரிமையில்லையா எங்களுக்கு?" சுந்தரி கோபத்துடன் குறுக்கிட்டாள்.



"உரிமையிருக்குதான். ஆனால் உரிமையின் எல்லை தெரியுமா உங்களுக்கு? நான் சின்ன பெண் இல்ல. இத்தனை வருடம் நான் பாடுபட்டு படித்தது வீட்டில் சும்மா இருக்கவா? என் இஷ்டப்படி வேலை பார்க்க எனக்கு உரிமை உண்டு. இங்க உட்கார். அங்க நிற்காதே. இப்படி நடக்காதே என்ற உங்களின் அடக்கு முறையில் மூச்சு முட்டுகிறது எனக்கு. எப்பவும் என்னை ஒரு கைதி மாதிரி நடத்தறீங்க. என்னால் இயல்பாய் இருக்க முடியல. உங்க பெண்ணை நீங்களே நம்பலைன்னா வேறு யார் நம்புவா? ஒரு மாற்றம் எனக்கு. அதுக்காகத்தான் ஒரு இரண்டு வருடம் சிங்கப்பூர் போகிறேன். இதே நிறுவனத்தின் இந்திய கிளைக்கு இரண்டு வருடம் கழித்து வந்து விடலாம்."

"அப்படியென்ன நந்தினி உனக்கு வெறுத்துப் போச்சு" என்றார் அப்பா வருத்தத்துடன். "நீ ஆசைப்பட்டு கேட்ட படிப்பை படிக்க வெச்சோம். நீ கேட்காமலே துணி நகைன்னு வாங்கிக் கொடுத்தோம். நீ ஒரே பொண்ணுங்கறதால எங்க கண்ணுக்குள்ள வெச்சி பாத்துகிட்டோம். அந்த கண்காணிப்பு உனக்கு கைதித்தனமாய் தெரிஞ்சா அது எங்க தலையெழுத்துன்னுதான் சொல்லணும். நீ வேலை பார்க்கறதுன்னு முடிவு செஞ்சிருந்தா கூட இங்கியே எங்காவது பார்த்திருக்கலாமே! ஒரேயடியா பிரிஞ்சு போறதுன்னு தீர்மானம் பண்ணிட்டயே.

எங்களுக்கு உன்னைத் தவிர யார் இருக்கிறார்கள்? உன்னை புரிஞ்சுக்கலைன்னு சொல்றீயே. நீ எங்களை எப்படி புரிந்து கொண்டிருக்கிறாய்? உனக்கு பீஸ் கட்ட அப்பாவும், சமைச்சுப் போட அம்மாவும் தேவைன்னு நினைச்சிருக்க இல்ல?" வழக்கத்துக்கு மாறாய் அப்பா நீளமாய் பேசினார்.

சுந்தரி மகளின் அருகே சென்று அவள் முகவாயைப் பற்றி திருப்பி,

''நந்தினி, நாங்க உசிரோட இருக்கறதே உனக்காகத் தானே, எங்களை விட்டுப் போகாதே கண்ணு'' என அழத் தொடங்க,

'ஓ இவர்கள் நம்மை பலவீனப்படுத்துகிறார்கள்' என்று நந்தினிக்கு சலிப்பேற்பட்டது.

தினமும் பலவிதமாய் அவர்கள் கெஞ்சியும், கொஞ்சியும், கோபித்துக் கொண்டும், அதற்கெல்லாம் மசியாமல் நந்தினி கிளம்புவதில் மும்முரமானாள்.

தோழிகளைச் சந்தித்து விடை பெற்ற போது, ''நந்தினி என்ன இருந்தாலும் உனக்கு தைரியம் அதிகம்தான். அம்மா, அப்பாவிடம் கூட சொல்லாம ஏற்பாடு செஞ்சிகிட்டயே'' என்றார்கள்.

''எங்கம்மா எனக்கு எல்லா சுதந்திரமும் கொடுத்திருக்கிறாள். ஆனால் என்னால் கூட இப்படி துணிச்சலாய் கிளம்பியிருக்க முடியாது'' என்றாள் ரேகா.

''என் துணிச்சலுக்கு காரணமிருக்கிறது ரேகா. எனக்கு வீட்டில் மூச்சு முட்டுகிறது. சுதந்திரமாய் மூச்சுவிட வேண்டுமெனில் நான் துணிச்சலாய் இருந்துதான் ஆக வேண்டும்.''

உறவினர்கள் நந்தினியின் பயணம் பற்றி கேட்க வந்த போதெல்லாம் சுந்தரி அழுது தீர்த்தாள். நந்தினி எதையும் கண்டு கொள்ளாமல் பயண ஏற்பாட்டில் இருந்தாள்.

பயணம் உறுதிப்பட்டதும் சுந்தரி வேறு வழியின்றி மூக்கை உறிஞ்சியபடி ஊறுகாயும், பொடி வகைகளும் தயார் செய்தாள். அப்பா சால்வை, குடை, பெட்ஷீட், டிராவலர் பேக்குகள் என்று என்னென்னவோ வாங்கி வந்தார். இதெல்லாம் அங்கேயே கிடைக்கும் என்று சொல்ல வந்த நந்தினி கிளம்பும் நேரத்தில் விவாதம் வேண்டாம் என்று அமைதியானாள். சுந்தரி மகளுடன் பழனி போய் முருகனுக்கு தேர் இழுத்துவிட்டு வந்தாள். தன்னால் மாற்ற முடியாத மகளின் மனதை முருகன் மாற்றி விடுவார் என்ற நம்பிக்கையில் விரதம் இருந்தாள். தினமும் வீட்டில் பூஜையும் நைவேத்தியமும் அமர்க்களப்பட்டது. கிளம்பும் நாளன்று, ''நேரத்துக்கு சாப்பிடு, வாரா வாரம் எண்ணெய் தேய்த்துக் குளி. வெளியே துணையில்லாமல் போகாதே, அடிக்கடி போன் செய். உடம்பைப் பார்த்துக் கொள்'' என விடாமல் புலம்ப இன்னும் சில மணி நேரம் தான் என பல்லைக் கடித்தாள் நந்தினி.



ஏர்போர்ட்டில் விடைபெறுகையில் 'எல்லாம் அவன் செயல்' என கவலைகளை கடவுளிடம் ஒப்படைத்து விட்டு எதற்கும் கவலைப்படாமல் வளைய வரும் அப்பாவின் கண்களிலும் நீர்திரையிட்டது. செக்யூரிட்டி செக்குக்கு அழைத்தபோது இறுகப் பற்றிய அவர் விரல்களில் மெல்லிய நடுக்கம் தெரிந்தது. அம்மா கண்களில் நீர் வழிய திருநீரை நெற்றியில் பூசிவிட்டு மகளை இறுக அணைத்துக் கொண்டாள். செக்கிங்கிற்கு தன் பெயர் அழைக்கப்பட்டதும் தலையசைத்து விடைபெற்று டிராலியை தள்ளியபடி நந்தினி உள்ளே சென்றாள். ஸ்கேனிங், இமிக்ரேஷன், செக்கிங் எல்லாம் முடிந்ததும் விமானத்தில் ஏறப்போகும்போது நினைவு வந்தவளாக நெற்றியிலிருந்த திருநீரைத் துடைத்தாள். விமானம் பறக்கத் தொடங்கியபோது அம்மா, அப்பா, வீடு எல்லாம் பின்னால் போய் மனது புதிய உலகத்தை தரிசிக்கப் போகும் ஆர்வத்தில் ஆர்ப்பரித்தது.

சிங்கப்பூர் விமான நிலையத்தில் நந்தினியின் பெயர் தாங்கிய அட்டையுடன் நின்றிருந்த சீனப் பெண்ணிடம் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டாள். தன்னை 'சியோக்சின்' என்று அறிமுகப்படுத்திக் கொண்ட அந்த பெண் காத்திருந்த டாக்ஸியில் நந்தினியை அவளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விடுதிக்கு அழைத்துச் சென்றாள். தானும் நந்தினியின் அலுவலகத்திலேயே பணி புரிவதாகச் சொன்னாள்.

''நந்தினி உங்களுடைய மேலதிகாரி சியான்சாங். அவர் இப்போது விடுமுறையில் சென்றிருக்கிறார். நானும் அலுவலக வேலையாக நாளை வெளியூர் செல்வதால் மிஸ்டர் சியான்சாங்கின் நண்பர் உங்களுக்கு உங்கள் செக்ஷனுக்கு அழைத்துச் செல்வார். பிறகு உங்க செக்ஷன் ஆபீசர்கள் மற்ற விஷயங்களை சொல்வார்கள்'' என்ற சியோக்சின் சிங்கப்பூரின் சிட்டி மேப்பை நந்தினியிடம் கொடுத்து அலுவலகத்திற்கு வரவேண்டிய வழியையும் விளக்கமாகச் சொன்னாள். அவளுக்கு நன்றி கூறி விடைபெற்று தன் அறைக்கு வந்தாள் நந்தினி. அறை பெரிதாக நவீனமாக இருந்தது. அந்த அறையில் தங்கியிருக்கும் இன்னொரு பெண் வெளியே போயிருப்பதாகச் சொன்னார்கள்.

தேவையானால் சமைத்துக் கொள்ள ஒரு மின் அடுப்பு இருந்தது. அதைப் பார்த்த பிறகுதான் தனக்கு சமைக்கத் தெரியுமென்பது நந்தினிக்கு நினைவு வந்தது. கொஞ்ச நாட்கள் ப்ரெட்டையும், நூடுல்சையும் வைத்து சமாளிக்க வேண்டியதுதான் என்று நினைத்தபடி வெளியே பார்த்தாள். வராண்டா காலியாக இருந்தது. வரிசையாக இருந்த அறைகளில் அவளைப் போல வேலை பார்ப்பவர்கள் தங்கியிருந்தார்கள் போலும்.



காலையில் பரபரப்பாய் தயாராகி புதிய உடைகளை அணிந்து, கையிலிருந்த சிட்டி மேப்பைப் பார்த்தபடி ரயில் நிலையத்தை அடைந்தாள். நிலத்தடியே செல்லும் அதிவேக ரயிலில் பயணித்து ஆர்ச்செட் ரோட்டிலிருக்கும் அலுவலகத்திற்குள் நுழையும் போது மனம் சொல்ல முடியாத உற்சாகத்தில் திளைத்தது. சிங்கப்பூரின் அதி நவீன பணக்காரத்தனம் நிரம்பிய ஆர்ச்செட் ரோடில் அலுவலக கட்டிடம் கம்பீரமாய் நின்றது. சியோக்சின் ஏற்கனவே கூறியிருந்தபடி வரவேற்பு பகுதியில் தன் பெயரைச் சொல்லி அறிமுகப்படுத்திக் கொண்டாள் நந்தினி. நந்தினிக்கு நல்வரவு கூறிய அந்த ரிசப்ஷனிஸ்ட் ''காத்திருங்கள். உங்களை ரிசீவ் பண்ண இன்னும் சில நிமிடங்களில் வருவார்கள்'' என்றாள்.

அங்கிருந்த சோபாவில் அமர்ந்து கண்ணுக்கெட்டிய வரை விரிந்த கார்ப்பெட்டையும், பிரம்மாண்ட ஷாண்டிலியர்களையும் வேடிக்கைப் பார்த்த நிமிடத்தில் ''ஹலோ'' என்ற குரல் கேட்டுத் திரும்பினாள் நந்தினி.

''உங்களுடைய சீனியர் இன்று வராததால் அவர் சார்பில் உங்களை செக்ஷனுக்கு அழைத்துப் போக வந்திருக்கிறேன். என் பெயர் சார்லஸ் கெமிலோ. நண்பர்களுக்கு சுருக்கமாய் கெமி'' என்றபடி கண்களைச் சிமிட்டிச் சிரித்தான் அவன்.

* * *

விசிலடித்தபடியே டிரஸ்சிங் டேபிள் முன் நின்று தலை வாரிக் கொண்டிருந்தான் கெமி.

ஆறடி உயரமும், சிவந்த நிறமும் செதுக்கிய உடலும் அவனது கம்பீரத்தைக் கூட்ட, அலையாய் படிந்த முடி அவனுக்கு தனிக் கவர்ச்சியை கொடுத்தது. மனதின்

உல்லாசம் நடையில் வெளிப்பட, காரணமின்றி அறை சுற்றி வந்தான். வழக்கத்துக்கு மாறாய் வெகு நேர உடையை மாற்றி மாற்றிப் போடுவதும் கழட்டுவதுமா இருந்தவனை அவனுடன் அறையைப் பகிர்ந் கொள்ளும் ஹென்றி வியப்புடன் பார்த்தான்.

"கெமி இன்னிக்கு எங்காவது போகப் போறியா?"

"யெஸ். ஆபீசுக்கு."

"அதுதான் தினம் போகிறாயே! இன்னிக்கு உ டிரஸ்சையும், உற்சாகத்தையும் பார்த்தால் வழக்கம் போ வேலைக்குப் போவதாகத் தெரியவில்லை. ஸ்பெஷலா யாரையோ சந்திக்கப் போகிறாற் போலிருக்கிறது."

சமீபத்தில்தான் அறிமுகமான ஹென்றிகூட அறிந் கொள்ளும்படியா நடந்து கொள்கிறோம்? என்றிருந்த கெமிக்கு.

நம்ப முடியாத வியப்புடன் அவனைப் பார்த் நந்தினியின் முகம் ஒரு கணம் மனசில் வந்து போனது அவனுக்கும் அவளைப் பார்த்ததில் திகைப்புதா சென்னையிலிருந்த போது அவளது கல்லூரி வழியா அவன் பலமுறை செல்ல நேர்ந்தபோதும் அவள் க ணில் படவேயில்லை. அவள் நினைவு எழும் சமய களில் எல்லாம் தெருக்களிலும், திருமண வீடுகளிலு பார்க்கும் பெண்களைப் பற்றி கண்ட கற்பனைக வளர்த்துக் கொள்வது முட்டாள்தனம் என தனக்கு தா அறிவுறுத்திக் கொள்வான். எதிர்பாராமல் சிங்கப்பூ நிறுவனத்திற்கு வேலை விஷயமாய் வந்து விட்டா அம்மாவிற்கு அவன் போவதில் விருப்பம் இல்லை எ னும் அப்பாவின் பொருட்டு அரை மனதாய் சம்மதித்தா 'திருமணம் செய்து கொண்டாவது போ' என அவசரமா



மணம் முடிக்க முற்பட்டபோது, கெஞ்சி 'ஒரு வருடத் திற்குப் பிறகு வந்து மணந்து கொள்கிறேன்' என்று கெடு வைத்து விட்டு வந்திருக்கிறான்.

சென்னை வீதியில் முதன் முதலாய் நந்தினியைச் சந்திக்க வைத்து, திருச்சியில் அவளுடன் பேசிப் பழக சந்தர்ப்பம் தந்து, இங்கு இத்தனை ஆயிரம் கிலோ மீட்டர்கள் தள்ளி நாட்டையும் குடும்பத்தையும் விட்டு வசிக்கிற இடத்தில் நந்தினியை கொண்டு வந்து, அவனது அலுவலகத்திலேயே அவளைச் சேர வைத்திருக்கும் விதி உண்மையில் எத்தனை அற்புதமானது? உற்சாகத் துடன் ஹென்றியிடம் விடைபெற்று அலுவலகம் கிளம்பினான் கெமி.

அன்று அலுவலகத்தைச் சுற்றிலும் வேடிக்கைப் பார்த்தபடி அமர்ந்திருந்த நந்தினியைப் பார்த்து தான் திகைத்தது கெமிக்கு நினைவு வந்தது. முதலில் அது நந்தினிதானா என்ற சந்தேகம் கூட வந்தது. அருகில் போய் அவள்தான் என்று உறுதிபடுத்திக் கொண்டதும், நந் தினிக்கு என்னை நினைவிருக்குமா என்ற தவிப்பேற் பட்டது. ஏதோ ஒரு திருமண நிகழ்ச்சியில் சில மணி நேரம் பார்த்துப் பழகிய ஒருவனை அவள் எந்த அளவிற்கு நினைவில் வைத்திருப்பாள்?

நந்தினியின் முன்னால் போய் நின்றதும், அவள் 'கெமி!' என்று திகைத்ததும் அவன் முகம் மலர்ந்து போனது. அவள் தன்னை மறக்கவில்லை என்பது நிம்மதியைத் தர, "உலகம் ரொம்ப சின்னதுதான். இல்லையா நந்தினி? எங்கே போனாலும் மறுபடி சந்தித்துக் கொள்கிறோம்" என்று சிரித்தான்.

பிறகு அவளை அவளது செக்ஷனுக்கு அழைத்துப் போய் சியான்சாங்கின் அஸிஸ்டென்டுக்கு அறிமுகம் செய்து வைத்தான். "உன்னுடைய சீனியர் சியான்சாங் நாளை வந்து விடுவார். அவர் எனது நண்பரும் கூட. உன் வேலை விஷயம் அவருடைய அசிஸ்டென்ட் சொல்வார். ஆக்சுவலா என்னுடையது கம்ப்யூட்டர் செக்ஷன். பனிரெண்டாவது மாடியில் இருக்கறது. எதாவது தேவை என்றால் தயங்காமல் கூப்பிடலாம்" என்றபடி அவளிடம் விடைபெற்று தன் வேலையைப் பார்க்கப் போனான் கெமி. மாலையில் அவனது வேலை முடிய தாமதமானதால் அவனால் நந்தினியை சந்திக்க முடியவில்லை. புது இடத்தில், புதிய சூழ்நிலையில் எப்படிச் சமாளித்திருப்பாளோ தெரியவில்லை. யோசித்தபடி ரயில் நிலையம் சென்றான்.

டிக்கெட் மெஷினின் பணத்தைப் போட்டு, செல்லும் இடத்தை பிரஸ் பண்ணியதும், அது துப்பிய மீதி சில்லரையையும், டிக்கெட்டையும் எடுத்துக் கொண்டு திரும்பியபோது நந்தினி எதிரே நின்றிருந்தாள்.

சட்டென்று ஏற்பட்ட மகிழ்ச்சியுடன் "ஹலோ" என்றான் கெமி. "டிக்கெட் எடுத்தாச்சா?"

"ஆச்சு."

பேசியபடியே எக்ஸலேட்டரில் இறங்கி, ரயிலில் பயணித்து அலுவலகத்தை அடைந்தனர். இன்னும் அலுவலகம் செயல்பட நேரம் இருந்தது.

"ஒரு காபி குடிக்கலாமா நந்தினி?" என்றான் கெமி.

"ஓ, யெஸ். அதோட ஒரு சான்விச்சும் கூட. நான் காலையில் சாப்பிடவேயில்லை."



CPL 667444

"ஏன்?"

"ஏன்னா என் அறையில் சாப்பிட ஏதுமில்லை. நேற்றிலிருந்து அம்மா கொடுத்தனுப்பிய முறுக்கையும், சீடையையும் சாப்பிட்டு காலியாகி விட்டது. இன்னிக்கு ப்ரட் வாங்கிட்டுப் போகணும்."

667444

"உன் அறையில் காஸ் அடுப்பு, சில சாமான்கள் இருக்குமே! டிபார்ட்மென்டல் ஸ்டோர் கூட நீ தங்கியிருக்கும் இடத்திற்கு அருகிலேயே இருக்கிறது. எல்லா இந்திய சாமான்களும் கிடைக்கும்."

894.8113 THA

"சரிதான். எல்லா சாமானையும் வாங்கி வெச்சிட்டு நான் என்ன செய்ய? எனக்கு சமைக்கத் தெரியாதே!"

"மைகாட், நிஜமா உனக்கு சமைக்கத் தெரியாதா? பொதுவா நம்ம குடும்பங்கள்ல சின்ன வயசிலயிருந்து கோலம் போடறது, சமையல் பண்றது, எம்ப்ராய்டரி மாதிரி கை வேலை எல்லாம் கத்துக் கொடுத்திடுவாங்களே!"

"அதெல்லாம் சராசரி பெண்களுக்கு. நந்தினி ரொம்ப வித்தியாசமானவ இல்லியா? அதனால எதுவுமே கத்துக்கல." சிரித்த நந்தினியின் ரோஸ் நிற இதழ்களில் பளீரிட்ட வெண் பற்களைப் பார்த்த கெமி, "யெஸ் யு ஆர் டிபரண்ட்" என்றான் மெதுவான குரலில்.

அன்று சியான்சாங் வந்திருக்கவே, அவரிடம் நந்தினியை தன் தோழி என கெமி அறிமுகப்படுத்தினான். சியான்சாங் நடுத்தர வயதுடையவராய் இருந்தார். சீன உச்சரிப்பில் ஆங்கிலம் பேசினார்.

"இந்த அலுவலகத்திற்கு உன் திறமையும், சின்சியாரிட்டியும் தேவை. உன் உழைப்புக்கு தகுந்த பலனை

CONNEMARA PUBLIC LIBR

நிச்சயம் எதிர்பார்க்கலாம். வாழ்த்துக்கள்'' என நந்தினியின் கையை குலுக்கினார்.

அவருக்கு நன்றி சொல்லிவிட்டு நந்தினி தன் வேலையை ஆரம்பித்தாள்.

மாலையில் வேலை முடிந்து வரும்போது எதாவது இண்டியன் ஸ்டோருக்கு போனால் என்ன என்று தோன்றியது. நேராய் லிட்டில் இந்தியா போனாள். சரவண பவனில் மசால் தோசையும் காபியும் சாப்பிட்டாள். அரிசியும், பால், தயிர் பாக்கெட்டுகளும் வாங்கிக் கொண்டு நகர்ந்தாள். தமிழில் போர்டுகளும், தமிழ் பேசும் மக்களும், இந்திய கடைகளுமாய் லிட்டில் இந்தியா இந்தியாவில் இருப்பது போன்ற பிரேமையையே அளித்தது. முஸ்தாபாவின் மிகப் பெரிய வணிக வளாகத் திற்குள் புகுந்து ஒரு சுற்று சுற்றிவிட்டு தன் அறைக்கு வந்து சேர்ந்தாள். இன்று அவளது அறையில் தங்கி யிருக்கும் பெண் வந்து விடுவாள் என்று கூறியிருந் தார்கள். எனவே லைட்டை அணைக்காமல் மேகஸினை புரட்டியபடி அமர்ந்திருந்தாள் நந்தினி.

இங்கு வந்து சேர்ந்ததும் அப்பாவுக்கு போன் செய்து தகவல் சொன்னதோடு சரி. மறுபடி அவர்கள் நினைவே வரவில்லை. புதிய விஷயங்களை கிரகித்துக் கொள்கிற ஆர்வத்தில் பழைய விஷயங்களை நினைக்க மறந்து போனாள்.

மெதுவாய் கதவு தட்டப்படும் சத்தம் கேட்டது. நந்தினி கதவைத் திறந்ததும் அவள் வயதையொத்த பெண் வெளியே நின்றிருந்தாள். ''ஹாய், ஐயாம் மார்கரெட். யுவர் ரூம் மேட்'' என்றாள் புன்னகைத்து. கூட ஆள் கிடைத்த நிம்மதியில் நந்தினி அவளை ஆர்வமுடன் வரவேற்றாள்.



மார்கரெட் பிரான்சிலிருந்து கடல் வாழ் உயிரினங்கள் பற்றிய ஆராய்ச்சிக்கு வந்திருப்பதாக கூறினாள். ''அடிக்கடி வெளியே சென்று விடுவேன். நீ இன்னொரு ரூம் சாவியை மேட்ரனிடம் கேட்டு வாங்கி வைத்துக் கொள்'' என்றாள்.

தன் ஆராய்ச்சி படிப்பு பற்றியும், ப்ரான்சை பற்றியும், நந்தினி பற்றிய விபரங்களையும் வெகு நேரம் பேசினாள். சின்ன விஷயங்களுக்கும் நன்றி சொன்னாள் அல்லது மன்னிப்பு கேட்டாள். வார்த்தைக்கு வார்த்தை புன்னகைத் தாள். பொதுவாய் அமெரிக்கர்களும், ஐரோப்பியர்களும் மிகவும் உல்லாசமானவர்கள் என்பது சரிதான் போலும் என்று நினைத்தாள் நந்தினி.

தினமும் நந்தினி கிளம்பிப் போகையில் ரயில் நிலை யத்தில் கெமி அவளுடன் வந்து சேர்ந்து கொள்வான். அவனிடம் அவளால் எந்த தயக்கமுமின்றி சகஜமாகப் பழக முடிந்தது. இங்கு தெரிந்த ஒரே முகம் என்பதாலோ என்னவோ எல்லாவற்றையும் பகிர்ந்து கொள்ள முடிந்தது.

அம்மாவும் அப்பாவும் அடிக்கடி போன் செய்தார்கள். அவளாய் ஒருமுறை கூட அவர்களுக்கு பண்ணியதில்லை. அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு பதில் அளிப்பதோடு சரி. திரும்ப எதாவது கேட்க வேண்டும் என்று கூடத் தோன்றியதில்லை. அதையெல்லாம் பொருட்படுத்தாமல் அம்மா, அவள் உடல் நலனைப் பற்றியும், பாதுகாப்பு பற்றியும் தன் அறிவுரைகளை சொல்லிக் கொண்டேதான் இருந்தாள். அவர்களை விட்டு இவ்வளவு தொலைவில் வந்த பிறகும் கூட பெற்றோர்களுக்காக மனம் ஏங்கவில்லை என்பது அவளுக்கே விசித்திரமாகத்தான் இருந்தது.

# 5



கெமி டி.வி.யை அணைத்துவிட்டு மணியைப் பார்த்தான். இரவு பத்தாகியிருந்தது. ஹென்றி இன்னும் வரவில்லை. எழுந்து போய் கதவை உட்புறம் பூட்டும் போது செல்போன் சிணுங்கியது.

''கெமி நான் உன்னை தொல்லை செய்யவில்லையே!'' நந்தினியின் குரல் போனில் தயக்கத்துடன் ஒலித்தது.

''வித் ப்ளஷர். தாராளமாய் தொல்லை செய்யலாம். என்ன வேண்டும் நந்தினி? சொல்?''

''எனக்கு சாதம் சாப்பிடணும் கெமி.''

''தாராளமாய் சாப்பிடேன். நான் வந்து பிசைந்து தர ணுமா என்ன?''

''விளையாடாதே கெமி.''

''நீதான் விளையாடற நந்தினி. நைட் பத்து மணிக்கு மேல போன் பண்ணி சாதம் சாப்பிட என் உதவி கேட்டா நான் என்ன சொல்லட்டும்?''

''சாதம் எப்படி செய்யறதுன்னு சொல்லலாம் கெமி.''

''ஓ, அதுதான் உன் ப்ராப்ளமா?'' என்ற கெமி குக்கரில் எவ்வளவு அரிசி வைத்து, அதற்கு எவ்வளவு தண்ணீர் விட வேண்டும் என்ற அளவைச் சொன்னான். அவள் அதே அளவு அரிசியும் நீரும் விட்டு குக்கரை மூடினாள்.



''இன்னும் பத்து நிமிடத்தில் சாதம் ரெடியாயிடும். இரண்டு விசில் வந்தப்பறம் அடுப்பை நிறுத்து. சற்று ஆறிய பிறகு குக்கர் மூடியைத் திற, கவனமாய் செய்'' என பலமுறை சொல்லிவிட்டு போனை வைத்தான் கெமி.

கதவை தட்டிய ஹென்றிக்கு கதவைத் திறந்து விட்டு படுக்க ஆயத்தமானபோது மறுபடி செல் ஒலித்தது. போனில் பேசிய நந்தினி கிட்டத்தட்ட புலம்பினாள்.

''கெமி இந்த குக்கரில் ஏதோ பிரச்சனை போலிருக்கு. ஒரே சத்தம், மூடி வழியா சாதமெல்லாம் வெளியே வந்துடிச்சி. பக்கத்துலே போனா வெடிச்சிடுமோன்னு பயமா வேற இருந்தது. என் ரூம் மேட் மார்கரெட் வேற பயந்து கத்த ஆரம்பிச்சிட்டா. அவளை சமாளிக்கறதுக் குள்ளே எனக்கு போதும் போதும்னு ஆகிப்போச்சு. இன்னும் ரூம் எல்லாம் வேற சுத்தம் பண்ணனும். சே! ஒரு வாய் சாப்பாட்டிற்கு ஆசைப்பட்டு எத்தனை வேலை செய்ய வேண்டியதாய் இருக்கிறது. எல்லாம் இந்த குக்க ரால் வந்தது.''

''குக்கரிலிருந்து சாதம் எப்படி வெளியே வந்தது? நீ குக்கர் வெயிட்டை போட்டியா நந்தினி?''

''ஐய்யய்யோ, மறந்துட்டேனே!''

கெமி சத்தமாய் சிரிக்கத் தொடங்க நந்தினிக்கும் சிரிப்பு வந்தது.

''நீயெல்லாம் எப்படித்தான் மறக்காம படிச்சியோ நந்தினி?''

''படிப்பில எல்லாம் நான் கெட்டி. சமையலில்தான் கொஞ்சம் வீக்.''

''கொஞ்சமில்ல. ரொம்பவே வீக். சரி இப்போ சாப்பிட என்ன வெச்சிருக்க?''

''ம்.. தயிர் இருக்கு. அதையே மோராக்கி குடிக்க வேண்டியதுதான்.''

கெமிக்கு சிரிப்பும் பரிதாபமும் ஒருங்கே தோன்றின.

''நந்தினி உனக்குப் பசிக்கிறதா?'' என்றான்.

''ரொம்ப.''

''எங்கூட வர்றியா? உனக்கு சாப்பிட என்ன கிடைக்கிறதோ வாங்கித் தருகிறேன்!''

''இப்பவே வா?''

''யெஸ். உன் ஹாஸ்டலுக்கு வெளியே வந்து காத்திரு.''

''ஓ யே!'' என்று கத்திய நந்தினி உற்சாகத்துடன் உடை மாற்றி வெளியே வந்தாள்.

''நந்தினியும் கெமியும் சைனா டவுனில் அந்த இரவில் நூடுல்சும், சூப்பும் சாப்பிட்டார்கள். சிக்கன் நூடுல்சை சாப்பிட்ட கெமி. ''நந்தினி நீ டேஸ்ட் பண்ணி பாக்கிறியா?'' என்றான் அவளிடம்.

''நான் நான்வெஜ் சாப்பிட மாட்டேன் கெமி.''

''ஸாரி உங்க வீட்ல சாப்பிட மாட்டீங்க இல்ல? மறந்துட்டேன்.''

''வீட்ல சமைக்கறதில்லைங்கறதுனால இல்ல. எனக்கு அந்த வாசம், டேஸ்ட் பிடிப்பதில்லை. சிலர் முள்ளங்கி பிடிக்காது. புடலங்காய் பிடிக்காதுன்னு சொல்றதில்லையா? அது மாதிரிதான். மத்தபடி சாப்பிடக் கூடாதுன்னெல்லாம் இல்ல.''

''எங்க வீட்ல தினமும் நான்வெஜ் இருக்கும் நந்தினி. நீ சொல்ற அந்த வாசம் இல்லாட்டி யாருக்கும் சாப்பாடு இறங்காது.''



''உங்க வீட்ல யாரெல்லாம் இருக்காங்க கெமி?''

''கெமி தன் வீட்டினரைப் பற்றிய விபரம் சொன்னான். ''எல்லோரும் ரொம்ப நல்லவங்க நந்தினி. அன்பான குடும்பம். ஒருத்தருக்கொருத்தர் கலந்து பேசாமல் எதுவும் செய்ய மாட்டோம். ஞாயிற்றுக் கிழமைகளில் அப்பா, நான், அண்ணன் மூனு பேரும் சமையல் செய்வோம். அம்மாவையும், அண்ணியையும், அக்காவையும் உட்கார வைத்து பரிமாறுவோம். நான் இங்கு வருவதில் யாருக்கும் விருப்பம் இல்லை. எல்லோரையும் கன்வின்ஸ் பண்ண ரொம்ப திணறிட்டேன். கடைசியா அப்பா சொன்னப்புறம்தான் அமைதியானாங்க. இப்ப கூட தினமும் வீட்டிலிருந்து யாராவது ஒருவர் போன் செய்து விடுவார்கள். அம்மா கர்த்தர் மேல் ரொம்ப ஈடுபாடு கொண்டவங்க. செடியில் ஒரு பூ மலர்ந்தாலும் சரி, தொழிலில் ஒரு வெற்றி கிடைத்தாலும் சரி. அது கடவுளால்தான் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவங்க.''

''என் பெற்றோர்கள் கூட அப்படித்தான். ஒவ்வொரு வார்த்தைக்கும், ஒவ்வொரு அசைவுக்கும் 'எல்லாம் அவன் செயல்' என் கடவுளை காரணமாக்கி விடுவார்கள்.''

சாப்பாடு முடித்து திரும்பி வரும்போது நடு இரவாகியிருந்தது. ஆள் யாருமற்ற துப்புரவான சாலைகள் ஒரு அழகான அமைதியில் இருந்தன. பைக்கில் கெமியின் பின்னால் அமர்ந்து எதிர்காற்று முகத்தில் மோத பயணிப்பது தனி சுகமாக இருந்தது.

'இதற்காகத்தான் இத்தனை நாள் காத்திருந்தேன்' நந்தினி தனக்குள் சொல்லிக் கொண்டாள். நினைத்த நேரம் வெளியே போய் கிடைத்ததை சாப்பிட்டு... நள்ளிரவில் தனிமையில் பயணம் செய்து.. எப்படிப்பட்ட

சுதந்திரம் இது? நான் நானாக இருக்க முடிந்த சுதந்திரம். நந்தினிக்கு கால்களால் எம்பி காற்றை தொட வேண்டும் போலிருந்தது.

''நந்தினி இறங்கலை? தூங்கிட்டியா என்ன?''

கெமியின் குரல் கேட்டு கண்களை விழித்தாள் நந்தினி. அவளது விடுதி வாயிலில் வண்டி நின்றிருந்தது.

இறங்கி நின்று ''ரொம்ப தேங்க்ஸ் கெமி'' என்றாள் மனப்பூர்வமாய்.

''எதுக்கு நந்தினி இதெல்லாம்? குட்நைட்'' என்றபடி கெமி புறப்பட்டுப் போனாள்.

கெமி உண்மையில் மிகவும் நல்லவன் என்று நினைத்தபடி நந்தினி உள்ளே போனாள்.

நந்தினியின் வேலை மிகவும் சுவாரஸ்யமாக இருந்தது. பெரியவங்க பேச்சை கேட்டு நட என்ற கட்டளையின்றி, உன் மாமா பெண்ணைப் பார். சித்தி பெண்ணைப் பார் என்ற ஒப்பிடுதல்கள் ஏதுமின்றி நந்தினி தன் விருப்பப்படி வேலை செய்தாள். விரும்பிய நேரம் விரும்பியதை செய்தாள். சியான்சாங் வேலையில் அவளது திறமையை பாராட்டும் போதும். மற்றவர்களிடம் புகழ்ந்து பேசும் போதும் மனதில் அம்மாவிடம் சொல்லிக் கொள்வாள். ''உங்க பாராட்டுக்கு நான் ஒண்ணும் ஏங்கிப் போயிடல.''

மார்கரெட் அவளுடன் நட்புடன் பழகினாள். ஆனால் பல சமயம் நந்தினி கிளம்பும்போது அவள் உறக்கத்தில் இருப்பாள். இரவில் தாமதமாய் வருவாள். வார இறுதி நாட்களில் சில சமயம் தன் நண்பனுடன் தங்கிக் கொள் வாள். நந்தினியுடன் சகஜமாய் பேசியபடி அவள் சிகரெட் குடிப்பதைப் பார்க்கும்போது நந்தினிக்கு முதலில்



கொஞ்சம் அதிர்ச்சியாகத்தான் இருந்தது. நாளடைவில் அவளுடனான பழக்கத்தில், அவள் உடல்நலனை கெடுத்துக் கொள்வதோ, பராமரிப்பதோ அவளது விருப்பம் என்று எளிதாக ஒதுக்க முடிந்தது.

அடுத்த வாரத்தில் நந்தினிக்கு சனி, ஞாயிறுடன் தேசிய விடுமுறையாக மேலும் இரண்டு நாட்கள் விடு முறை கிடைத்தது. நாட்கு நாட்கள் வேலையின்றி இந்த அறைக்குள் என்ன செய்ய முடியும் என்று அலுப்பாக இருந்தது. கெமி இந்தியா போவதாக சொன்னான். ''வந்து ஆறு மாசமாச்சு நந்தினி. அம்மா கூப்பிட்டுக் கொண்டே இருக்கிறார்கள். போனால் குடும்பத்துடன் மூன்று நாளை செலவிடலாம். நீயும். உன் வீட்டிற்குப் போகலாமே நந்தினி?''

''வேண்டாம்ப்பா. அங்க போய் அவங்க நிம்மதியை ஏன் கெடுக்கணும்?''

''ஏன் கெடணும்?''

''பின்னே, என்னை மாதிரி ஒரு அடங்காப்பிடாரியை அவங்க எத்தனை நாள் வெச்சு சமாளிக்க முடியும்?''

''உனக்கு உன் பெற்றோரை பார்க்கணும்னு தோண லியா நந்தினி?''

''எதுக்கு தோணனும்? இத்தனை நாள் அவங்க கூடத் தான் இருந்தேன். ஆனா விபரம் தெரிஞ்ச நாளா இப்பதான் ரொம்ப சந்தோஷமா இருக்கேன்.''

''ஒருவேளை உன் சந்தோஷத்தின் காரணம் வேறயா கூட இருக்கலாம் நந்தினி.''

''என்ன காரணம்?''

''கெமி மாதிரி ஒரு ஹீரோ உன்கூட இருக்கறதாலயா இருக்கலாம்.''

''ஐயோ'' காதைப் பொத்திக் கொண்டாள் நந்தினி. ''பெரிய டமாரம். என் காதே போச்சு.''

வாய்விட்டுச் சிரித்தான் கெமி.

ஆரோக்கியமான ஈறுகளும், வரிசைப் பற்களும் மின்ன அவன் சிரிப்பதை புது சுவாரஸ்யத்துடன் பார்த்தாள் நந்தினி.

''கெமி ரொம்ப அழகான ஸ்மைல் உன்னுடையது. எதாவது பற்பசை விளம்பரதாரர்கள் கண்ணில் பட்டிருந்தால் உன்னை விட்டிருக்கவே மாட்டார்கள்'' என்றாள் வெளிப்படையாக.

அலட்சியத்துடன் தோள்களை குலுக்கினான் கெமி. ''யார் யார் கண்ணுலயோ பட்டு எனக்கென்ன பிரயோஜனம்? பட வேண்டியவங்க கண்ணுல பட்டா போதும்.''

''யார் அது உன்னைப் பார்க்க வேண்டியவங்க?''

''யாரோ?''

''சொல்லேன் கெமி யார் அது?''

கெமி பதில் ஒன்றும் சொல்லாமலிருக்கவே சில நிமிட அமைதியின் பின் ''கெமி நீ யாரையாவது லவ் பண் றியா?'' என்றாள் நந்தினி. வாடிப் போன முகத்தையும், கா கரத்த குரலையும் கவனித்த கெமி மீண்டும் வாய்விட்டுச் சிரித்தான்.

''சிரிக்காதே கெமி. எரிச்சலா இருக்கு'' என்றாள் நந்தினி கடுப்புடன்.

''இப்ப யாரோ நான் சிரிச்சா கவர்ச்சியா இருக்குன்னு சொன்னாங்களே! அது யார் தெரியுமா நந்தினி?''



''அது யாராவது முட்டாளாய் இருக்கும்.''

''வெரிகுட். தன்னைத்தானே முட்டாள்னு ஒத்துக்கற ஒரு பெண்ணை இப்பதான் நான் பார்க்கிறேன்.''

''கேட்டதுக்கு பதில் சொல்றதை விட்டுட்டு நீ தேவையில்லாததை எல்லாம் நல்லா பேசற?''

கெமி சிரிப்புடன் ஏதோ பேச்சைத் தொடங்க ''ஹலோ கெமி'' என்றபடி அங்கே வந்தான் அவனது நண்பன் கதிர்வேல்.

நந்தினியை அவனுக்கு அறிமுகப்படுத்திய கெமி. ''இவன் கதிர்வேல். எங்க பேமிலி ப்ரண்ட். இவன் பிறந்து வளர்ந்தது எல்லாம் சிங்கப்பூர் தான். பட் எங்கப்பாவும் இவங்கப்பாவும் சின்ன வயதில் நாகர்கோவில் ஒரே பள்ளியில் படித்து எதிர் எதிர் வீடுகளில் வசித்தவர்கள்'' என்று கதிரை நந்தினிக்கு அறிமுகம் செய்தான்.

பரஸ்பரம் இருவரும் 'ஹலோ' சொன்னதும், ''கெமி லிட்டில் இந்தியாவரை போகணும். எங்கூட வர்றியா? அல்லது உங்களுக்கு எதாவது வேலை இருந்தால் சொல்லிவிடு'' என இருவரையும் மாறி மாறிப் பார்த்தான் கதிர்.

''நாங்க சும்மாதான் பேசிட்டிருந்தோம். நீங்க கிளம்புங்க'' என்றபடி நந்தினி விடைபெற்றுச் சென்றதும், ''கெமி நல்ல நேரத்தில் நான் குறுக்கே வந்து விட்டேன் இல்ல?'' என்றான் கதிர்வேல் குறும்புடன்.

''சே! வீணாய் கற்பனை செய்யாதே! என்னுடைய அலுவலகத்தில் மேனேஜ்மெண்ட் செக்ஷனில் வேலை செய்கிறாள். (அவ்வளவுதான்)'' ''நிஜமாவே அவ்வளவு தானா?''

''வேறென்ன?''

''தூரத்திலிருந்து வரும்போதே நீ அந்த பொண்ணு கிட்ட பேசிட்டு இருந்ததை பார்த்தேன். உங்க ரெண்டு பேர் முகத்தையும் பார்த்தால் சாதாரணமாய் கொலிக்ஸ் பேசிக்கிற மாதிரி தெரியல. உன் சிரிப்பையும், வழிசலையும் பார்த்தாலே பளிச்சுன்னு விஷயம் தெரியுது. இங்கு உனக்கு உதவி எதாவது வேணும்னா குடும்ப நண்பன் நான் இருக்கிறேன். எங்கிட்ட மறைக்காம விஷயம் எதுவரை வந்திருக்குன்னு சொல்லிடு.''

''வண்டியை எடுடா முதல்ல.'' கதிரின் முதுகில் விளையாட்டாய் குத்தினான் கெமி.

''என்னதான் பொத்தி பொத்தி வெச்சாலும் பூ மலர்ந்ததும் அதன் வாசமே ஊருக்கெல்லாம் சொல்லி வரும். நினைவு வெச்சுக்கோ கெமி. காதலும் அப்படித்தான்.

சிரித்துப் பேசியபடியே முஸ்தாபாவின் பார்க்கிங்கில் வண்டியை நிறுத்தினான் கதிர்.

கதிர்வேலின் முதல் வருட திருமண நாளைக்காக அவன் மனைவிக்கு ஏதாவது வாங்க வந்திருந்தான். ஒவ்வொரு செக்ஷனாக சுற்றி ஒரு மோதிரமும், பிங்க் கலரில் ஒரு பேன்ஸி புடவையும் தேர்ந்தெடுத்தான் கதிர்.

ஹேங்கர்களை புரட்டுகையில் ஒரு டார்க் மெரூன் நிற புடவை கண்ணைக் கவரவே, ''அம்மாவிற்கு நன்றாக இருக்கும்'' என்றபடி அந்த புடவையை பேக் பண்ணினான் கெமி.

''எங்க வெட்டிங் ஆன்வரிஸரிக்காக எங்க மாமனார், மாமியார் எல்லாம் இந்தியாவிலிருந்து வந்திருக்காங்க கெமி. நானும், என் மனைவி இந்துவும் முதலில் வேறு



திட்டம் போட்டிருந்தோம். வெட்டிங் டேக்கு முதல் நாள் கிளம்பிச் சென்தோசா ஐலண்ட் போய் ராசா சென்தோசா ரிசார்டில் தங்குவதாக ப்ளான். ஆனால் அப்பா சம்பிரதாயமாக கொண்டாட ஏற்பாடு செய்து விட்டார்.

''ஓகோ. அதனால்தான் ஐயா இவ்வளவு டல்லா இருக்கீங்களா? ப்ளான் ஊத்திக்கிச்சோன்னு சோகமா? கவலைப்படாதே கதிர். சென்தோசா எங்கே போய் விடப் போகிறது? இப்ப இல்லாட்டி அடுத்த வீக் எண்ட் போனா போறது? இதுக்குப் போய் அழலாமா? கண்ணைத் துடை'' கெமி ஆறுதல் சொல்வதுபோல் வாரவும் கதிர் லேசாய் வழிந்தான்.

இருவரும் பேசியபடியே சாப்பிட்டதும் கெமியை அவனது அறையில் விட்டு விட்டு கதிர் கிளம்பிச் சென்றான்.

கெமி உடைமாற்றி வந்து படுக்கையில் அமர்கையில் நந்தினியிடம் மாலையில் பேசிய விஷயம் நினைவுக்கு வந்தது. 'நீ யாரையாவது காதலிக்கிறாயா?' என்ற நந்தினியின் முகம் மனதிலாட, நந்தினிக்கும் நம்மேல் பிரியம் இருந்திருந்தால் இந்நேரம் தூங்கியிருக்க மாட்டாள் என்று நினைத்தான். சற்று நேரம் கண்களை மூடிய கெமிக்கு, நந்தினி என்ன செய்து கொண்டிருக்கிறாள் என்பதை தெரிந்து கொள்ளாமல் உறங்க முடியாது போலிருந்தது. எழுந்து அமர்ந்து நந்தினியின் நெம்பரை டயல் செய்தான்.

முதல் ரிங்கிலேயே போனை எடுத்தாள் நந்தினி.

''நீ இன்னும் தூங்கலையா நந்தினி?''

''இது என்ன முட்டாள்தனமான கேள்வி? தூங்கியிருந்தா எப்படி பேசுவேன்?''

"சரி ஏன் தூங்கல?"

"நீ ஏன் இன்னும் தூங்கல?"

"ஓ.கே. நாம ரெண்டு பேரும் தூங்காததற்கு என்ன காரணம்னு நான் சொல்லட்டா?"

"சொல்லு?"

"நம்ம ரெண்டு பேர் மனசிலும் இப்ப நான் காதலிக்கிற பொண்ணுதான் இருக்கா. அவளைப் பத்தியே நினைச்சி நானும், அவ யாராய் இருக்கும்னு நினைச்சி நீயும் தூங்கல. சரியா?"

எதிர்முனையில் நந்தினி பிடிபட்டாற் போல் திணறுவது நன்றாகத் தெரிந்தது. பதில் எதுவும் வராமல் போகவே கெமி சிரித்தபடி "நந்தினி" என்றான். "போடா" என்றபடி போனை அணைத்தாள் நந்தினி.

* * *

அன்று காலையில் எழும்போதே நந்தினிக்கு சோம்பலாக இருந்தது. வாட்ச்சைப் பார்த்தாள். காலை பத்து மணி ஆகியிருந்தது. மார்கரெட் காலையிலேயே போய் விட்டிருந்தாள். எழுந்து இப்போது என்ன செய்வதென்று தெரியவில்லை. பேச்சு துணைக்குக் கூட யாருமில்லாத நிலையில் நாலு நாட்களை இந்த அறையில்தான் கழித்தாக வேண்டும். சென்னையில் ஒரு விடுமுறையை கூட அவள் வெறுமனே கழித்ததில்லை. அவள் வீட்டிற்கு அத்தை, மாமா, சித்தி, ஒன்று விட்ட, இரண்டு விட்ட உறவுகள் யாராவது வந்து கொண்டிருப்பார்கள். நந்தினி லைப்ரரிக்குப் போவதும், படிப்பதும்,

ரேகா, சுஜாதா, தாரிணி எல்லோரும் சேர்ந்து அரட்டை அடிப்பதுமாய் இருப்பார்கள். அம்மா "இன்னிக்கு லீவு



தானே, நிதானமா சாப்பிடு, எண்ணெய் தேய்ச்சி குளி" என எதாவது சொல்லிக் கொண்டே அலைவாள். இத்தனை வருடங்களில் இன்றுதான் விடுமுறை என்பது போரடிப்பதாக இருக்கிறது.

கெமி இந்நேரம் இந்தியா போயிருப்பான். ஒரு வேளை இரவு ஏர்போர்ட்டிலிருந்து பேசியிருப்பானோ என்னவோ? இந்நேரம் அப்பா, அம்மா, அண்ணன், அண்ணி, அக்கா எல்லோருடனும் உட்கார்ந்து அரட்டை அடித்துக் கொண்டு, சாப்பிட்டுக் கொண்டு, சிரித்துக் கொண்டிருப்பான். அவன் ஒரு பெண்ணை காதலிக்கிறான் என்ற விஷயம்தான் இன்னும் நம்ப முடியாமல் இருக்கிறது. ஒரு வேளை வேண்டுமென்றே சொல்லியிருப்பானாய் இருக்கும். இவ்வளவு சின்ன ஊரில் அவன் ஒரு பெண்ணுடன் சுற்றினால் அது தெரிய ரொம்ப நேரம் ஆகாது. திரும்ப திரும்ப அவன் சீண்டியதும் சாதாரண மரியாதைக் கூட மறந்துபோய் 'போடா' என்றதும் ரொம்பவும் அதிகப்படிதான்.

எழுந்து போய் பல்லை துலக்கி விட்டு காபியை கலக்கும்போது அழைப்பு மணி அடித்தது. கையில் காபி கப்புடன் போய் கதவை திறந்தபோது, பெரிய சிரிப்புடன் கெமி நின்றிருந்தான். "எனக்கு ஒரு கப் காபி கிடைக்குமா?" என்றபடி.

"நீ இந்தியா போகலியா கெமி?" என்றாள் நந்தினி ஆச்சரியத்துடன். அவள் கையிலிருந்த கோப்பையை வாங்கி ஒரு வாய் பருகியவன், "போயிருந்தா, இந்த மாதிரி காபி கிடைச்சிருக்குமா? உன் காபியோட டேஸ்ட்ல மயங்கியே நான் போகல. போதுமா?" என்றான்.

கலகலவென சிரித்த நந்தினி, "அதுவும் நல்லதுதான். எனக்கு பசிக்குது, எதாவது சமையல் பண்ணி கொடு கெமி" என்றாள்.

"அடிப்பாவி, காலை பத்து மணிக்கு எழுந்து, ஒரு ஆம்பளையை சமைக்கச் சொல்றியே, நீயெல்லாம் ஒரு பொம்பளையா?"

"நான் ஒரு பொம்பளைன்னு யார் சொன்னா? நான் தேவதையாக்கும்" வெள்ளை நிற கப்தானில் தூங்கி எழுந்ததால் கலைந்த முடிகள் முகமெங்கும் பறக்க தலை சாய்த்து சிரித்தவளை பார்த்தவன், "யெஸ், நிஜமாவே நீ தேவதைதான்" என்றான் முறுவலுடன்.

சாதமும் சாம்பாரும் செய்ய நந்தினிக்கு கற்றுக் கொடுத்தான் கெமி. சிரிப்பும் விளையாட்டுமாய் வேலை செய்வது இருவருக்கும் உற்சாகமாய் இருந்தது.

"தொட்டுக்க பிஷ் ப்ரை செய்யலாமா நந்தினி?" என்றான் கெமி.

சற்று தயங்கிய நந்தினி "எனக்கு சாப்பிட்டுப் பழக்கம் இல்ல கெமி" என்றாள்.

"அதனால் என்ன? பழகிட்டா போச்சு."

"எனக்குப் பழகணும்னே இல்ல. தப்பா நினைக்காதே கெமி. உனக்குப் பிஷ்சும், எனக்கு பொட்டேட்டோவும் செஞ்சுக்கலாம்."

"சோ வாட்? ரெண்டு பேருமே பொட்டேட்டோ சாப்பிடலாம்" என்றபடி உருளைக்கிழங்கை தோல் சீவினான் கெமி.

சமைத்து முடித்ததும் இருவருக்கும் சாப்பாட்டை தட்டுகளில் பரிமாறிய நந்தினி, "எனக்கு நான்வெஜ்



சாப்பிடத்தான் பிடிக்காது. அதுக்காக மத்தவங்க சாப்பிடறதைப் பாத்து அலர்றதெல்லாம் இல்லை. நீ தாராளமா பிஷ் செஞ்சிருக்கலாம் கெமி."

"எனக்கும் கண்டிப்பா நான்வெஜ் வேணும்னு இல்ல. நீ வீணா குழப்பிக்காதே. வாழ்வில் முக்கியமான விஷயங்கள் எத்தனையோ இருக்கு. ஆப்டர் ஆல் நாம சாப்பிடற சாப்பாடு நம்மோட பசிக்காகவும், உடலுக்கு சக்தியை கொடுக்கக் கூடியதாகவும் தான் இருக்கணும். அதுக்கு மேல் அதற்கு முக்கியத்துவம் தரக் கூடாது" என்றபடி சாப்பிடத் தொடங்கினான் கெமி.

சாதத்தில் சாம்பாரை கரைத்து, உருளைக் கிழங்கு பொரியலுடன் ஒரு பிடி பிடித்த நந்தினி. "இப்படி சாப்பிட்டு ரொம்ப நாளாச்சு. சிம்ப்ளி சூப்பர்ப். உன்னை கட்டிக்கப் போறவ நிஜமாவ கொடுத்து வச்சவ" என்றாள்.

"நீ சொன்னா சரிதான்" என்றான் கெமி தலையைத் தாழ்த்தி.

"நல்லவேளை நீ வந்த கெமி. இந்த நாலு நாள் எப்படி போகும்னு எனக்கு ரொம்பக் கவலையா போச்சு."

"ஏன் நானும் உன் கூட இங்க உட்கார்ந்து கவலைப் படவா? என்னால முடியாதுப்பா."

"ப்ளீஸ் கெமி. எனக்குப் போரடிக்குது. மார்கரெட் கூட இல்லை. நாம எதாவது பேசிட்டு இருக்கலாம். இரேன்."

"எனக்கு விடுமுறையில் செய்ய எவ்வளவோ வேலை இருக்கும்.

கண்டவங்களுக்கும் போரடிச்சா அறுபட நானா கிடைச்சேன்? நான் கிளம்பறேன்." கெமி போக்கு காட்டினான்.

நந்தினி உதட்டைக் கடித்தபடி டீபாயின் விளிம்பை விரல்களால் வருடினாள்.

"ஸாரி கெமி. நீ என் ப்ரண்ட்ங்கிற உரிமையில் கேட்டுட்டேன். உனக்கு வேற வேலை இருக்கும்னு நினைக்கல. சரி நீ கிளம்பிக்கோ."

முகம் வாடி அமர்ந்திருந்தவளின் முகவாயைப் பற்றி நிமிர்த்தி வருட- துடித்த விரல்களை மடக்கினான் கெமி. "நீ உண்மையாலுமே ப்ரண்டா இருந்தா உன்னோட சேர்ந்து என்னையும் இங்கே போரடிக்க விடாதே. என்னோட சேர்ந்து நீயும் என்ஜாய் பண்ணு."

என்ன சொல்கிறான் என்று புரியாமல் நந்தினி நிமிர்ந்து பார்த்தாள்.

"ஒரு பேக்ல மூணு செட் டிரஸ் எடுத்து வெச்சிக்கோ நந்தினி. நாம வெளியே போகலாம். உன்னுடைய ஹாலிடே ப்ரோகிராம் என்னன்னு நேத்தே முடிவு பண்ணிட்டேன்."

துள்ளி எழுந்த நந்தினி, "இதை ஏன் முதல்லயே சொல்ல?" என்றபடி ஒரு தலையணையை தூக்கி வீசினாள்.

அதை கேட்ச் பிடித்த கெமி, "சொல்லாததற்கு ஒரே காரணம்தான். நீ இன்னும் குளிக்கவே இல்லையே!" என்றான் சிரிப்புடன்.

அவனை முறைத்த நந்தினி வார்ட்ரோபை திறந்து உடைகளை ஒரு சின்ன பையில் எடுத்து வைத்தாள். "நீ தயார் செய் நந்தினி. நான் ஒரு போன் செய்து விட்டு வருகிறேன்" என்றபடி கெமி வெளியே சென்றான்.

அவனுடன் கிளம்புவதற்கு நந்தினிக்கு எந்த விதமான தயக்கமும் ஏற்படவில்லை. இதுவரை அவள் இவ்வளவு நெருக்கமாக எந்த ஆணுடனும் பழகியதில்லை. ரேகாவின் அண்ணன் சிறுவயதிலிருந்து பார்த்துப் பழகியவன் தான்



என்றபோதும் அவன் கூட உட்கார்ந்து அரட்டை அடித்ததில்லை.

கெமியுடனான அவளது நட்பு எந்தவித வர்ண பூச்சும் இன்றி இயல்பானதாக இருந்தது. கெமி மட்டும் மோசமானவனாக இருந்திருந்தால் அதை எப்போதோ காட்டியிருப்பான். இத்தனை நாள் அவன் காத்திருக்க வேண்டியதில்லை என தனக்குள் சொல்லிக் கொண்டு வேகமாகத் தயாரானாள் நந்தினி.

கெமி திரும்பி வந்தபோது நீல நிற ஜீன்சும், கறுப்பு டாப்சும் அணிந்து, ஷாம்பு குளியலில் பளபளத்த முடி தோளில் புரள "போகலாமா?" என்றபோது கெமி ஒரு நிமிடம் பேசத் தோன்றாமல் இருந்தான். என்ன கெமி, போக வேண்டாமா?" அவள் உலுக்கியதும், "போகலாம்" என்று கிளம்பியவன், "நான் திருச்சி கல்யாணத்துல பாத்த நந்தினியா இதுன்னு நான் கொஞ்சம் அசந்துட்டேன்" என்றான்.

"அதெல்லாம் போன ஜென்மத்துல பாத்தது கெமி. இந்த நந்தினி புதுசு." சிரித்தபடியே அவனுடன் சென்றாள் நந்தினி.



## 6

கடலுக்கு மேல் கேபிள் காரில் சென்தோசா ஐலண்டுக்கு பயணிப்பது த்ரில்லாக இருந்தது நந்தினிக்கு. கடலில் நின்றிருந்த ஸ்டார்க்ரூசை கடக்கும் போது கெமி

சொன்னான். "அடுத்த முறை இந்த கப்பலில் போகலாம் நந்தினி. மூன்று நாள் கப்பல் பயணம். நிச்சயம் வித்தியாசமாய் இருக்கும்."

"கண்டிப்பா போகலாம்" என்றாள் நந்தினி.

சென்தோசாவில் டால்பின் ஷோ. அன்டர் வாட்டர் வேர்ல்ட். ஸீ ரைட் எல்லாம் போனார்கள். டாப்லெஸ் பஸ்ஸில் திறந்தவெளி இருக்கையில் அமர்ந்து ஐஸ் கிரீமை சாப்பிட்டபடி பள்ளி சிறுவர்களின் குதூகலத்துடன் இருவரும் ஆர்ப்பரித்தனர். இரவில் நைட் சபாரியில் அடர்ந்த மரங்களுக்கிடையே மிருகங்களை பார்த்த அனுபவமும், காட்டு வாசிகளின் டிரைபல் டான்சும் புதுமையான அனுபவமாக இருந்தன. அடுத்த நாள் இரவில் கடலில் பார்த்த லேசர் ஷோ நந்தினிக்கு மறக்க முடியாததாக இருந்தது.

மூன்று புறம் கடலும், பின்புறம் அடர்ந்த காட்டுப் பகுதிக்கும் நடுவே அமைந்திருந்த ராசா தென்தோசா ரிசார்ட்டில் தங்கியிருந்த கெமியும் நந்தினியும் இரவு கடல் நீரில் கால்களை நனைத்தபடி அமர்ந்திருந்தனர். நடுக்கடல் என்பதால் அலைகளின்றி கடல் சாதுவான அகண்ட குளம் போல் இருந்தது. அதில் சுற்றி வந்த சின்ன கப்பல்களையும், பெரிய படகுகளையும் கவனித்த நந்தினி, "இங்க இரவு பகல் எப்பவும் எதாவது படகோ, கப்பலோ சுத்திட்டே இருக்கே! ரோந்து கப்பலா கெமி?" என்றாள்.

"ரோந்து கப்பலும் இருக்கும். அதில்லாம சிங்கப்பூரை சுத்தி இருக்கிற பதினாறு தீவுகளுக்கும் தரைவழி போக்குவரத்து கிடையாது.



கேபிள் கார் அல்லது படகுகள் மூலம்தான் ஆட்களோ, பொருட்களோ செல்ல முடியும்."

"ஒரு புறம் நீலக்கடல், மறுபுறம் பச்சை நிறத்தில் காடுகளுக்கு நடுவே இந்த ரிசார்ட் எவ்வளவு அழகாயிருக்கிறது பாரேன்! ஹோட்டலின் மணற் பரப்புகளும், நீச்சல் குளமும், நிழற் குடைகளும் கூட அழகு தான். எவ்வளவு அழகான இடமாய் தேர்ந்தெடுத்து கட்டியிருக்கிறார்கள் கெமி." ரசனையுடன் சுற்றிலும் பார்த்தாள் நந்தினி.

"இந்த இடத்தை தேர்ந்தெடுத்தாங்கன்னு சொல்லறதை விட இந்தத் தீவை உருவாக்கினாங்கன்னு சொல்லலாம்."

"அப்படியா? முதன் முதலில் தீவை உருவாக்கியவர்கள் ஜப்பானியர்கள்னு நான் படித்திருக்கிறேன் கெமி."

"யு ஆர் ரைட். இதுவும் ஜப்பானியர்களால் உருவாக்கப்பட்ட தீவுதான்."

"நம்ம ஊரில் இயற்கையான தீவுகளும், மலைகளும், காடுகளும் எத்தனை அழகாய் இருக்கின்றன? ஆனால் அங்கே எல்லாம் ஹோட்டல் கட்டவும், ப்ளாட் போடவும், மரங்கள் வெட்டவும், கடற்கரை மணலை குப்பையாக்கவுமாய் அதன் இயற்கை அழகே தெரியாமல் பாழடித்து விடுகிறார்கள். செயற்கையாக வேணும் மரங்களையும், மலைகளையும், தீவுகளையும் உருவாக்கி அவற்றை இவ்வளவு நன்றாய் பராமரித்து வரும் இந்த அரசாங்கத்தை கண்டிப்பாய் பாராட்டத்தான் வேண்டும் கெமி."

"ம்.. பாராட்டெல்லாம் மொத்தமாய் அரசுக்குத்தானா? உன்னை இங்கெல்லாம் அழைத்து வந்து காட்டினேனே, எனக்கில்லையா?"

''ஓ! பாராட்டலாமே! இந்தா உனக்கு பாராட்டு'' என நந்தினி உட்கார்ந்திருந்த இடத்திலிருந்து கை நிறைய மணலை அள்ளவும். ''அடிப்பாவி, உங்க ஊர்ல இப்படித் தான் பாராட்டுவீங்களா?'' என்று எழுந்தோடினான் கெமி. நந்தினி துரத்திக் கொண்டு ஓடினாள்.

வெளிநாட்டுக் கும்பல் ஒன்று நெருப்பை எரிய விட்டபடி அதை சுற்றி அமர்ந்து, கிடார் வாசித்துக் கொண்டிருந்தனர், கெமியும் நந்தினியும் அவர்களைச் சுற்றிச் சுற்றி ஓடவே, அந்த கும்பல் கைதட்டி அவர்களை உற்சாகப்படுத்தியது. ''காதலர்களின் உல்லாசமான விளையாட்டு இது. துரத்துவதும், சிக்கிக் கொள்வதும் இரண்டுமே இனிமையான விஷயம்தான்'' என ஒருவர் தன்னுடன் இருந்த பெண்ணிடம் தங்களை சுட்டிக் காட்டி சிரித்ததைப் பார்த்ததும் நந்தினிக்கு திகைப்பாக இருந்தது.

அவள் அமர்ந்திருந்ததை பார்த்துவிட்டு அருகில் வந்து அமர்ந்த கெமி, ''அவ்வளவு தானா உன் ஓட்டம்? நான் கூட உங்கிட்ட சிக்கி சின்னாபின்னமாகப் போறே னேன்னு பயந்தேன்.''

நந்தினி எதுவும் பதில் சொல்லாமலிருக்கவே, ''என்னாச்சு நந்தினி? ஏன் என்னவோ போலிருக்க? எங்காவது விழுந்து விட்டாயா? அடி எதுவும் பட்டுச்சா?'' என்று விசாரித்தான் கெமி.

இல்லை என தலையசைத்த நந்தினி. தான் கேட்ட விஷயத்தை மறைக்கத் தோன்றாமல் அவனிடம் கூறினாள். ''நம்ம ஊர்லதான் ஒரு ஆணும் பெண்ணும் பழகினா தப்பா பேசுவாங்க. ஒரு வெளிநாட்டுக்காரர் கூட நம்மை பத்தி நண்பர்கள் என்றோ, கொலீக்ஸ் என்றோ ஏன் நினைக்கவில்லை?''



''ஏன்னா அவங்க நாட்டில் காதல்கிறது தப்பான விஷ யம் இல்லை. திருமணமான பிறகு கூட வேறொருவரை காதலிப்பதை அவங்க சரிங்கற கண்ணோட்டத்தில் தான் பார்ப்பாங்க. இதுக்கு போயா மூட் அவுட் ஆகி உட் கார்ந்திருக்க?''

''மூட் அவுட் எல்லாம் இல்லை. எதனால அப்படிச் சொன்னாங்கன்னு யோசிச்சிட்டு இருந்தேன். யாரோ என்னவோ சொன்னால் நான் ஏன் மூட் அவுட் ஆகணும்.''

''அதான பார்த்தேன்! உன்னால மத்தவங்க மூட் வேணும்னா அவுட் ஆகலாமே தவிர, நீயாவது, மூட் அவுட் ஆகறதாவது?'' கெமி சிரிக்க. நந்தினி அவனை முறைத்தாள்.

கிடாருடன் சேர்ந்து மைக்கைப் பிடித்தபடி யாரோ பாட ஆரம்பித்ததும் எல்லோரும் ஆடத் தொடங்கினர். உச்ச ஸ்தாயியில், ஒலித்த சங்கீதத்தில் வார்த்தைகள் அமுங்கிப் போனாலும் சூழ்நிலையில் ஒரு துடிப்பை ஏற்படுத்தியது.

''நந்தினி உனக்கு ஆடத் தெரியுமா?'' என்றான் கெமி.

''தெரியாது கெமி.''

''எங்கள் வீடுகளில் பார்ட்டிகளில் சில சமயம் நாங்க டான்ஸ் பண்ணுவோம்.

எங்க பாட்டி இப்போ இல்லை. அவங்க இருக்கும்போது அவங்கள தொல்லை பண்ணி ஆட வைத்து விடுவோம். டான்ஸ் தெரியாட்டி கூட சின்னவங்க, பெரியவங்க எல்லாரும் சும்மா ஒரு ஜாலிக்காக ஆடுவார்கள். பார்க்க வேடிக்கையாய் இருக்கும்.'' நந்தினிக்கு கெமியின் குடும்பம் கலகலப்பானதாக, உயிரோட்டம் உள்ளதாக இருந்திருக்கும் என்று தோன்றியது. யாரும் யாரையும்

கட்டாயப்படுத்தாமல் மன பயங்களை வெளிக்காட்டாமல், உற்சாகப்படுத்தி குழந்தைகளை அவர்கள் வளர்த்திருக்க வேண்டும். அதனால்தான் கெமி இப்படியிருக்கிறான்.

கெமி தன் கைப்பற்றி இழுப்பதை உணர்ந்து நந்தினி திரும்பிப் பார்த்தாள். ''நந்தினி நாமளும் ஆடலாம் வா'' என அவளை அந்த கும்பலுக்குள் இழுத்துப் போனான். ஆரம்பத்தில் தயங்கினாலும் சுற்றியிருந்த ஆரவாரம் நந்தினியையும் தொற்றிக் கொள்ள அவளும் ஆட முற்பட்டாள். நடு இரவு வரை நடனமாடி களைத்துப் போய் ஒவ்வொருவராய் கலைந்து செல்லவும், நந்தினியும் கெமியும் மூச்சு வாங்க மணலில் சரிந்தனர்.

நந்தினிக்கு அவ்வளவு நேரம் ஆடியதில் தொண்டை வறண்டு தாகம் எடுத்தது. சுற்றிலும் பார்த்தவள் கண்ணாடி டம்ளர்களில் இருந்த ஜூஸை எடுத்து மடமட வென குடித்தாள். அவளைப் பார்த்த கெமி, ''என்ன நந்தினி குடிக்கற?'' என்றான்.

அவள் ஜூஸ் டம்ளரைக் காட்டியதும் ''ஐயோ இது கூல்ட்ரிங்க் இல்ல. விஸ்கி. இதையா குடிச்ச?'' என்றான் வியப்புடன்.

நந்தினி பயந்து போனாள். ''கெமி நிஜமாவா சொல்ற? எனக்கென்னவோ கூல்ட்ரிங்ஸ் மாதிரிதான் தெரிஞ்சுது'' என்றார் சந்தேகத்துடன்.

''இது நம்ம ஊர் சாராயம்னு நினைச்சியா? வெளிநாட்டு விஸ்கி எல்லாம் இப்படித்தான் கூல்ட்ரிங்ஸ் மாதிரி இருக்கும்.''

நந்தினி கலக்கத்துடன் இருக்க, ''நந்தினி நீ இப்படி ஒரு குடிகாரியா இருப்பேன்னு நான் நினைக்கவேயில்ல. இந்த



மாதிரி நடு ராத்திரியில குடிச்சிட்டு, டான்ஸ் ஆடற பொண்ணு கூட எல்லாம் எங்கம்மா சேரவே விடமாட்டாங்க. நான் ரூமுக்குப் போறேன்ப்பா'' என கெமி எழுந்து நடக்கவும், நந்தினி கலக்கத்துடனேயே பின் தொடர்ந்தாள்.

அவளைப் பார்க்கையில் பொங்கிய சிரிப்பை மறைத்தபடி கெமி தன் அறைக்குள் சென்று கதவைத் தாளிட்டான். தன் அறைக்குள் சென்று படுத்த நந்தினி அசதியில் உடனே தூங்கி விட்டாள்.

காலையில் எழுந்த போதுதான் இரவு கெமி வேண்டுமென்றே தன்னை சீண்டியிருக்கிறான் என்று புரிந்தது. காலையில் காபியுடன் அவள் கதவை தட்டிய கெமி, ''உனக்கு காபி வேணுமா? இல்ல தண்ணியடிக்கிறியா?'' என்றான் சீரியசாய்.

''தண்ணிதானே. அடிச்சா போச்சு'' என்றபடி ப்ரிஜ்ஜிலிருந்த ஐஸ் வாட்டரை எடுத்து அவன் முகத்தில் அடித்தாள் நந்தினி. ''பொய்யா சொல்ற? ராஸ்கல்.'' என அவள் திட்டத் தொடங்க கெமி விடாது சிரிக்கத் தொடங்கினான்.

நாலு நாட்களும் நான்கு நிமிடங்களாய் மறைந்து போக, கெமி செவ்வாய் இரவு அவளை அவளது விடுதி வாசலில் கொண்டு வந்து விட்டான்.

''ரொம்ப தேங்க்ஸ் கெமி. இவ்வளவு சந்தோஷமா நான் இருந்ததே இல்ல. இது மறக்க முடியாத ட்ரிப்'' என்றாள் நந்தினி மனப்பூர்வமாய்.

''எனக்கும்தான்'' என்றான் கெமி தலைவணங்கி.

''நீ இந்தியா போகாதது நல்லதா போச்சு. இல்லாட்டி நா ரொம்ப தவிச்சிப் போயிருப்பேன்'' என்றாள் நந்தினி சிறிதும் யோசனையின்றி.

தன் ஆர்வத்தை வெளிக்காட்டாது அவளைப் பார்த்த கெமி, "நீ சொன்னதை மறுபடி சொல் நந்தினி" என்றான்.

"எதுக்கு?"

"சொல்லேன்."

"நீ இல்லாட்டி ரொம்ப தவிச்சிப் போயிருப்பேன்னு சொன்னேன்."

"இந்த வார்த்தைகளை எப்பவும் நினைவில் வெச்சிக்கோ நந்தினி." என்றபடி கெமி விடைபெற்றுச் சென்றான்.

நந்தினி தன் அறைக்குச் சென்றபோது மார்கரெட் வந்திருந்தாள்.

"ஹாய் நந்தினி, விடுமுறை சந்தோஷமாக "கழிந்ததா?" என்றாள் சம்பிரதாயமாக.

"ரொம்ப... உனக்கு?"

"எனக்கு வேஸ்டாகக் கழிந்தது" என்றாள் மார்கரெட் அலுப்புடன். "என் அம்மா ப்ரான்சிலிருந்து வந்திருந்தாள். என் உற்சாகமே போய்விட்டது." நந்தினி ஒரு ஆர்வத்துடன் நிமிர்ந்து அமர்ந்தாள். "உனக்கும் உங்கம்மாவைப் பிடிக்காதா? எப்பவும் கேள்வி கேட்டுட்டே இருப்பாளா? கண்டிஷன் செய்வார்களா? போலீஸ் வேலை பார்ப்பார்களா? எங்கே போனாய்... ஏன் இவ்வளவு நேரம் என்று துருவி..."

தன் பாப் தலையை குலுக்கினாள் மார்கரெட். "எங்கம்மா எதையுமே கேட்க மாட்டாள். என்ன படிக்கிறாய்? என்ன வேலை பார்க்கிறாய் என்று கூட இதுவரை கேட்டதில்லை. என் அம்மாவும் அப்பாவும் என் மூன்றாவது



வயதில் பிரிந்து போய் விட்டார்கள். அப்பா வேறு திருமணம் செய்து கொண்டார். அம்மா அவருக்கு போட்டியாய் நிறைய ஆண்களுடன் சுற்றத் தொடங்கினாள். நான் அவர்களுக்கு வேண்டாத சுமையாகிப் போனேன். பள்ளி இறுதிவரை பள்ளி விடுதியில் தங்கியிருந்தேன். விடுமுறைகளில் என்னை யாருடன் வைத்துக் கொள்வது என்பதில் அம்மாவுக்கும் அப்பாவுக்கும் பயங்கர சண்டை வரும். இருவருமே தங்களுடன் வைத்துக் கொள்ள முடியாது என்பார்கள். கடைசியாய் அவர்கள் ஒரு உடன்பாட்டுக்கு வந்து பாதி நாள் அம்மாவிடமும் பாதி நாள் அப்பாவிடமும் இருக்க வேண்டி வரும். அப்பாவின் இரண்டாவது மனைவி என்னை வேண்டாத பொருளாய் ஒதுக்கி வைப்பாள். சாப்பிடக் கூட சரியாய் கொடுக்காமல் என்னை வெளியே அனுப்பச் சொல்லி அப்பாவுடன் தினமும் சண்டை போடுவாள். அம்மாவுடைய வீட்டிற்கு வந்தால், அங்கே அவளைப் பார்த்து பேசுவதே அரிதாய் இருக்கும். அவள் தன் நண்பர்களுடன் பார்ட்டி, என்று நள்ளிரவு வரை கூத்தடிப்பாள். நான் பசியுடன் விருந்து முடிவதற்காக காத்திருப்பேன். போதையில் கிறங்கிப் போய் அவர்கள் ஆளுக்கொரு பக்கம் சாய்ந்ததும் நான் சத்தமின்றி போய் அவர்கள் விருந்தில் மீந்துப் போன உணவை சாப்பிடுவேன். கல்லூரிக்கு வந்ததும் உபகார சம்பளத்தில் படித்துக் கொண்டு எனக்கு ஒரு வேலை தேடிக் கொண்டேன்.

நந்தினி உனக்கு ஒரு விஷயம் தெரியுமா? பணக்கார நாடுகளில் அநேக குழந்தைகள் அநாதைகள்தான். எல்லாம் இருந்தும் பெற்றோரின் சுயநலத்தால் புறக்கணிக்கப்பட்ட அநாதைகள்.

ப்ளடி ஸ்கவுன்ட்ரல்ஸ்... டாமிட்... எனக்கு மட்டும் அதிகாரம் இருந்தால் குழந்தைகளை கவனித்து வளர்க்கப் பொறுப்பில்லாத பெண்களின் கருப்பையை நீக்கிவிடச் சொல்லி உத்தரவு போடுவேன்'' ஆத்திரத்துடன் சுவற்றில் குத்தினாள் மார்கரெட்.

மேலும் அவள் பெற்றோரை ஏதோ திட்டியபடி இருக்க, பதில் பேசவும் தோணாமல் அதிர்ந்து போய் அமர்ந்திருந்தாள் நந்தினி.

* * *

சீனப் புத்தாண்டு நெருங்கிக் கொண்டிருந்தது. ஹோட்டல்களிலும் மார்க்கெட் ப்ளேசிலும் புத்தாண்டுக்கான வாழ்த்து பலகைகளும், தோரணங்களும் அமர்க்களப் பட்டன. சீனக் கோவில்களில் பெரிய பந்து விளக்குகள் சிவப்பு நிறத்தில் ஜொலித்தன. நந்தினி ஒரு புதிய சூழலில் புதிய கொண்டாட்டத்தை எதிர்கொள்ளப் போகும் ஆவலில் இருந்தாள். அலுவலகத்திலும் நந்தினி எல்லோரிடமும் நன்றாக பழகி விட்டிருந்தாள். அவளுடன் வேலை பார்க்கும் இலியானாவும், ஏவாவும் மிகவும் நட்புடன் பழகினார்கள்.

மாலை நேரங்களில் அலுவலகம் முடிந்ததும் ஆர்ச்செட் ரோடின் அரிஸ்டோகிராட் தெருக்களில் அவர்களுடன் அரட்டை அடித்தபடியே கோல்டு காபியோ பர்கரோ சாப்பிடுவாள். லக்கி பிளாசாவில் எதாவது ஷாப்பிங் பண்ணி விட்டு, அறைக்குத் திரும்பி மேலோட்டமாய் டி.வி. புரோகிராம்களை பார்ப்பாள். இரவு தூங்கப் போகும் முன் கெமியுடன் சிறிது நேரம் பேசிவிட்டு தூங்கப் போவாள். தினமும் காலையில் இருவரும் ரயில்வே ஸ்டேஷனிலிருந்து அலுவலகம் வரை செல்வதோடு சரி.



மறுபடி கெமியை அடுத்த நாள் காலையில் தான் பார்க்க முடியும். மாலையில் அவனது வேலை முடியும் நேரம் அவனுக்கே தெரியாது. அதிக தாமதமானால் அவனே அவளுக்கு போன் செய்து விடுவான்.

அன்று இரவு அவனாக போன் செய்ததும், ''இப்பவே மணி ஒன்பதாச்சு. இன்னும் உன் வேலை முடியலையா கெமி?'' என்றாள் நந்தினி. ''அலுவலகத்திலிருந்து வந்து விட்டேன். ஆனா வேலையிலிருந்துதான் வெளியே வர முடியல. லேப்டாப்புடன்தான் உட்கார்ந்திருக்கிறேன். என் போன் காலுக்காக நீ விழித்திருப்பாய் என்றுதான் போன் செய்தேன்.''

''கெமி நைட் இவ்வளவு நேரம் வேலை செய்யும் நீ, காலையில் ஏன் அவ்வளவு சீக்கிரம் வரணும்? தாமதமாகவே வரலாமே!''

''வரலாம்தான். பட் காலைல விட்டா மறுபடி உன்னைப் பார்க்கவே முடியாதே!''

''சோ எனக்காகவா காலைல ரயில்வே ஸ்டேஷனுக்கு வர்ற?''

குரலில் வித்தியாசத்தை உணர்ந்த கெமி கவனமாய் பதில் சொன்னான்.

''நம்ம ஊர்ல இருந்து இங்கு வந்திருக்கிறாய். இங்கு உனக்கு முன்பே தெரிந்த முகம் நான் மட்டும்தான். வெளி இடத்தில் நீ அந்நியமாய் டீல் பண்ணக் கூடாது. தெரிந்த முகம் அருகிலிருந்தால் உனக்கு தனிமை எண்ணம் வராமலிருக்கும் என்று நினைத்தேன். அது தவறா என்ன?''

என்னைப் பார்த்துக் கொள்ள எனக்குத் தெரியும் என்ற சுபாவமான வீம்பு தோன்றியது நந்தினிக்கு. ''எனக்காக

காலையில் நேரத்தில் கிளம்பி வர வேண்டாம் கெமி. உன் சௌகர்யப்படி வா. எனக்கு யார் துணையும் தேவையில்லை. குட்நைட்'' என்றபடி போனை வைத்தாள் நந்தினி.

முகத்தில் அறை வாங்கினாற்போல் உணர்ந்தான் கெமி. தான் அவளை பாதுகாப்பது போல் பேசியது நந்தினியை ரோஷப்படுத்தியிருக்க வேண்டும். ஏற்கனவே பெற்றவர்களின் பாதுகாப்பை ஒரு விலங்காகக் கருதுபவள். ஆனாலும் நந்தினிக்கு ரோஷம் அதிகம்தான் என்று நினைத்தபடி வேலையை விட்ட இடத்திலிருந்து தொடர முற்பட்ட கெமியின் மனதில் வருத்தம் எழுந்ததை தவிர்க்க முடியவில்லை.

மறுநாள் காலை வழக்கம்போல் நந்தினி கிளம்பி சென்றபோது ரயில் நிலையத்தில் கண் தன்னையறியாமல் கெமியைத் தேடியது. பதினைந்து நிமிட பயணம் மிகவும் சலிப்பூட்டுவதாக இருந்தது. இன்று கெமி நன்றாக தூங்கி ரெஸ்ட் எடுத்திருப்பான். நமக்காக அவனை அலைய விடுவது நியாயம் இல்லை என்றெல்லாம் நினைத்தாலும் மனதில் ஏமாற்றம் படரத்தான் செய்தது.

அலுவலகத்தின் நுழைவாயிலில் காலை வைக்கும் முன், 'நான் நந்தினி. எனக்காக நான் வாழ்கிறேன். யாருக்காகவும், எதிர்பார்த்து காத்திருந்து, கவலைப்பட்டு செண்டிமென்ட்களில் சிக்கி முட்டாளாக மாட்டேன். கெமி என் நண்பன். அவ்வளவுதான். சிறு வயதிலிருந்து கூட படித்த ரேகாவையும், சுஜாதாவையும், பிரிந்து வந்திருக்கும் போது கெமியை பார்க்காமல் இருக்க முடியாதா? நிச்சயம் முடியும். தனக்குள் சொல்லிக் கொண்டு உள்ளே சென்றாள். அதே உறுதியில் இருந்ததால் ஒரு வாரமாகியும்



கெமியை அவள் பார்க்கவேயில்லை. பகல் பொழுதுகள் வேலையில் கரைந்து போனாலும் இரவில் அவன் போன் காலுக்காய் மனம் எதிர்பார்க்கத்தான் செய்தது. தானே போன் செய்தால் என்ன என்ற உந்துதலை கஷ்டப்பட்டு அடக்கினாள் நந்தினி. ஒரே வார்த்தையில் விலகிக் கொள்ள வேண்டுமானால் அவனது நட்பின் ஆழம் எப்படிப்பட்டதாக இருக்கும்? தான் ஏற்படுத்திக் கொண்ட உறுதியை மறந்து அவன் மேல் கோபம் வந்தது நந்தினிக்கு.

அந்த வார விடுமுறையில் மார்கரெட் மலேசியா போவதாகச் சொல்லி விட்டுப் போயிருந்தாள். தனிமையில் இருந்த நந்தினிக்கு, இதே போல ஒரு வீக் எண்டில் கெமி இங்கு வந்து சமைத்ததும், இருவரும் சென்தோசா ஐலண்ட் சென்றதும் நினைவு வந்தது. தட்டிக் கேட்க ஆளற்ற சூழ்நிலையிலும் கெமி எவ்வளவு கண்ணியமாக நடந்து கொண்டான்? ஒரு ஆணுடன் நான்கு நாட்கள், மூன்று இரவுகள் வெளியே தங்கி விட்டு நான் நானாகவே திரும்பி வந்திருக்கிறேன் என்றால் அம்மா என்ன சொல்லுவாள்? நிச்சயம் பாராட்டியிருக்க மாட்டாள். அவனுடன் வெளியே சென்றதே தப்பு. ஒழுக்கத்தை மீறிய செயல் என்றுதான் சொல்வாள். யார் என்ன சொன்னாலும் என் வழி நேராகத்தான் செல்கிறது என சொல்லிக் கொண்ட நந்தினி, சில நிமிடங்களில் தயாராகி வெளியே வந்தாள்.

பாசிரிஸ் ரோடிலிருக்கும் கெமியின் அறையை அடைந்து கதவைத் தட்டும்போது, அவன் உள்ளே இருக்க வேண்டும் என்றிருந்தது. சில நிமிடங்களில் கதவைத் திறந்த கெமியின் முகத்தில் அவளை எதிர்பாராத திகைப்பு தெரிந்தது.

''என்ன கெமி, என்னை உள்ளே கூப்பிட மாட்டியா?''

கைகளை கட்டியபடி கதவின் மீது தலை சாய்த்து சிரித்தவளை ஒரு நிமிடம் அசையாமல் பார்த்த கெமி, ''ப்ளீஸ் கம்'' என்றபடி உள்ளே நடந்தான். வியப்புடன் பார்த்த ஹென்றியிடம் ''என் ப்ரண்ட் நந்தினி'' என அறிமுகம் செய்து வைத்தான்.

அவளுடன் கைகுலுக்கி சில வார்த்தைகள் பேசிய ஹென்றி, ''இந்த வீக் எண்ட் உனக்கு இன்பமாக அமைய என் வாழ்த்துக்கள்'' என கெமியை வாழ்த்திவிட்டு வெளியேறினான்.

''கெமி, நான் சொல்லாமல் வந்துவிட்டேன். உனக்கு எதாவது ப்ரோகிராம்ஸ் இருக்கா? பிரச்சனை எதுவு மில்லையே?''

''நீ எனக்கு பிரச்சனையா நந்தினி?'' என்ன பேச்சு இது?'' என்றான் கெமி.

''இந்த வீக் எண்ட் உனக்கு எதாவது வேலை இருக்கா கெமி?'' என்றாள் நந்தினி.

''வேலைன்னு இல்ல. என் ப்ரண்ட் கதிர்வேலை அன்னிக்கு பாத்தோமே, அவனுக்கு நாளை வெட்டிங் ஆனிவர்ஸரி. அவங்க வீட்டில் சின்ன விருந்து இருக்கிறது. அதற்குப் போக வேண்டும்.''

''நாளைதானே, இன்னிக்கு எதாவது தமிழ் சினிமா பாக்க போகலாம் கெமி.''

* * *

''ப்ளீஸ் கெமி. கிளம்பு போகலாம்.''

நந்தினி கெஞ்சவும் கெமிக்கு அவளை சீண்ட வேண் டும் போலிருந்தது.



''நான் என்ன உன்னை மாதிரியா? எனக்கு நிறைய வேலை இருக்கு. என்னால் வர முடியாது.''

''கெமி இங்கு எனக்கு ஏற்கனவே தெரிந்த முகம் உன் னுடையதுதான். நீ கூட வரலேன்னா நா ரொம்ப லோன்லியா பீல் பண்ணுவேன். நான் பாவம் இல்ல? ப்ளீஸ்... ப்ளீஸ்டா...''

''சரியான பச்சோந்தி நீ'' செல்லமாய் அவளைத் திட்டியபடி அவளுடன் கிளம்பினான் கெமி.

கெமியுடன் படம் பார்க்கையில் ஐஸ்க்ரீம் சாப்பிடபடி திரும்பி வருகையில் வார்த்தைக்கு வார்த்தை சிரிப்பு வந்தது. அப்போதுதான் ஒரு வாரமாய் நாம் சிரிக்கவே யில்லை என்பது நந்தினிக்கு நினைவு வந்தது.

''நாளை கதிர்வேல் வீட்டுக்குப் போகலாம் வர்றியா நந்தினி?'' என்றான் கெமி.

''எனக்கு அவங்க யார்னே தெரியாதே!''

''கதிர்வேலோட அப்பா முருகேசன் அங்கிள் நல்ல மாதிரி. நம்ம ஊர்க்காரங்கன்னு தெரிஞ்சா விடவே மாட்டார். கிட்டத்தட்ட இங்கேயுள்ள அனைத்து தமிழ் குடும்பங்களையும் தெரிந்து வைத்திருப்பார். நம்ம ஊரி லேயே தனிக் குடித்தனங்கள் பெருகிவிட்ட நிலையில் இங்கு கதிரின் இரண்டு அண்ணன்கள், அண்ணிகள், அம்மா, அப்பா, குழந்தைகளுடன் கூட்டு குடும்பமாக வசிக்கிறார்கள். சிங்கப்பூரில் வசிக்கும் அத்தனை தமிழ் குடும்பங்களையும் அவங்க வீட்டு பங்ஷனில் பார்க்க லாம். முக்கியமா நம்ம ஊர் சைவ சாப்பாடு கிடைக்கும்.''

கெமி கடைசி வார்த்தையை சொன்னதும் ''அப்ப சரி'' என்றாள் நந்தினி உடனடியாக.

''சோத்து மூட்டை'' அவள் தலையில் வலிக்காமல் தட்டினான் கெமி.

சிரித்தபடி இருவரும் நடக்கையில் ''நாளை என்ன டிரஸ் போடுவது?'' என்று யோசித்தாள் நந்தினி. ''எங்கிட்ட எல்லாம் ஜீன்சும், ஸ்கர்ட்டுமாய் இருக்கு. ஒரே ஒரு சுடிதார் இருக்கு. போய் அதை அயர்ன் பண்ணி வைக்கணும்.''

''ஜீன்சும், சுடிதாரும் தவிர நீ வேறு டிரஸ்சே போட மாட்டியா நந்தினி? உன் கஸின் கல்யாணத்துல கூட சுடிதார் தான போட்டிருந்தாய்?''

''எனக்கு வசதியா இருக்கு. அதனால போடறேன். வேற டிரஸ் போடக் கூடாதுன்னு இல்ல. நாளைக்கு வேணா ஷார்ட்சும், பனியனும் போட்டுட்டு வரட்டுமா?'' நந்தினி சிரித்தபடி கேட்கவும், ''உதை வாங்கப் போற பார்'' என கெமி மிரட்டினான். ''நம்ம ஊர் பொண்ணுங்க புடவைன்னு அழகா அம்சமா ஒரு டிரஸ் போடுவாங்களே தெரியுமா? ஒரு சேன்சுக்கு அதை கட்டிட்டு வாயேன். கட்ட தெரியுமா? முதலில்?''

''நல்லாத் தெரியும். ஆனா எங்கிட்ட புடவை இல்லையே!''

''டோன்ட் ஒர்ரி. எங்கிட்ட இருக்கு. நான் தருகிறேன்.''

''மை காட், கெமி, நீ புடவை கட்டுவேன்னு எனக்கு சொல்லவே இல்லையே.''

''ரொம்ப திமிர் உனக்கு. உன்னை..'' என்றபடி கெமி அடிக்க வர, நந்தினி ஓடத் தொடங்கினாள். வழியில் தென்பட்ட சிலர் புன்சிரிப்புடன் பார்க்க, இருவரும் களைத்துப் போகும் வரை ஓடிய பிறகு மூச்சு வாங்க நடைபாதையின் கிரானைட் பெஞ்சில் சரிந்தனர்.



கெமி தன் அறைக்குச் சென்று புடவையை எடுத்துக் கொண்டு வந்தான். தெரிந்தவர்களிடம் விசாரித்து ஒரு டெய்லரை பிடித்து மறுநாள் நந்தினியின் ஹாஸ்டலுக்கே கொண்டு வந்து தரும்படி ஏற்பாடு செய்து விட்டு வந்தான். கெமியுடன் சென்று டெய்லரிடம் அளவு கொடுத்து விட்டு நந்தினி தன் அறைக்குத் திரும்பினாள்.

## 7



மறுநாள் மதியம் டெய்லர் ப்ளவ்சையும், புடவையையும், கொண்டு வந்து கொடுத்தாள். டார்க் மெரூன் கலரில் செல்ப் டிசைன் செய்யப்பட்ட பேன்ஸி பட்டுப் புடவை. பிரிக்கும்போதே மிருதுவாய் விரல்களை வருடியது.

மாலையில் நந்தினி பட்டுப் புடவையை அணிந்து, பறந்த முடியின் நடுவே சின்ன க்ளிப்பை மாட்டி அடக்கினாள். கண்களில் மையும், உதடுகளில் மெல்லிய லிப்ஸ்டிக்கும், பொட்டுமாய் கண்ணாடியில் பார்த்தபோது தனது உருவமே புதிதாய் தெரிந்தது. சிறுவயதிலிருந்து பிரதிபலிக்கும் கம்பீரமான உருவம் மறைந்து போய், நளினமும், குழைவுமாய் புது நந்தினி தெரிய, உடையை மாற்றி விடலாமா என்று யோசித்தபோது கெமியின் குரல் கேட்டது.

''நந்தினி ரெடியா?'' என்றபடி வந்தவன், பலமாய் விசிலடித்தான்.

''நந்தினியா இது? வாவ்!''

"போ கெமி, எனக்கென்னவோ அன் ஈஸியா இருக்கு. நான் டிரஸ் மாத்தப் போறேன்."

"நந்தினி, அந்த ஜன்னலுக்கருகே என்னவோ மாதிரி... சீக்கிரம்.. சீக்கிரம் வா... வெளியே போய்விடலாம்..." திடீரென பதட்டத்துடன் அவளை இழுத்துக் கொண்டு ஓடத் தொடங்கினான் கெமி.

ஆட்டோ லாக் கதவை தன் போக்கில் கை சாத்தியது. காலைத் தட்டிய புடவையை கைகளில் பிடித்தபடி ஓடியவள் "என்னாச்சு கெமி?" என்றாள் மூச்சு வாங்க.

பார்க்கிங்கில் நிறுத்தியிருந்த பைக்கை ஸ்டார்ட் பண்ணிய கெமி,

"ஒரு நொடி லேட் பண்ணினாலும் உன் மனசு மாறிடும். அதனாலதான்" என்றான் சிரித்தபடி.

"சே! அதுக்காகவா இப்படி ஓடணும்? நீயும் உன் ஜோக்கும் சகிக்கல" என்றபடி பில்லியனில் அமர்ந்தாள் நந்தினி.

கதிர்வேலின் குடும்பத்தில் இருவருக்கும் பலமான வரவேற்பு கிடைத்தது. கதிரின் மனைவி இந்து சிரித்த முகத்துடன் அமைதியாகத் தெரிந்தாள்.

அவன் அப்பா முருகேசன் நந்தினியின் கைகளைப் பற்றி "உன்னை சந்தித்ததில் ரொம்ப சந்தோஷம்" என்றவர் "உள்ளே அழைத்துப் போ கெமி" என்றார் நிஜமான மகிழ்ச்சியுடன்.

கதிரிடம் "நந்தினியை நினைவிருக்கிறதா கதிர்?" என கெமி அறிமுகப்படுத்தத் தொடங்கியதும், "தெரியுமே! உங்கம்மாதானே!" என்றான் கதிர்.

"அம்மாவா?" கெமியும் நந்தினியும் திகைத்தனர்.



"ஆமாம். இந்த புடவையை வாங்கும்போது நீ சொன்னாயே, அம்மாவுக்கு என்று" கதிர்வேலின் கிண்டலில் கெமி அசடு வழிய, நந்தினி கூச்சத்துடன் புன்னகைத்தாள்.

வீடெங்கும் நிறைந்த சாம்பிராணி, ஊதுவத்தி வாசத்திற்கும், பட்டுப்புடவை அணிந்த கும்பலுக்கும் நடுவே நிற்கையில் இது சிங்கப்பூரா என்று நந்தினிக்கு சந்தேகமாக இருந்தது. தமிழ்நாட்டில் கூட திருமண விழாக்கள் கேக் வெட்டி ஹோட்டல்களில் விருந்தளித்து கொண்டாடத் தொடங்கி விட்டனர். என்றபோதும் இங்கு ஹோம குண்டம் வளர்த்து புரோகிதர் மந்திரம் சொல்ல ஆயுஸ் ஹோமம் செய்து வைதீக முறைப்படி செய்தனர். இங்குள்ளவர்கள் ஆங்கிலம் கலக்காமல் தமிழை சுத்தமாகப் பேசுவது ஆச்சரியமாக இருந்தது. அங்கு வந்திருந்த பெண்கள் பெரும்பாலும் புடவையிலும், பாவாடை தாவணியிலும் இருந்தனர்.

அன்றாடம் உடுத்துவதற்கு வெஸ்டர்ன் உடைகள் தான் வசதி என்று அணியும் அவர்கள் இதுபோன்ற விழாக்கள் மூலம் அந்நிய தேசத்தில் தங்கள் கலாச்சாரத்தை காப்பாற்ற முயற்சித்தனர். தங்கள் குழந்தைகளுக்கு பரத நாட்டியமும், கர்நாடக சங்கீதமும் கற்றுக் கொடுப்பதாகக் கூறினர். மனசளவில் தமிழ்நாட்டிலேயே வாழ்ந்து கொண்டிருக்கும் இவர்களுக்கு, தமிழ்நாட்டின் இன்றைய தலைமுறைக்கு சுத்தமான தமிழில் பேசக் கூடத் தெரியாது என்பது தெரியுமா என்பது சந்தேகம் தான்.

கதிரின் மனைவி சாப்பிடக் கூப்பிட்டதும் அவளுடன் அமர்ந்து வடை, பாயசம், கூட்டு, பொரியல் என்றிருந்த சம்பிரதாய சாப்பாட்டை ஒரு வெட்டு வெட்டினாள்

நந்தினி. பாயசத்தில் அப்பளத்தை நொறுக்கிப் போட்டுச் சாப்பிடும்போது உள்ளே வந்த கெமி, ''வந்த வேலை நன்றாக நடக்கிறது போலிருக்கே!'' என்றான் கேலியாக.

அப்போதுதான் இந்து சாப்பிடக் கூப்பிட்டதும் கெமியை மறந்துவிட்டு அவளுடன் அமர்ந்து விட்டது நினைவு வந்தது நந்தினிக்கு.

''சரிப்பா, ஏதோ ஆர்வக் கோளாறுல கூட வந்தவனை ஒரு நிமிஷம் மறந்துட்டேன் போதுமா'' என்றபடி எழுந்த நந்தினியிடம் கைகளை நீட்டினான் கெமி.

''நடக்க முடியுமா? முடியாட்டி என் கைகளைப் பிடிச்சிக்கோ.''

அவனை முறைத்த நந்தினி இடது கையால் அவன் முதுகில் அடித்து விட்டு அவன் திரும்பும் முன் உள்ளே ஓடினாள்.

''கெமி உன் பாடு ரொம்பக் கஷ்டம் போலிருக்கேடா'' என்றான் அங்கே வந்த கதிர். ''கல்யாணத்துக்கு முந்தியே அடிவாங்க ஆரம்பிச்சிட்டியே. கல்யாணத்துக்குப் பிறகு உன் நிலையை நினைத்தால் ரத்த கண்ணீரே வருது'' வராத கண்ணீரை கதிர் துடைக்க சிரித்தபடி அவனிடமிருந்து நழுவினான் கெமி.

எல்லோரும் சாப்பிட்டு முடிந்ததும் கதிரும், இந்துவும் பெரியவர்களிடம் ஆசீர்வாதம் வாங்கிக் கொண்டனர். தன் குடும்பத்துடன் ஹாலில் அமர்ந்த முருகேசன் லானிலும், அறைகளிலும் பேச்சில் ஈடுபட்டிருந்தவர்களையும் அழைத்தார். ''எல்லார் வீட்டிலும் யாராவது ஒருத்தர் சங்கீதம் கத்துக்கறீங்க இல்ல. அதை எப்ப வெளி கொணர்வது? இந்த மாதிரி விசேஷங்களில் நாலு பேர்



முன்னால் பாடினால்தான் நீங்க என்ன கத்துக்கறீங்கன்னு மத்தவங்களுக்குத் தெரியும்! ஒவ்வொருத்தரா பாடுங்க'' என்றார்.

இந்து சுதிப்பெட்டியுடன் வந்து அமர, ஒரு வயதான பெண்மணி 'பஜகோவிந்தம்' பாடி தொடங்கி வைத்தார். எந்த பிகுவும் இன்றி எல்லோரும் போட்டிப் போட்டு பாட முற்பட்டனர். கர்நாடிக், பக்தி பாடல்கள், பழைய சினிமா பாடல்கள் என்று பாட ஒருவர் நாடோடிப் பாடலையும், கிராமியப் பாடலும் கூட பாடினார். நந்தினியை எல்லோரும் பாடச் சொல்லி வற்புறுத்த நந்தினி தயங்கினாள்.

''பாடும்மா. எல்லோரும் பாடறாங்க இல்ல. குரல் முக்கியமில்லை. சந்தோஷமா இருக்கோம்ங்கறதுதான் முக்கியம். உனக்குத் தெரிஞ்ச எதாவது பாட்டு பாடு'' என்றாள் முருகேசனின் மனைவி வசந்தா. ஹிட்டான சினிமா பாடல்களை அவ்வப்போது முணுமுணுப்பதுடன் சரி. பெரிதாகப் பாடி பழக்கமில்லை. என்ன பாடுவது என்ற குழப்பத்தில் கெமியைப் பார்த்தாள் நந்தினி. அவன் கண்களைச் சிமிட்டிச் சிரிக்கவும், இவன் நம்மை மாட்டி விட்டு வேடிக்கைப் பார்த்து ரசிக்கிறான் என்ற உணர்வில் ரோஷம் வந்தது. அவனுக்கு முதுகை காட்டியபடி அமர்ந்து ''என்ன தவம் செய்தனை யசோதா...'' என்று ஆரம்பித்தாள்.

அம்மா தினமும் இந்த பாட்டை போட்டு விட்டு கூட தானும் பாடியபடியே ஏதாவது வேலை செய்து கொண்டிருப்பாள். பல வருடங்களாய் தினமும் கேட்டு பழகியிருந்ததில் சுதியும் வார்த்தைகளும் அப்படியே மனதில் பதிந்து போயிருந்தன. தானே யசோதாவாய், ஆயர்குலப் பெண்ணாய் மாறி பாடலின் குழைவில் தானும் குழைந்து கரைந்து போனாள். பாடல் முடிந்ததும் எல்லார் கண்

களிலும் நீர் ததும்பி நின்றது. யாரும் பேசத் தோன்றாமல் சில நிமிடங்கள் அமைதியாய் அமர்ந்திருந்தனர்.

கெமியும் அவளும் கிளம்பும்போது கதிரின் குடும்பத்தினர் வாயில் வரை வந்து வழியனுப்பி வைத்தனர். நந்தினியை உச்சி முகர்ந்து ''அடிக்கடி வாம்மா'' என்றார் வசந்தா.

''கெமி வரும்போது நந்தினியையும் கூட்டி வா'' என்று எல்லோரும் விடை கொடுத்தனர்.

நந்தினியின் விடுதி வாயில் வண்டியை நிறுத்திய கெமி, ''நந்தினி உனக்கு தூக்கம் வருதா?'' என்றான் அவளிடம்.

''தூக்கமா? அதன் அறிகுறியே காணோம். ரொம்ப ப்ரஷ்ஷா இருக்கேன்'' என்றாள் நந்தினி.

இருவரும் நடந்து சென்று நடைபாதையோர லானில் அமர்ந்தார்கள். இரவின் அமைதியில், யாருமற்ற தனிமையில் லானில் தலையசைத்த பூக்களை, இதமாக வீசும் தென்றலை ரசித்தபடி நந்தினி மௌனமானாள்.

''நந்தினி நீ இவ்வளவு நல்லா பாடுவேன்னு எங்கிட்ட சொல்லவேயில்ல?'' என்றான் கெமி.

கலகலவெனச் சிரித்த நந்தினி, ''எனக்கே தெரியாது கெமி. இந்த பாட்டு முழுசா எனக்கு தெரியுமான்னே இப்பதான் தெரியும்.''

''ஆனா நீ பெரிய பாடகி மாதிரி பாவத்தோட அற்புதமா பாடின.''

''தேங்க் யூ. அந்த கிரடிட் எல்லாம் எங்கம்மாவுக்கு தான் போய்ச் சேரணும்.''



''ஒரு விஷயம் யோசிச்சியா நந்தினி? உங்கம்மாவோட கட்டுப்பாடுகள் உனக்குப் பிடிக்கல. ஆனாலும் உன் பேச்சு, செயல் எல்லாத்தையுமே உன் அம்மாவின் வளர்ப்பு முறை கட்டுப்படுத்துகிறது. என்னதான் சுதந்திரப் பறவைன்னு உன்னை நீ சொல்லிக் கொண்டாலும், என்னுடன் பிக்னிக் என்று வந்தாலும் என்னுடன் ஒரே அறையில் உன்னால் தங்க முடிந்ததா? இன்னிக்கு உங்க ஊர் சாப்பாட்டையும், பேச்சையும் கேட்டதும் தானாய் உன் மனசு நெகிழ்ந்து போச்சில்லையா? உன்னுடைய சமூகத்தை சேர்ந்தவர்கள் என்பதால் அவர்களுடன் எளிதாக ஒன்றிப் போக முடிந்ததில்லையா?''

கெமியின் குரலில் தொனித்த ஆதங்கமோ, ஏக்கமோ ஏதோ ஒன்று அவள் மனதைத் தொட்டது. ''சிறு வயதிலிருந்து நான் வளர்ந்த சூழலில் எதிர்பாராமல் இவ்வளவு தொலைவில் இருக்க நேர்ந்தபோது என் மனதில் ஒரு நெகிழ்ச்சி ஏற்பட்டதென்னவோ நிஜம்தான். ஆனால் மனிதர்களை விட, அவர்கள்பால் ஏற்படும் அபிமானத்தை விட இவையெல்லாம் எனக்கு முக்கியமில்லை கெமி. ஒரு வாரமாய் உன்னைப் பார்க்காமல் உன்னுடன் பேசாமல் எனக்கு ஏற்பட்ட கவலை என் பெற்றோரை பிரிந்தபோதுகூட ஏற்பட்டதில்லை. இதை நீ நம்ப வேண்டும் கெமி.'' என்றாள் உணர்ச்சியுடன், அவன் கைகளைப் பற்றி.

''சத்தியமாய் நம்புகிறேன் நந்தினி. அந்த வருத்தம் இருவருக்கும் எப்போதும் ஏற்படாமலிருக்க, வாழ்நாள் பூரா என் கூட இருப்பாயா நந்தினி?'' பற்றிய கைகளை விடாமல் மிருதுவான குரலில் கேட்டான் கெமி.

நந்தினியின் முகத்தில் இதை எதிர்பார்க்காத திகைப்பு தெரிந்தது. ''உன்னை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது

கெமி. என் ப்ரண்ட் ரேகா மாதிரி உன்னையும் நல்ல ப்ரண்டாகத்தான் நினைத்திருந்தேன். எனக்கு இதுவரை திருமணம் செய்து கொள்வதில் பெரிதாய் விருப்பம் எதுவும் ஏற்படவில்லை. முதலில் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்ற எண்ணம் வர வேண்டும். அடுத்து நமது பிரியம் வாழ்நாள் பூரா நிலைக்கும் அளவு ஸ்ட்ராங்கானதுதானா என்று யோசிக்க வேண்டும். என்னால் அவசரப்பட்டு எதுவும் சொல்ல முடியாது கெமி."

"நான் உன்னை நிர்ப்பந்திக்கவில்லை நந்தினி. முதன் முதலில் உன்னைப் பார்த்ததும் உன்முகம் எனக்குள் பதிந்து போனது. சினிமாவில் வருவது போல் டூயட் பாடி, கவிதை எல்லாம் எழுதவில்லை என்றாலும் நீ என் மனைவியாய் வந்தால் நன்றாக இருக்கும் என்று நினைத்துக் கொண்டே இருந்தேன். ஆனால் இன்று உன்னைத் தவிர யாருமே எனக்கு மனைவியாக முடியாது என்று தோன்றுகிறது" நந்தினியிடமிருந்து பதில் எதுவும் வராமல் போகவே, கெமியே பேசினான்.

"நந்தினி உனக்கு விருப்பமில்லை என்றாலும் கூட சிறிதும் தயக்கமின்றி என்னிடம் சொல்லலாம். நாம் இருவரும் எப்போதும் போல் நல்ல நண்பர்களாக இருக்கலாம். எந்த விதத்திலும் உன்னை தர்ம சங்கடத்தில் ஆழ்த்த நான் விரும்பவில்லை நந்தினி. நினைவில் வைத்துக்கொள்."

அத்துடன் அந்தப் பேச்சை விடுத்த கெமி. கதிரின் குடும்பத்தைப் பற்றியும் தன் மற்ற நண்பர்களைப் பற்றியும் பொதுவாய் பேசிக் கொண்டிருந்தான். சிறிது நேரத்தில் நந்தினியும் இயல்பாய் பேச்சில் கலந்து கொள்ள அவன் மனம் நிம்மதியானது.



"நந்தினி நான் கிளம்புகிறேன். நேரமாச்சு" என்றான் கெமி வாட்ச்சைப் பார்த்தபடி.

"இந்த நேரம், இந்த இடம் ரொம்ப அழகா இருக்கு கெமி. எனக்கு இரவெல்லாம் இங்கேயே உட்கார்ந்திருக்க வேண்டும் போலிருக்கு."

கால்களை மடக்கி பின்னால் சாய்ந்து அமர்ந்தாள் நந்தினி. லானின் மங்கிய ஒளியில் வீனஸ் சிற்பமாய் தெரிந்தாள்.

ஷர்ட்டிலும், பேண்டிலும் முழுக்க மறைந்த உடலின் அழகை, புடவை ஒளிக்காமல் பளீரென்று மின்ன வைத்தது. கண்களைத் திருப்பிய கெமி, "நான் போகணும்" என்றபடி எழுந்தான். கூடவே எழுந்த நந்தினி "நாளைக்கு உனக்கு லேட்டா போனா போதுமே! ஏன் அவசரப்படற கெமி?" என்றாள்.

"இல்ல, எனக்கு போகணும்?"

"என்ன சும்மா சும்மாப் போகணும்னு? என் மேல எதாவது கோபமா கெமி"

"கோபமில்ல நந்தினி. பயம்."

"பயமா?"

"நடு ராத்திரியில், யாருமற்ற தனிமையில், அப்சரசைப் போல ஒரு அழகான பெண் அருகே அமர்ந்திருக்கும் போது ஒரு நேர்மையான ஆணுக்கு வரக் கூடிய நியாயமான பயம்."

நந்தினி பதில் பேச முடியாமல் நிற்க, கெமி கையசைத்து விட்டு புறப்பட்டுச் சென்றான்.

அறைக்கு வந்து உடை மாற்றி படுக்கப் போன போது போன் ஒலித்தது.

கெமியின் நம்பரைப் பார்த்ததும் ஆச்சரியத்துடன் போனை எடுத்து "என்ன, விஷயம் கெமி? இப்பதான இங்கிருந்து போன?" என்றாள் நந்தினி.

"ஒரு விஷயம் சொல்ல மறந்துட்டேன் நந்தினி."

"என்ன விஷயம் கெமி?"

"நீ அடிக்கடி புடவைக் கட்டலாம் நந்தினி."

"புடவையா? ஏன்?"

"ஏன்னா புடவைல நீ ரொம்ப அழகா இருக்க. பிக்காஸோவின் ஓவியம் போல. குட்நைட் நந்தினி" என்றபடி போனை வைத்தான் கெமி.

அந்த இரண்டு வரிகளில் நந்தினியின் தூக்கம் தொலைந்தது. பெண்களுக்கே உரிய இயல்பான மகிழ்ச்சியில் மனம் பூரிக்கும்போது அம்மா எத்தனை முறை கெஞ்சியிருப்பாள் இதே போல என்று தோன்றியது. அப்போதெல்லாம் பிடிவாதமாய் புடவை கட்ட மறுத்துவிட்டு கெமி ஒரு வார்த்தை சொன்னதும் மறுக்கத் தோன்றாமல் போனது அவளுக்கே வியப்பாகத்தான் இருந்தது.

காலையில் கெமி போன் செய்து மலேசியா போவதாகவும் வர ஒரு வாரம் ஆகும் என்றும் சொன்னான்.

"சும்மா ஊர் சுத்தறதுதான் வேலை உனக்கு" என்றாள் நந்தினி எரிச்சலுடன்.

"சும்மா சுத்தலை நந்தினி. வேலை விஷயமா போறேன்."

"ஆமாம். பெரிய வேலை."

"பெரிய வேலைதான். பெரிய சம்பளம் கிடைக்குதே! சொல் நந்தினி உனக்கு மலேசியாவிலிருந்து என்ன வேண்டும்?"



"ம்... ஒரு குரங்கை பிடித்து வாயேன்."

"அதான், நீ இருக்கிறாயே, போதாது?"

நந்தினி சிரித்தபடியே கிளம்பினாள்.

மாலையில் அம்மாவிடமிருந்து கடிதமும், அத்தை பெண் விமலாவின் திருமண அழைப்பிதழும் வந்திருந்தது. அம்மா பேசுவதைப் போலவே நிறைய எழுதியிருந்தாள்.

"உன்னைப் பார்க்காமல் எங்களால் இருக்க முடியவில்லை. நீ எப்போது வருவாய் என்ற எதிர்பார்ப்பில்தான் உயிரை வைத்துக் கொண்டிருக்கிறோம்." அம்மாவின் வரிகளில் தெரிந்த கண்ணீருக்குத் தலையை திருப்பினாள் நந்தினி. "வீட்டைப் போல், காரைப்போல என்னை உங்கள் உடைமை பொருளாய் பாவிக்க முடியாது. நான் உயிரும், சிந்தனைகளும், உள்ள மனுஷி" என்றாள் வாய் விட்டு.

கடிதம் மேலும் தொடர்ந்தது. விமலாவின் கல்யாணத்தைப் பற்றி விலாவாரியாய் அம்மா எழுதியிருந்தாள். விரைவில் உன் திருமணத்தை கண்குளிரப் பார்க்க வேண்டும் என்ற ஆசையில் அப்பாவும் நானும் காத்திருக்கிறோம் என்ற வரிகளைப் படித்ததும் நந்தினிக்கு சிரிப்பு வந்தது. நான் கெமியை மணந்து கொண்டால், வெள்ளை உடை தரித்து, ஒரு சர்ச்சில் மோதிரம் மாற்றுவதை பார்க்கும் உங்கள் கண் குளிருமா? அல்லது கொதிக்குமா? கடிதத்திடம் நந்தினி கேள்வி கேட்டாள்.

* * *

அன்று இலியானாவுக்கு சில எலக்ட்ரானிக் பொருட்கள் வாங்க வேண்டியிருந்தது. மாலையில் அவளுடன்

ஸ்லிம் லிம் ப்ளாசா சென்று பொருட்களைப் பார்த்துக் கொண்டிருக்கையில் யாரோ ''நந்தினி'' என்று கூப்பிட்டார்கள்.

திரும்பிப் பார்த்தபோது கதிரின் மனைவி இந்து சிரித்தபடி நின்றிருந்தாள்.

''ஹலோ, எப்படியிருக்கீங்க?'' என்றாள் நந்தினி மகிழ்ச்சியுடன்.

''நீ ஏன் பிறகு எங்கள் வீட்டிற்கு வரவேயில்லை? என் மாமனார், மாமியாருக்கு உன்னை மிகவும் பிடித்து விட்டது நந்தினி. அடிக்கடி வீட்டில் உன்னைப் பற்றி பேசுவார்கள். நீ கண்டிப்பாய் வீட்டிற்கு வரவேண்டும்'' என்றாள் இந்து.

''இன்னொரு நாள் வருகிறேன்'' என்றாள் நந்தினி.

''நாளை உனக்கு விடுமுறைதானே! மாலையில் வருகிறாயா?'' என்றாள் இந்து ஆர்வத்துடன்.

''கெமி வேற ஊர்ல இல்லையே!'' என்றாள் நந்தினி தனக்குள் யோசித்தபடி.

இந்துவின் பார்வை கூர்மையுடன் அவள் முகத்தில் படிந்தது. ''கெமி இல்லாம நீ வரமாட்டியா என்ன? எங்க வீட்டுக்கு வந்தா அவர் ஒண்ணும் சொல்ல மாட்டார்.''

''அவன் பர்மிஷனுக்கு நான் ஏன் காத்திருக்கணும்? நாளை உங்க வீட்டுக்கு வருகிறேன்'' என்றாள் நந்தினி தலையை உயர்த்தி.

இந்து சிறிது நேரம் பேசிவிட்டு விடைபெற்றுச் சென்றாள். இலியானாவுடன் பேசியபடி திரும்பி வருகையில் ''நாளைப் போவதாக ஏன் ஒத்துக் கொண்டோம்?'' என்றிருந்தது.



மறுநாள் இந்து போன் பண்ணி நினைவு படுத்தியதும் வேறு வழியின்றி கிளம்பினாள். கெமி சொன்னதுபோல் இவர்கள் நான் வளர்ந்த சமூகத்தை சேர்ந்தவர்கள். என்பதால் செல்கிறோமா? என்ற நெருடல் ஏற்படத்தான் செய்தது. அங்கு சென்றதும் குடும்பம் மொத்தமும் அவளுக்காக வாயிலில் காத்திருப்பதைப் பார்த்ததும் பிரியம் செலுத்துபவர்களிடம் திரும்பி செலுத்துவது நியாயம்தான் என்று தோன்றியது.

''கெமி ஊர்ல இல்லை போலிருக்கே!'' என அவளிடம் விசாரித்த கதிர் ஒரு முக்கிய வேலை இருப்பதாகக் கூறி வெளியே சென்று விட்டான்.

வழக்கம் போல விருந்து அமர்க்களப்பட்டது. விருந்தில் புதிய விருந்தாளியை நந்தினி சந்தித்தாள். கதிரின் கஸின் முரளி, லண்டனிலிருந்து விடுமுறைக்காக வந்திருந்ததாகக் கூறினார்கள். நந்தினியிடம் அவன் காட்டிய அதிகப்படி ஆர்வம் அவளை அவனிடம் சரளமாகப் பழக முடியாமல் செய்தது. இந்துவிடமும், முருகேசன் அங்கிளிடமும் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு இருட்டும் முன் நந்தினி அவர்களிடம் விடைபெற்று கிளம்பினாள். முருகேசனும், வசந்தாவும் முரளியை அழைத்து நந்தினியை டிராப் பண்ணச் சொல்லவே, மறுக்க முடியாமல் அவனுடன் கிளம்பினாள். காரில் செல்லும் போது முரளி லண்டனைப் பற்றியும், தன் டாக்டர் தொழிலைப் பற்றியும், திருமணத்திற்கு தனக்கு பெண் தேடுவதைப் பற்றியும் சொல்லிக் கொண்டு வந்தான்.

தன் வருங்கால மனைவி பற்றிய தன் எதிர்பார்ப்புகளை அவன் விலாவரியாகச் சொல்ல, நந்தினியின் பொறுமை எல்லை மீறும் முன் அவள் இறங்கும் இடம் வந்து

விட்டது. 'நல்லவேளை தப்பித்தோம்' என்றிருந்தது நந்தினிக்கு. அடுத்த நாள் பூக்கிஸ் ரோடிலும், அதற்கடுத்த நாள் ஆர்செட் ரோடிலுள்ள அவளது அலுவலக வாயிலிலும் முரளியை எதிர்பாராமல் நந்தினி சந்தித்தாள். மூன்றாம் நாள் மசாலா ஆர்ட் ரெஸ்டாரெண்டில் அவனைப் பார்த்ததும்,

''நீங்க எங்கிட்ட எதாவது பேசணுமா?'' என்றாள் நேரடியாக.

''தேங்க்ஸ் நந்தினி. உங்கிட்ட நான் பேச விரும்பறேங்கறதை இப்பவாவது புரிஞ்சிகிட்டியே'' என்றபடி ஜூசுக்கு சொல்லிவிட்டு அவள் எதிரில் அமர்ந்தான் முரளி.

''நான் லண்டனிலேயே செட்டில் ஆகிவிட்ட இரண்டாவது தலைமுறையை சேர்ந்தவன் நந்தினி. முருகேசன் அங்கிள் எனக்கு மாமாவாகணும். எங்கம்மா எனக்கு இந்தியாவிலிருந்துதான் பெண் எடுக்கணும்னு உறுதியா இருக்காங்க. எனக்கோ அங்குள்ள சூழ்நிலைக்கு அனுசரித்துப் போகும், படித்து வேலை பார்க்கும் பெண் தான் வேண்டும் என்றிருக்கிறது. எதேச்சையாய் இங்கு வந்த போது முருகேசன் அங்கிள் உன்னைப் பற்றி சொன்னார். எனக்கு உன்னைப் பார்த்ததும் பிடித்து விட்டது. உன் அலுவலகத்திலும் உன்னைப் பற்றி நல்ல ரிப்போர்ட் கிடைத்தது. எனக்கு சந்தோஷமாக இருக்கிறது.''

அவன் மேற்கொண்டு பேசுமுன் நந்தினி குறுக்கிட்டாள்.

''என் அலுவலகத்தில் என்னைப் பற்றி விசாரிப்பது தவறாகப் படவில்லையா உங்களுக்கு?''

''இதில் என்ன தவறு நந்தினி? என்னைப் பற்றிய விபரங்கள் பூராவும் முதல் நாளே உன்னிடம் சொன்னேன். உன்னைப் பற்றி நீ எதுவும் சொல்லவில்லை. பிறகு உன்னைப் பற்றி நான் எப்படி தெரிந்து கொள்வது? அதனால்தான் உன் செக்ஷனில் எனக்குத் தெரிந்தவர் ஒருவர் வேலை பார்க்கிறார். அவர் மூலமாய் விசாரித்தேன்.''



நந்தினி இறுகிப்போய் அமர்ந்திருக்க, முரளி தொடர்ந்தான்.

''நாம ரெண்டு பேரும் ஒரே ஜாதிதான். அதனால் நம் பெற்றோர்கள் ஆட்சேபணை சொல்ல வழியில்லை. என் அப்பாவிடம் சொல்லி, உன் பெற்றோருடன் பேசச் சொல்லப் போகிறேன். நாலைந்து வருடமாகவே பெண் வீட்டாரின் தொல்லை தாங்க முடியவில்லை என்னால். யு நோ லண்டனில் வேலை பார்க்கும் மாப்பிள்ளைகளுக்கு இந்தியாவில் கிராக்கி அதிகம். உன் பெற்றோரின் போன் நெம்பர் தருகிறாயா நந்தினி?''

''என் பெற்றோர் நம்பர் தருவதற்கு முன் என் விருப்பம் தெரிய வேண்டாமா முரளி?''

''நிச்சயமாய். ஆனால் உனக்கு என்னைப் பிடிக்காமலிருக்க எந்த காரணமும் இல்லை. அதனால் கண்டிப்பாய் பிடித்துத்தான் ஆகவேண்டும்'' என்றான் தன்னம்பிக்கையுடன்.

''இல்ல முரளி. எனக்கு உங்களைப் பிடிக்கலை'' என்றாள் நந்தினி அவன் முகம் பார்த்து. ''நீங்க பிடிச்சி போகும்ன்னு சொன்ன காரணங்களாலேயே பிடிக்கல. எனக்கு நேரமாச்சு. கிளம்பணும். பை'' என்றபடி நந்தினி ஒரு புயலைப் போல அவனைக் கடந்து போனாள்.

* * *

அன்று காலையில் விழிக்கும்போதே கெமி இன்று வந்திருப்பானா, என்ற எதிர்பார்ப்பில் மனம் பரபரத்தது. ரயில் நிலையத்தில் ''நந்தினி'' என்ற அவன் குரலை கேட்ட மாத்திரத்தில் நாடி நரம்பெல்லாம் ''எப்போ வந்த? ஏன் ஒரு போன் கூட பண்ணல?'' என ஆர்ப்பரித்தவளை புன்னகையுடன் பார்த்தான் கெமி.

''ரொம்ப சந்தோஷம் தெரியுதே முகத்துல. நான் இல்லாம ரொம்பக் கஷ்டப்பட்டுட்டியா?''

''எனக்காவது கஷ்டமாவது? பத்து நாளாய் உன் தொல்லையின்றி ரொம்ப சந்தோஷமாய், நிம்மதியா இருந்தேன்.''

''ஓகோ அந்த சந்தோஷத்துலதான் கதிர் வீட்டுக்கு மாப்பிள்ளைப் பார்க்க போனியா?''

கோபத்துடன் தலையை அசைத்தாள் நந்தினி. ''உன் ப்ரண்ட் குடும்பத்தினர் ஒரு ப்ராட் கெமி. சும்மா விருந்துக்குன்னு வீட்டுக்குக் கூப்பிட்டு எனக்கேத் தெரியாம, என்னைப் பார்க்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். எனக்கு மாப்பிள்ளை பார்க்க இவங்க யார்? புல்ஷிட்...''

''ஈஸி, நந்தினி'' அவள் தோளைத் தட்டினான் கெமி. ''கண்ணுக்கு முன்னாடி நல்ல பெண் இருந்தால் மணமுடிக்க எல்லோருக்கும் ஆசை வருவது இயல்புதான். உனக்குப் பிரியம் இல்லாட்டி யாரும் வற்புறுத்த முடியாது. கதிர் குடும்பத்தினர் ரொம்ப நல்லவர்கள் நந்தினி.''

''இல்லை கெமி. அந்த முரளி மூணு நாளா என்னை பாலோ பண்ணினான். ஆபீஸ்லகூட என்னைப் பற்றி போய் விசாரித்திருக்கிறான். அவங்க வீட்டுக்குச் சாப்பிட போனதால என்னைப் பத்தி சீப்பா நினைச்சிட்டாங்க போலிருக்கு.''



''நீயா எதாவது நினைச்சிக்காதே நந்தினி. நான் கூடத் தான் உன்னை திருமணம் செய்து கொள்ள சொல்லி கேட்டேன். அதுக்காக உன்னை சீப்பா நினைச்சேன்னு அர்த்தமா?''

''உளராதே கெமி. நீயும் முரளியும் ஒன்றா?'' என்றாள் நந்தினி சுள்ளென்று.

''அப்ப நான் உனக்கு யார் நந்தினி?'' மென்மையான குரலில் கேட்டான் கெமி.

''நீ என்னுடைய ப்ரண்ட் கெமி. ரேகா மாதிரி, தாரிணி சுஜாதா மாதிரி...

''சே!'' எரிச்சலுடன் தரையை உதைத்தான் கெமி. ''நான் என்னவோன்னு நினைச்சேன்.''

இருவரும் கலகலவெனச் சிரித்தபடி அலுவலகத்தின் உள்ளே நுழைகையில் ரிசப்ஷனில் நின்றிருந்த ஏவா, ''நல்லவேளை நீ வந்தாய் கெமி. நந்தினி பத்து நாளாய் மூட் அவுட்'' என்றாள் யதார்த்தமாய்.

''அப்படியா?'' என்ற கெமியின் சிரிப்புக்கு பதில் சொல்லாமல் உள்ளே விரைந்தாள் நந்தினி.

நந்தினி அலுவலகத்தில் உழைத்த உழைப்புக்கு அவளது சம்பளம் கூடியிருந்தது. கூடிய சம்பளத்திற்கு அதிகப்படி உழைக்க வேண்டியிருந்தது. ஊரும், வேலையும் இயல்பாய் பொருந்திப் போனது. கெமியும், அவளும் தினமும் சந்தித்துக் கொண்டனர். என்றாலும் அவன் வேலை விஷயமாய் அடிக்கடி வெளியூர் செல்ல வேண்டியிருந்தது. முதன் முறை மலேசியா போயிருந்தபோது அவன் வாங்கி தந்திருந்த 'ஐ பாட்' அவன் வீக் எண்டை கழிக்கப் பெரிதும் உதவியது. கெமி தன் ப்ரபோசலைப்

NEMARA PUBLIC LIB

பற்றி அவளிடம் மறுபடி பேசவேயில்லை. ஆனால் அவளது பதிலுக்காகக் காத்திருக்கிறான் என்பது தெளிவாகத் தெரிந்தது. இதெல்லாம் அவசரப்பட்டு முடிவு செய்ய வேண்டிய விஷயமில்லை என்று நந்தினி தனக்குள் சொல்லிக் கொண்டாள்.

* * *

நந்தினிக்கு அன்று மதியம் தலை பாரமாக இருந்தது. ஒரு ப்ளாக் டீயை குடித்துவிட்டு வேலையைத் தொடர முற்பட்டபோது, கம்ப்யூட்டரை பார்க்க முடியாமல் கண்கள் வலித்தன. சிறிது நேரம் பொறுத்துப் பார்த்தவள், ஒரு மணி நேரம் முன்னதாகவே அறைக்குத் திரும்பினாள். டைகர்பாமை நெற்றியில் தடவி விட்டு சிறிது நேரம் தூங்க முற்பட்டாள். சிறிது நேரத்தில் உடல் வலியும், கண் எரிச்சலும் தாங்க முடியாமல் நந்தினி எழுந்து அமர்ந்தாள். அவளுக்கு நன்றாக காய்ச்சல் அடித்தது. மெதுவாய் சென்று கபோர்டில் மாத்திரை எதாவது இருக்கிறதா என்று தேடினாள். மார்கரெட்டின் டேபிளிலிருந்த 'நைஸ்' டேப்லெட்டை தண்ணீருடன் விழுங்கி விட்டு வந்து படுக்கையில் விழுந்தபோது வயிறு காந்தியது. மார்கரெட் ப்ரான்ஸ் போயிருந்தாள். வருவதற்கு ஒரு மாதம் ஆகும் என்று சொல்லிவிட்டு சென்ற வாரம் தான் சென்றிருந்தாள். கெமியும் ஊரில் இல்லை என்ற நினைவு ஆயாசமாக இருந்தது.

ப்ரெட்டையும் ஜாமையும் பார்க்கையில் வயிற்றைப் புரட்டியது. சூடாக ரசம் சாதம் கரைத்துக் குடித்தால் தேவலை போலிருந்தது. உடலின் சோர்வு மனதையும் பலவீனப்படுத்தியது. அலைச்சலில், படிப்பில் முகம் சோர்ந்து இருந்தாலும் கூட என்ன, என்ன என்று துளைக்



கும் அம்மா நினைவுக்கு வந்தாள். கூட யாருமில்லாத இடத்தில் உடல்நிலை சரியில்லாத நிலையில் எப்படி சமாளிப்பேன் என்ற சுயபச்சாதாபத்தில் கண்களில் நீர் நிறைந்தது. வெகுநேரம் அப்படியே கிடந்தபோது, போன் அடிக்கும் சத்தம் கேட்டது. "நந்தினி இப்பதான் வந்தேன். நீ எப்படியிருக்கிறாய்?" என்ற கெமியிடம், "நான் நல்லால்ல கெமி" என்றாள் சோர்வுடன்.

"நந்தினி என்னாச்சு நந்தினி?" என்ற கெமியின் குரலில் பதட்டம் தெரிந்தது.

"எனக்கு உடம்புக்கு முடியல" என்றதற்கு மேல் பேச முடியாமல் அசத்தியது. போனை வைத்த இருபது நிமிடங்களில் கெமி அவள் அறையில் இருந்தான்.

"இவ்வளவு பெரிய பெண்ணுக்கு தன் உடம்பைப் பாத்துக்கத் தெரியாதா?" என்றான் அதட்டலுடன். "எனக்காவது ஒரு போன் பண்ணியிருக்க வேண்டாமா?"

"நீதான் ஊர்ல இல்லையே."

"பினாங்கு வரை போயிருந்தேன். நீ ஒரு போன் பண்ணியிருந்தா என் ப்ரண்ட்ஸ் யாரையாவது அனுப்பியிருப்பேன்."

"அந்த அளவுக்கெல்லாம் எதுவுமில்ல கெமி. இன்னிக்கு மதியத்திலிருந்துதான் உடம்பு சரியில்ல."

"நீ சும்மா கூட பேசாம படு" என்றான் கெமி கோபத்துடன்.

தனிமையில் கிடந்த நந்தினிக்கு அந்தக் கோபமும், அதட்டலும் கூட இதமாக இருக்க அமைதியாக கண்களை மூடினாள்.

நடு இரவில் நந்தினிக்கு மீண்டும் காய்ச்சல் வந்தது. கெமி கவலையுடன் அவள் அருகிலேயே அமர்ந்திருந் தான். காலையில் டாக்டரிடம் அழைத்துப் போனான். அவர் வைரஸ் பீவர் என்று சொல்லி மருந்து கொடுத்தார். அறைக்கு வந்து ஓட்ஸ் கஞ்சியும், மாத்திரையும் சாப் பிட்டுவிட்டு நந்தினி உறங்கிப் போனாள்.

கண் விழித்தபோது அறையில் பேச்சுக் குரல்கள் கேட்டன. "கெமி சொல்லியிருப்பான் போலும். "நந்தினி ஆர் யு ஓகே?" என்றபடி அவள் எதிரில் வந்து அமர்ந்தான் கதிர்.

நந்தினியின் நெற்றியை டவலால் துடைத்துவிட்ட இந்து, "நல்லா வியர்வை வந்திருக்கு. காய்ச்சல் விட்டுப் போச்சு" என்றாள்.

"ஆமாமாம். நந்தினியை பாத்து பயந்து போச்சு" என்றான் கதிர்.

மூவரும் சிரிப்பும் கலகலப்புமாக பேசத் தொடங் கியதும், நந்தினியும் தன் சோர்வை மறந்து கூட சேர்ந்து சிரிக்கத் தொடங்கினாள். இந்து ரசம் வைத்து சாதம் கரைத்துக் கொடுத்தாள்.

"இன்னும் இரண்டு நாளைக்காவது வீட்டு சாப்பாடாய் சாப்பிடணும் நந்தினி. உங்க ரெண்டு பேருக்கும் நம்ம வீட்லயிருந்து சாப்பாடு எடுத்துட்டு வருகிறோம்" என்ற படி கதிரும் இந்தும் புறப்பட்டுச் சென்றார்கள்.

"அவங்களுக்கு எதுக்கு கெமி சிரமம்?" என்றாள் நந்தினி தயக்கத்துடன்.

"இதெல்லாம் சிரமமாவே நினைக்க மாட்டாங்க அவங்க. முருகேசன் அங்கிள் ப்ரண்ட்சுன்னா உயிரையே விடுவார்."




"ரொம்ப நல்லவங்க இல்ல?"

"நிஜமாவா? ப்ராட்ன்னு நீ சொல்லல?" கெமி சிரிக் கவும்,

"நீ தான் ப்ராட். உன்னைத்தான் சொன்னேன்." தலையணையை தூக்கி அவன் மீது வீசினாள் நந்தினி.

அடுத்த நாளே நந்தினிக்கு காய்ச்சல் நின்றிருந்தாலும் கெமியின் வற்புறுத்தலால் அலுவலகத்திற்கு நாலு நாள் விடுமுறை எடுத்துக் கொண்டு ரெஸ்ட் எடுத்தாள். கெமியும் நாலு நாளாய் அவள் கூடவே இருந்து கவ னித்துக் கொள்ளவும். "எனக்குதான் சிக் லீவ். என்னைக் கவனிக்கிற சாக்கில் நீயும் ஜாலியா லீவ் போட்டுட்டு, கதிர் வீட்டு சாப்பாட்டை சாப்டுட்டு படுத்துத் தூங்கிட்டு இருக்கியா?" என நந்தினி கிண்டலடித்தாள். "காய்ச்சல் போனாலும் உன் திமிர் போகல" விளையாட்டாய் அவள் தலையில் தட்டினான் கெமி.



## 8

அன்று சீனியருடன் நந்தினி ஒரு முக்கியமான டிஸ்கஸனில் இருந்தபோது கெமியிடமிருந்து போன் வந்தது. அலுவலக சமயத்தில் அவன் இதுவரை கூப் பிட்டதில்லையாதலால் சியான்சாங்கிடம் அனுமதி பெற்று வெளியே வந்து போனை ஆன் பண்ணினாள்.

"ஸாரி பார் த டிஸ்டபன்ஸ் நந்தினி" என்றான் கெமி.

"முக்கியமான விஷயம் இல்லாட்டி நீ டிஸ்டர்ப் பண்ண மாட்டேன்னு தெரியும். சொல்லு கெமி. என்ன விஷயம்?"

"இன்னிக்கு நைட் இந்தியா கிளம்பறேன் நந்தினி."

"என்ன இப்ப திடீர்னு? இப்பல்லாம் உனக்கு ஒரு இடத்துல இருக்க முடியறதே இல்ல. ஊர் சுத்தறதே வேலை."

"போக வேண்டிய நிர்பந்தம் நந்தினி."

"அப்ப போ. எங்கிட்ட எதுக்குச் சொல்லணும்?"

ஒரு நொடி அமைதிக்குப் பின், "எங்கம்மாவுக்கு உடம்பு சரியில்லேன்னு போன் வந்தது நந்தினி." என்றான் கெமி.

"மைகாட், என்ன உடம்புக்கு?" என்றாள் நந்தினி திடுக்கிட்டு.

"சரியா தெரியல நந்தினி. அம்மாவுடன் ஹாஸ்பிட்டலில் இருக்கிறேன். அப்புறமாய் பேசுகிறேன் என்று அப்பா சொன்னார். அப்புறம் பேசவும் இல்லை. அண்ணனையும் தொடர்பு கொள்ள முடியவில்லை. பெரிதாக எதுவும் இருக்காது என்றுதான் தோன்றுகிறது. இருந்தாலும் ஒருமுறை போய் வந்தால் எனக்கு சமாதானமாக இருக்கும்."

"சரி, உன்னை வழியனுப்ப நான் ஏர்போர்ட் வருகிறேன் கெமி."

"வேண்டாம் நந்தினி. இரவு இரண்டு மணிக்கு ப்ளைட். உனக்கு திரும்பி வர சிரமம்?"

"ஓ.கே. போனதும் கட்டாயம் போன் பண்ணு கெமி" என்றாள் நந்தினி.

மறுபடி இரவு கெமி ஏர்போர்ட் கிளம்புமுன் நந்தினி போன் செய்து,



"பயப்படாதே கெமி. அம்மாவுக்கு பெரிதாய் எதுவும் இருக்காது. ரொம்ப முடியவில்லை என்றால் இந்நேரம் வீட்டில் யாராவது உனக்கு தகவல் சொல்லியிருப்பார்கள். டென்ஷனில்லாமல் கிளம்பு" என்று பலவிதமாய் அவனுக்கு சமாதானம் சொல்லி அனுப்பி வைத்தாள்.

கெமியின் கவலை மனசை பாதிக்க, அவன் அம்மாவுக்கு எதுவும் இருக்கக் கூடாது என்று நினைத்தவளுக்கு தன் அம்மாவின் நினைவு வந்தது. அம்மா இதுவரை ஒரு தலைவலி என்று படுத்துக்கூட அவள் பார்த்ததில்லை. அப்பாவோ, நந்தினியோ எந்த நேரம் வந்தாலும் சூடாக டிபனோ, சாதமோ பரிமாறுவாள். ஒருவேளை அம்மாவுக்கு உடம்புக்கு வந்தால் எனக்குத் தகவல் சொல்வார்களா? அல்லது தங்களிடம் இயல்பிலேயே, ஒட்டாத, வெளி தேசத்தில் இருக்கும் பெண்ணிடம் சொல்லி என்ன பயன் என்று நினைப்பார்களா?

தலையைக் குலுக்கிக் கொண்டாள் நந்தினி. வேண்டாம். அம்மாவும் அப்பாவும் நன்றாக இருக்கட்டும். கெமியின் அம்மாவும் குணமாகட்டும். அவரவர் வணங்கும் கடவுள்கள் அவர்களை காப்பாற்றட்டும்.

ப்ரான்சிலிருந்து இரவு வந்த மார்கரெட், "நந்தினி உன் ப்ரண்டை ஏர்போர்ட்டில் பார்த்தேன். எங்காவது ஊருக்குப் போகிறானா?" என்றாள்.

"இந்தியா போகிறான் மார்கரெட். அவங்கம்மாவுக்கு உடம்பு சரியில்லை."

"என்ன உடம்புக்கு?"

"போனால்தான் தெரியும்."

சற்று அமைதியான மார்கரெட் சொன்னாள். "நந்தினி ஒரு விஷயம் சொல்லட்டுமா? இந்தியர்கள் மிகுந்த

திறமைசாலிகள்தான். ஆனால் ப்ராக்டிக்கலாக யோசிப்ப தில்லை. கெமியின் அம்மாவுக்கு என்னன்னே சரியா தெரியாதபோது இவன் ஏன் நேரத்தையும், பணத்தையும் செலவழிச்சிட்டு ஓடணும்? ஒரு வேளை அப்படி சீரியராக இருந்தாக்கூட நல்ல டாக்டரை ஏற்பாடு செய்தால் போச்சு. ஒரு டாக்டரால்தான் நோயாளியை கவனிக்க முடியும். கெமி போய் என்ன செய்ய முடியும் சொல்?''

''இதெல்லாம் அவரவர் மனம் சம்பந்த விஷயம் மார்கரெட். கெமி இங்கிருந்தால் அம்மாவுக்கு உடம்பு சரியாகி விட்டது என்ற தகவல் வரும் வரை அவனால் வேலையில் ஈடுபட முடியாமல் போகலாம். அல்லது அவனை பார்த்த மகிழ்ச்சியில் அவன் அம்மாவுக்கு உடம்பு குணமாகி விடக் கூடும்.''

தோள்களைக் குலுக்கினாள் மார்கரெட். ''நான்தான் சொன்னேனே. நீங்கள் எல்லாம் சென்டிமென்டில் சிக்கிக் கொள்பவர்கள்.''

''அப்ப உனக்கு சென்டிமென்டே கிடையாதா மார்கரெட்?''

''நெவர்.''

''உன் பாய் ப்ரண்டுடன் இரண்டு வருடமாய் சேர்ந் திருப்பதாய் சொன்னாயே, அவன் மீது உனக்கு சென்டி மென்ட்ஸ் கிடையாதா?''

''நிச்சயம் இல்லை. எங்களுக்கு பிடித்திருக்கிறது. சேர்ந்திருக்கிறோம். எப்போதாவது அலுப்பு தட்டும்போது பிரிந்து விடுவோம்.''

''அவனைப் பிரிந்தால் வருந்த மாட்டாயா?''

''ஒத்து வராத போதுதான் பிரிவோம். பிறகெப்படி வருத்தம் வரும்?''



''இதே வாழ்க்கையைத்தானே உன் அம்மாவும் வாழ் கிறாள். பிறகு அவளை நீ ஏன் வெறுக்க வேண்டும்?''

மார்கரெட்டின் முகத்தில் கோபம் மின்னியது. ''என் அம்மா என்னை பெற்றது முதல் குற்றம். பெற்ற பிறகு குழந்தைக்காகவாவது பொறுப்பான வாழ்க்கை வாழாதது இரண்டாவது குற்றம். அவள் மனம் போனபடி வாழ்ந்தாள்.

தன் பொறுப்பற்ற நடத்தையால் என்னைக் கஷ்டத்துக் குள்ளாக்கினாள். ஆனால் நான் யாரையும் வருத்தப்படுத்த வில்லை. என் வாழ்வை எப்படி அமைத்துக் கொள்வது என்பதில் நான் தெளிவாக இருக்கிறேன்.''

மார்கரெட்டின் வார்த்தைகளை யோசித்தபடி நந்தினி சாலடை சாப்பிடத் தொடங்கினாள்.

மறுநாள் முழுவதும் கெமியிடமிருந்து நந்தினி போனை எதிர்பார்த்தாள். அவன் செல்போனை அலுவல கத்திலேயே வைத்துவிட்டுப் போயிருந்தான். அவன் பெற்றோரின் நெம்பரைக் கூட கேட்காமல் போனோம் என்றிருந்தது. அவனிடமிருந்து உடனே தகவல் வராததி லிருந்து அவன் அம்மாவின் உடம்பு மோசமாகத்தான் இருக்குமோ என்ற கவலை ஏற்பட்டது. ஞாயிற்றுக்கிழமை யன்று. இன்றுடன் கெமி போய் ஐந்து நாட்கள் ஆகிவிட்டது என்று நினைத்தபடி நந்தினி தனக்குத் தேவையான சில பொருட்கள் வாங்க கடை வீதிக்குச் சென்றபோது செரங் கூன் ரோடில் கதிரின் அண்ணா செல்வத்தைப் பார்த்தாள். நந்தினியைப் பார்த்ததும் மகிழ்ச்சியோடு நலம் விசாரித்த வனிடம் கெமியின் வீட்டு டெலிபோன் நெம்பரைக் கேட்டாள் நந்தினி.

''எனக்குத் தெரியாது நந்தினி. அப்பாவிடம் கேட்டு உனக்கு சொல்லுகிறேன்'' என்றவள், மறுநாள் அதே போல நந்தினிக்கு போன் செய்து கெமி வீட்டு டெலி போன் நெம்பரைக் கூறினான்.

மாலையில் செல்வம் கொடுத்த நம்பரை டயல் செய்ய நந்தினிக்கு தயக்கமாகவே இருந்தது. வீட்டில் வேறு யாரேனும் போனை எடுத்தால், நீ வந்த ஒரு வாரத்திற்குள் உனக்கு போன் செய்து விசாரிக்கும் பெண் யார் என அவனிடம் கேள்வி கேட்டால்.

யோசித்து முடிப்பதற்குள் பெல் அடித்து முடித்து கெமியே போனை எடுத்தான்.

நந்தினியின் குரலைக் கேட்டதும், ''ஹேய் வாட் எ சர்ப்ரைஸ்? இந்த நெம்பர் எப்படிக் கிடைத்தது உனக்கு?'' என்றான் வியப்புடன்.

''ப்ரண்ட் மேல அக்கறை இருக்கறவங்க. எங்கிருந்தாலும் தேடி கண்டு பிடிச்சிடுவாங்க. உனக்குதான் அவசரம்னு புறப்பட்டுப் போய் அஞ்சு நாள் ஆகியும் ஒரு தகவல் சொல்லணும்னுகூட தோணல'' என்றாள் நந்தினி குறையுடன்.

''ஐயாம் வெரி வெரி ஸாரி நந்தினி. இங்கிருந்த பிஸியில் நிதானமா பேசலாம்னு ஒவ்வொரு நாளா தள்ளிப் போட்டுட்டேன். அம்மா இப்ப ரொம்ப நல்லா இருக்காங்க. நான் நாளை இங்கிருந்து கிளம்புகிறேன். நாளன்னிக்கி வழக்கம் போல் ரயில் நிலையத்தில் சந்திக்கலாம்'' என்றபடி போனை வைத்தான் கெமி.

நல்ல வேளை கெமியின் அம்மாவுக்கு பயப்படும்படியாய் எதுவுமில்லை என்ற ஆறுதலுடன் டெலிபோன் பூத்தை விட்டு நகர்ந்தபோது மழை வேகமாய் தூறியது. ஹேண்ட் பேக்கிலிருந்த குடையை விரித்துக் கொண்டு, நடக்கத் தொடங்கினாள். இங்கு எல்லோர் பையிலும் நிச்சயம் குடை இருக்கும். திடுதிப்பென மழை பெய்யும் சில நிமிடங்களில் நல்ல வெய்யில் அடிக்கும். தரை



சுத்தமாய் காய்ந்து மழை பெய்த அறிகுறியே தெரியாமல் செய்துவிடும்.

மாலை நேரங்களிலும், விடுமுறை நாட்களிலும் முளைக்கும் சீனர்களின் நடை பாதை கடைகளையும், அதன் கலர்கலரான ஷாமியானா அலங்காரங்களையும் பார்த்தபடி மெதுவாய் நடந்தாள். நடை பாதை ஓரத்தில் பழைய கோட்டுடன் ஒருவன் கிதார் வாசித்தபடி அமர்ந்திருந்தான். அவன் தொப்பியை திருப்பிக் கீழே வைத்திருக்க. அதில் சில்லரைகள் சிதறிக் கிடந்தன. அவன் யாரிடமும் கையேந்தியோ, வாய் விட்டோ காசு கேட்காமல் தன் இசையில் மூழ்கியிருந்தான். யாராவது காசு போடும்போது மட்டும் தலை வணங்கி தன் நன்றியைத் தெரிவித்தான். பிச்சை எடுப்பதிலும் ஒரு பணக்காரத்தனம் தெரிந்தது அவனிடம். இந்தியாவில் பஸ் ஸ்டேண்டிலும், கோவில் வாசலிலும் கந்தல் உடையுடன் அழகிய கை கால்களுடன், கைக்குழந்தையுடன் வறுமையின் நடமாடும் சின்னங்களாய் திரியும் பிச்சைக்காரர்கள் நினைவுக்கு வந்தனர். ஒரு பெருமூச்சுடன் நந்தினி நடக்கத் தொடங்கினாள்.

* * *

கெமி இன்று வருவான் என்று நினைத்தபடி காலண்டரில் தேதியைப் பார்க்கும்போதே கெமியிடமிருந்து போன் வந்து விட்டது. ''இந்தியாவிலிருந்து வந்து விட்டேன். இப்போது பிசியாக இருப்பதால் மாலையில் நம் அலுவலகம் அருகேயுள்ள ஹோட்டல் மெரிட்டஸ் மேண்டிரியனில் சந்திக்கலாம்'' என்றான் சுருக்கமாக.

அவனுக்கு வேலை அதிகமாகத்தான் இருக்கும். அவனது விடுமுறைக்கெல்லாம் சேர்த்து உழைக்க வேண்டும்.

இன்று விரைவாக அலுவலகம் செல்வான் போலிருக் கிறது. நல்லவேளை அவன் அம்மா பற்றிய கவலை தீர்ந்தது அவனுக்கு. தனக்குள் சமாதானம் செய்து கொண்டாள் நந்தினி.

மாலையில் தன்னுடைய அறைக்கு அழைத்த இலியானாவை மறுத்துவிட்டு டாய்லெட் கண்ணாடியில் முகத்தை திருத்தும்போது தானாய் புன்னகை மலர்ந்தது. "கெமி என்னுடைய ப்ரண்ட்தான்" என்றாள் கண்ணாடியிடம்.

"அப்ப ரேகாவையோ, தாரிணியையோ பார்க்கப் போகும் போது இத்தனை கவனம் எடுத்துக் கொண்டாயா?" என்ற கேள்வியை உள்ளேயே அடக்கினாள். மெரிட்டஸ் மேண்டிரியனின் ஹைக்ளாஸ் ரெஸ்ட்டாரண்டிற்குள் நுழைந்ததும் அவளைப் பார்த்துவிட்ட கெமி கையசைத்தான்.

முகம் தானாய் மலர்ந்துவிட, அவனிடம் விரைந்தவள், அவன் அருகே அமர்ந்திருந்த பெண்ணைப் பார்த்ததும் நிதானித்தாள். அந்த பெண் மிக அழகாக இருந்தாள். கெமியின் தோள்களில் கை போட்டு சரளமாய் பேசிக் கொண்டிருந்தாள்.

"உட்கார் நந்தினி" என கெமி சொன்னதும் திரும்பி நந்தினியைப் பார்த்தவள் வியப்புடன் கெமியையும் பார்க்கவே, 'ஷி இஸ் நந்தினி. என் ப்ரண்ட்' என்றவன், "ஷி இஸ் மரியா. மை கஸின்" என்றான் நந்தினியிடம்,

"ஹலோ" என்றாள் நந்தினி சுரத்தின்றி. மரியாவின் அப்பா, அம்மா அமெரிக்காவில் இருக்கிறார்கள் நந்தினி. மரியா விடுமுறையில் சென்னை வந்திருந்தாள். நான் போகவும் என்னுடன் கிளம்பி இங்கே வந்து விட்டாள். ஒரு வாரமாய் மரியாவுக்கு சிங்கப்பூர் விசாவுக்குதான் அலைந்தோம். இங்கே ஒரு வாரம் என்னுடன் இருந்து விட்டு அமெரிக்கா போய் விடுவாள்" என்றான் கெமி.



உணவுக்கு ஆர்டர் கொடுக்கையில் "உனக்கு என்ன வேண்டும் நந்தினி?" என்றான்.

"ஜூஸ் மட்டும் போதும்."

"நந்தினி ஏன் என்னவோ போலிருக்கிறாய்?"

"ஐ யாம் ஓ.கே. லேசாய் தலைவலி."

"அப்படியா? எப்போதிருந்து? இங்கே உள்ளே நுழையும் போது நீ நன்றாகத்தானே இருந்தாய்?"

பதில் பேசாது குனிந்து ஜூஸை பருகினாள் நந்தினி.

கெமி சகஜமாய் மரியாவின் ப்ளேட்டிலிருந்த உணவை எடுத்து சாப்பிட்டதும், அவர்களுக்கிடையே இருந்த அந்நியோன்யமும் நந்தினியின் நெஞ்சில் தீ மூட்டியது. அம்மாவுக்கு உடம்பு சரியில்லை என்று போனவன், மரியாவுடன் சுத்துகிற ஜோரில்தான் நந்தினிக்கு போன் பண்ணக் கூட மறந்து போயிருக்கிறான். நந்தினிக்கு தன்னை அவன் மிகவும் அவமதித்து விட்டாற் போலிருந்தது.

"நந்தினி நீங்க எதுவும் சாப்பிடலையா?" என்ற மரியாவின் கேள்விக்கு,

"அவளுக்கு தலைவலி" என்று கெமி சிபாரிசுக்கு வந்தான்.

"நந்தினி நாளைக்கு கொஞ்சம் சிங்கப்பூரை சுத்தலாம் வர்றீங்களா?" என்றாள் மரியா.

"ஸாரி. எனக்கு வேலை இருக்கு?" என்றாள் நந்தினி.

"அப்ப ஸண்டே?"

"ஸண்டேதான் முக்கியமான வேலை இருக்கு."

"அது என்ன நந்தினி அவ்வளவு முக்கியமான வேலை? எனக்குக் கூடத் தெரியாமா?" என்றான் கெமி.

"என் பர்சனல் வேலை எவ்வளவோ இருக்கும். அதை எல்லோருக்கும் சொல்ல வேண்டிய அவசியமில்லை."

"எல்லோருக்கும் வேண்டாம். என்னிடம் சொல்?"

"நீ மட்டும் என்ன தனி? உன்னிடம் சொல்ல?"

"நான் உனக்கு தனிதான். இல்லையென்று சொல் பார்க்கலாம்!"

"இல்லை."

"நந்தினி."

"இல்லை. நீ எனக்கு தனியானவன் இல்லை. நீயும் எல்லோரிலும் ஒருவன் தான்."

"நந்தினி இங்கே பார்." கெமி கைகளைப் பற்றவும், வேகத்துடன் கையை உதறினாள் நந்தினி.

மேற்கொண்டு இருவரும் பேசுமுன் மரியா குறுக்கிட்டாள். "எதுக்காக நீங்க ரெண்டு பேரும் சண்டை போட்டுக் கறீங்க?"

"சண்டையா? நாங்க சும்மா விளையாடிட்டிருந்தோம்? சிரித்தபடி கெமி நந்தினியின் கையை விட, நந்தினி வேகமாக திரும்பி வெளியே சென்றாள்.

"பை. நந்தினி" என்ற மரியாவின் குரல் பின்னால் கேட்டபோதும் திரும்பிப் பார்க்கவில்லை.

அடுத்தடுத்த நாட்களில் கெமி அவளைத் தொடர்பு கொண்ட போதெல்லாம் போனை அணைத்தாள். ரயில் நிலையத்திலும் அலுவலகத்திலும் கூட அவனை சந்திப்பதை தவிர்த்தாள். கடைத் தெருக்களில் மரியாவும்,



கெமியும் பேசிச் சிரித்தபடி ஷாப்பிங் பண்ணுவதையும், கை கோர்த்தபடி ரோடை கடப்பதையும் பார்க்கும்போது செய்கையற்ற ஆத்திரம் வரும். கெமி ஒரு ப்ராட். ஏமாற்றுக்காரன். அவனது குடும்பத்திலேயே அவனுக் கேற்றவளாய் ஒருத்தியை தேர்ந்தெடுத்துவிட்டு இத்தனை நாள் நம்மிடம் நடித்திருக்கிறான். எப்படி ஏமாந்து போனோம் என்று துக்கமேற்பட்டது. தூக்கமின்றி இரவெல்லாம் படுக்கையில் புரள்கையில், கெமி அவளுடன் கண்ணியமாய் பழகியதும் அக்கறையாய் கவனித்துக் கொண்டதும், தன் காதலை வெளிப்படுத்தியும் நடிப்பு என்பதை நம்ப முடியாமல் தவித்தாள்.

கோபத்திலும் குழப்பத்திலும் படகு துறையில் அமர்ந்து, படகில் செல்பவர்களை இலக்கின்றி வெறித்துக் கொண்டிருந்தாள் நந்தினி. அருகில் யாரோ அமர்வதை உணர்ந்து திரும்பிப் பார்த்தவள் கெமியை கண்டதும் எழுந்து செல்ல முயன்றாள்.

"நான் ஒரு ரௌடியோ, நந்தினி? என்னைப் பார்த்ததும் ஏன் அவ்வளவு அவசரமாய் எழுந்து போக வேண்டும்? உனக்குப் பிடிக்காத எதையும் நான் செய்ய மாட்டேன் என்பது கூடவா உனக்குப் புரியவில்லை?"

"புரிகிறது கெமி. இத்தனை நாளில் எனக்குப் புரியாத எவ்வளவோ விஷயங்கள் இப்போதுதான் புரிகிறது."

"அப்படி என்ன புரிந்து கொண்டாய் என்று சொல்லேன்!"

* * *

நந்தினி பேசாமல் அமர்ந்திருக்க, அட்டகாசமாய் சிரித்தபடி படகிலிருந்து இறங்கிய ஒரு டூரிஸ்ட் கும்பல்

அவர்களை கடந்து போனது. சிங்கப்பூரின் நினைவு சின்னமாய் சிங்கத்தின் பின்னணியில் நிறைய பேர் போட்டோ எடுத்துக் கொண்டிருந்தனர். நந்தினியின் கையைப் பற்றி எழுப்பிய கெமி, அவள் 'வரமாட்டேன், நான் போகனும்' என்றதை கண்டு கொள்ளாமல், தனியான ஒரு இடம் பார்த்து அமர்ந்தான்.

வாகாய் திரும்பி அமர்ந்து, "ம் இப்ப சொல்லு நந்தினி?" என்றான் அவள் முகம் பார்த்து.

"இன்னிக்கு உன்னோட கஸின் வரலையா?" என்றாள் நந்தினி எங்கோ பார்த்தபடி.

"அவ இன்னிக்கு ஊருக்குக் கிளம்பிட்டா நந்தினி."

"ஓ... அதனால்தான் என்னைப் பார்க்க வந்தாயா?"

"என்ன பேசற நந்தினி? தினமும் நான் உங்கிட்ட பேச, உன்னைப் பார்க்க முயற்சி பண்ணிட்டுதான் இருக்கேன். நீதான் என்னை அவாய்ட் பண்ற. அது ஏன்னு தெரியல எனக்கு. சொல்லு நந்தினி, என்ன பிரச்சனை உனக்கு?" ஆப்டர் ஆல் நான் கெமியின் தோழி என்று சொல்லிக் கொள்ளும் பட்சத்தில் அவனை அவனது உறவு பெண்ணுடன் பழக வேண்டாம் என்று சொல்ல எனக்கென்ன உரிமையிருக்கிறது! என்று தோன்றியது நந்தினிக்கு.

எனவே பேச்சை மாற்றும் விதமாய், "நீ இந்தியா போனாயே, உங்கம்மாவுக்கு என்ன உடம்புக்கு? இப்போது எப்படியிருக்கிறார்கள் சொல்?" என்றாள்.

"இதுவா உன் பிரச்சனை?" என்று கிண்டலடித்தாலும் கெமி அவள் கேட்ட விபரம் சொன்னான். "அம்மாவுக்கு டைபாய்டு காய்ச்சல்தான் நந்தினி. காய்ச்சல் அதிகமாக இருக்கவே மருத்துவமனையில் அட்மிட் செய்திருக்கிறார்கள். அம்மாவுக்கு உடம்பு பலகீனமான நிலையில் என்னை பார்த்தே ஆகணும்னு தோணிப் போச்சு. அப்பாவுக்கு என்னை தொல்லை செய்யணுமான்னு யோசனை. அதனால பட்டும் படாம உடம்பு சரியில்லன்னு மட்டும் எங்கிட்ட சொல்லியிருக்காங்க. என்னைப் பார்த்த சந்தோஷத்திலேயே பாதி குணமாகி விட்டது. ஒரே நாளில் அடம் பிடித்து வீட்டிற்கு வந்து விட்டார்கள். நாங்க அனுமதித்திருந்தால் அவங்களே எனக்கு சமைச்சுப் போட அடுப்படிக்குப் போயிருப்பாங்க. நாங்க விடாததால் அண்ணிகிட்ட சொல்லி விதவிதமாய் சமைக்கச் சொல்லி அருகிலேயே உட்கார்ந்து பரிமாறினாங்க. அண்ணன் கூட கேலி செய்தான். "உடம்பு சரியில்லாம போனது அம்மாவுக்கா, கெமிக்கா?" என்று. வீட்டு நினைவில் கெமியின் முகத்தில் தானாய் புன்னகை மலர்ந்தது. "அம்மா அதோடயா விட்டாங்க? நீ கல்யாணம் பண்ணிக்காம உன்னை இங்கிருந்து அனுப்ப மாட்டேன். நான் நன்றாக இருக்கும் போதே உன் கல்யாணத்தை பார்த்துவிட வேண்டும் என்று ஏக கலாட்டா. அந்த கலாட்டாவில் தான் எனக்கு, உன்னை போனில் கூட தொடர்பு கொள்ள முடியாமல் போனது."

"அம்மாவின் வற்புறுத்தலுக்கு நீ என்ன பதில் சொன்னாய் கெமி?"

நந்தினி சாதாரணமாய் கேட்பது போல் கேட்டாலும், அவள் உள்ளே மறைந்திருக்கும் ஆர்வமும், எதிர்பார்ப்பும் தெளிவாக தெரிய, கெமிக்கு அவள் ஆர்வத்தை உரசிப் பார்க்க ஆசை வந்தது.

"வீட்டில் அம்மாவுடன் சேர்ந்து எல்லோரும் வற்புறுத்தும்போது என்னால் என்ன செய்ய முடியும் நந்தினி?

அவர்கள் விருப்பத்திற்கு கட்டுப்படுவதைத் தவிர எதுவும் செய்ய முடியவில்லை."

"ஓ.கோ. திருமணத்திற்கு சம்மதித்து விட்டாயா?"

"ஆமாம். எனக்கும் காலாகாலத்தில் நடந்தால்தானே நல்லது?"

"பெண் கூட பாத்தாச்சு இல்லியா?"

"எப்படி இவ்வளவு கரெக்டா சொல்ற? பெரியவங்களே பாத்து உறவில் பெண் முடிவு செய்து நிச்சயதார்த்தமும் ஆயிற்று. சர்ச்சிலும் திருமண ஓலை படிக்கக் கொடுத் தாயிற்று. அடுத்த மாதம் திருமணம். சும்மா சொல்லக் கூடாது நந்தினி. பெண் என்ன அழகு தெரியுமா? அவ சிரிச்சா நாள் பூரா பாத்துகிட்டே இருக்கலாம். பேசினா கேட்டுகிட்டே இருக்கலாம். அவ நடந்து வந்தா..."

"எழுந்து ஓடிவிடலாம் போலிருக்குமா?" நந்தினி எரிச்சலுடன் குறுக்கிட, கெமி அடக்கமாட்டாமல் சிரித் தான். "உனக்கேன் இவ்வளவு கோபம் வருது நந்தினி?"

"எவனோ, எவளையோ கல்யாணம் பண்ணிக்கிட்டா எனக்கேன் கோபம் வரணும்?"

"நிஜமா உனக்கு கோபமில்ல?"

"நிச்சயமா இல்ல?"

"அப்ப என் வருங்கால மனைவியை அறிமுகப் படுத்தறேன். எங்கூடவா. இப்ப அவ நல்ல வேளையாய் இங்குதான் வந்திருக்கா."

"எனக்கு வேலை இருக்கு. என்னால் வர முடியாது?"

"படகு துறையில் உட்கார்ந்து நீ செய்யற வேலையைத் தான் நான் பார்த்தேனே! வா போகலாம்."



"முடியாது."

"அப்ப உனக்குப் பொறாமைன்னு ஒத்துக்கோ."

"நெவர். எனக்காவது பொறாமையாவது?"

"நீ எங்கூட வரலைன்னா அதுதான் காரணமா இருக்க முடியும்."

"உங்கூட வர பிடிக்காமலும் இருக்கலாம்."

"இத்தனை நாள் என்னுடன் எங்கெங்கோ சுற்றிய வளுக்கு இப்போது பிடிக்காமல் போவானேன்?"

"அப்ப நீ இவ்வளவு மோசமான ஆளா இருப்பேன்னு தெரியாது." வேகத்துடன் அவள் முகவாயைப் பற்றி திருப் பினான் கெமி. "அப்படி என்ன நான் மோசமா நடந்து கிட்டேன்? உன் மனசைத் தொட்டு சொல்?"

"விடுடா. நீ பெரிய ஹீரோ மாதிரி முகத்தைப் பற்றி டயலாக் பேசினால் மயங்கிடுவாங்களா? விடு என்னை." அவன் கையைத் தட்டி விட்டாள் நந்தினி.

"என்னை என்ன பொறுக்கின்னு நினைச்சியா?" தட்டி விட்ட கைகளை இறுகப் பற்றினான் கெமி. அவனிட மிருந்து விடுபட திமிறி முழங்கைகளால் அவனை பின்னே தள்ளினாள் நந்தினி. தடுமாறி தரையில் சாய்ந்தவன், நந்தினியின் கைகளை விடாமல் பற்றியிருக்கவே, இருவரும் லேசான சரிவில் உருண்டார்கள். சில அடிகள் உருண்டு பூச்செடிகளுக்கு மத்தியில் விழுந்தாள் நந்தினி. பூக்குவியலுக்கு நடுவே கண் மூடி கிடந்தவளை பார்த்த கெமியின் முகம் மிருதுவாயிற்று.

"நந்தினி" என்றான் அவள் காதருகே.

அவள் பதில் பேசாமல் இருக்கவே, "நந்தினி உனக்குத் தெரியுமா?

இந்த செடிகளிலுள்ள அத்தனை பூக்களிலும் அழகான பூ நீதான்'' என்றான் மென்மையாக.

எழுந்து அமர்ந்த நந்தினி, கைகளில் முகம் புதைத்து விசும்பத் தொடங்கினாள். மென்மையாய் அவளை அணைத்து தலையை வருடினான் கெமி.

''என் உயிரும், மனசும் உன்னிடமிருக்க நான் வேறு யாரையாவது மணக்க, ஏன் நினைக்கக் கூட செய்வேனா நந்தினி? என்னைப் பற்றி இது கூடவா நீ தெரிந்து கொள்ளவில்லை?''

''அப்ப மரியா?'' என்றாள் நந்தினி தலையை உயர்த்தி.

''பொறாமைப் பிசாசே! மரியா என் சித்தி பெண். தங்கை'' என்று அவள் தலையை தன் தலையால் முட்டினான் கெமி.

* * *

எங்கோ போன் அடித்த சத்தம் கேட்டது. ஆழ்ந்த உறக்கத்திலிருந்த நந்தினி புரண்டு படுத்தாள். மணி சத்தம் விடாது கேட்கவும் கண்களைத் திறந்து வாட்சைப் பார்த்தாள். இரவு இரண்டு மணி ஆகியிருந்தது. திரும்பிப் படுத்து கண்களை மூடவும் மறுபடி போன் அடித்தது. கொட்டாவி விட்டபடி போனை ஆன் பண்ணியதும் ''ஹாய்'' என்றான் கெமி.

''ஏய் என்ன இந்த நேரத்தில்?''

''உங்கிட்ட முக்கியமான விஷயம் ஒண்ணு கேட்கணும்.''

''காலையில் பேசிக்கலாம் கெமி.''

''இல்ல இப்பவே.''

''எனக்கு தூக்கம் வருது கெமி.''



''எனக்கு ஒரே ஒரு வார்த்தை பதில் சொல்லிட்டு உடனே தூங்கிடு நந்தினி. ப்ளீஸ்.''

''என்ன பதில்?''

''நாளைக்கு நாம கல்யாணம் பண்ணிக்கலாமா?''

''என்னது?''

''உனக்கு தூக்கம் வருதுல்ல? ரொம்ப யோசிச்சிக் குழப்பிக்காதே! யெஸ்ன்னு ஒரு வார்த்தை சொல்லிட்டு தூக்கத்தைக் கண்டினியூ பண்ணு.''

''உனக்கு விளையாட நேரம், காலம் கிடையாதா கெமி?''

''ஐ யாம் வெரி சீரியஸ் நந்தினி. நாம உடனே கல்யாணம் பண்ணிக்கணும்'' என்றான் கெமி உறுதியான குரலில்.

''அதுக்காக, நாளைக்கே வா.''

''சரி. நாளன்னிக்கு பண்ணிக்கலாம்.''

''இது அவ்வளவு சுலபமா கெமி? நம்ம இரண்டு பேருக்கும் நடுவே நம் இரு குடும்பங்களும் பெரிய சுவராய் நிற்கும். மறந்துட்டியா நீ?''

''நீதான் மறந்துட்ட. சுவருக்கு வெளியே நாம் நிற்கையில் அதைப் பற்றி ஏன் கவலைப்படணும்?''

''அதுக்காக, நம்ம பெத்தவங்க இந்த கல்யாணத்துக்கு ஒத்துக்குவாங்களான்னு தெரிய வேண்டாமா கெமி?''

''நாம சம்மதம் கேட்கப் போறதில்லை மைடியர். தகவல் தான் தரப் போகிறோம்.''

''எப்படி? இந்தியா போயா?''

''இல்ல. நேர்ல போனா அழுது, கெஞ்சி நம் மனசை மாத்த முயற்சி செய்வாங்க. இல்ல, தற்கொலை செஞ் சிக்கப் போறதா ப்ளாக் மெயில் செய்வாங்க. சோ, இங் கிருந்து திருமணம் ஆகிவிட்டது என்ற தகவலை மட்டும் தான் அவர்களுக்கு தெரிவிக்கணும்.''

''அப்ப எப்படி கல்யாணம் பண்ணப் போறோம் கெமி? தாலி கட்டியா? இல்ல மோதிரம் மாற்றியா?''

''இரண்டுமே வேண்டாம் நந்தினி. ரிஜிஸ்டர் கல் யாணம் செய்து கொள்ளலாம். நான் அதைப் பற்றி விசாரிக்கிறேன். ஒருவேளை சட்டச் சிக்கல்கள் ஏதாவது இருக்குமானால் வேறு வழி யோசிக்க வேண்டும். எந்த முறையில் என்றாலும், எந்த மதத்தில் என்றாலும் நாம இருவரும் கணவன் மனைவி என்ற உறுதிதான் முக்கியம் நந்தினி. சரியா?''

''ரொம்ப சரி.'' என்றாள் நந்தினி திருப்தியுடன்.

''ஓ.கே. இனிமே நீ தூங்கு நந்தினி. குட்நைட்.''

''கல்யாண பெண்ணுக்கு எப்படி கெமி தூக்கம் வரும்?''

''அப்ப, கல்யாண மாப்பிள்ளை அங்கு வரவா?''

''வேண்டாம்... வேண்டாம். நான் தூங்கிட்டேன். குட் நைட்.'' இருவரும் சிரித்தபடி போனை வைத்தார்கள்.

கெமி விரைவாக திருமணம் நடக்க வேண்டும் என் பதில் மும்முரமாக இருந்தான். வெளிநாட்டில் ரிஜிஸ்டர் கல்யாணம் செய்து கொள்வதில் உள்ள நடைமுறை சிக்கல்களால் சீனர்களின் பெரிய கோவில் நண்பர்கள் முன் மாலை மாற்றி திருமணம் செய்து கொண்டனர். கதிர் கெமியை அணைத்துக் கொண்டு, ''நான் சொன்ன மாதிரியே மாட்டிக்கிட்டயா?'' என்றான் மகிழ்ச்சியுடன்.



கதிர் குடும்பத்தினர், ஹென்றி, மார்கரெட், இலியானா, ஏவா, அலுவலக நண்பர்கள் மத்தியில் ஹோட்டலில் விருந்து உற்சாகமாய் நடந்தது.

''உங்க கல்யாணத்தை நாங்க எதிர்பார்த்துக் கொண்டு தான் இருந்தோம் நந்தினி. ரொம்ப சந்தோஷம்'' என்றாள் இந்து நந்தினியிடம்.

டின்னர் சாப்பிட்டு, வாழ்த்துக்கள் கூறி கட்டியணைத்து நண்பர்கள் ஒவ்வொருவராக கலைந்து செல்லத் தொடங்கியதும் கதிர் கெமியிடம் வந்தான்.

''நம்ம வீட்டுக்குப் போயிடலாம் கெமி. இன்னிக்கு நம்ம வீட்லதான் தங்கணும் நீங்க'' என்றான் உரிமை யுடன்.

''இல்ல கதிர். நாங்க தனி வீடு கிடைச்சப்புறம் குடும்ப வாழ்க்கைக்குள் செல்லலாம் என்றிருக்கிறோம். அதுவரை இப்போது இருக்கிற அறையிலேயே இருப்பதற்கான வசதி. தப்பாக நினைக்காதே'' என்றான் கெமி.

''ஓ.கே. உங்க இஷ்டம்'' என்றபடி கதிர் புறப்பட்டுச் சென்றதும், டாக்ஸியில் ஏறி நந்தினியின் ஹாஸ்டலுக்குப் போகும்போது கெமி சொன்னான்.

''எங்கப்பாவுக்கு கதிர் வீட்டில் நாம தங்கியிருந்தது தெரிய வந்தால், அவங்க மீது மனக்கசப்பு வரலாம். முருகேசன் அங்கிளுக்கும் தர்ம சங்கடம். அதனால்தான் கதிர் கூப்பிட்டபோது மறுத்து விட்டேன் நந்தினி'' என்றான்.

நந்தினியின் விடுதி வாயிலில் வண்டி நிற்க, பேசிய படி அவள் அறை வரை கெமி கூடச் சென்றான். ஆரஞ்சு நிற பேன்ஸி புடவையில் தங்கமாய் மின்னியவளை

ஏக்கத்துடன் பார்த்த கெமி. ''ஏன் நந்தினி, எந்த புருஷனாவது பர்ஸ்ட் நைட் அன்னிக்கு பொண்டாட்டிய ஹாஸ்டல்ல கொண்டு வந்து விடுவானா?'' என்றான் அவளிடம்.

''ஓ. விடுவானே. அந்த முட்டாளுக்கு கெமின்னு பேரு'' சிரிப்புடன் கதவைத் தாளிட்டாள் நந்தினி.




அடுத்த நாள் மாலையில் நந்தினிக்கு கெமி போன் செய்து, ''உன் வேலை முடிந்ததும் ரிசப்ஷனில் காத்திரு நந்தினி'' என்றான்.

நந்தினி காத்திருந்த சில நிமிஷங்களிலேயே வந்து விட்ட கெமி, ''நாம ஊருக்குப் போன் பண்ணலாம் நந்தினி'' என்றான். ''எப்படியும் அப்பா முருகேசன் அங்கிளுக்கு போன் பண்ணும்போது விபரம் தெரிந்து விடும். அதை விட நானே சொல்லி விடுவது நல்லதென்று நினைக்கிறேன். நீயும் உன் வீட்டிற்குச் சொல்லி விடு.'

இருவரும் ரோடை கடந்து லக்கி ப்ளாசாவில் ஐ.எஸ்.டி பூத்திற்குள் சென்றனர். கெமி தன் கேபினுக்குள் சென்றதும், அப்பா போனை எடுத்தால் நல்லது என்று நினைத்தபடி நந்தினி தன் வீட்டு நம்பரை டயல் செய்தாள்.

அம்மாதான் போனை எடுத்தாள். நந்தினியின் குரலை கேட்டதும் மகிழ்ச்சியுடன் நலம் விசாரிக்கத் தொடங்



கவும், நந்தினி குறுக்கிட்டாள். ''அம்மா ஒரு முக்கியமான விஷயம் சொல்லத்தான் போன் பண்ணினேன். நான் இங்கு வேலை பார்க்கும் இடத்தில் தமிழ்நாட்டுக்காரர் ஒருவருடன் பழகி, பிடித்துப் போய் இருவரும் திருமணம் செய்து கொண்டோம். அங்கு வந்து உங்களிடம் கலந்து பேச முடியாத சூழ்நிலையில் இங்கேயே கல்யாணம் நடந்து விட்டது.''

''நந்தினி... விளையாட்டுக்குக் கூட அப்படிச் சொல்லாதேடீ'' என்றாள் சுந்தரி குரலில் நடுக்கத்துடன்.

''ஆயிரக்கணக்கான கிலோ மீட்டர்களுக்கு அப்பாலிருந்து பேசுகிறேன். இது விளையாட்டில்லை. சத்தியமான உண்மை'' என்றபடி போனை வைத்தாள் நந்தினி.

பத்தே நிமிடத்தில் அப்பா நந்தினியின் செல்லில் கூப்பிட்டார். ''உங்கம்மா என்னவோ சொல்றாளேம்மா, என்ன இது?'' என்றார் பதட்டத்துடன்.

''அம்மா சரியாதான்ப்பா சொல்வாங்க.''

''அப்ப நிஜமாவே உனக்குக் கல்யாணம் ஆயிடிச்சா? எங்களை இப்படி ஒதுக்கி வைக்கும்படியாய் நாங்க என்ன செஞ்சோம் நந்தினி? உன் திருமணத்தைப் பற்றி எத்தனை கனவுகள் வைத்திருந்தோம்?''

''இதுக்காகத்தான்ப்பா நான் பயந்தேன். என் திருமணத்தைப் பற்றி எப்பவும் நீங்க கனவு கண்டீங்க. எனக்கு அந்த உரிமை உண்டுன்னு கூட உங்களுக்கு தோணல.''

''அட்லீஸ்ட் மாப்பிள்ளையை அழைத்து வந்து காண்பித்து, எங்களை கன்வின்ஸ் செய்ய முயற்சித்திருக்கலாம். உன் அம்மா எப்படி அரண்டு போயிருக்கிறாள் என்று உனக்குத் தெரியாது.''

கல்லூரியிலிருந்து ஐந்து நிமிடம் தாமதமாக வந்தாலே போதும் அம்மா அரண்டு போக. என வாய்க்குள் முணு முணுத்த நந்தினி. ''அம்மாவை சமாதானப் படுத்துங்க. மோசமான யாரையும் நான் தேர்ந்தெடுக்கல. கெமி நல்ல வேலையில் இருக்கிறான். நன்றாகச் சம்பாதிக்கிறான்.''

''பேர் என்ன சொன்ன?'' அப்பாவின் குரலில் அவசரம் தெரிந்தது.

''சார்லஸ் கெமிலோ.''

''கிறிஸ்டியனா?'' என்றார் உலர்ந்து போன குரலில்.

நெற்றி நிறைய திருநீரும், வாய் நிறைய ஸ்லோகமும், தினம் ஒரு உபவாசமும் இருக்கும் அப்பாவுக்கு அதிர்ச்சி யாகத்தான் இருக்கும். வளர்ந்த பிறகு கிளைகள் வேறு வேறு திசை நோக்கி பிரிவதை மரம் தாங்கிக் கொள்ளத் தான் வேண்டும். வேறு வழியில்லை. அவர்களிடமிருந்து பிறந்தாலும் நான் தனி மனுஷி என்பதை உணராமல் போனது அவர்களது முட்டாள்தனம்.

தனக்குள் பேசியபடி கெமிக்காக காத்திருந்தாள். வாடிய முகத்துடன் அவள் எதிரே வந்து அமர்ந்தான் கெமி. ''ரொம்ப டிராமா பண்றாங்க நந்தினி'' என்றான் அவளிடம். ''அம்மா அழுது மயங்கி விழுந்துட்டாங்க. அப்பா உன்னை தலை முழுகிட்டேன். இன்னியிலயிருந்து நீ செத்துப்போயிட்டதா நினைச்சிக்கிறோம். இங்கே 'இனி வராதே'ன்னு கத்தறார். நான் பேசறதை யாருமே காது குடுத்துக் கேட்கல.''

கெமியின் வாடிய முகம் சங்கடப்படுத்த, ''கவலைப் படாதே கெமி'' என்றாள் நந்தினி. ''உன்னை இந்த மாதிரி சோர்வாய் பார்த்ததே இல்லை நான்.''



''இப்ப கூட நான் கவலைப்படல நந்தினி. வருத்தம் தான். என்னை புரிஞ்சிக்க மாட்டேங்கறாங்களேன்னு. நாம் வளர்த்த பையன் படிக்கவும், வேலை பார்க்கவும் சரியான வழியை தேர்ந்தெடுத்திருக்கும்போது தன் வாழ்க்கை துணையையும் சரியாகத்தான் தேர்ந்தெடுப்பான் என்று அவர்கள் ஏன் நம்பக் கூடாது?''

''அவங்க நம்மை பெத்தவங்க கெமி. பெத்தவங்க எப்பவும் அடுத்தவங்க மேல வைக்கிற நம்பிக்கையை பிள்ளைங்க பேர்ல வைக்க மாட்டாங்க.''

''ஓ', உன் வீட்டில் என்ன சொன்னாங்க நந்தினி?''

''என்ன சொல்வாங்க? அதிர்ச்சியில் பேசவே வரவில்லை அவர்களுக்கு. என் பெற்றோரை மீறி நான் நிறைய விஷயம் செஞ்சிருக்கேன் கெமி. ஆனா மறைவா எதுவும் பண்ணியதில்லை. அதனால் இது அவங்களுக்கு பெரிய ஷாக்தான்.''

இருவரும் அவரவர் சிந்தனைகளில் ஈடுபட்டு நேரம் சென்றது. மனதிற்குள் ஒரு முடிவுக்கு வந்த கெமி. ''நம்மை புரிஞ்சிக்காத யாரும் நமக்கு தேவையில்லை நந்தினி. அவங்க மதம் குழந்தைகள் மேலிருக்கும் இயல்பான பாசத்தைக்கூட மறைச்சிதுன்னா அந்த மதம் பிடித்தவர்களைப் பற்றி நாம் கவலைப்பட வேண்டாம். உலகமே ஒரு குளோபல் வில்லேஜ்ஜாக மாறிவிட்ட நிலையில் ஜாதியும், மதத்தையும் பிடித்துக் கொண் டிருப்பவர்கள் பிற்போக்குவாதிகள்தான். எங்கிருந்தாலும் பசங்க சந்தோஷமா இருக்கணும்னு நினைக்கறவங்க தான் உண்மையான பெற்றோர். நம் சந்தோஷத்தைப் பற்றி நினைக்காதவங்களை நாம ஏன் நினைக்கணும்? எனக்கு நீயும், உனக்கு நானும் போதும். என்ன நந்தினி?'' என

கைகளை நீட்டியதும், தன் கைகளால் அவன் கைகளை இறுகப் பற்றினாள் நந்தினி.

இந்த வார விடுமுறையில் வீடு தேடச் செல்லலாம் என்றபடி இருவரும் அவரவர் அறைகளுக்குச் சென்றனர்.

அடுத்த நாள் கெமிக்கு கதிர் போன் செய்தான். "கெமி எங்க வீட்டுக்கு அருகேயுள்ள அபார்ட்மென்டில் ஒரு இரானியரின் வீடு காலியாகிறது. பார்க்க வருகிறாயா?" என்றான்.

"நீ பார்த்தால் சரிதான். எப்போது வரட்டும் என்று மட்டும் சொல்" என்றான் கெமி, நிம்மதியுடன்.

"இன்றுதான் காலியாகியிருக்கிறது. ஒயிட் வாஷ் முடிந்து வீடு நம் கைக்கு வர இரண்டு நாட்களாகும். புதுமணத் தம்பதிகள் இரண்டு நாள் காத்திருக்கத்தான் வேண்டும். வேறு வழியில்லை" சிரித்தபடி போனை வைத்தான் கதிர். ரயில் நிலையத்தில் நந்தினியிடம் விபரம் சொன்ன கெமி, நம்ம கல்யாணம் முறைப்படி நடந்திருக்கக் கூடாதான்னு இப்பதான் ஆசையா இருக்கு" என்றான்.

"நேத்து யாருமே நமக்கு வேண்டாம்னு சொன்ன ஆளா நீ?"

"அதில்ல நந்தினி. முறைப்படி பெத்தவங்க கல்யாணம் பண்ணி வெச்சிருந்தா அன்னிக்கே பர்ஸ்ட் நைட்டும் ஏற்பாடு பண்ணியிருப்பாங்க. நாம இத்தனை நாள் காத்து கிடக்க வேண்டியதில்லை."

"சே! நீயும்... உன் புத்தி போகிற போக்கும்... நந்தினிக்கு கூச்சத்தில் முகம் சிவந்தது.

"ஹை.. எம் பொண்டாட்டிகூட வெட்கப்படறா" என்றபடி அவளை நெருங்கி அமர்ந்தான் கெமி. "நந்தினி



திருமணமானவர்களுக்குள் ஏற்படும் இயல்பான ஆசை எனக்குள்ளும் இருப்பது நியாயமானதில்லையா?"

மென்மையாக கெமியின் முகத்தைத் திருப்பினாள் நந்தினி. "தானாகப் பறந்து சென்று பொருள் சேகரித்து கூடு கட்டி குடும்பம் நடத்தி முட்டையிட்டு அடை காக்கும் பறவையின் சுகம் என்னவென்று நமக்கு தெரிய வேண்டாமா கெமி? ஒரு ரெடிமேட் குடும்பத்தில் சம்பிரதாயங்களுக்கு கட்டுப்பட்டு வாழும் வாழ்வு உன்னதமானது கெமி."

"உண்மைதான்" என்ற கெமி தன் முகத்தைப் பற்றியிருந்த விரல்களை பிரித்து உள்ளங்கையில் முத்தமிட்டான்.

கதிர் குடும்பத்தினர் சகல உதவிகளையும் செய்ய அவர்கள் வீடு இருந்த பகுதியிலேயே நந்தினி கெமியின் குடித்தனமும் ஆரம்பமானது. தன் வீட்டினருடன் கெமி வீட்டிற்கு வந்த முருகேசன் பிரியத்துடன் நந்தினியின் தோளை அணைத்து புன்னகைத்தார். "முதன் முறை உன்னைப் பார்த்ததுமே எங்களுக்கு ரொம்பப் பிடிச்சி போச்சி நந்தினி. அதனால்தான் எங்க குடும்பத்துக்குள்ள உன்னைக் கொண்டு வரணும்னு முயற்சி செய்தோம். கெமியும் கதிர் மாதிரி எனக்கு ஒரு மகன்தான். ரொம்ப சந்தோஷம் எனக்கு. ஆனால் டேவிட் தேவசகாயம் சம்மதித்து நடக்கவில்லையே என்பதுதான் பெரிய குறை. அவனிடம் போனில் பேசினேன். இன்னும் கோபமாகத் தான் இருக்கிறான். என்னை பேசவே விடவில்லை. அவர்கள் கோபமும் நியாயமானதுதான். காலப் போக்கில் சரியாகிவிடும். அதுவரை காத்திருப்போம். என்னை உங்கப்பா மாதிரி நினைச்சி எதுவானாலும் தயங்காம கேட்கலாம்" என்றார்.

சமையலறையில் நந்தினியுடன் சேர்ந்து இந்து சமையலில் ஈடுபட்டாள். "உனக்கு சமைக்க வராதுன்னு கேள்விப்பட்டேன் நந்தினி. ஒரே மாதத்தில் நன்றாய் விருந்தே சமைக்க நான் கற்றுக் கொடுக்கிறேன். முதல் நாள் கெமியுடன் எங்க வீட்டுக்கு வந்தபோதே உங்க ஜோடி பொருத்தத்தைப் பற்றி என் கணவர் சொன்னார். கெமியின் வீட்டைப் பற்றியும், கெமி தன் குடும்பத்தின் மீது கொண்டுள்ள பாசமும் எனக்குத் தெரியுமாதலால் எனக்கு சந்தேகமாகவே இருந்தது. கடைசியில் எல்லா வற்றையும் மீறி உங்கள் காதல் ஜெயித்ததில் மிகவும் சந்தோஷம் நந்தினி" என்றாள். கதிரின் அண்ணிகளும், அம்மாவும் கூட வீட்டை அலங்கரிப்பதிலும், வார்ட் ரோபில் துணிகளை ஒழுங்கு படுத்துவதிலும் ஈடுபட்டிருந் தனர். மதிய விருந்தை எல்லோரும் ஒன்றாய் அமர்ந்து கேலியும் சிரிப்புமாக சாப்பிட்டனர். மாலை நந்தினிக்கு சமையலறையை சுத்தம் செய்து கொடுத்துவிட்டு அவர்கள் கிளம்பிச் சென்றதும் நந்தினிக்கு நிறைவாக இருந்தது. கெமிக்கு இப்படியொரு ப்ரெண்ட்ஷிப் கிடைத் தது அதிர்ஷ்டம்தான் என்று நினைத்தபடி பகல் நேர கசகசப்பு நீங்க குளிக்கப் போனாள். நந்தினி குளித்து விட்டு வரும்போது கெமி சூட்கேசுடன் தயாராக இருந் தான்.

"கெமி பெட்டியுடன் எங்கே கிளம்பிட்ட?" என்றாள் நந்தினி தலையை துவட்டியபடி.

"கிளம்பிட்ட. இல்ல கிளம்பிட்டோம்."

"கிளம்பிட்டோமா? யார் யாரெல்லாம்? கதிர் பேமிலி எல்லாம் வருகிறார்களா?"



"ஆமாம், கதிரின் அண்ணன்கள், அண்ணி, குழந் தைகள், அப்புறம் உன் ப்ரண்ட் மார்கரெட், இலியானா, ஏவா, என் ரூம் மேட் ஹென்றி, சீனியர் சியான்சாங்.."

"உனக்கு பைத்தியமா கெமி? இவங்கெல்லாம் எதுக்கு?"

"உனக்குதான் பைத்தியம். ஹனிமூனுக்குப் போக ஆள் சேர்த்துட்டு இருக்க." நந்தினி கலகலவெனச் சிரித்தாள். "ஹனிமூன் போறமா? சொல்லவேயில்ல? எங்கே போகிறோம்?"

"மலேசியா போறோம். நாலுநாள் தான் லீவு. நீ பேசியே ஒரு நாளை ஓட்டிடாதே கிளம்பு" என்றபடி கிளம்பி நந்தினியுடன் வெளியே வந்து ஏர்போர்ட்டுக்கு டாக்ஸி பிடித்தான் கெமி.

கோலாலம்பூர் சிங்கப்பூரை விட விஸ்தாரமாகத் தெரிந்தது நந்தினிக்கு. கென்டிங் ஹைலேண்டின் பர்ஸ்ட் வேர்ல்ட் ஹோட்டலுக்குள் நுழைந்தபோது கெமி சொன் னான். "உலகிலேயே உயரமான ஹோட்டல் இது நந்தினி. நம் வாழ்வை இவ்வளவு உயரத்திலிருந்து தொடங்கு கிறோம். பெயர் கூட பர்ஸ்ட் வேர்ல்ட் என்று பொருத்த மாக இருக்கிறதில்லையா? இந்த பர்ஸ்ட் வேர்ல்டில் நாம ஒரு நியூ வேர்ல்டை உருவாக்கலாம் நந்தினி."

"வரவர உனக்கு கிறுக்குப் பிடிச்சிப் போச்சு கெமி" என நந்தினி சொல்லவும் இருவரும் சிரித்தபடி தங்கள் அறை சாவியை வாங்கிக் கொண்டு உள்ளே சென்றனர். அறைக்கே உணவு வரவழைத்துச் சாப்பிட்ட பின் ஒரு வாக் போனார்கள். விளையாட்டு அரங்கத்தில் விளை யாடும் நேரம் மாலையுடன் முடிந்து விட்டிருக்க ரோலர் கோஸ்டர், வாட்டர் போட், ஸ்கைமேன் எல்லாம் வெறிச்

சோடி கிடந்தன. ஷாப்பிங் ப்ளேசிலும், உணவு விடுதிகளிலும் மட்டும் டூரிஸ்டுகள் சுற்றிக் கொண்டிருந்தனர். சிங்கப்பூரிலும் சரி மலேசியாவிலும் சரி முக்கிய வருமானம் அங்கு வரும் டூரிஸ்டுகள் மூலம் கிடைக்கும் அந்நிய செலாவணிதான். எனவே டூரிஸ்டுகளுக்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுத்து, அவர்களை ஒரு விருந்தாளி போல நடத்தி, அவர்களின் பயணத்தை பயனுள்ளதாக்குகிறார்கள். தீவிரவாதிகளின் அச்சுறுத்தல் இல்லாததனாலும், சுத்தமான, சுகாதாரமான இட வசதிகளாலும் உலகம் முழுவதும் இருந்து இங்கு வரும் டூரிஸ்ட்டுகளின் எண்ணிக்கை அதிகமாயுள்ளது. தனக்குள் யோசித்தபடி நடந்த நந்தினியை கெமி ஒரு கிறிஸ்டல் ஷாப்புக்கு அழைத்துப் போனான்: அங்கு ஒரு டைமன்ட் வடிவ கிறிஸ்டலை தேர்ந்தெடுத்த கெமி அதில் நந்தினியையும் தன்னையும் பதியச் சொன்னான். சிறிது நேரம் காத்திருந்த பின் கெமி கொடுத்த கிறிஸ்டலை கையில் வாங்கிய நந்தினி அசந்து போனாள். பளபளக்கும் வெள்ளை கிறிஸ்டலுக்கு நடுவே, நந்தினியும் கெமியும் ஓவியமாய் தெரிய 'மார்வலஸ்' என்றாள் ரசனையுடன்.

ஹோட்டலுக்குத் திரும்பி வருவதற்குள் அந்த மலைப் பகுதி முழுவதையும் பனி மூடத் தொடங்கியது. மழையும் தூற ஆரம்பிக்க, அதில் நனைந்தபடி, முகத்தில் மோதி பார்வையை மறைத்த மேகங்களை விலக்கி இருவரும் ஓடினர். ஓட்டமும், சிரிப்புமாய் அறைக்கு வந்து நந்தினி உடையை மாற்றச் சென்றதும், கெமி இன்டர்காமில் குடிக்க பால் கொண்டு வரச் சொன்னான். அதுவரை இருந்த கலகலப்பு மறைந்து போய் அவர்களிடையே ஒரு தயக்கமும் நிதானமும் வந்தது.



நந்தினி எட்டாவது மாடியின் கண்ணாடி பொருத்தப்பட்ட பெரிய ஜன்னலிலிருந்து பளீரிடும் மின்னலையும், மெல்லிய சரமாய் இறங்கும் மழையையும் வேடிக்கைப் பார்த்தாள்.

அறையின் பெல் சத்தத்திற்கு கெமி எழுந்து போய் கதவைத் திறந்தான். பேரர் பீங்கான் கோப்பையில் பால், சர்க்கரை, கப்கள் அடங்கிய டிரேயை டேபிள் மீது வைத்து விட்டு பணிவுடன் 'குட்நைட்' சொல்லி வெளியே சென்றான். நந்தினியிடம் ஒரு கப் பாலில் சர்க்கரை கலந்து கொடுத்து விட்டு தனக்கு ஒரு கப் எடுத்துக் கொண்ட கெமியின் முகத்தில் தானாய் புன்னகை மலர்ந்தது.

"நந்தினி, இன்னிக்கு நைட்டுக்கு இந்த பால் ரொம்ப பொருத்தமா இருக்கில்ல. பெரியவங்களோட ஆசீர்வாதமும், கட்டில்ல பூவும், பக்கத்துல ஸ்வீட்டும்தான் பாக்கி."

"அதெல்லாம் ரொம்ப செயற்கையா இருக்கு கெமி. எங்க மாமா பெண் கல்யாணத்தின் போது பார்த்தேன். அறையெங்கும் சரம் சரமாய் பூவும், ஊதுவத்தி வாசமும், தட்டில் அடுக்கப்பட்ட ஸ்வீட் காரமுமாய் வழி தவறி எங்கோ பலகார கடைக்குள் நுழைந்து விட்ட மாதிரியிருந்தது. தரையில் இறைபட்ட ஸ்வீட், பிஸ்கெட்டிற்கு எறும்பு வந்து இவர்களை கடிக்கப் போகிறது என்று நினைத்தேன்."

சிரித்தபடியே நந்தினியின் கைகளைப் பற்றினான் கெமி. "அறிமுகமற்ற இருவரை தாம்பத்யத்தில் இணைக்கும்போது, அவர்களின் தயக்கங்கள் மறைவதற்கு அந்த மாதிரியான செயற்கை பூச்சுகள் தேவைப்படுகின்றன நந்தினி. நமக்கு அந்த அலங்காரங்கள் எதுவும் இல்லை தான். ஆனால் உனக்குள் நானும், எனக்குள் நீயும்

இருக்கும் போது மற்ற எதுவும் தேவையும் இல்லை என்ற படி விளக்கை அணைத்தான்.

அடுத்து வந்த நான்கு நாட்களும் அவர்களுக்கு நான்கு நிமிடங்களாய் கரைந்தன. கென்டிங்கின் ரெய்டுகளிலும், மலை சரிவில் த்ரில்லான கேபிள்களிலும் பயணித்து, சன்வே லகூனின் வாட்டர் தீம் பார்க்குகளில் விளையாடி, அதன் இன்டோர் ஹோட்டல்களில் பாப் மியூசிக்கும், பாலே டான்சும் பார்த்து இரவின் தனிமையில் ஒருவருக்குள் ஒருவர் கரைந்து போகையில், ''சொர்க்கம் என்பது எங்கோ தனியாக இருப்பதாகச் சொன்னவள் முட்டாள்'' என்றான். கெமி. ''ஆமாம். இந்த பூமியிலேயே நம்மைப் போல் சொர்க்கத்தை உருவாக்கத் தெரியாதவனாய் இருப்பான்'' என்றாள் நந்தினி.

கிளம்பும் நாள் வந்ததும் ''எனக்கு இங்கிருந்து கிளம்பவே புடிக்கல கெமி'' என்றாள் நந்தினி.

''நாம எப்ப வேணா இங்க வரலாம் நந்தினி. வீக் எண்ட்ல கூட வரலாம். ஆனா உனக்கு மலேசியாவை விட்டு வரப் பிடிக்கலையா? இல்ல நம்ம ஹனிமூனிலிருந்து வெளியே வரப் பிடிக்கலையா?''

''போடா'' என நந்தினி சிணுங்கவும், ''கவலைப் படாதே நந்தினி. சிங்கப்பூரில் நம்மை தொல்லை செய்ய யாருமில்லை. எனவே அங்கு தினம் தினம் ஹனிமூன் தான்'' கண் சிமிட்டினான் கெமி.

* * *

சிங்கப்பூர் வந்ததும் வீட்டை ஒதுக்கிக் கொண்டு அடுத்த நாளிலிருந்து கெமியும் நந்தினியும் அலுவலகம் செல்லத் தொடங்கினர். காலையில் கெமியின் பைக்கில்



இருவரும் ஒன்றாகச் சென்றார்கள். மாலையில் அவன் வரத் தாமதமாகும் என்பதால் நந்தினி டிரெயினை பிடித்து வீடு வந்து விடுவாள். அவன் வர இரவாகி விடும் சில சமயம். நந்தினி சமையலை முடித்துவிட்டு அவனுக்காகக் காத்திருப்பாள். சமையல் புத்தகங்களை சேகரித்துக் கொண்டு நந்தினி அதைப் பார்த்து சமைக்கத் தொடங்கினாள். ஒழிந்த சமயங்களில் இந்துவும் தனக்குத் தெரிந்ததைக் கற்றுக் கொடுத்தாள். ஒரு மாதம் போராடிய பின் நந்தினி சுமாராக சமைக்கத் தொடங்கினாள்.

அன்று மதியம் நந்தினியின் சமையலைச் சாப்பிட்ட கெமி, ''இந்த மாதிரி வித்தியாசமான சூப் நான் சாப்பிட்டதேயில்ல நந்தினி'' என்றான் பாராட்டாக.

''நான் சூப் செய்யவேயில்லையே கெமி!'' என்றான் நந்தினி குழப்பத்துடன்.

''அப்ப இந்த கிண்ணத்துல இருந்துதே!''

''அடப்பாவி, சாம்பாரையா குடிச்ச?'' கடகடவென சிரித்தாள் நந்தினி.

''உன் சாம்பாரே சூப் மாதிரி இருந்தா சூப் என்ன மாதிரி இருக்கும் நந்தினி?'' என்று சிரித்த கெமி, குக்கரை அவளிடம் காட்டி, ''இதுக்கு என்ன பேர் வெச்சிருக்க நந்தினி? அரிசி பொங்கலா? இல்லாட்டி கஞ்சியா?'' என்றான்.

''அதெல்லாம் இல்ல. சாதம்தான், குழைஞ்சி போச்சு கெமி'' சிரித்தாள் நந்தினி. இருவரும் பலமாய் சிரிக்கத் தொடங்கினர்.

அனுபவங்களின் புதுமையில் சங்கடங்களும் கூட இனிமையாய் தோன்றியது அவர்களுக்கு.

"கெமி உனக்கு அசைவ சமையல் தெரியுமா? எனக்கு சொல்லிக் கொடேன். கதிர் வீட்டிலும் எல்லோரும் சைவமாம். நான் யார்கிட்ட நான்வெஜ் கத்துக்கிறதுன்னு தெரியல?" என்றாள் நந்தினி.

"உனக்கு பழக்கமான சைவ சமையலே உங்கிட்ட வர மாட்டேன்னு அடம் பிடிக்குது. இதுல நீ தொட்டுகூட இருக்காத அசைவம் எப்படி வரும்? நானும் நான்வெஜ் செய்யறேன்னு செஞ்சி என் உயிருடன் விளையாடாதே நந்தினி?" கெமி கிண்டலடிக்கவும், நந்தினி அவன் தோளில் குத்தினாள்.

"கெமி நான் சீரியஸா கேட்கறேன். நீ விளையாடற பாத்தியா?"

"நானும் சீரியஸாதான் நந்தினி சொல்றேன். நீ வீணாய் சிரமப்படாதே. சாப்பாடு நமக்கிடையே ஒரு விஷயமே இல்ல. அதுவுமில்லாமல் ஆபீஸ் மீட்டிங்கில், அபீசியல் பார்ட்டிகளில் நான் அசைவம் சாப்பிடத்தான் செய்கிறேன். எனவே இதுக்காக நீ மெனக்கெட வேண்டாம். தெரிந்ததைச் செய் போதும்" அவள் நெற்றியில் புரண்ட கூந்தலை ஒதுக்கி மிருதுவாய் முத்தமிட்டான் கெமி.

கெமி திருமணத்திற்கு பிறகும் தான் ஆண் என்ற ஈகோவை காண்பிக்காமல் நல்ல தோழனாகவே இருந்தான். காலை நேர பரபரப்பில் நந்தினியுடன் சேர்ந்து வேலை செய்தான். விடுமுறைகளில் இருவரும் சேர்ந்து வீட்டை சுத்தம் செய்தனர். மார்க்கெட் வரை சென்று வீட்டிற்குத் தேவையான பொருட்களும், காய்கறிகளும் வாங்கி வந்தனர். தன் முதல் மாத சம்பளத்தை கெமியிடம் நந்தினி கொடுத்தபோது அவன் சொன்னான். "நம்ம ரெண்டு பேர் வருமானமும் நமக்கு தான் நந்தினி. இதில்



யாரும் யாருக்கும் மறைத்து செய்யவோ, கணக்கு சொல்லவோ வேண்டியதில்லை. என் சம்பளப் பணம் அலமாரியில் இருக்கிறது. அதோடு இதையும் வைத்து விடு.

தேவைப்படும்போது இரண்டு பேருமே எடுத்துக் கொள்ளலாம்" என்றான். காய்கறி வாங்குவதிலிருந்து கம்ப்யூட்டர் வாங்குவது வரை இருவரும் கலந்து பேசி செயல்படும் ஒளிவு மறைவற்ற தாம்பத்ய வாழ்க்கை நந்தினிக்கு மிகவும் பிடித்துப் போனது. எந்த விஷயமானாலும் கெமியிடம் அவளால் மனதிலுள்ளதை எல்லாம் கொட்ட முடிந்தது. இவ்வளவு வெளிப்படையான உறவு தனக்கு இதுவரை யாரிடத்திலும் இருந்ததில்லை என்பதை உணர்ந்து நந்தினிக்கு சந்தோஷமாக இருந்தது.

தன் திருமணத்தைப் பற்றி தெரிவித்த பிறகு அப்பாவிடமிருந்து போன் எதுவும் வரவில்லை. நந்தினியின் பதிலை எதிர்பாராமல் கர்ம சிரத்தையாய் வாரம் ஒரு கடிதம் எழுதும் அம்மா கூட எழுதுவதை நிறுத்தி விட்டிருந்தாள். எப்பவும் ஊர் வாய்க்கு பயந்து வாழும் அம்மா, இப்போது உறவினர்களுக்கெல்லாம் பதில் சொல்ல நேர்கையில் இன்னமும் கலங்கிப் போவாள். மனதிற்குள் ஒரு நிமிடம் பரிதாபம் தோன்றினாலும், கெமி மாதிரி ஒருவனை இழப்பதைவிட யார் எப்படி கலங்கினாலும் கவலைப்பட வேண்டியதில்லை என்று தோன்றியது.

நந்தினியும் கெமியும் குழந்தை பெற்றுக் கொள்வதை ஒரு வருடம் தள்ளிப் போட்டனர். நந்தினி இரண்டு வருடத்திற்குதான் சிங்கப்பூருக்கு வந்திருந்தாள். ஏற்கனவே ஒருவருடம் கழிந்து விட்ட நிலையில் இன்னும் ஒரு வருடம் முடிந்தால்தான் அவள் இங்கேயே தொடர

முடியுமா என்பது தெரியும். எனவே நந்தினி நிரந்தரமாய் இங்கிருக்கும்படி ஏற்பாடு செய்து கொண்டு குழந்தை பெற்றுக் கொள்ளலாம் என்றிருந்தனர்.

நந்தினி அலுவலகம் முடிந்ததும் ரயில் நிலையத்திற்குப் போக ரோட்டைக் கடக்க காத்திருந்தாள். ரோடில் வண்டிகள் அதிகமாய் இல்லாத போதும் சிக்னல் மாறும் வரை மக்கள் கூட்டமாய் காத்திருந்தனர். தமிழர்கள் அதிகமாக வசிக்கும், தமிழ் அரசாங்க மொழியாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கும் இந்த நாட்டில் இது போன்ற சுத்தமான சாலைகளும், ஆளில்லாத சாலைகளிலும் சிக்னல் மாறும் வரை காத்திருக்கும் ஒழுங்கும், பொது கழிவறையைப் பயன்படுத்தும் போதும் தானாக வரிசையில் நிற்கும் பண்பாடும்தான் தமிழ்நாட்டிலிருந்து வேறுபடுத்தி காண்பிக்கிறது. சிக்னலில் பச்சை விழுந்ததும் சாலையை கடக்கத் தொடங்கிய கூட்டத்துடன் தானும் சேர்ந்து சாலையை கடந்து படிகளில் ஏறியபோது இலியானா யாருடனோ சண்டை போடுவது கண்ணில் பட்டது. வேகமாய் அவள் அருகே சென்று ''இலியானா'' என்றபடி நந்தினி அவள் தோளைப் பற்றினாள். கோபத்துடன் இருந்த இலியானா நந்தினியைப் பார்த்ததும் அமைதியானாள்.

''இனி என்னை தொல்லை செய்தால் போலீசில் கம்ப்ளைண்ட் பண்ணுவேன்.''

என எதிரே இருப்பவனிடம் எச்சரித்துவிட்டு நந்தினியின் கையைப் பற்றி ''வா நந்தினி'' என்று நடக்கத் தொடங்கினாள் இலியானா.

''இலியானா, யார் அவன்? அவனுடன் என்ன சண்டை உனக்கு?''



''அவன் என் பழைய கணவன்.''

''முன்னே கல்யாணம் ஆகியிருந்ததா உனக்கு?''

''கல்யாணமும் ஆச்சு. விவாகரத்தும் ஆச்சு. இவன் பெரிய போர் நந்தினி. தாழ்வு மனப்பான்மை அதிகம் அவனுக்கு. எப்பவும் அவனை தாங்க வேண்டும் என்று எதிர்பார்ப்பான். மகிழ்ச்சியான சமயங்களில் கூட எதையாவது புலம்பி என் மூடையே ஸ்பாயில் பண்ணி விடுவான். ஒரு குழந்தை பிறந்த பிறகு கூட மாறவில்லை அவன்.''

''உனக்குக் குழந்தை இருக்கிறதா இலியானா?''

''ம்... ஒரு ஆண் குழந்தை.''

''இப்போது குழந்தை யாரிடம் இருக்கிறது?''

''அவனிடம்தான் இருக்கிறது. குழந்தைக்காகவாவது சேர்ந்து வாழ வேண்டும் என்று தொல்லை செய்கிறேன். முன்பு கலிபோர்னியாவில் இருந்த போதும் தொல்லை செய்தான். இங்கும் என் முகவரி கண்டு பிடித்து தேடி வந்திருக்கிறான்.''

''இவ்வளவு தூரம் உன்னை தேடி வருபவனுக்கு உன் மேல் நிச்சயம் பிரியம் இருக்கும். குழந்தைக்காகவாவது நீ அவனுக்கு இன்னொரு சான்ஸ் கொடுக்கலாம் இலியானா.''

''நோ வே.'' இலியானா தோள்களை குலுக்கினாள். ''எனக்கென்று ஒரு வாழ்க்கை இருக்கிறது. அதை வாழ எனக்கு சகல உரிமையும் இருக்கிறது.

குழந்தைக்காகவோ, வேறு யாருக்காகவுமோ காம்ப்ரமைஸ் செய்து கொள்ள நான் தயாரில்லை. என் சந்தோஷம் எனக்கு முக்கியம்.'' இலியானா ஆணித்தரமாகச் சொன்ன

தும் நந்தினிக்கு மார்கரெட்டின் முகம் கண் முன் வந்தது. ''பொறுப்பற்று வாழ நினைப்பவர்கள் குழந்தை பெற்றுக் கொள்ளக் கூடாது. என் அம்மாவை நான் வெறுக்கிறேன். அவளுடைய சந்தோஷத்திற்காக என்னைக் கஷ்டத்துக் குள்ளாக்கினாள்'' என்ற மார்கரெட்டின் வார்த்தைகள் நினைவுக்கு வந்ததும், இலியானாவின் மகனும் வளர்ந்த பிறகு இதே வார்த்தைகளைத்தான் சொல்வான் என் றிருந்தது நந்தினிக்கு.

பணத்தைப் பற்றிக் கவலைப்படத் தேவை ஏற்படாத சூழ்நிலையில் இவர்கள் வாழ்க்கையைப் பற்றிய புதிய சிக்கல்களை உருவாக்கிக் கொள்கிறார்கள் போலும். ஒரு பெருமூச்சுடன் அவளுடன் நடந்தாள் நந்தினி.

இரவில் கெமியிடம் இலியானாவின் குழந்தையைப் பற்றியும், குற்ற உணர்வு சிறிதுமற்ற இலியானாவைப் பற்றியும் நந்தினி விவரிக்கையில்,

''அவங்க நாட்டில் இதெல்லாம் சாதாரணமான விஷயம் நந்தினி. இலியானா மாதிரி, மார்கரெட் மாதிரி இன்னும் பத்து பேரை நீ சந்தித்தால் உனக்கே இதெல்லாம் சராசரி விஷயமாகப்படும்'' என்றான்.

அப்போதும் நந்தினி ஏதோ யோசித்தபடி இருக்கவே, ''நந்தினி இப்படி அடுத்தவங்களைப் பத்தி யோசிச்சி குழப்பிக்கறதுக்கு பதிலா என்னைப் பத்தி யோசிக்கலாம்'' என்றான் கெமி.


''என்னன்னு?''

''என்னை எப்படி சந்தோஷமா வெச்சிக்கறதுன்னு!''

''நீ சந்தோஷமாத்தான இருக்க?''



''நீ இங்க வந்தா இன்னும் சந்தோஷமா இருப்பேன்'' கெமி கைகளை விரிக்கவும், புரண்டு அவன் நெஞ்சில் முகம் புதைத்தாள் நந்தினி.




கெமி அன்று மிகவும் தாமதமாக வருவதாக சொல்லி விட்டு சென்றிருந்தான். என்வே அவனுக்கு ஹாட் பாக்ஸில் இரவு உணவை வைத்து விட்டு கதவை உட் புறம் பூட்டியபோது டெலிபோன் அலறியது. கெமியின் அலுவலக நண்பன்தான் பேசினான். ''கெமிக்கு பைக்கில் வரும்போது ஆக்ஸிடெண்ட் ஆகி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாக சொன்னதும் நந்தினிக்கு நிற்க முடியாமல் கால்கள் வெடவெடத்தன. மருத்துவ மனை பெயரைக் கேட்டுக் கொண்டு பர்சுடன் டாக்ஸியில் ஏறி மருத்துவமனைக்கு விரைந்தாள்.

கெமி மிகவும் கவனமாகத்தான் வண்டியை ஓட்டு வான். ட்ரிங்ஸ் சாப்பிடும் பழக்கமும் இல்லாதவன். எப்படி ஆக்ஸிடெண்ட் நடந்திருக்கும்? அவர்கள் சந்தோஷ மான வாழ்வில் யார் கண் பட்டிருக்கும்? 'முருகா காப்பாத்துப்பா' வாய் தன்னையறியாமல் கந்தசஷ்டி கவசத்தை முணுமுணுத்தது. கடவுளை முதன்முறை யாய் கும்பிடுகிறோம் என்ற உணர்வே இல்லாமல்

கஷ்டம் வந்ததும் மனம் தானாய் சரணாகதி அடைந்தது.

மருத்துவமனையில் கண்மூடி படுத்திருந்தவனின் அருகே சென்று ''கெமி'' என்று அழைக்கையில் குரல் தழுதழுத்தது. கண்களில் நீர் நிறைந்தது. மெதுவாய் கண்களைத் திறந்த கெமி, வலியுடன் புன்னகைத்தான். ''கவனமாத்தான் நந்தினி வந்தேன். எப்படியோ திரும் பறப்ப ஸ்கிட் ஆயிடிச்சி. கால்லதான் ப்ராக்ச்சர் இருக்கு. உடலில் வெறும் சிராய்ப்புதான். இரண்டு நாளில் வீட்டிற்கு போய்விடலாம்.''

''சிரமப்படாதே கெமி. படுத்துக் கொள்'' என்றபடி அவன் அருகே அமர்ந்தாள் நந்தினி.

சிறிதுநேரத்தில் நந்தினியை சந்தித்த டாக்டர் கெமி சொன்னதையேதான் சொன்னார்.

கெமி வேதனையில் முகத்தை சுளிக்கையில் நந்தினிக்கு மனதை பிசைந்தது. கெமி எப்பவும் உற்சாகமாக, கலகலப்பாக எதையாவது செய்தபடி இருப்பான். இப்போது படுக்கையில் ஓய்ந்து கிடப்பதை நந்தினியால் பார்க்க முடியவில்லை. பரிவுடன் அவன் தலையை வருடி, ''சீக்கிரமாய் சரியாகிவிடுவாய் கெமி.'' என்றாள் தனக்கும் சேர்த்து.

இரண்டு நாளில் கதிரின் உதவியுடன் கெமியை வீட்டிற்கு அழைத்து வந்தாள் நந்தினி. ப்ராக்சர் தவிர வேறு காயங்கள் எதுவும் இல்லாததால் சிறிது ஓய்வுக்கு பிறகு வீட்டிலிருந்த படியே கெமி லேப்டாப்பில் தன்னுடைய வேலையை கவனிக்கத் தொடங்கினான். நந்தினி பத்து நாட்கள் விடுமுறை எடுத்துக் கொண்டு



அவனுக்கு சத்துள்ள உணவாய் சமைத்துக் கொடுத்தாள்.

அடிபட்ட காலின் மேற்புறமாய் வலிக்கு இதமாய் அமுக்கியபடி இருந்த நந்தினியிடம் ''என்னால உனக்கு வேலை கூடி போய் சிரமமாயிடிச்சி நந்தினி'' என்றான் கெமி வருத்தத்துடன்.

''என்னால உன்னாலன்னு, என்ன பேச்சு இது கெமி?'' என்றாள் நந்தினி அதட்டலுடன். ''எனக்கு நீயும் உனக்கு நானும் செய்யாம வேறு யார் செய்வா?'' பதில் பேசாது கண்மூடி பின்னால் சாய்ந்தான் கெமி. சிறிது நேரம் கழித்து விழித்தபோது நந்தினி ஏதோ முணுமுணுத்தவாறு உட்காந்திருப்பதைப் பார்த்தவன் ''நீ என்ன செய்கிறாய் நந்தினி?'' என்றான் வியப்புடன்.

''இந்த தெருவில் இருக்கும் அம்மனுக்கு நேர்ந்து கொண்டிருக்கிறேன். உனக்கு சரியானதும் அபிஷேகம் செய்வதாக.''

''அம்மனுக்கா?''

''அம்மனுக்கு மட்டுமல்ல கெமி. பிள்ளையாருக்கு தேங்காய், பத்துமலை முருகனுக்கு பால்குடம் என்று எதையும் விடவில்லை நான்.''

''உனக்கு இந்த நம்பிக்கை எப்போது வந்தது நந்தினி?'' என்றான் கெமி யோசனையுடன்.

''நீ அடிபட்டதிலிருந்து. அப்போதிருந்து என் வாய் என்னையும் அறியாமல் எதையோ பிரார்த்தித்துக் கொண்டே இருக்கிறது.'' புன்னகையுடன் அவன் போர்வையை சரிசெய்தாள் நந்தினி.

பத்துநாட்கள் விடுமுறை முடிந்து கெமி சமாளித்துக் கொள்வான் என்ற நம்பிக்கை வந்ததும் நந்தினி அலுவலகத்திற்கு கிளம்பினாள். கெமிக்கு மாத்திரையும், மதிய உணவும் எடுத்துவைத்து, அவன் தேவைகளை கவனித்துவிட்டு தோளில் பையை மாட்டியபடி வெளியே வந்தாள் நந்தினி. பத்து நாட்கள் விடுமுறைக்கு பிறகு செல்வதால் நேரத்திலேயே கிளம்பி விட்டிருந்தாள்.

எதிர்வீட்டு பால்கனியில் அமர்ந்திருந்த வயதான ஸ்வீடிஷ் பெண்மணி ஜோஸ்னா புன்னகையுடன் "ஹலோ" சொன்னாள்.

"ஹலோ ஆன்ட்டி எப்படியிருக்கிறீர்கள்?" என்றாள் நந்தினி அவள் அருகே சென்று.

"எப்படியோ இருக்கிறேன் பாரேன்! இந்த பால்கனியிலும் படுக்கை அறையிலும் உட்கார்ந்து கொண்டு, சூரியன் உதிப்பதையும் மறைவதையும் பார்த்து நாளையும் வருடத்தையும் கணக்கிட்டுக் கொண்டிருக்கிறேன்." ஜோஸ்னாவின் மனதில் தென்பட்ட வெறுமை நந்தினியின் மனதை உலுக்கியது. ஜோஸ்னாவின் கணவர் வேலை நிமித்தம் இங்கு வந்து இங்கேயே செட்டில் ஆகிவிட்டார்கள். அவர்களது இரண்டு மகன்களும் படித்து வேலை பார்க்க ஸ்வீடன் போய்விட ஜோஸ்னா இங்கேயே தங்கிவிட்டாள். அவள் கணவரும் இறந்தபிறகு தனிமையிலேயே காலம் கழிக்கிறாள்.

"நீங்களும் உங்கள் மகன்களுடனேயே போய்விடலாமே ஆன்ட்டி?" என்றாள் நந்தினி.

"அங்கே போனாலும் நான் தனியாகத்தான் வசிக்க வேண்டும் நந்தினி. எங்கள் நாட்டில் குழந்தைகள்



வளர்ந்த பிறகு பெற்றோரை விட்டு பிரிந்து விடுவார்கள். இங்கேயே ரொம்ப நாள் இருந்து பழகிவிட்டதால் அருகிலுள்ள தமிழ், சீன குடும்பங்களையாவது ஓரளவு தெரிந்து வைத்திருக்கிறேன். அங்கே வீடுகள் தனித்தனி தீவுகளாக இருக்கும். ஒன்றுக்கொன்று தொடர்பே கிடையாது."

நந்தினி கவனமாய் கேட்டபடி நின்றிருந்த போது ஜோஸ்னா சொன்னாள். "நான் பார்த்தவரை இந்திய பெற்றோர்கள் அதிர்ஷ்டசாலிகள் நந்தினி. பேரக்குழந்தைகளுடன் கடைவீதிக்கும், கோவிலுக்கும் நடந்து செல்லும் இந்திய தாத்தா பாட்டிகளை தினமும் இந்த பால்கனியிலிருந்து நான் பார்க்கிறேன்."

பெற்றோரின் முகம் நினைவில் வந்து போக, நந்தினியால் உடனே பதில் சொல்ல முடியவில்லை. "எல்லோருக்கும் அந்த அதிர்ஷ்டம் கிடைப்பதில்லை ஆன்ட்டி" என்றாள் மெதுவாக.

"கெமியை எங்கே கொஞ்ச நாட்களாக காணோம்? வெளியூர் போயிருக்கிறானா?" என்றாள் ஜோஸ்னா.

"கால்ல ப்ராக்சர் ஆன்ட்டி. பைக்கில் அடிபட்டு விட்டது. இப்போது தேவலை. இன்னும் ஒரு வாரத்தில் அலுவலகம் செல்லலாம் என்று டாக்டர் சொல்லியிருக்கிறார்கள்."

"அடப்பாவமே! கெமி நல்ல பையனாச்சே! பாத்து போகக் கூடாது? நான் கடவுளிடம் அவன் விரைவில் குணமடைய பிரார்த்திக்கிறேன் நந்தினி. உனக்கும் அதிகப்படி வேலை பாவம். இளைத்து தெரிகிறாய்?" என்றாள் ஜோஸ்னா கரிசனத்துடன்.

அவளிடம் விடைபெற்று, படபடத்த மழைக்கு குடைய விரித்து பிடித்தபடி நடக்கையில் 'உண்மையில் வேலை முதுகை ஒடித்துதான் விட்டது' என்று நினைத்துக் கொண்டாள் நந்தினி. வீட்டு வேலைக்கு ஆள் கிடைக்காததால் அவளே சமைத்து, வீட்டை பராமரித்து, கடைகளுக்கு போய் வந்து, கெமியையும் கவனித்து கொண்டு, இப்போது வேலைக்கும் செல்ல வேண்டியிருந்தது. கல்லூரியிலிருந்து வந்ததும் புத்தகத்தை தூக்கி டேபிள் மீது எறிந்துவிட்டு ''அம்மா சாப்பிட ஏதாவது கொடு'' என்று குரல் கொடுத்துவிட்டு படுக்கையில் சாய்ந்த நாட்கள் இனி வராதுதான். அலுவலக வேலைகளுக்கிடையேயும் அடிக்கடி கெமிக்கு போன் செய்து ''சாப்பிட்டாயா? மாத்திரை போட்டுக் கொண்டாயா? தூங்கினாயா?'' என்று விசாரித்தாள்.

எத்தனை வேலைகள் காத்திருந்தாலும் தினமும் மாலையில் கோவிலுக்கு போய் வந்தாள். அந்த பகுதியில் வசிக்கும் இந்தியர்கள் நடத்திய பஜனையில் கலந்து கொண்டு நெற்றி நிறைய திருநீறும் குங்குமமுமாய் திரும்பி வருகையில், ''ஒரேயடியா பிரமாதப்படுத்தாதே நந்தினி'' என கெமியே அலுத்துக் கொண்டான்.

''நம்ம சக்தியை மீறி ஏதாவது நடக்கும்போது இந்த மாதிரி டைவர்ஷன் தேவைப்படுகிறது கெமி. நான் பிரார்த்தனை செய்துவிட்டு வரும்போது எனக்கு ஒரு மாரல் சப்போர்ட் கிடைச்சமாதிரி இருக்கு. மனசு அமைதியாக இருக்கிறது. இதுவும் யோகா செய்வது மாதிரிதானே, கெமி.''

பதில் சொல்லாது விட்டத்தை வெறித்தான் கெமி.



சேரை இழுத்துப்போட்டு கெமியின் அருகே அமர்ந்தாள் நந்தினி.

''ஏன் கெமி டல்லாயிட்ட? சீக்கிரம் ஆபீஸ் போகலாம்னு டாக்டர் சொல்லல? உனக்கு சரியாயிடிச்சிப்பா. உனக்கு போர் அடிக்குதா? வரும்போது ஏதாவது சினிமா படங்கள், புத்தகங்கள் வாங்கி வருகிறேன், சரியா?'' கெமியை ஆறுதல்படுத்த முயற்சித்தாள் நந்தினி.

இரவு தூக்கத்தில் புரண்டு கெமியின் மீது கையைப் போட்டாள் நந்தினி. கெமி மெதுவாய் அவள் கையை விலக்கிவிட்டு எழுந்து போய் பால்கனியில் அமர்ந்தான். சிறிது நேரத்தில் நந்தினியின் தூக்கம் கலைய அருகே ஆளில்லாததை உணர்ந்து கெமியைத் தேடினாள். அவன் பால்கனியில் இருக்கவும் அங்கே வந்த நந்தினி, ''கெமி இந்த நேரத்தில் இங்கே என்ன செய்கிறாய்?'' என்றாள் அவனிடம்.

''தூக்கம் வரல நந்தினி. பகலில் தூங்கிவிட்டேன் இல்லையா, அதனால்தான். சிறிதுநேரம் இப்படி உட்கார்ந்திருக்கிறேன். நீ போய் தூங்கு நந்தினி'' என்றான் கெமி.

கைப்பிடி கிரில்லில் சாய்ந்து யோசனையுடன் அவனை வெறித்தாள் நந்தினி. கெமி கொஞ்சநாட்களாக இப்படித்தான் இருக்கிறான். அடிபட்டதிலிருந்து ஒரு மாற்றம் தெரிகிறது அவனிடம். வழக்கமான பேச்சும் சிரிப்பும் இல்லை. சீண்டல்கள் நின்று போயிருந்தன. அமைதியாய் நடமாடுவதும், இடையிடையே தூக்கத்தில் இப்படி விழித்திருப்பதுமாய் இருக்கிறான். என்னவாயிற்று இவனுக்கு? அடிபட்டதால் சுரத்தின்றி இருக்கிறான். பிறகு சரியாகி விடுவான் என்று நினைத்தது தவறா?

"கெமி" என்றாள் நந்தினி அவன் தோளை அணைத்து.

"நீ இன்னும் தூங்கப் போகலியா நந்தினி?"

"நீ இங்கே உட்கார்ந்திருக்கையில் எனக்கு எப்படி தூக்கம் வரும்? அலுவலகத்தில் ஏதாவது பிரச்சனையா கெமி?" என்றாள் நந்தினி.

"ஏன் கேட்கிறாய்?"

"எனக்கு தெரிந்து நீ இப்படி சோர்ந்திருக்க வேறு காரணம் எதுவுமில்லை."

சில நிமிடங்கள் பதில் சொல்லாத கெமி, "நந்தினி நீ சந்தோஷமா இருக்கியா?" என்றான்.

"என்ன திடீர்னு உனக்கு இப்படி ஒரு சந்தேகம்?"

"எனக்கு தெரிய வேண்டும். மனதிலுள்ளதை நீ அப்படியே சொல்ல வேண்டும்."

"அப்படியா? கேட்டுக்கோ. இன்னிக்கு என்னைவிட சந்தோஷமான ஆள் இங்கு யாருமே இல்லை. நீ என் கூட இருக்கையில் என் சந்தோஷத்திற்கு என்ன குறை கெமி?"

"உன் மனசுல எந்த கவலையும், வருத்தமும் இல்லைன்னா அப்புறம் ஏன் கோவில், கோவிலா சுத்தற?"

"கவலையிருந்தாதான் கோவிலுக்கு போவாங்களா என்ன? எனக்கு ஒரு மாற்றத்திற்காகவும், மன அமைதிக்காகவும்தான் போகிறேன். அங்கு நம்மை மாதிரி இந்திய, தமிழ் குடும்பங்களை சந்திக்கும்போது வெளிதேசத்தில் இருக்கிறோம் என்ற உணர்வே வருவதில்லை."

கெமி, பதில் பேசாமல் இருக்கவே, "எழுந்திரு கெமி. நடுராத்திரியில் நல்ல சந்தேகம் வந்தது உனக்கு. வந்து



தூங்கு வா" என நந்தினி கைப்பிடியாய் அவனை அழைத்து சென்று படுக்க செய்தாள்.

அந்த ஞாயிற்றுகிழமை கெமியும் நந்தினியும் சில பொருட்கள் வாங்க வேண்டி கடைவீதிக்கு சென்றிருந்தனர். கெமி தனக்கு தேவையான பொருளை தேர்ந்தெடுக்க. அவனுக்காக காத்திருந்த சமயத்தில் நந்தினி மார்கரெட்டை சந்தித்தாள். நந்தினியைப் பார்த்ததும் மார்கரெட் ஓடி வந்து அணைத்துக் கொண்டாள்.

"உன்னை ரொம்ப மிஸ் பண்ணினேன் நந்தினி. இன்று எதிர்பாராமல் சந்தித்ததில் ரொம்ப சந்தோஷம்" என்றாள் உண்மையான மகிழ்ச்சியுடன்.

"உன் திருமணவாழ்க்கை எப்படியிருக்கிறது? கெமியும் நீயும் சந்தோஷமாக இருக்கிறீர்களா?" என்று விசாரித்தவள் தன் புதிய காதலனை நந்தினிக்கு அறிமுகப்படுத்தி வைத்தாள். "நீ போன பிறகு நம் அறையில் இவனும் நானும்தான் இருக்கிறோம்" என்றாள் கேஷுவலாக.

கெமியிடம் சொல்லிவிட்டு மார்கரெட்டுடன் சென்று குளிர்பானம் அருந்துகையில் மார்கரெட் சொன்னாள். "நீ ரொம்ப ஜாக்கிரதையாக உன்னுடைய நாட்டிலிருந்தே ஒருவனை தேடிப்பிடித்து மணந்திருக்கிறாய் நந்தினி. இந்திய ஆண்கள் அன்பும் விசுவாசமும் உடையவர்கள் என்றாலும் குறுகிய மனம் படைத்தவர்கள். மனைவி எவ்வளவு படித்திருந்தாலும், சம்பாதித்தாலும் கூட தன்னை சார்ந்தே இருக்க வேண்டும் என்று நினைப்பார்கள். கணவனும் மனைவியும் அடிப்படையில் வேறு வேறு நபர்கள். அவர்களது எண்ணங்களும் செயல்களும்

வேறாகத்தான் இருக்கும் என்பதை உணராமல் மனைவியின் சுதந்திரத்தில் குறுக்கிடுவார்கள்.''

''கெமி அப்படி இல்லை மார்கரெட்'' என்றாள், நந்தினி. ''நாங்கள் இருவரும் ஒரே நாட்டை சேர்ந்தவர்கள் தான் என்றாலும் வேறு மதத்தை சேர்ந்தவர்கள். முற்றிலும் வேறான குடும்ப பின்னணியை கொண்டவர்கள். இதுவரை எங்கள் அன்புக்கு இவை எதுவுமே தடையாக இருந்ததில்லை.''

''நீங்கள் இருவரும் எப்பவும் சந்தோஷமாக இருக்க வேண்டும் நந்தினி'' என மார்கரெட் வாழ்த்துக்கூறி நந்தினியை முத்தமிட்டு விடைபெற்று சென்றாள்.

சற்று நேரத்தில் தன் ஷாப்பிங்கை முடித்துக் கொண்டு அவளுடன் வந்து சேர்ந்து கொண்ட கெமியிடம், எதையும் மறைக்க தோன்றாத தன் வழக்கப்படி மார்கரெட்டுடன் பேசியதையெல்லாம் சொன்னவாறு நடக்கத் தொடங்கினாள், நந்தினி. கெமி கூட சேர்ந்து அவளுடன் விமர்சனம் பண்ணாமல், அவளை சீண்டாமல் ''நல்ல ப்ரண்ட்ஸ் உனக்கு!'' என்றான் பொதுப்படையாக.

அமைதியாக இருவரும் நடக்கையில் எதிரே ஷாப்பிங் பைகளுடன் வந்த ஒருவரை பார்த்ததும் ''ஹலோ வில்லியம்ஸ்'' என அவரிடம் விரைந்தான் கெமி.

நந்தினி ஆச்சர்யமாய் பார்க்கவும் ''என் தூரத்து உறவு முறை'' என அவளுக்கு அறிமுகப்படுத்தினான்.

கெமியிடம் சம்பிரதாயப்படி நலம் விசாரித்த வில்லியம்ஸ் வேலை விஷயமாய் ஒரு மாதம் முன்புதான் குடும்பத்துடன் சிங்கப்பூர் வந்ததாக கூறினார். ''ஒரு நாள் வீட்டுக்கு வாங்களேன்'' என்றார் இருவருக்கும் பொதுவாக.



கெமி எதையும் யோசிக்காமல் உடனே ''வருகிறேன்'' என்று அவருடன் கிளம்பவும் நந்தினியும் பேசாமல் அவனை பின்தொடர்ந்தாள். அவர் அலுவலகம் தந்திருந்த குவார்ட்டர்சில் இருந்தார். இவர்கள் உள்ளே நுழைந்ததும் அவர் மனைவியும், பெண்ணும் யார் என்று புரியாமல் திருதிருத்துவிட்டு அவர் அறிமுகப்படுத்தியதும் ''வாங்க'' என்றார்கள்.

அவர்கள் ''சாப்பிடலாம்'' என்று ஒரு வார்த்தை சொன்னதும், ''மீன் குழம்புதானே! உள்ளே வரும்போதே வாசனை தூக்குதே!'' என்றபடி டைனிங்டேபிளில் அமர்ந்துவிட்ட கெமியை வியப்புடன் பார்த்தாள் நந்தினி.

அவர்களிடம் இன்னும் போடச் சொல்லி கேட்டு நன்றாக சாப்பிட்ட கெமி, ''குழம்பு அப்படியே எங்கம்மா கைப்பக்குவமா இருக்கு'' என்றபடி கை கழுவ எழுந்தான். இவர்கள் வெளியே வருகையில் காலி பாத்திரத்தை உருட்டியபடி வில்லியம்சின் மனைவி அவரிடம் ஏதோ சொல்வது தெரிந்தது.

'என்ன சொல்லியிருப்பாள்? இந்த சாப்பாட்டுராமன் நமக்கு மிச்சம் வைக்காமல் எல்லாத்தையும் காலி பண்ணிவிட்டான், என்றிருப்பாள்.'

வில்லியம்ஸ் மனைவியிடம் முழிப்பதை நினைத்துப் பார்க்கையில் நந்தினிக்கு சிரிப்பு வந்தது. வயிற்றைப் பிடித்தபடி சிரித்தவளை கேள்விக்குறியுடன் பார்த்தான் கெமி.

''இல்ல, இன்னிக்கு வில்லியம்சுக்கு சரியான மண்டகப்படி நடக்கும். இனிமே இந்த பையனை வழியில் பார்த்தா கூட பேசக் கூடாதுன்னு அவங்க வீட்ல சொல்லப் போறாங்க பார்.''

''ஷட்டப் நந்தினி'' என்றான் கெமி அதட்டலுடன். ''அவர் என் உறவினர், அவரைப் பற்றி நீ எதுவும் விமர்சிக்க வேண்டியதில்லை.''

''நான் தப்பா எதுவும் பேசலையே கெமி! சும்மா விளையாட்டுக்கு....''

அவள் முடிக்கும் முன் ''ஸ்டாப் தட் நான்சென்ஸ்'' என கத்தினான் கெமி. புரியாத திகைப்பில் மௌனமானாள் நந்தினி. திருமணத்திற்கு பிறகு முதல் முறையாக கெமி தன்னைப் பார்த்து கத்தியிருக்கிறான், அதுவும் நடுத்தெருவில். நந்தினிக்கு வருத்தமாக இருந்தது.

வீடு வந்து சேர்ந்த பிறகும் கெமி எதுவும் பேசாமலேயே இருந்தான்.

அமைதியாக அவனை அவன் போக்கில் விட்ட நந்தினியால் வெகுநேரத்திற்கு ஒதுங்கியே இருக்க முடியவில்லை. இரவு ஒரு புத்தகத்தை புரட்டியபடி அவன் அமர்ந்திருக்கையில் அருகே வந்து அமர்ந்தாள் நந்தினி. ''கெமி ஸாரி கெமி,'' என்றாள் அவன் விரல்களைப் பற்றி. ''உன் குடும்பத்துடன் சம்மந்தப்பட்டவர்களை வெகுதூரத்தில் எதிர்பாராமல் சந்திக்கும் போது உனக்கு அவர்கள் மீது பிரியம் ஏற்படத்தான் செய்யும். நான் எதையும் யோசிக்காமல் வழக்கம்போல் கேலி செய்துவிட்டேன். திருமணத்திற்கு பிறகு உனக்கு புதிதாக பொறுப்பு கூடியிருக்கும் என்பதை யோசிக்காமல் சீண்டியது என் தவறுதான். அதற்காக மன்னித்துவிடு கெமி. ஆனா இப்படி பேசாம மட்டும் இருக்காதே!'' கண்கள் நிறைந்ததை மறைக்க வெளியே பார்த்தாள் நந்தினி.

சாதாரண விஷயத்தை பெரிதுபடுத்தி விட்டோம் என்பது மனதில் உறைக்க, ''உங்கிட்ட பேசாம என்னால



எப்படி இருக்க முடியும் நந்தினி? இந்த விஷயத்தை இதோடு மறந்துவிடலாம்'' என்றான் கெமி.

உடனே நந்தினியின் முகம் மலர்ந்து போக, திருப்தியுடன் தன் வேலையை பார்க்கப் போனாள்.

அடுப்பில் இட்லிக்கு தட்டை வைத்துவிட்டு, மிக்ஸியில் சட்டினியை ஓட விட்டாள் நந்தினி. மதியத்திற்கு சாம்பாரும், பொரியலும் தயாராகையில் ''ஆறு முக வடிவேலனடீ கந்தன்'' - என வாய் தன் பாட்டில் பாடிக் கொண்டிருந்தது. அன்று மாலை ஒரு வீட்டில் பஜனை இருந்தது. அங்கிருந்த தமிழ் குடும்பங்கள் ஒன்று சேர்ந்து தீபாவளி, பொங்கல், கார்த்திகை, தைப்பூசம் என எல்லா பண்டிகைகளையும் சிறப்பாக கொண்டாடினர். நந்தினியும் உற்சாத்துடன் எல்லா விழாக்களிலும் கலந்து கொள்வாள். அங்கே எல்லோரும் பாட சொல்லி கேட்கையில் சிறுவயதிலிருந்து கேட்ட பாடல்கள் ஒவ்வொன்றாய் நினைவு வரும். எல்லோரும் அவள் குரலை அதன் இனிமையை புகழ்கையில் இன்னும் சுதி சுத்தமாய் பாடவேண்டும் என்ற ஆர்வம் வந்தது. குளிக்கும் போதும், சமைக்கும்போதும் பாடி பழகுகையில் கெமியின் பார்வையை உணர்ந்து சிரித்தாள் நந்தினி. ''பாடபாடத் தான் குரலில் மெருகேறும். அதனால்தான் பாடிப் பழகறேன் கெமி.''

அவளுக்கு பதில் எதுவும் சொல்லாத கெமி காலிங் பெல்லின் ஓசைக்கு கதவைத் திறக்கப் போனான்.

வெளியே கதிரின் அம்மா வசந்தா நின்றிருந்தாள். ''வாங்க'' என்றபடி கெமி நகர்ந்து வழி விட்டதும் உள்ளே வந்த வசந்தா கையிலிருந்த ஸ்டீல் தூக்கை டேபிள்மீது

வைத்தார். ''இந்துவின் வளைகாப்புக்கு அவள் அம்மா வீட்டினர் இந்தியாவிலிருந்து பலகாரம் கொண்டு வந்தார் கள். உங்களுக்கும் கொஞ்சம் எடுத்து வந்தேன்'' என்றபடி, சோபாவில் அமர்ந்தார்.

''டெலிவரி எப்போது ஆன்ட்டி?'' என்றபடி காபியுடன் வந்தாள் நந்தினி.

''அடுத்த மாதம் தேதி சொல்லியிருக்கிறார்கள். அது வரை அவங்க அப்பாவும், அம்மாவும் இங்கே தங்கிவிடு வதாக இருக்கிறார்கள்'' என்றவாறு காபியை பருகினார் வசந்தா. குடித்து முடித்து டம்ளரை கீழே வைத்தவர், ''நேத்து உங்கம்மாவிடம் பேசினேன் கெமி'' என்றதும், கெமி நிமிர்ந்து அமர்ந்தான்.

''நேத்துதான் உன் அண்ணன் மகனுக்கு பிறந்தநாள் போலிருக்கிறது. நீ கூட இல்லை என்று உங்கம்மாவுக்கு ரொம்ப வருத்தம். வீட்டில் எல்லோருடைய பிறந்த நாளுக்கும் நீ என்னென்ன வாங்கி தந்தாய் என்று சொல்லி அழுது தீர்த்துவிட்டார்கள். 'கெமிதான் வீட்டி லேயே எனக்கு செல்லம். அவனை பார்த்து எத்தனை நாள் ஆச்சு! அவன் இப்படி பண்ணுவான்னு நினைக்கல,' என்று ஒரே புலம்பல்தான் போயேன். எல்லாம் நாளடை வில் சரியாகிவிடும். நந்தினி நல்லபெண் என்று அவர் களுக்கு பலவிதமாய் ஆறுதல் சொன்னேன். உங்கம்மா வால் தன் கோட்பாடுகளையும் தளர்த்திக் கொள்ள முடியவில்லை. உன்னையும் விட்டுக்கொடுக்க முடிய வில்லை. விரைவில் ஒரு குழந்தையை பெற்றுக் கொண்டு, அவர்களிடம் சென்றால் குழந்தை முகத்தைப் பார்த்து எல்லாவற்றையும் மறந்துவிடுவார்கள்.'' கெமிக்கு



மனம் உருகி கண்களில் ததும்பியது. யாரும் பார்க்கும் முன் எழுந்து உள்ளே சென்றான்.

* * *

கெமி பேர்ட்ஸ் பார்க்கின் பனிச்சென்ற புல்தரையில் கைகளை பின்னால் ஊன்றி அமர்ந்திருந்தான். ஊரெங் கிலும் கிறிஸ்துமஸ் பண்டிகைக்கான முஸ்தீபுகள் ஆரம் பித்திருந்தன. அம்மா இந்நேரம் வீட்டை சுத்தம் செய் வதும் குடில் அமைக்க தேவையான பொருட்கள் சேக ரிப்பதுமாய் இருப்பார்கள். அண்ணி அண்ணனுடன் சேர்ந்து எல்லோருக்கும் புது உடை எடுக்க கடை கடை யாய் ஏறி இறங்கி தி.நகரையே கலக்கிக் கொண்டிருப் பார்கள். அப்பா, சர்ச்சில் கிறிஸ்துமஸ், நியூ இயருக்கான சிறப்பு பிரார்த்தனைக்கு செய்ய வேண்டிய ஏற்பாடு கள் குறித்து சர்ச் பாதருடன் ஈடுபட்டிருப்பார். அக்கா கிறிஸ்துமஸ்சுக்கு அண்ணிக்கு எடுத்த புடவைதான் பிடித்திருக்கிறது என வழக்கம் போல் போட்டி போடுவாள். இந்த வருடம் யாராவது கெமியை நினைவில் வைத் திருந்து கிறிஸ்துமஸ் உடை அவனுக்கு வாங்குவார்களா? அப்படியே வாங்கினாலும் அவனால் அதைப் போட முடி யுமா? மாலை நேரம் மறையத் தொடங்க, சுற்றிலும் இருள் கவிழ ஆரம்பித்திருந்த அந்த வேளையில் கெமிக்கு தான் மட்டும் தனியாய் நிற்பது போல் தோன் றியது.

அண்ணன் சம்பாதிக்கத் தொடங்கியதிலிருந்து தன் பணத்தை அப்படியே அம்மாவிடம் கொடுத்துவிடுவான். தனக்கு வேண்டியதை கேட்டு வாங்கிக் கொள்வான். அப்பாவுடன் அலுவலகத்திற்கு அவரது காரிலோ,

முடியாதபோது ஆட்டோவிலோ போவான். சமீபத்தில்தான் அப்பா அவனுக்கு ஒரு ஸ்கூட்டர் வாங்கி கொடுத்தார். கெமியோ அம்மாவிடம் நச்சரித்து படிக்கும் போதே தனக்கு பைக் வாங்கிக் கொண்டான். கலர் ப்ளஸ், லைப் ஸ்டைலில் சட்டைகள், பிராண்ட் கம்பெனிகளின் ஷூக்கள், கூலிங்கிளாஸ், வாட்ச் என அவன் அணிந்தவை எல்லாமே விலை உயர்ந்தவைதான்.

அக்கா ஷெரின்தான் அம்மாவிடம் சண்டைபோடுவாள். "நாங்க மூணுபேரும் ஒண்ணுதானே! அவனுக்கு மட்டும் ஏன் எப்பவும் காஸ்ட்லியா எடுக்கறீங்க?" என்று.

ராபர்ட் கெமிக்கு சிபாரிசு செய்வான். "நம்ம ரெண்டு பேரை விட அவன்தானே சின்னவன். விடு ஷெரின்" என்பான். அண்ணி வந்த பிறகும் கூட அவன் அப்படியேதான் இருந்தான். ஜோசபினும் கணவனுக்கும் மைத்துனனுக்கும் இடையேயுள்ள பாரபட்சத்தை ஊதிப் பெருசாக்க முயலாமல் கெமியை தன் சொந்த தம்பியைப் போல் பாவித்தாள். இப்போது அவர்கள் எல்லாம் கெமியைப் பற்றி என்ன நினைப்பார்கள்? தன் சொந்த விருப்பத்திற்காக ஏறி வந்த ஏணியை எட்டி உதைத்த துரோகி என்றுதானே!"

பழக்கப்பட்ட சமையலுக்கு நாக்கும், அன்பான உறவுகளுக்கு மனமும் ஏங்கத் தொடங்கவே, கெமி மிகவும் சோர்வாக உணர்ந்தான். என்னதான் படித்திருந்தாலும், பல்வேறு கலாச்சாரங்களின் பரிமாணத்தில் கலந்து விட்டாலும் பிறந்த மண்ணையும், வளர்ந்த சூழலையும் மறப்பது அவ்வளவு சுலபமல்ல என்று தோன்றியது.

"ரொம்ப நடக்காது இந்த விளையாட்டு" என்றான் வாய்விட்டு. இனி என்னால் முடியாது. ஒவ்வொரு நாள்



விடியும்போதும் இன்றுடன் எல்லாம் முடிந்துவிடுமா என்றுதான் தோன்றுகிறது.

நந்தினியின் சிரித்த முகம் கண்முன் வந்தது. நந்தினி படித்தவள். தைரியசாலி. சமாளித்துக் கொள்வாள். நாட்களின் ஓட்டத்தில் பிறகு நினைத்துப் பார்க்கும்போது, கெமி அவள் வாழ்க்கையில் சந்தித்தவர்களில் குறிப்பிடத்தக்க ஒருவனாகவே தோன்றக்கூடும். யோசித்தபடியே நடக்கத் தொடங்கினான்.

அருகிலுள்ள தேவாலயத்திலிருந்து மணியோசை கம்பீரமாய் எழுந்தது. பழகிய கைகள் தன்னையறியாமல் "பிதா, சுதன், பரிசுத்த ஆவியின் பெயராலே" என சிலுவைக் குறியிட்டன. வீட்டின் படியேறி பெல்லை அழுத்தியதும் கதவைத் திறந்த நந்தினி கற்பூரத் தட்டுடன் நின்றிருந்தாள்.




அன்று சனிக்கிழமையாதலால் வழக்கமான பரபரப்பின்றி நந்தினி சோம்பலாய் உணர்ந்தாள். கெமி இன்னும் தூங்கிக் கொண்டிருந்தான். தனக்கு மட்டும் ஒரு டீயை போட்டு குடித்தாள். இப்போதெல்லாம் வார விடுமுறைகளில் வெளியே போவது நின்று போயிருந்தது. ஒரு முறை கதிர் குடும்பத்தினர் பிக்னிக் போகலாம்

என்றபோது கூட கெமி மறுத்துவிட்டான். சின்ன ஊரில் இருந்துகொண்டு, பார்த்த இடங்களையே பார்த்துக் கொண்டு, சென்ற இடங்களுக்கே சென்றுகொண்டு இருப்பதால் விரைவில் அலுத்துத்தான் போகிறது என்று நந்தினிக்கும் தோன்றியது.

படுக்கை அறையின் கதவை இறுக சாத்திவிட்டு வந்து ஹாலின் ஜன்னல்களை திறந்து வைத்தாள். ஜன்னலை திறந்ததும் வீசிய காற்றில் ஒரு வீச்சம் பரவியது. அவசரமாய் மறுபடி ஜன்னலை மூடிவிட்டு, வாஷ்பேசினில் சென்று வாந்தி எடுத்தாள் நந்தினி. வாயை துடைத்தபடி வருகையில் கதவு தட்டப்படும் சத்தம் கேட்டது.

கதவை திறந்ததும் மறுபடி நாற்றம் குடலை புரட்டியது. வெளியே நின்றிருந்த பேப்பர் போடும் பையனிடம் "என்ன வேண்டும்?" என்றாள் நந்தினி வேகமாக.

"ஜோஸ்னா மேடம் எங்காவது வெளியே போயிருக்கிறார்களா மேடம்?"

"அவர்களால் ரொம்ப நடக்க முடியாது. எண்பது வயதிருக்கும் அவருக்கு. அதில்லாமல் இங்கே யாரும் இல்லை அவர்களுக்கு. ஏன் கேட்கிறாய்?"

"மூன்று நாளாய் அவர்கள் வீட்டிற்கு நான் போடும் நியூஸ் பேப்பர் எடுக்காமல் வெளியிலேயே கிடக்கிறது. அதனால்தான் கேட்டேன்."

மைகாட். ஜோஸ்னாவுக்கு என்னவாயிற்று? இந்த நாற்றம் ஒருவேளை... நந்தினி பதட்டமானாள்.

"போலீசுக்கு தகவல் சொல்லுங்கள் மேடம்" என்றான் அவன்.



நந்தினி ஓடிப்போய் போலீசுக்கு போன் செய்ததும், சிறிது நேரத்தில் அவர்கள் வந்துவிட்டார்கள். கதவை உடைத்து உள்ளே போய் ஜோஸ்னாவின் அழுகிய உடலை வெள்ளைத் துணியால் மூடி எடுத்துச் சென்றனர்.

நந்தினியும், நியூஸ்பேப்பர் போடும் பையனும் அசைவின்றி நின்றிருந்தார்கள்.

"ஜோஸ்னாவின் மகன்கள் வருவார்களா?" என்றாள் நந்தினி அவனிடம்.

"அவர்கள் எங்கேயிருக்கிறார்கள் என்று யாருக்கும் தெரியாது மேடம்."

"அப்போ இந்த உடலை..."

"அரசாங்கமே அடக்கம் செய்யும்."

கையிலுள்ள மீதி பேப்பர்களுடன் படியிறங்கி சென்றான் அவன்.

நந்தினிக்கு கண்களிலிருந்து நீர் சரம்சரமாய் இறங்கியது. பக்கத்துவீட்டில் மூடிய கதவுக்கு பின்னால் ஒருத்தி இறந்துபோய் மூன்று நாட்களாய் கிடக்கிறாள். நாற்றம் அடிக்கும் வரை தெரியாமல் இருந்திருக்கிறோம். தினமும் காலையில் இறங்கி செல்லும் போது பால்கனியில் இருந்தபடி "ஹலோ" சொல்லும் ஜோஸ்னா மூன்றுநாட்களாய் ஏன் இல்லை என்று கூட நமக்கு யோசிக்கத் தோன்றவில்லை. அந்த அளவுக்கா மனிதாபிமானம் செத்துவிட்டது நமக்குள்?

யாருமற்ற தனிமையில் உயிர்போக நேர்ந்தபோது எப்படியிருந்திருக்கும் ஜோஸ்னாவுக்கு? தாகம் எடுத்து தண்ணீர் தர ஆளின்றி தவித்திருப்பாளா? வலியில்,

மரண பீதியில் வாய்விட்டு அலறியிருப்பாளா? தன் இறந்து போன கணவனையும், உயிரோடு இருக்கும் மகன்களையும் சபிக்கக் கூட செய்திருக்கலாம். ஸ்வீடனுக்கு மகன்களை அனுப்பிவிட்டு இறந்துபோன ஜோஸ்னாவுக்கா, சிங்கப்பூருக்கு மகளை அனுப்பிவிட்டு தவிக்கும் தன் பெற்றோருக்கா? யாருக்கென்று தெரியாமலே நந்தினி கதறி அழத் தொடங்கினாள்.

சற்றுநேரம் கழித்து தூங்கி எழுந்து வந்த கெமி, ''நந்தினி'' என்று உலுக்கவும் திடுக்கிட்டு திரும்பினாள் நந்தினி.

''ஏன் இப்படி அழுதுகொண்டிருக்கிறாய்?'' என்றான் கெமி குழப்பத்துடன்.

''கெமி, நம்ம பெற்றோர்களுக்கு நம் முகவரி தெரியுமா?'' என்றாள் நந்தினி பீதியுடன்.

''முருகேசன் அங்கிள் மூலமாய் எங்க வீட்டுக்கு நம்மைப் பற்றிய விஷயம் போய்க் கொண்டுதான் இருக்கும் என்று நினைக்கிறேன்.''

''ஆனா, எங்க வீட்டுக்கு என்னைப் பத்தி எதுவுமே தெரியாது கெமி. நாளைக்கு அவங்களுக்கு ஏதாவது ஆனால் கூட எனக்கு தெரிவிக்க முடியாமல், ஜோஸ்னா மாதிரி இறந்து, நாற்றம் எடுத்து...?''

''என்ன ஜோஸ்னா இறந்துவிட்டாளா?''

''ஆமாம் கெமி. அநாதையாய் இறந்தாள். தனிமையின் கொடுமையை அனுபவித்தவளை அந்த தனிமையே கொன்றுவிட்டது. அரசாங்க செலவில் அநாதை பிணமாய் போய் சேர்ந்தாள். பசங்க இருந்தும் இல்லாமல்...'' நந்தினிக்கு மறுபடி கண்களில் நீர் வழிந்தது.



''ஜோஸ்னா பசங்க கூட இருந்திருந்தாலும் இதுதான் நடந்திருக்கும் நந்தினி. அங்கு பிள்ளைகள் யாரும் பெற்றோருடன் வசிக்க மாட்டார்கள். பெரிய பெரிய வீடுகளில் முதியவர்கள் தனியாகத்தான் இருப்பார்கள்.''

இருவரும் யோசனையில் ஈடுபட்டு சிறிது நேரம் கழிய, கெமிக்கு பசித்தது. எழுந்துபோய் சமையலறையில் பாத்திரங்களை உருட்டியவன். அங்கு எதுவும் சமைக்காமல் இருக்கவே, நந்தினியிடம் வந்தான்.

''எழுந்து சமையல் பண்ணு நந்தினி, எனக்கு பசிக்குது'' என்றான்.

''எனக்கு சமைக்கிற மூடே இல்லை கெமி. நீயே ஏதாவது மேனேஜ் பண்ணிக்கோ.''

''ஜோஸ்னாவுக்காக உன்னளவு யாருமே துக்கம் கொண்டாடியிருக்க மாட்டார்கள். அவள் பிள்ளைகளுக்கு தெரிந்தால் கூட இவ்வளவு வருத்தம் இருக்காது.''

''எனக்கு இருக்கத்தான் செய்யும் கெமி. ஏன்னா எனக்கு மனசுன்னு ஒண்ணு இருக்கு'' என்றாள் நந்தினி பட்டென்று.

''ஷிட்'' முணுமுணுத்தபடி சட்டையை மாட்டிக் கொண்டு வெளியே போனான் கெமி.

நந்தினி ஏதோ சிந்தனையில் ஆழ்ந்து பொழுதைக் கழிக்க, இரவு தான் திரும்பி வந்தான். நந்தினி இரவு சமையலை முடித்துவிட்டு ''சாப்பிடவா கெமி'' என்றதும், ''நான் ஹோட்டலிலேயே சாப்பிட்டு விட்டேன்'' என்ற படி டிவியை ஆன் பண்ணினான்.

''ஏன் கெமி, எதுக்காக ஹோட்டலில் சாப்பிடணும்?''

"உனக்கு சமைக்க மூட் இருக்கா இல்லையான்னு தெரிஞ்சப்புறம் போய் சாப்பிடறதுன்னா நேரமாயிடும் பார். அதனால்தான்."

நந்தினிக்கு முதன் முறையாக அவன் மீது கோபம் வந்தது. கெமி திருமணத்திற்கு முன்பு தினமும் தனக்கு தானே சமைத்து சாப்பிட்டுக் கொண்டிருந்தான். சமீப காலம்வரை அவளுக்கு கூடமாட ஒத்தாசை செய்து கொண்டுதான் இருந்தான். அவனுக்கு ஆக்ஸிடெண்ட் ஆனதிலிருந்து நந்தினி அவனை ஒரு குழந்தைபோல் பார்த்துக் கொண்டு, வேலைக்குப்போய் அல்லாடியிருக்கையில் ஒருநாள் அவளால் முடியாதபோது அவனால் சமைக்க முடியாதா என்ன?

தனக்கு தட்டை எடுத்து வைத்த நந்தினி இரண்டு இட்லிகளுடன் கோபத்தையும் சேர்த்து விழுங்கினாள். திருமணத்திற்கு முன்பு தனக்கு உடல் நிலை சரியில்லாத போது அருகேயிருந்து பரிவாய் கவனித்துக் கொண்ட கெமி நினைவுக்கு வந்தான். இருவரும் சேர்ந்து சமைக்கையில் செய்த கலாட்டாக்களும், இரவெல்லாம் டெலிபோனில் பேசிய பேச்சுக்களும் நினைக்கையில் முகத்தில் புன்னகை மலர்ந்தது. வேலை பளுவால் கெமி இப்போது இப்படியிருக்கிறான். விரைவில் சரியாகி பழைய கெமியாகிவிடுவான். தனக்குள் சொல்லிக் கொண்டு சமையலறையை சுத்தம் செய்து நைட்டிக்கு மாறி படுக்கப் போனாள்.

கெமியின் அருகே சென்று "டிவியில் என்ன நியூஸ் கெமி இன்னிக்கு?" என சகஜமாக பேச முற்பட்டதும், "எனக்கு தூக்கம் வருது" என்றபடி டி.வியை அணைத்து விட்டு திரும்பிப் படுத்தான் கெமி.



நந்தினி அலுவலகத்திலிருக்கும் போது கதிர் போன் செய்து இந்துவுக்கு ஆண் குழந்தை பிறந்திருப்பதாக கூறினான். ஒரு மாதமாகவே இந்துவின் அப்பாவும் அம்மாவும் மகளுடன் தங்கியிருந்தனர். இந்த ஒருவாரமாய் பிரசவநாளை எதிர்பார்த்து அவர்கள் குடும்பமே காத்திருந்தது. எனவே கதிருக்கு வாழ்த்து சொல்லிவிட்டு கெமிக்கு போன் செய்து "எப்போது குழந்தையைப் பார்க்கப் போகலாம்?" என்று விசாரித்தாள் நந்தினி.

அவன் பிஸியாக இருப்பதாக சொல்லவும், மாலையில் நந்தினி தனியாக மருத்துவமனைக்கு போனாள்.

மருத்துவமனை தொட்டிலில் குழந்தை அழகான பூச்செண்டாய் கிடந்தது. தாத்தா, பாட்டிகளின் முகத்தில் அளவிடமுடியாத சந்தோஷம் தெரிந்தது. இந்து களைப்பும், அதை மீறிய பெருமிதமுமாய் படுத்திருந்தாள். குழந்தையை கொஞ்சிவிட்டு தான் வாங்கி வந்த பரிசுப்பொருளை கொடுத்துவிட்டு வீடு திரும்பிய போது நந்தினியின் மனமும் புளகாங்கிதமடைந்திருந்தது.

வீட்டில் நிகழும் ஒவ்வொரு ஜனனமும் சுற்றியிருப்பவர்களுக்கு எத்தனை மகிழ்ச்சியை கொடுக்கிறது? நானும் கெமியும் சேர்ந்து ஒரு உயிரை உருவாக்கி அதை கைகளில் ஏந்தும் தருணம் எத்தனை அற்புதமானதாக இருக்கும்? நந்தினிக்கு அநியாயமாய் நாட்களை வீணடித்துவிட்டதாக தோன்றியது. தங்களுக்கு குழந்தை பிறந்தால் அது யார் ஜாடையில் இருக்கும்? என்னைப் போலவா? அல்லது கெமி மாதிரியா? ஏன் தாத்தா பாட்டியை கூட கொண்டிருக்கலாம். எப்படியிருப்பினும் பிறக்கப் போகும் குழந்தை புது உலகை காட்டும். கெமி

கூட பழையபடி உற்சாகமாகி விடுவான். கனவில் மிதந்தபடி நந்தினி கெமிக்காக காத்திருந்தாள்.

கெமி வந்ததும் இரவில் அவனை அணைத்தபடி கதிரின் குழந்தையைப் பற்றி சொன்னாள் நந்தினி. "எவ்வளவு அழகு தெரியுமா கெமி? குட்டி குட்டியாய் கண்ணும், வாயும், கை கால்களும், வெரி க்யூட். நமக்கு குழந்தை பிறந்தால் அது இன்னும் அழகாக இருக்கும் கெமி. பெற்றுக் கொள்வோமே!"

கெமி திடுக்கிட்டவனாய் பார்த்தான். "என்ன நந்தினி திடீர்னு? அடுத்தவங்க பெத்துக்கறாங்கன்னு நாமும் பெத்துக்கக் கூடாது."

"அதுக்காக இல்லை கெமி. எனக்கே ஆசையா இருக்கு."

"உன்னால் ஆபீஸ் போய்ட்டு குழந்தையை பாத்துக்க முடியாது நந்தினி."

"அப்ப வேலைக்கு போறவங்க எல்லாம் குழந்தை பெத்துக்கறதில்லையா?"

"அவங்க வீட்ல பெரியவங்க இருப்பாங்க நந்தினி."

"யார் இல்லாட்டியும் சரி. நானே பார்த்துப்பேன் கெமி. சரின்னு சொல்."

கெமி பதில் சொல்லாமல் இருக்கவே. அடுத்தநாள், அதற்கடுத்த நாள் என தினமும் நச்சரிக்கத் தொடங்கினாள். கெமி அசைந்து கொடுக்காததை கண்டு, "திருமணமானவர்கள் நியாயமாய் ஆசைப்படும் ஒரு விஷயத்தைத் தானே நான் கேட்கிறேன்? உனக்கே இந்நேரம் குழந்தை வேண்டும் என்ற ஆசை வந்திருக்க



வேண்டும். ஏனோ நீ வேண்டாம் என்கிறாய். சரி ஏன் வேண்டாம்னு சரியான காரணம் சொல். நான் உன்னை தொல்லை செய்ய மாட்டேன்," என்றாள் நந்தினி.

"சரி சொல்கிறேன்."

"சொல் கெமி?"

"இப்போதில்லை. சரியாய் இன்னும் ஒருவாரம் காத்திரு," என்றான் கெமி தீர்மானமான குரலில்.

"ஒரு வாரம் இல்லை. ஒரு மாதம் கூட காத்திருக்கிறேன். உன்னிடமிருந்து நல்ல பதில் வரவேண்டும்" செல்லமாய் அவன் தலையை கலைத்தாள் நந்தினி.

'என்னை பலவீனனாக்காதே நந்தினி?' வாய்க்குள் முணுமுணுத்தபடி அவள் கைகளை மெதுவாய் விலக்கினான் கெமி.

அடுத்த ஒருவாரம் கெமி மிகவும் பிஸியாக இருந்தான். நடுநிசியில் வீடு திரும்பினான். கேட்டபோது அலுவலகத்தில் வேலை அதிகம் என்றான். பீரோவையும் கபோர்டையும் குடைந்து, "இங்கிருந்த பைல் எங்கே? பாஸ்போர்ட், பாஸ்புக் எங்கே? வெள்ளை நிற கவரைப் பார்த்தாயா?" என தினமும் எதையாவது தேடிக் கொண்டிருந்தான்.

நந்தினி ஒரு மௌன புன்னகையுடன் அவ்ன் அமர்க்களத்தை பார்த்துக் கொண்டிருந்து விட்டு, பதினைந்து நாட்கள் முடிந்ததும், "கெமி நான் சொன்ன விஷயத்தை யோசித்தாயா?" என்றாள் மெதுவாய். குனிந்து ஷூவின் லேசை இறுக்கிய கெமி. "இன்று இரவு உனக்கு ஈ-மெயில் பதில் அனுப்புகிறேன். படித்துப் பார் நந்தினி" என்றான்.

''ஓகோ, உன் வாயால சொல்லமாட்டியா? திருமணத்திற்கு முன் தினமும் இரவில் நாம் போன் பேசிக்கொள்வோமே! அதற்கு பிறகு அந்த மாதிரி பேச சந்தர்ப்பம் வரவில்லையே, என்றிருந்தது எனக்கு. நீ மெயில் அனுப்பினால் அதுவும் சுவாரஸ்யமாகத்தான் இருக்கும். அனுப்பு கெமி'' என்றாள் நந்தினி சிரித்தபடி.

அவள் முகத்தையும், அந்த சிரிப்பையும் பார்க்காமல் 'பை' என்றபடி வெளியேறினான் கெமி.

கெமி நேரத்திலேயே கிளம்பிவிட்டதால், அவனுக்கு பிறகு வழக்கம்போல கிளம்பும் போதுதான் நந்தினி கவனித்தாள். கெமி வீட்டு சாவியை எடுத்துக் கொள்ளவில்லை. இரண்டு செட் சாவியில் எப்பவும் ஒரு சாவி அவனிடமும் ஒன்று அவளிடமும் இருக்கும். கெமி வரும் சமயம் நந்தினி மார்க்கெட்டிற்கு போயிருந்தால் கூட அவன் தன் சாவியில் வீட்டை திறந்துகொள்வான். இன்று மறந்துவிட்டிருக்கிறான். மாலையில் கொடுத்துவிட்டு வரலாம் என எக்ஸ்ட்ரா சாவியை கையில் எடுத்துக் கொண்டாள்.

மாலையில் நந்தினியின் வேலை முடிந்ததும் பத்தாவது மாடியிலிருந்த கெமியின் செக்ஷனுக்கு போனபோது அங்கே எல்லோருமே பிஸியாக இருந்தார்கள். தலைமை அதிகாரியிடம் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு கெமியை பார்க்க வேண்டும் என்றாள் நந்தினி. அவர் புரியாத பார்வை பார்த்து, ''நீங்க என்ன சொல்றீங்க மிஸஸ் கெமி? கெமி இந்நேரம் இந்தியா போய் சேர்ந்திருப்பாரே!'' என்றார்.

''இந்தியாவுக்கா?''



''யெஸ்.''

கெமியின் அலுவலக நண்பன் ஒருவன் நந்தினியை அடையாளம் கண்டு எழுந்து வர, ''ஸார் நீங்க சார்லஸ் கெமிலோவையா சொல்கிறீர்கள்?'' என்றாள் நம்பமாட்டாமல்.

''எக்ஸாட்லி உங்க கணவரைத்தான் சொல்கிறேன். இந்தியாவிலுள்ள நம்முடைய கம்பெனிக்கு டிரான்ஸ்பர் கேட்டிருந்தார். கிடைத்ததும் இங்கிருந்து நேற்றே ரிலீவ் ஆகிவிட்டார். இன்று காலையில் கிளம்பிப் போய் இப்போது மும்பையில் இருப்பார். நீங்க என்ன தெரியாத மாதிரி கேட்கறீங்க.''

நந்தினியின் முகத்தைப் பார்த்த கெமியின் நண்பன், ''ஏதாவது பிரச்சினையா மிஸஸ் கெமி? என் உதவி தேவை என்றால் தயங்காமல் சொல்லுங்கள்'' என்றான் பரிவுடன்.

அவனுக்கு பதில் கூட சொல்லத் தோன்றாமல் வெளியேறினாள் நந்தினி. மனசில் விழுந்த அடியில் நடக்க முடியாமல் கால்கள் தடுமாறின. அலுவலக வாயில் உள்ள நடைபாதை சேரில் சரிந்தாள். காதில் விழுந்ததை நம்பவே முடியாத திகைப்பில் புத்தி பேதலித்து போயிற்று. கெமியா? கெமியா இப்படி செய்தான்? எப்படி முடிந்தது? உருகி உருகி காதலித்து, கல்யாணம் பண்ணி, கூட இருந்து குடித்தனம் நடத்திய பிறகு, எல்லாவற்றையும் ஒரு நிமிடத்தில் உதறிவிட்டு போக முடியுமா? காலையில் கிளம்பும்போது கூட வழக்கமாக அலுவலகம் போகிறமாதிரிதான் கிளம்பிச் சென்றான். ஒரே கட்டிடத்தில் வேலை பார்த்தும் கூட இந்தளவு தன்னை அவனால் ஏமாற்ற முடிந்தது என்றால் தான்

அவனிடம் கொண்டிருந்த அளவுக்கதிகமான நம்பிக்கை தான் காரணம். ஒரு குப்பையைப் போல் ஒதுக்கிவிட்டு போகுமளவு நான் கேவலமாகிப் போனேன் என்ற தன்மான உணர்வு உள்ளுக்குள் குமுறியது.

திடீரென, கெமி மெயில் அனுப்புவதாக சொன்னது நினைவு வரவும், நந்தினி எழுந்து டாக்ஸியை பிடித்து வீடு நோக்கி விரைந்தாள்.

அவசரமாய் லிப்டை ஆன்செய்து மேலே சென்று வீட்டிற்குள் நுழைகையில் 'ஹோ'வென்ற ஆயாசம் மனதை நிறைத்தது.

கம்ப்யூட்டரை உயிர்ப்பித்து, மெயில் பாக்சை திறந்ததும் கெமியின் கடிதம் ஆங்கிலத்தில் வரிவரியாய் ஓடியது.

''நந்தினி, நான் உன்னை ஏமாற்றி திருமணம் செய்யவில்லை. உன்னை உயிராய் விரும்பிதான் மணம் செய்து கொண்டேன். இப்போதும் உன்னை பிடிக்க வில்லை என்பதால் இந்த முடிவுக்கு வரவில்லை. நாம் காதலித்த போது தேவையில்லை என்று நான் தூக்கி எறிந்த விஷயங்கள் எல்லாம் திருமணத்திற்கு பிறகு ஏக்கங்களாக என் மனதில் நின்று போயின. நந்தினி, புதிதாக முளைத்த செடியை பிடுங்கி நடும் போது அத்துடன் சிறிது மண்ணையும் சேர்த்து அணைத்து எடுத்து நடுவார்கள். நமக்கு பிறந்த மண்ணின் அணைப்பு கிடைக்காததால் வந்த இடத்தில் வேர் ஊன்ற முடிய வில்லை. என்னதான் உனக்கு உங்கம்மாவின் கட்டுப் பாடுகள் பிடிக்காவிட்டாலும் எனக்கு எங்கம்மாவின் மத நம்பிக்கைகள் அர்த்தமற்று தெரிந்தாலும் நம் இரு



வரையும் வழிநடத்தியது நம்முடைய வளர்ப்புமுறைதான் நந்தினி. அதுவும் உன்னுடைய பாட்டிலும், சமைய லிலும் உனக்குள் ஒளிந்திருந்த உங்கம்மாவைத்தான் பார்த்தேன். உன்னுடைய ஜீன்சும், பாவாடையும், வெட் டப்பட்ட முடியும் உன் வெளிவேஷங்கள் நந்தினி. உனக் குள் இருப்பவள் ரொம்ப கட்டுக்கோப்பான தமிழ்குடும் பத்தைச் சேர்ந்த இந்துபெண்.

நந்தினி உன்னை அணைக்க முற்படும்போது உன் மீதிருந்து வரும் விபூதி, குங்குமத்தின் வாசனை இதுவரை நான் அறியாதது. அது உன்னையும் என்னையும் அந்நியப்படுத்திக் காட்டியது.

முற்போக்கு எண்ணங்கள் கொண்ட சுதந்திரமனுஷி என்று உன்னை காட்டிக் கொண்ட நீ, கடவுள் நீ பிறந்த மதத்தை சேர்ந்த கோவில்களில்தான் இருப்பதாக எண்ணி ஓடத் தொடங்கினாய். மதம் முக்கியமில்லை. மனசுதான் முக்கியம் என்று வசனம் பேசி திருமணம் செய்துகொண்ட நான், பரந்த மனப்பான்மை உள்ளவனாக காட்டிக் கொள்வதற்காக அதை கைகட்டி வேடிக்கைப் பார்த்தேன். இப்போது வேடிக்கை சலித்துவிட்டது நந்தினி. நீ வளர்ந்த கலாச்சாரப்படி நீ நடந்து கொண்டபோது என்னை தனிமைப்படுத்தியாக உணர்ந்தேன். எனக்கு நான் வளர்ந்த குடும்பத்திற்குள் போய்விட வேண்டும் போலி ருந்தது. கதிர் வீட்டிலும் மற்ற இந்து குடும்பங்களிலும் விசேஷங்களுக்கு நீ சென்றுவந்த போது கூட இவர்கள் உன் கூட்டத்தை சேர்ந்தவர்கள் என்ற எண்ணம்தான் வந்தது. எனக்கு என் குடும்பத்திற்கு துரோகம் செய்து விட்டாற் போலவும், அவர்களை பார்க்க வேண்டும் போலவும் தோன்றியதை தடுக்கவே முடியவில்லை.

மனம் பழைய வாழ்க்கையை தேடிப்போக, நிகழ்கால வாழ்வின் நிஜபிம்பமாய் நின்ற உன்னிடமிருந்து மனதளவில் நான் விலகத் தொடங்கினேன். நீ ஏதும் அறியாமல் என் மீது அன்பை பொழியும் போது குற்ற உணர்ச்சியில் துடிக்கத் தொடங்கினேன். நீ குழந்தைக் கான ஆசையை தெரிவித்த போதுதான் உடனே முடிவெடுத்தேன். உன்னுடைய நியாயமான ஆசையை நிராகரிக்கவும் முடியவில்லை. நாம் பிரிய நேர்ந்தால் அந்த குழந்தையின் கதி என்ன என்பதையும் நினைத்துப் பார்க்க முடியவில்லை. எனவேதான் சில நாள் பிரிந்திருக்கலாம் என முடிவெடுத்தேன். இருவரும் உடலால் சேர்ந்து மனதால் தனித்திருப்பதை விட பிரிந்து போய் மனதால் ஒன்று பட முயற்சிப்போம்.

ஒரு கோழையைப் போல் ஓடிவிட்டதாக நீ நினைக்க லாம் நந்தினி. ஆனால் உன் முகத்தைப் பார்த்து எதையும் சொல்லும் துணிவு எனக்கில்லை. பி காஸ் ஐ லவ் யு நந்தினி.''

கீழே வீட்டு செலவு, வாடகை, பேங்க் பேலன்ஸ் பற்றிய சில விவரங்களையும் கெமி தெரிவித்திருந்தான்.

நந்தினி ''கெமி, கெமி'' என வாய்வலிக்க கத்தினாள். பாத்திரங்களையும் பொருட்களையும் தூக்கி எறிந்தாள். பாத்திரங்கள் சுவற்றில் மோதி தரையில் உருண்டன. என்ன செய்கிறோம் என்பதை மறந்து சுவற்றில் கைகளை குத்தினாள். வலியைக் கூட உணராமல் மூளை மரத்து போக, வெகுநேரம் குறுக்கும் நெடுக்குமாய் நடந்த பின் தலையைப் பிடித்தபடி வாய்விட்டு கதறி அழத் தொடங்கினாள்.



அழுது ஓய்ந்து, தூக்கமா மயக்கமா என்று அறியாத நிலையில் கட்டிலில் கிடந்து மீண்டும் கண்விழித்தபோது விடிந்துவிட்டிருந்தது. ஏதோ கெட்ட கனவு கண்ட பிரமையில் எழுந்து அமர்ந்தாள் நந்தினி. கெமி இல்லாத தனிமை சூழ்நிலையை உணர்த்த மீண்டும் அழத்தொடங் கினாள். அழுகையின் வேகம் குறையத் தொடங்கும் போதே நந்தினி சுதாரித்துக் கொண்டாள். 'நானா அழுவது? தோற்றுப் போனவர்களும் பலவீனமானவர் களும்தான் அழவேண்டும். நான் அழமாட்டேன்.' தனக் குள் திரும்ப திரும்ப சொல்லிக் கொண்டாள். எழுந்து போய் பல்துலக்கி குளித்துவிட்டு வந்ததும் கொஞ்சம் சுறுசுறுப்பாக இருந்தது. நடந்துபோன விஷயத்தை நினைத்து கவலைப்படுவதை விட்டு அடுத்து என்ன செய்யலாம் என்று யோசித்தாள்.

தன்னையும் அறியாமல் தான் செய்த செயல்களே கெமியை தன்னிடமிருந்து விலக்கியிருப்பதை உணர்ந் தவள், அந்த அளவு பலவீனமான காதலா நம்முடையது? என்று பச்சாதாபப்பட்டாள். கெமியின் அருகாமையை விட தனக்கு முக்கியமானது வேறு எதுவும் இல்லை என்பதை அவன் ஏன் உணர்ந்து கொள்ளவில்லை? கெமியின் மெயிலை மறுபடி படித்தாள். கெமி இன்று மும்பை ஆபீசில் டியூட்டில் சேருவதாகவும், இப்போது லீவு கிடைக்காததால் அடுத்த மாதம் விடுமுறை எடுத்துக் கொண்டு தன் பெற்றோரைப் பார்க்க போவதாகவும் எழுதியிருந்தான். கெமி கொடுத்திருந்த வரவு செலவு கணக்குகளை கவனமாய் குறித்துக் கொண்ட நந்தினி, இரவெல்லாம் யோசித்து தீர்மானமாய் ஒரு முடிவிற்கு வந்தாள். அதன்படி மறுநாள் காலையில் தன் மேலதிகாரி

சியான்சாங்கை சந்தித்து தன் விடுமுறை கடிதத்தை கொடுத்தாள்.

''ஸார் என்னுடைய அக்ரிமெண்ட் படி நான் இங்கு வந்து அடுத்த மாதத்துடன் இரண்டுவருடம் முடிகிறது. ஆனால் இந்த மாதமே நான் அவசரமாய் இந்தியா கிளம்ப வேண்டியிருப்பதால் மீதியுள்ள ஒரு மாதத்தை எனக்கு விடுமுறை அளித்து என்னை இங்கிருந்து விடுவிக்க வேண்டும்'' என்றாள்.

''இது என்ன அவசரமுடிவு நந்தினி? கெமி எப்படி யிருக்கிறான்?'' என்றார் சியான்சாங்.

''கெமி இந்தியா போய் இரண்டு நாளாயிற்று'' என்றாள் நந்தினி சகஜமாய்.

''என்னிடம் கெமி சொல்லவேயில்லையே! அவன் போனதால்தான் நீயும் போகிறாயா? இதை மேலதிகாரி களுக்கு அனுப்புகிறேன். ஒரு மாத விடுமுறை பிரச்சனை இல்லை. ஆனால் மேற்கொண்டு உனக்கு இந்தியாவி லிருக்கும் ஆபீசிலேயே வேலை கிடைக்குமா? அல்லது வேறு நாட்டிற்கு செல்ல வேண்டியிருக்குமா என்று உறுதியாக சொல்ல முடியாது.''

''கிடைக்காவிட்டால் நான் ரிசைன் செய்கிறேன்'' என்றாள் நந்தினி.

''அவசரப்பட வேண்டாம் நந்தினி. என்னால் முடிந் ததை செய்ய முயற்சிக்கிறேன். ஆல் த பெஸ்ட்'' என்றார் சியான்சாங் அவள் கைகளை குலுக்கி.

அவருக்கு நன்றி கூறி வெளியே வந்த நந்தினி அன்று மாலையே இந்தியாவிற்கு டிக்கெட் எடுத்தாள். வீட்டு ஓனரிடம் சென்று அவசரமாய் இந்தியா போக வேண்டி யிருப்பதாக சொல்லி அட்வான்ஸ் தொகையை திரும்பப்



பெற்றாள். முக்கியமான சில பொருட்களை சூட்கேசில் அடுக்கிவிட்டு சில்லரை பொருட்களை ஒரு அட்டை பெட்டியில் பேக் செய்துகட்டி வைத்தாள். சோபாவையும், கட்டிலையும், திரைச்சீலைகளையும், மலர்ஜாடிகளையும் பார்க்க பார்க்க, கெமியும் அவளுமாய் கடைகளில் அலைந்து வாங்கிவந்து பொருட்களால் வீட்டை நிறைத்த தும், ரசித்ததும் நினைவில் வந்து துக்கம் பொங்கியது. அதற்குமேல் அந்த வீட்டில் நிற்க முடியாமல், சூட் கேசுடன் ஏர்போர்ட் விரைந்தாள் நந்தினி.

ஏர்போட்டிலிருந்து கதிரின் நெம்பருக்கு டயல் செய்தாள்.

அவசரமாக கெமியும் தானும் இந்தியா போவதாக சொன்னவள், ''நாங்கள் குடியிருந்த வீட்டை காலி செய்துவிட்டோம். அங்கிருக்கும் பொருட்களை உங்கள் வீட்டிற்கு எடுத்து வந்து விடுங்கள் ப்ளீஸ்'' என்றாள். கதிர் திடுக்கிட்டது அவன் குரலிலேயே தெரிந்தது. ''வீட்டை காலி செய்துவிட்டு அவ்வளவு அவசரமாய் புறப்பட்டு போகுமளவு என்ன நடந்தது நந்தினி? யாருக்காவது உடம்பு சரியில்லையா?'' என்றான் பதட்டத்துடன்.

''எல்லோரும் நன்றாக இருக்கிறோம். இப்போது ஏர்போர்ட்டில் இருக்கிறேன். இந்தியா போனதும் விபரமாய் போன் பண்ணுகிறேன். இப்ப நேரமாச்சு. பை'' என்றபடி அவன் மறுபடி பேச இடம் கொடுக்காமல் போனை வைத்தாள் நந்தினி.

பார்மாலிட்டீஸ் எல்லாம் முடிந்து ப்ளைட்டில் ஏறி அமர்ந்தபோது முதன்முதலாய் இந்தியாவிலிருந்து வேலைக்காக கிளம்பி வந்தபோது இருந்த பரபரப்பும், உற்சாகமும் நினைவுக்கு வந்தது. அம்மாவிடமிருந்து

தப்பித்து வந்ததாக அன்று நினைத்தது எவ்வளவு முட்டாள்தனம்? பெற்றோர் தந்த உடலையும், உயிரையும் உணர்வையும் சுமந்து கொண்டு அவர்களை "விட்டு விடுதலையாகி" எங்கே போக முடியும்?

அம்மாவுக்கு ஆங்கிலத்தில் பேசத் தெரியாது. மார்டனாய் உடை உடுத்தத் தெரியாது. தன் சின்ன உலகத்துக்குள் வாழ்பவள். அதை விட்டு வெளியே வராதவள். நிறைய அறியாமையும் அல்ப சந்தோஷங்களும் நிறைந்தவள். ஆனாலும் அவள் என்னைப் பெற்றவள். கண்ணுக்குள் வைத்துக் காப்பாற்றியவள். தினம்ஒரு காதலுடன் சுற்றும் மார்கரெட்டின் அம்மாவை விட, தன் சுகமே பெரிதென்று பெற்ற குழந்தையை புறக்கணிக்கும் இலியானாவை விட என் அம்மா சிறந்தவள். கெமியை பிரிந்து பிரிவு துன்பத்தை அனுபவிக்கும் இந்த நேரத்தில், "உனக்காகத்தான் உயிரையே வெச்சிட்டிருக்கோம்" என்ற அம்மாவின் கடித வரிகளின் தாத்பர்யம் நன்றாக புரிந்தது. அம்மாவை உடனே பார்க்க வேண்டும் போலிருந்தது சீட்பெல்டை மாட்டியபடி சீட்டில் நன்றாக அமர்ந்து கண்களை மூடுகையில் வாய் "அம்மா... அம்மா..." என முணுமுணுத்தது. கண்களில் நீர் கோர்த்து நின்றது.

## 12



சென்னை விமான நிலையத்தில் இறங்கியதும் நந்தினிக்கு வெடவெடத்தது. இரண்டு வருடங்கள்



கழித்து இந்த மண்ணை மிதிக்கிறோம் என்று நினைத்தபடி ஒரு டாக்ஸி பிடித்தாள். வீட்டு முகவரியை சொல்லிவிட்டு அமர்ந்தபோது அழுக்கான சாலைகளும், கசகசத்த கூட்டமும், வியர்வையும் கூட வினோதமான உணர்வை ஏற்படுத்தியது. சென்னையும் இரண்டே வருடங்களில் நிறைய மாறியிருந்தது. உயரமான அலுவலக கட்டிடங்களையும், அபார்ட்மென்ட் வீடுகளையும் வேடிக்கைப் பார்த்தபடியே வந்தாள்.

"இந்த வீடுதானா பாரும்மா" என்ற டிரைவரின் குரலில் கலைந்து திரும்பிப் பார்த்தாள்.

வீட்டு வாயிலில் டாக்சி நின்றிருந்தது. பணத்தைக் கொடுத்துவிட்டு பெட்டிகளுடன் கீழே இறங்கினாள். வீடு எந்த மாற்றமும் இன்றி அதே போல் இருந்தது. தயக்கத்துடன் உள்ளே நுழைந்தபோது, சத்தம் கேட்டு அப்பா வெளியே வந்தார். இளைத்து கறுத்துப்போய், மழிக்கப்படாத தாடியுடன் இருந்தவரை பார்த்ததும் நந்தினிக்கு பேச்சே எழும்பவில்லை. அவரும் அவளை எதிர்பாராத அதிர்ச்சியில் நிற்க, "வெளியே சத்தம் கேட்டதே யாரது?" என்றபடி சுந்தரி வந்தாள். தலை வெளுத்துபோய், சுருங்கிய முகமும், தளர்ந்த நடையுமாக வந்தவளை நந்தினி பாய்ந்து சென்று அணைத்துக் கொண்டாள்.

ஒரு நிமிடம் திகைத்துப் போன சுந்தரி, "இப்பதான் எங்களை எல்லாம் பார்க்கணும்னு தோணுச்சா?" என்றபடி மகளின் நெற்றியிலும், கன்னங்களிலும் முத்தமிட, அதற்குமேல் தாங்க முடியாமல் நந்தினி அம்மாவின் மடியில் சரிந்து அழத் தொடங்கினாள். மகளின் தலையை

வருடியபடி சுந்தரியும் அழவும், சதாசிவம் தன் கண்களில் வழிந்த நீரை துடைத்துக் கொண்டு உள்ளே போனார். செம்பு குடத்திலிருந்து ஒரு டம்ளர் நீரை மொண்டு குடித்து தன்னை சமாளித்துக் கொண்டு, வெளியே வந்து மனைவியை அதட்டினார். ''வந்ததும் வராததுமா உட்காந்து அழணுமா? உள்ளே கூட்டி போய் சாப்பிட ஏதாவது குடு'' என்றார்.

அவர்கள் தன்னை திட்டாமல், கோபப்படாமல் இருப்பதிலிருந்து மன்னித்துவிட்டது புரிய, இவர்கள் அன்பு எத்தனை பெருந்தன்மையானது என நந்தினி நெகிழ்ந்து போனாள்.

''வா கண்ணு, உள்ள போய் குளிச்சிட்டு சாப்பிடலாம்'' என்று எழுந்த சுந்தரி அப்போதுதான் நினைவு வந்தவளாக ''உன் வீட்டுக்காரர் வரலியா?'' என்றாள்.

''இல்லை. அவருக்கு மும்பையிலேயே வேலை மாற்றிவிட்டார்கள். நான் மட்டும்தான் வந்தேன்.''

''மும்பையா? அப்ப இந்தியாவிலேயே இருப்பீங்கன்னு சொல்.'' பேசியபடியே அம்மா உள்ளே அழைத்துச் சென்றாள்.

சிமெண்டு தரை மெழுகிய பழையகால பாத்ரூமில் குளித்துவிட்டு வந்து சம்மணமிட்டு அமர்ந்து வாழை யிலையில் அம்மா சூடாய் போட்ட தோசைகளை சட்னி சாம்பாருடன் சாப்பிட்டபோது, இங்கிருந்த இருபத்தி இரண்டு வருடங்களில் இந்த சுவையை நான் உணர்ந்து கொள்ளவே இல்லை என்று தனக்குள் சொல்லிக் கொண்டாள். சுந்தரி சிங்கப்பூரைப் பற்றியும், கெமி, அவன் வேலையைப் பற்றியும் யோசித்து ஒவ்வொன்றாய்



கேட்டுக் கொண்டிருந்தாள். சதாசிவம் எதுவுமே பேசாமல் மகள் அருகே அமர்ந்து சட்னியையும், சாம்பாரையும் பரிமாறினார். டம்ளரில் நீரை நிறைத்து வைத்தார். டேபிள்பேனை நந்தினியின் பக்கமாய் திருப்பி வைத்தார்.

இரண்டு நாள்கள் அம்மாவின் அருகில் படுத்துக் கொண்டு உறவினர் வீட்டு கதைகளையும், நந்தினியின் தோழி, ரேகா, சுஜாதாவின் திருமணம் பற்றி பேசியதிலும் வேகமாய் கழிந்தன.

நந்தினி வந்திருப்பதை கேள்விப்பட்டு உறவினர்கள் ஒவ்வொருவராய் வந்து பார்த்துவிட்டு போனார்கள். சுந்தரி அவர்களிடம் நந்தினி திருமணம் பற்றிய தங்கள் அதிருப்தியை சிறிதும் வெளிக்காட்டிக் கொள்ளாமல் சமாளித்தாள். மணமாகி பிறந்த வீட்டுக்கு வரும் பெண்ணை எல்லா அம்மாக்களும் சீராட்டுவது போல் சீராட்டினாள். எனவே நந்தினிக்கும் மற்றவர்கள் மத்தியில் காட்சிப் பொருளாய் இருக்க வேண்டிய அவசியமில்லாமல் போனது. நந்தினியை அழைத்துப் போய் கோவில் அர்ச்சனை செய்து விட்டு வந்தார்கள். கெமிக்கு அடிபட்ட போது மனம் உருகி நின்றதைப் போல் இப்போது நந்தினியால் முடியவில்லை. நான் செல்லும் கோவிலுக்கு உள்ளே இருக்கும் கடவுள் முருகனாகவோ, யேசுவாகவோ இருந்தால்என்ன? எனக்குள் இருப்பது கெமிதான் என்பது ஏன் அவனுக்கு புரியவில்லை? என்ற தவிப்புதான் எழுந்தது.

சனிக்கிழமை காலையில் நந்தினி எழுந்ததும், ஒரு ஸ்டூலில் அவளை உட்கார வைத்து, நல்லெண்ணெயை

இதமான சூட்டில் தலையில் கொட்டி பரபரவென தேய்த்தாள் சுந்தரி.

"ஒரு அரைமணி நேரம் அப்படியே ஊறட்டும் நந்தினி. சூடு இறங்கும். அப்புறமாய் தலைக்குக் குளிக்க லாம்" என்றபடி கணவருக்கு காபி கலந்து கொண்டுவந்து தந்தாள்.

மனைவியிடம் டம்ளரை வாங்கியபடி சதாசிவம் கேட்டார். "மாப்பிள்ளை இங்கே வருவாரா அம்மா? இல்ல நான் கொண்டுபோய் விடணுமா உன்னை? உனக்கு இன்னும் எத்தனை நாள் விடுமுறை இருக்கிறது?"

சொல்ல வேண்டிய நேரம் வந்துவிட்டது என்றிருந்தது நந்தினிக்கு. மறைத்து பிரயோஜனமில்லை. நல்லதோ கெட்டதோ பெற்றோர் தெரிந்து கொள்வது அவசியம் என்று தோன்றவே. சுருக்கமாய் நடந்த விஷயங்களை கூறினாள்.

குறுக்கிடாமல் கேட்ட சதாசிவம், "யாரை கல்யாணம் பண்ணிக்கிட்டாலும் நீ சந்தோஷமா இருந்தா சரின்னு இல்ல இருந்தோம்!" என்றார் பெருமூச்சுடன்.

"பொண்ணு வந்திருக்கான்னு சந்தோஷமா இருந் தேன். கடைசியில இப்படி ஒரு குண்டை தூக்கிப் போட றியே நந்தினி?" என்றாள் அம்மா புலம்பலாக.

"சுந்தரி பேசாம இரு. என்ன ஆகிப்போச்சுன்னு இப்ப புலம்பற? யோசித்து முடிவு செய்யலாம்" என்றார் சதாசிவம்.

"உங்க கல்யாணம் எங்க, எப்படி நடந்தது நந்தினி?" என்றார் அவளிடம்.



நந்தினி திருமணத்தை பற்றி விவரித்ததும், "நீ நம்ம முறைப்படியோ, இல்ல அவங்க முறைப்படியோ திரு மணம் செய்து கொண்டிருந்தால் கெமியால் இவ்வளவு எளிதாக விலகியிருக்க முடியாது நந்தினி."

"மனசு ஒத்துப்போன பிறகு மத்த எதுவும் முக்கிய மில்லைன்னு நினைச்சோம்."

"ஆனா மனசில அபிப்ராய பேதங்கள் ஏற்படும்போது சம்பிரதாயங்களுக்கு முக்கியத்துவம் ஏற்படும் நந்தினி. உன் கழுத்தில் தாலியோ, விரலில் மோதிரமோ இல்லை ரெஜிஸ்டர் ஆபீசிலும் உங்கள் திருமணம் பதிவு செய்யப் படவில்லை. அட்லீஸ்ட் உங்க திருமண போட்டோ கூட இல்லாத நிலையில் நீ கெமியின் மனைவிதான் என்ற பதை எப்படி நிரூபிப்பாய்?"

"நான் கெமியிடம் கண்மூடித்தனமாய் அன்பு செலுத் தினேன். என் படிப்பையும் வளர்ப்பையும் மறந்து போய் ஒரு சராசரி இந்திய மனைவியாய் அவனுக் காகவே வாழ்ந்தேன்" நந்தினியின் கண்களில் நீர் சுரந்தது.

"உன்னை நிரூபிக்க இதெல்லாம் போதாது நந்தினி" என்றார் சதாசிவம் ஆயாசத்துடன்.

கெமியின் கடிதமுடிவில் எழுதியிருந்த "ஸ்டில் ஐ லவ் யு" என்ற வரிகள் நினைவு வந்தன. "யாருக்கும் நிரூபிக்க வேண்டிய அவசியம் கூட இல்லப்பா. கெமி ஏதோ குழப்பத்தில் இருக்கிறானே தவிர அவன் அன்பில் எந்த மாற்றமும் இல்லை" என்றாள் நந்தினி.

"என்னவோ உனக்கு அந்த நம்பிக்கை இருந்தா சரி" என்றபடி எழுந்தார் சதாசிவம்.

அடுத்து சில நாட்கள் அமைதியிலேயே கழிந்தன. சதா எதையாவது பேசும் சுந்தரி கூட, எந்த வார்த்தையாவது மகளை காயப்படுத்தி விடுமோ என்ற பயத்தில் அதிகம் பேசாமல் இருந்தாள்.

சில நாட்கள் அமைதியிலேயே கழிய, அம்மாவுக்கு உதவியாய் சமையலறையில் காய் நறுக்கும்போது உள்ளே வந்த சதாசிவம், ''நந்தினி, சென்னையில் கெமியின் வீட்டு முகவரியை கொடு'' என்றார் அவளிடம்.

முகவரியைக் கூட தெரிந்து கொள்ளாமல் இரண்டு வருடங்கள் ஒருவனை காதலித்து குடித்தனம் நடத்தியிருக்கிறோம் என்பது நந்தினிக்கு அப்போதுதான் உறைத்தது. திருமணத்திற்கு முன் கெமி இந்தியா வந்தபோது ஒருமுறை அவனுடன் போனில் பேசியிருக்கிறாள். பிறகு அங்கு பேச வேண்டிய தேவை ஏற்படாததால் அவள் நெம்பரை கவனமாக எடுத்து வைத்திருக்கவில்லை. கெமி பேச்சு வாக்கில் தன் வீடு அண்ணாநகரில் இருப்பதாக குறிப்பிட்டிருக்கிறான். ஆனால் சரியான முகவரி இருந்தாலே கண்டுபிடிக்க முடியாத அண்ணாநகரில் கெமியின் வீட்டை எங்கே தேடுவாள்? ஏதேதோ யோசித்த நந்தினிக்கு தன் சித்தப்பா பெண் மாலதியின் திருமணத்தில் கெமியை சந்தித்த நினைவு வந்தது.

அப்பாவிடம் மாலதியின் நெம்பரை கேட்டு போன் பண்ணி அவள் கணவன் செந்தில் மூலமாய் ஒருவழியாய் கெமி வீட்டு முகவரி கிடைத்தது.

இன்று என்ன கிழமை? என்று காலண்டரைப் பார்த்த சதாசிவம், ''இன்று செவ்வாய், இன்னிக்கு வேண்டாம்.



ஞாயிற்றுகிழமை முகூர்த்தநாள். எல்லோருக்கும் விடுமுறை நாளும் கூட. எல்லோரும் வீட்டில் இருப்பார்கள். ஞாயிறு அவர்கள் வீட்டிற்கு போகலாம் நந்தினி'' என்றார் அவளிடம்.

''அங்க போய் என்னப்பா பேசப் போகிறோம்?'' என்ற நந்தினியிடம்,

''அதை அங்கு போனபிறகு பார்த்துக் கொள்ளலாம்'' என்று முடித்துக் கொண்டார் சதாசிவம்.

ஞாயிற்றுகிழமை அம்மா, அப்பாவுடன் கிளம்பி கெமி வீட்டிற்கு செல்கையில் அப்பா எதற்கு நம்மை இங்கே அழைத்து வருகிறார் என்ற யோசனை குடைந்தது. இவர்கள் சென்றபோது தேவாலயத்தில் ஞாயிறு பிரார்த்தனை முடிந்து கெமி வீட்டினர் அப்போதுதான் வீடு திரும்பியிருந்தனர். நெற்றி நிறைய திருநீரும், கழுத்தில் உத்திராட்சமுமாய் சதாசிவத்தையும், மஞ்சள் பூசிய முகத்தில் குங்குமம் மின்ன அவருக்கு பின்னால் நிற்கும் சுந்தரியையும், அவளுக்கருகே புடவையில் குத்துவிளக்காய் சுடர்விட்ட நந்தினியையும் பார்த்த கேத்ரின் வியப்புடன் ''நீங்க யாரைப் பார்க்கணும்?'' என்றாள் அவர்களிடம்.

''உங்களையும், உங்க கணவரையும்தான் பார்க்க வந்திருக்கோம்'' என்றார் சதாசிவம்.

''உட்காருங்க'' என்று சோபாவை காட்டிவிட்டு பேனை முழுவேகத்தில் சுழல விட்ட கேத்ரின் உள்ளே திரும்பி கணவரை அழைத்தாள்.

கேத்ரின் முகத்தில் தெரிந்த கெமியின் சாயலை ஊன்றி கவனித்த நந்தினி. ஒரு சுவாரஸ்யத்துடன் கெமியின்

வீட்டை ஆராய்ந்தாள். ஜோசபின் ஜூசுடன் வரவே, அதை பருகியபடி இது கெமியின் அண்ணியாகத்தான் இருக்கும்'' என ஊகித்தாள் நந்தினி.

லூசான பைஜாமா குர்த்தாவில் எதிரே வந்து அமர்ந்த டேவிட் தேவசகாயம் ''சொல்லுங்க. என்ன விஷயமா வந்திருக்கீங்க?'' என்றார் புன்னகையுடன்.

''வணக்கம். என் பெயர் சதாசிவம் பிள்ளை. அரசு உத்தியோகம் எனக்கு. இவள் என் மனைவி சுந்தரி. சென்னையில் சொந்த வீடும், திருச்சியில் கொஞ்சம் நிலபுலன்களும் உண்டு. பெண் கல்யாணத்துக்குன்னு பணமும், நகையும் என்னால முடிஞ்ச அளவு சேர்த்து வெச்சிருக்கேன். எங்களுக்கு ஒரே பெண்ணுங்கறதால எங்ககிட்ட இருக்கிற எல்லாமே அவளுக்குதான். நாங்க பெரிய பணக்காரங்க இல்லை. அதே சமயம் யாருக்கும் குறைஞ்சவங்களும் இல்லை.''

''ஒரு நிமிஷம்.. இதெல்லாம் ஏன் எங்கிட்ட சொல்றீங்க?'' தேவசகாயம் குழப்பத்துடன் குறுக்கிட்டார்.

''ஓ, முக்கியமானதை சொல்லலியா? இவ நந்தினி, நிறைய படிச்சிருக்கா, சிங்கப்பூர்ல வேலை பாத்துட்டிருந்தா. என் மகள். இப்ப உங்களுக்கு மருமகள்'' சதாசிவம் சொல்லவும் அதுவரை இருந்த சகஜபாவம் மறைந்து சூழ்நிலையில் ஒரு இறுக்கம் வந்தது.

ஜோசபினும், ஷெரினும் நந்தினியை ஆர்வத்துடன் பார்க்க, கேத்ரினும், டேவிட் தேவசகாயமும் அளவிடும் பாவனையில் பார்த்தனர். சுற்றி இருப்பவர்கள் பார்வை ஊசியாய் துளைக்க, நந்தினி யாரையும் எதிர்கொள்ள முடியாமல் ஹாலில் விரிக்கப்பட்டிருந்த நீலநிற



கார்பெட்டை வெறித்தாள். எல்லோரும் அமைதியாய் அமர்ந்திருக்க, சதாசிவம் தொடர்ந்து பேசினார்.

''நான் காலையில கண்விழிக்கும்போதே, சிவ சிவான்னு சொல்லிகிட்டேதான் எழுந்திருப்பேன். உங்க மதத்தின் மீதும் சம்பிரதாயங்கள் மீதும் உங்களுக்கிருக்கிற அசைக்க முடியாத நம்பிக்கை எனக்கும் என் மதத்தின் மீது இருக்கு. நந்தினி எங்களை கேட்காம, யாரையோ கல்யாணம் பண்ணிகிட்டாங்கற கோபமும் துக்கமும் எங்களுக்கு ரொம்ப நாள் இருந்தது. ஆனால் நாளடைவில் எத்தனையோ விஷயங்களையும், சம்பவங்களையும் பார்த்து பழகிப்போன மனசு பக்குவப்பட்டு போனது. நாம பார்த்து நடத்தி வைத்தாலும், அவங்களா பார்த்துகிட்டாலும் வாழப்போறது அவங்கதானே என்ற எண்ணத்தில், பிள்ளைங்க எங்க இருந்தாலும் நல்லா இருந்தா சரின்னு கடவுளை வேண்டிக் கொண்டிருந்தோம். இப்ப திடுதிப்னு நந்தினி வந்து நின்னு என்னென்னவோ சொல்றா. ரெண்டு பேருக்கும் ஒருத்தர் மீது ஒருத்தர் அன்பு இருக்குங்கறா. ஆனா தங்களுடைய உணர்வுகளே தங்களுக்கு எதிரியாகி விட்டதாக சொல்கிறாள். இந்த மாதிரி நான் கேட்டதே இல்ல. எனக்கொன்றும் புரியவும் இல்லை.''

சதாசிவம் நிறுத்தாமல் தொடர்ந்து பேசினார். ''எங்கக்கா ஒருத்தி திருச்சியில இருக்கா. கல்யாணமான ஒருமணி நேரத்திலேயே மாப்பிள்ளை இறந்து விட்டார். ஆனால் இவள் இன்னும் விதவை கிழவியா ஒரு ஓரத்தில் உட்கார்ந்திருக்கிறாள். அது அந்தக் காலம். இருந்தாலும் ஒரு வருஷமோ இல்ல. ஒரு மணி நேரமோ, பெண்

ஒருவனுடன் சேர்ந்துவிட்டால் அதுதான் ஆயுள் முழுதுக்கும் என்ற நம்பிக்கை எனக்கு. உங்கள் மருமகளை உங்களிடம் ஒப்படைக்க வந்திருக்கிறேன். அவளுக்கு ஒரு சமூக அங்கீகாரத்தை நீங்கள்தான் தரவேண்டும். அவள் பெயரை மாற்றுவீர்களோ மதம் மாற்றுவீர்களோ, அது உங்கள் விருப்பம். என் மாமியார் வீட்டில் பெருமாள்தான் குலதெய்வம். நெற்றியில் நாமம் தரிப்பார்கள். என் வீட்டினர் சிவனை கும்பிட்டு திருநீறு பூசுபவர்கள். திருமணமாகி வந்த பிறகு என் மனைவியும் திருநீறு பூசி சைவ கடவுள்களை வணங்கத் தொடங்கிவிட்டாள். அதுமாதிரிதான் நந்தினியும், சிவானானாலும் யேசுவானாலும் போகிற வழி ஒண்ணுதானே!''

சதாசிவம் பேசி முடித்ததும் அங்கே கனத்த அமைதி நிலவியது. சாப்பிடுவது, தூங்குவது மாதிரி சிறுவயதிலிருந்து கோவில் பூஜை விஷயங்களையும் அத்தியாவசியமான ஒன்றாக கடைபிடித்த அப்பா தன் வாழ்க்கைக்காக கடவுளிடம் கூட காம்ரமைஸ் செய்து கொள்கிறார் என்று நினைக்கையில் நந்தினிக்கு வருத்தமாக இருந்தது.

''கெமி இப்போது எங்கேயிருக்கிறான்?'' என்றார் தேவசகாயம் நந்தினியிடம்.

''மும்பையில் இருக்கிறார்'' என்றாள் நந்தினி.

சற்று யோசித்த அவர் திரும்பி மனைவியிடம் ஏதோ பேசிவிட்டு சதாசிவத்தை பார்த்தார்.

''நான் சும்மா பெருமைக்காக பொய் சொல்ல விரும்பல. உங்க அளவுக்கு நடந்த விஷயத்தை ஏற்றுக் கொள்கிற பக்குவம் எங்களுக்கு இன்னும் வரல. இருந்தாலும்



நடந்த திருமணத்தை முறிக்கச் சொல்லி எந்த மதமும் சொல்வதில்லை. எங்களுக்கு உடன்பாடில்லாத விஷயம் அது. கெமி வருகிற வரை நந்தினி இங்கே இருக்கட்டும். அவன் வந்த பிறகு யோசித்து முடிவெடுக்கலாம்'' என்றார்.

சதாசிவம், சுந்தரி இருவர் முகங்களும் ஸ்விட்ச் போட்டாற்போல் மலர்ந்துபோனது. ''அப்ப மாலையில் நந்தினியின் பொருட்களை கொண்டு வந்து தருகிறோம். இன்று நல்ல நாள். நந்தினி இன்றே இங்கு இருக்கட்டும்'' என்றபடி எழுந்தனர்.

வாசல்வரை பெற்றோருடன் நடந்த நந்தினியிடம் ஆயிரம் புத்திமதிகள் சொல்லி கண்கலங்க விடைபெற்று சென்றாள் சுந்தரி.

பெற்றோர் சென்றதும் உள்ளே வந்த நந்தினி என்ன செய்வது? எங்கே அமர்வது? யாருடன் என்ன பேசுவது என்று புரியாமல் தயங்கி நின்றாள். அவள் அருகே வந்த ஜோசபின் ''வா நந்தினி'' என நட்புடன் புன்னகைத்தாள்.

''உனக்கு வீட்டை சுத்திக் காண்பிக்கிறேன்'' என நந்தினிக்கு அந்த வீட்டை காண்பித்தாள். வீடு மார்பிள் தரை பதிக்கப்பட்டு அகலமாக வசதியாக இருந்தது. எல்லோருக்கும் ஒரே மாதிரியான தனித்தனி அறைகள் இருந்தன. கெமியின் அறையை காட்டிய ஜோசபின் ''அத்தை உன்னை இந்த ரூமிலேயே தங்கிக் கொள்ளச் சொன்னார்கள் நந்தினி. நீ இப்போது டிவி பார். அல்லது படுத்து ஓய்வெடு. நான் அப்புறம் வருகிறேன்'' என கீழே போனாள்.

கெமியின் அறையை நந்தினி ஒரு ஆர்வத்துடன் ஆராயத் தொடங்கினாள். டி.வி. ஸிடி ப்ளேயர், ஏசி என தேவையான பொருட்கள் அனைத்தும் இருந்தன. ஹேங்கர்களில் சில சட்டைகள் தொங்கின. கெமி இந்த அறையில்தான் தூங்கியிருப்பான். இந்த சேரில் அமர்ந்திருப்பான். டேபிளில் புக்கை வைத்து எழுதியிருப்பான். இந்த ஜன்னல் கம்பிகளை பிடித்தபடி தெருவை வேடிக்கைப் பார்த்திருப்பான். நந்தினி அங்கிருந்த பொருட்களில் கெமியைத் தேடத் தொடங்கினாள்.

இரவு சதாசிவமும் சுந்தரியும் வந்தார்கள். அவர்களுடன் இதே ஊரில் வசிக்கும் சில உறவினர்களும் வந்திருந்தார்கள். சமையல் பாத்திரங்கள், ப்ரிஜ், கட்டில், பீரோ, வெள்ளி சாமான்கள் என இரண்டு வண்டிகளில் பொருட்கள் வந்தன. கனமான விலை உயர்ந்த காஞ்சிபுரம் பட்டு, சன்னமான மைசூர் பட்டு, சுடிதார் வகைகளுடன், வைரநெக்லஸ், தோடு வளையல், தங்கத்தில் ஒட்டியாணம், செட்டு செட்டாய் நகைகள் என்று நந்தினிக்காக தாங்கள் சேகரித்து வைத்தவற்றை எல்லாம் அடுக்கவும் கேத்ரினுடன் சேர்ந்து நந்தினியும் பிரமித்துப்போனாள். அம்மா தனக்காக இவ்வளவும் சேர்த்து வைத்திருக்கிறாள் என்பதே இதுவரை அவளுக்குத் தெரியாது.

தேவசகாயம் தர்மசங்கடத்துடன் சதாசிவத்தின் அருகே சென்று அமர்ந்தார்.

"நா சொல்றேன்னு தப்பா நினைக்காதீங்க. நாங்க இதையெல்லாம் எதிர்பார்க்கிறவங்க இல்ல. இப்படி சீர்வரிசையை நிரப்பிதான் இந்த திருமணத்தை



நிலைநிறுத்தணும்னும் அவசியம் இல்லை. எங்க வீட்டில் எல்லோரும் நன்றாக சம்பாதித்து நிறைவாக இருக்கிறோம். எங்கள் மூத்த மருமகளுடன் பிறந்தவர்கள் மூன்று பெண்கள். சற்று வசதி குறைந்த இடம் என்றாலும் பெண் நல்லவள். எங்கள் சமூகத்தை சேர்ந்தவள் என்பதால் எதையும் நாங்கள் பொருட்படுத்தவில்லை. இன்னும் அவளை எங்கள் சொந்தப் பெண்ணாகத்தான் நினைக்கிறோம். இந்த பொருட்களால் அவள் மனதில் வேறுபாடு எதுவும் வந்துவிடக்கூடாது. அதுமட்டுமின்றி கெமியும் நந்தினியும் இங்கு சேர்ந்து இருக்காத நிலையில் நாங்கள் இவற்றை எல்லாம் வாங்கி வைத்துக் கொள்வது நியாயமும் அல்ல."

டேவிட் தேவசகாயத்தின் பெருந்தன்மையில் நெகிழ்ந்து போனார் சதாசிவம். "இதெல்லாம் உங்க வீட்டுக்குன்னு வாங்கின பொருட்கள் இல்லை. நந்தினிக்காக நாங்க சேகரித்து வைத்தவை. அவளுக்கு சேரவேண்டியவை. நாங்கள் இதை என்ன செய்வது சொல்லுங்கள்?"

தேவசகாயம் யோசிக்க, கேத்ரின் பதில் சொன்னாள். "இந்த பொருட்கள் எல்லாம் உங்கள் வீட்டிலேயே ஒரு அறையில் வைத்துப் பூட்டுங்கள். கெமியும் நந்தினியும் தங்கள் வாழ்க்கையைப் பற்றி பேசி ஒரு முடிவெடுக்கட்டும். பிறகு அவர்கள் எங்கே வசிப்பது என்று முடிவு செய்கிறார்களோ அங்கே எல்லாத்தையும் கொடுத்தனுப்பி விடுங்கள்."

அவர்கள் பேச்சிலுள்ள நியாயம் புரியவே. கொண்டு வந்த பொருட்களை அதே வண்டியில் வீட்டிற்கு திருப்பி

அனுப்பினார் சதாசிவம். ஒரு சில நகைகளை மகளுக்கு அணிவித்து விட்டு, மீதி நகைகள் தன் பெட்டியில் வைத்து பத்திரமாக பூட்டிய சுந்தரி, இரவு சாப்பாட்டிற்கு பின் தன் உறவினர்களுடன் விடைபெற்று கிளம்பினாள்.

* * *

விடிகாலை உறக்கத்திலிருந்த நந்தினி போர்வையை இழுத்து விட்டுக் கொண்டு திரும்பிப் படுத்தாள். தேவாலயத்திலிருந்து காலை பிரார்த்தனைக்கான மணி யோசை கேட்டது. புரண்டுப் படுக்கையில் சி.டியிலிருந்து கசிந்த பாடல் சத்தம் வீடு பூராவையும் நிறைத்தது.

"யேசுவே.. என் ஜீவனே..."

சட்டென்று புலன்கள் விழித்தன. போர்வையை உதறிவிட்டு எழுந்து அமர்ந்தாள். பல் தேய்த்துவிட்டு வந்து ஜன்னல் திரையை விலக்கினாள். தலையை புடவையில் போர்த்தியபடி பெண்களும், ஆண்களுமாய் காலை பிரார்த்தனைக்கு சென்று கொண்டிருந்தனர். பால் பாக்கெட்டுகளுடன் வீடு வீடாக ஏறி இறங்கும் பெண்கள், கத்திரிக்காய், முருங்கைக்காய் என குரல் கொடுத்தபடி செல்லும் காய்கறி வண்டிக்காரன், நடைபயிற்சிக்காக செல்லும் பெரியவர்கள், ஜாகிங் செய்யும் இளைஞர்கள் என தெரு கலகலப்பாக இயங்கிக் கொண்டிருந்தது. இன்னும் இரண்டு மணி நேரத்தில் இந்த கலகலப்பு பரபரப்பாக மாறிவிடும். பள்ளி கல்லூரிக்கு செல்லும் மாணவர்களும், அலுவலகங்களுக்கு செல்பவர்களுமாய் எல்லோரும் தலைதெறிக்க ஓடத் தொடங்குவார்கள்.



நந்தினியும் இதுவரையும் ஓடிக் கொண்டுதான் இருந்தாள். இப்போதுதான் என்ன செய்வது என்று புரியாமல் மலைப்பாக இருக்கிறது.

வேலைக்காரப் பெண் மேரி மெதுவாய் கதவைத் தட்டிவிட்டு காபி ட்ரேயுடன் உள்ளே வந்தாள். கப் அன் சாஸரில் இருந்த காபியை டேபிள் மீது வைத்துவிட்டு "எட்டு மணிக்கு டிபன் ரெடியாயிடும்" என்றபடி கீழே இறங்கி சென்றுவிட்டாள்.

காபியை குடித்த நந்தினி குளித்துவிட்டு லாவண்டர் நிற சுடிதாரை அணிந்தாள். நெற்றியில் சின்னதாய் பொட்டிட்டு தலையை வாரி ஒரு ரப்பர்பேண்டை மாட்டியபடி கீழே இறங்கி சென்றாள். தன் மகனுக்கு ஸ்கூலுக்கு டை அணிவித்து ரெடி பண்ணிக் கொண்டிருந்த ஜோசபின் திரும்பிப் பார்த்து புன்னகைத்தாள். பளிச்சென்ற உடையில் கண்களை நிறைத்த நந்தினியிடம் "இந்த டிரஸ் உனக்கு ரொம்ப நல்லா இருக்கு நந்தினி" என்றாள்.

"தேங்க்யூ" என்ற நந்தினி மேற்கொண்டு எதையும் நினைக்காமல் டில்சனின் அருகே சென்று அமர்ந்தாள். டில்சன் பாட்டி ஜாடையில் இருந்தான். கெமியும் தன் அம்மாவை கொண்டிருக்கவே, டில்சனை பார்க்கும் போது சின்ன வயது கெமியை நினைவுபடுத்தினான்.

"டில்சன் இங்கே வாயேன்" என்றபடி அவனை இழுத்து முத்தமிட்டாள் நந்தினி.

"நீ என்ன படிக்கிறாய்?"

"செகண்ட் ஸ்டண்டார்டு."

''நன்றாக படிப்பாயா டில்சன்?''

அவன் கூச்சத்துடன் தலையசைத்தான். ஜோசபின் அவனுக்கு தட்டில் உணவுடன் வரவும், ''டில்சன் நான் ஊட்டட்டுமா உனக்கு?'' என்றபடி தட்டை வாங்கிக் கொண்டாள் நந்தினி. டில்சனின் பள்ளிக் கதைகளை பேசியபடி அவனுக்கு நந்தினி ஊட்டிவிடவே, சமர்த்தாய் சாப்பிட்டு 'பை' சொல்லி அவளுக்கு முத்தமிட்டு பள்ளிக்கு கிளம்பிப் போனான் டில்சன். மகனை கணவனுடன் அனுப்பிவிட்டு உள்ளே வந்த ஜோசபின் ''எனக்கு ஆச்சரியமா இருக்கு நந்தினி. டில்சன் இவ்வளவு அமைதியா சாப்பிட்டு கிளம்பியதே இல்லை. எல்லோரையும் படுத்திவிட்டு கடைசியில் நேரமானதும் பாலைக் குடித்துவிட்டு ஓடுவான்'' என்றாள்.

தேவசகாயமும் ராபர்ட்டும் டில்சனை பள்ளியில் விட்டுவிட்டு அப்படியே அலுவலகம் சென்றுவிடுவார்கள். மதிய சாப்பாடு வீட்டிலிருந்து போகும் என்ற விபரங்களை ஜோசபின் நந்தினியிடம் சொல்லிக் கொண்டிருக்கும் போது, ''நாம சாப்பிடலாமா?'' என்றபடி ஷெரின் வந்தாள்.

ஷெரினுடன் ஏதோ பேசியபடி ஜோசபின் முன்னால் சொல்ல, நந்தினிக்கு கூட போகலாமா, கூடாதா? என்று தயக்கம் வந்தது. பேசியவாறே பின்னால் திரும்பிய ஷெரின், ''ஏன் அங்கேயே நிற்கிறாய்? உன்னை தனியாக அழைக்க வேண்டுமா?'' என்றாள்.

''ஷெரின் என்ன இது? அவள் பாவம் புதுசு. தயக்கமாகத்தான் இருக்கும்'' என்றாள் ஜோசபின்.



''புதுசோ பழசோ, இது நம்ம வீடுங்கற எண்ணம் வந்தால் தயக்கத்திற்கு இடமே இல்லை'' என்றாள் ஷெரின்.

இது உன் வீடு என்று ஷெரின் சொல்லாமல் சொல்வது புரிய, முகம் மலர்ந்து அவர்களுடன் நடந்தாள் நந்தினி.

கேத்ரின் குளிக்க போயிருக்க, இவர்கள் மூவரும் சாப்பிட அமர்ந்தார்கள். இரண்டு இட்லிகளை நந்தினியின் தட்டில் வைத்து, பீங்கான் கிண்ணத்திலிருந்த சிக்கன் குருமாவை ஜோசபின் நந்தினியின் தட்டில் ஊற்றப் போனதும், நந்தினி அவள் கைகளைப் பற்றினாள்.

''எனக்கு நான்வெஜ் சாப்பிட்டு பழக்கம் இல்லை. தப்பா நினைக்காதீங்க ப்ளீஸ்'' என்றாள் கெஞ்சலுடன்.

''இதில் தப்பா நினைக்க என்ன இருக்கு? உனக்கு எது பிடிக்குமோ சாப்பிடு'' என்றாள் ஷெரின்.

இட்லி பொடியை எண்ணெயுடன் குழைத்து இட்லியில் தொட்டு சாப்பிடத் தொடங்கினாள் நந்தினி.

அந்த வீட்டு நடைமுறைகள் நந்தினிக்கு மிகவும் புதுசாக இருந்தது. அங்கு தினமும் அசைவம் சமைத்தார்கள். நந்தினிக்கு தனியாக சைவ சாப்பாடும் செய்து வைத்திருந்தது. சிங்கப்பூர் ரெஸ்ட்டாரெண்டுகளில் கெமியும் அவளும் ஒரே டேபிளில் எதிரெதிரே அமர்ந்து சைவமும் அசைவமுமாய் சாப்பிட்டிருக்கிறார்கள். நந்தினிக்கு பெரிதாக எதுவும் தோன்றியதில்லை. ஆனால் இங்கு சமைக்கப்பட்ட அசைவு உணவுக்கு பிரத்யேக

வாசம் இருந்தது. முதலில் நான்கு நாட்கள் சாப்பாட்டறைக்குள் நுழையும்போதே வயிற்றை புரட்டியது. முதலில் சகித்துக் கொண்ட நந்தினிக்கு நாளடைவில் அந்த மணம் பழகிப்போனது. பிறகு அவளே ஜோசபினிடம் "அக்கா இன்னிக்கு எல்லோரும் டயட்டிங்கா என்ன? கிச்சன்லயிருந்து வாசமே வரலையே!" என்று கேலியாக கேட்கத் தொடங்கினாள்.

டில்சன் நந்தினியிடம் மிகவும் ஒட்டுதலாக இருந்தான். அவன் பள்ளிக்கு சென்றது போக மீதி சமயங்களில் அவனுக்கு பாடம் சொல்லிக் கொடுப்பதும் விளையாடுவதுமாய் நந்தினியின் பொழுது அவனுடன் கழிந்தது. ராபர்ட் மிக அமைதியானவனாக இருந்தான். நந்தினியை பார்க்கும் சமயங்களில் வாஞ்சையுடன் புன்னகைத்தான். ஷெரின் உள்ளூரிலேயே இருந்ததால் அடிக்கடி வந்து போனாள். அவளுக்கு ஒரே பெண் என்றும் ஊட்டியில் ஆறாம்வகுப்பு படிப்பதாகவும் சொன்னாள்.

ஷெரின் படபடப்பாய் பேசினாலும், பேச்சில் ஒரு நெருக்கமும் உரிமையும் தெரிந்தது. மாமியார் மாமனாரைப் பொறுத்தவரை நந்தினியிடம் நெருக்கத்தையும் காண்பிக்கவில்லை. அதே சமயம் விலக்கியும் வைக்கவில்லை. நந்தினிக்கான சைவசமையலைக் கூட மாமியார்தான் சமைத்தாள். ஆனால் ஜோசபினுக்கும் மாமியாருக்கும் உள்ள நெருக்கத்தையும், இருவரும் சேர்ந்து சமைப்பதையும் நந்தினியால் வேடிக்கைப் பார்க்கத்தான் முடிந்தது. சதாசிவமும் சுந்தரியும் தினமும் மகளுக்கு போன் செய்து பேசினார்கள்.

கெமியிடமிருந்து இங்குபோன் எதுவும் வராததிலிருந்து தான் இங்கே இருப்பது அவனுக்கு தெரியாது என்றுதான்



தோன்றியது. எப்போதும் சுறுசுறுப்பாய் ஏதாவது செய்தபடி இருக்கும் நந்தினிக்கு சாப்பிடுவதும், தூங்குவதுமான அமைதியான வாழ்க்கை சிறிது போரடிக்கத்தான் செய்தது.

## 13

ஜோசபினுடைய அம்மாவிற்கு உடல்நிலை சரியில்லை என்று அவள் வீட்டிலிருந்து தகவல் வந்தது. அம்மாவைப் பார்த்துக் கொள்ளவென்று ஜோசபின் பத்துநாள் தங்கும் எண்ணத்துடன் கிளம்பிப் போயிருந்தாள். டில்சனை மருத்துவமனையில் வைத்துக் கொள்ள முடியாது என்பதாலும், அவனுக்கு ஸ்கூல் இருந்ததாலும் அவன் அம்மாவுடன் போகவில்லை. முதன் முதலாய் மகனை விட்டுவிட்டு போக தயக்கம் காட்டியவளிடம், "நீ போய் உங்கம்மாவை கவனித்துக் கொள் ஜோசபின். டில்சன் அழுதால் நாங்களே அவனை உன்னிடம் கொண்டுவந்து விடுகிறோம். இங்கிருந்து ஒரு மணிநேரப் பயணம் அவ்வளவுதானே." என மாமியாரும், மாமனாரும் சமாதானப்படுத்தி அனுப்பி வைத்திருந்தனர்.

மாலையில் பள்ளி முடிந்து வந்த டில்சன் அம்மாவை அழைத்தபடியே உள்ளே வந்தான்.

''அம்மா இப்ப வந்துடுவாங்க டில்சன். அதற்குள் நாம குளிச்சி, சாப்பிட்டிடலாமா?'' என்றபடி நந்தினி அவனை அழைத்துச் சென்று குளிக்க வைத்து உடையணிவித்து, போகோ சேனலை பார்த்தபடியே சாப்பிட வைத்தாள்.

பிறகு உட்கார்ந்து அவனை படிக்க வைத்து வீட்டு பாடங்களை செய்ய வைத்தாள். சிறிதுநேரம் நந்தினி யுடன் விளையாடிவிட்டு கதை பேசி சிரித்தபடியே இரவில் உறங்கிப்போனான். அம்மாவை மட்டுமல்ல தாத்தா பாட்டியைக் கூட அவன் தேடாதது நந்தினிக்கு ஆச்சரியமாக இருந்தது. குழந்தைகளின் உலகமே தனிதான் போலும். அன்பு கண்ட இடத்தில் ஒட்டிக் கொள்கிறார்கள். ஆட்களில் பேதம் பார்க்க தெரிவ தில்லை. இரவு மனைவியை விட்டுவிட்டு தாமதமாக திரும்பி வந்த ராபர்ட் ''டில்சன் அழுதானா மம்மி?'' என கேத்ரினிடம் விசாரித்தான்.

''அவன் ஏன் அழுகிறான்? அவனுக்கு அவன் சித்தி இருந்தால் போதுமே!'' என்ற கேத்ரினின் குரலில் ஒலித் தது குறையா, பெருமிதமா என்று அவனால் கண்டு பிடிக்க முடியவில்லை.

ராபர்ட் நந்தினியின் அறைக்கதவை தட்டிவிட்டு காத்திருந்தான். நந்தினி கதவைத் திறந்ததும், ''டில்சன் தூங்கிவிட்டானா நந்தினி?'' என்றான்.

''ஆமாம். நீங்க வர லேட்டாகவும் என்னுடனேயே தூங்கிவிட்டான்.''

''சரி அவனை என் அறைக்கு அழைத்துப்போகிறேன் நந்தினி'' என்றவன் தூங்குகிற மகனை அலுங்காமல் தோளில் சார்த்தியபடி ''குட் நைட் நந்தினி'' என்றபடியே



தன் அறைக்குச் சென்றான். இரவு தந்தையுடன் உறங் கிய டில்சன் காலையில் கண்விழித்ததும் நந்தினி யிடம் ஓடிவந்துவிட்டான். இரண்டு நாட்கள் இதுபோல் நடக்க, மூன்றாம் நாள் நந்தினி சொன்னாள். ''அக்கா வரும்வரை டில்சன் என்னுடனேயே தூங்கட்டும் அண்ணா. இதில் உங்களுக்கு ஏதும் ஆட்சேபணை இருக்கிறதா என்ன?''

''எனக்கு எதுவும் இல்லை நந்தினி. உனக்கு தொல்லையாகி விடாமல் இருந்தால் சரி.''

''டில்சன் ரொம்ப ஸ்மார்ட். எனக்கு எந்த தொல்லை யும் இல்லை. சொல்லப்போனால் அவனுடன் இருக் கும் போதுதான் எனக்கு மிகவும் சந்தோஷமாக இருக் கிறது.''

ராபர்ட் மேற்கொண்டு எதுவும் பேசவில்லை. டில்சன் நந்தினியுடனே இருந்து கொண்டான்.

ஜோசபின் இல்லாததால் ஷெரின் தன் வீட்டு வேலை களை முடித்து விட்டு வந்து கேத்ரினுக்கும் அவ்வப்போது உதவி செய்து கொண்டிருந்தாள்.

அந்த வார இறுதியில் ஷெரினும் தன் மகளைப் பார்க்க ஊட்டிப் போவதாக சொன்னாள். சனிக்கிழமை ஊட்டி போய் மகளைப் பார்த்துவிட்டு, திங்களன்று கோயம்புத்தூரில் கணவனின் உறவினர் வீட்டு திருமணத்திற்கு போய் விட்டு திரும்பி வர நான்கு நாட்கள் ஆகும் என்று சொல்லிவிட்டு கிளம்பிப் போனாள். அவள் போவதற் கென்றே காத்திருந்தாற்போல் அடுத்த நாள் கேத்ரினுக்கு ஜுரம் வந்துவிட்டிருந்தது. காலை சமையலை முடித்து

விட்டு ஆண்கள் கிளம்பிச் சென்றதும் அசதியுடன் போய் படுக்கையில் விழுந்தவளுக்கு சிறிது நேரத்தில் உடல் நெருப்பாய் கொதித்தது. முகமெல்லாம் சிவந்து சோர்ந்து போயிருப்பவளை பார்த்ததும் நந்தினிக்கு என்ன செய்வது என்று புரியவில்லை.

அவர்களது குடும்ப டாக்டர் யார், இங்கே அருகில் டாக்டர்கள் யாராவது இருக்கிறார்களா என்று தெரியாத தால், இப்போதைக்கு ஜுரம் இறங்க மருந்து கொடுக்க லாம் என்று நினைத்த நந்தினி வேலைக்காரப் பெண் மேரியிடம் காய்ச்சலுக்கான மாத்திரையை எழுதிக் கொடுத்து வாங்கிவரச் சொன்னாள்.

அவள் வாங்கி வந்ததும் ஒட்சை கஞ்சியாக்கி மாத்திரையுடன் போய் கேத்ரினை எழுப்பினாள். அவள் எழுந்து அமர்ந்ததும் கஞ்சியையும் மாத்திரையும் கொடுத்து, குடித்தபின் மெதுவாய் சாய்ந்துகொள்ளச் சொல்லி போர்வையை போர்த்திவிட்டு வெளியே வந் தாள்.

சாதாரண ஜுரம் என்றால் இந்த மாதிரி இரண்டு வேளை மருந்தில் குணமாகிவிடும். இல்லை என்றால் ராபர்ட்டோ, அவன் அப்பாவோ வந்த பிறகு டாக்டரிடம் அழைத்து செல்லட்டும். மேரியை கேத்ரினின் அறையி லேயே இருக்க சொல்லிவிட்டு நந்தினி சமையலறைக்கு சென்றாள்.

இன்னும் சிறிது நேரத்தில் தேவசகாயத்திற்கும் ராபர்ட் டிற்கும் சாப்பாடு எடுத்துப்போக அலுவலகத்திலிருந்து ஆள் வந்துவிடும். 'என்ன செய்வது?' என யோசித்தபடி நந்தினி ப்ரிட்ஜை திறந்தாள். எக்பாக்ஸ் முழுவதும்



முட்டைகள் நிரம்பியிருக்க, மசாலா தடவப்பட்ட மீன் துண்டுகள் பொரிக்கக் காத்திருந்தன. ப்ரிஜ்ஜை மூடிவிட்டு மேரியிடம் சொல்லி காய்கறி வாங்கி வர சொன்னாள். வெண்டைக்காய் வதக்கலும், முள்ளங்கி சாம்பாரும், தக்காளி ரசமும், உருளைக்கிழங்கு கறியும் செய்தாள். சமையலை முடிக்கவும் கம்பெனியிலிருந்து ஆள் வரவும் சரியாக இருக்கவே, பாத்திரங்களில் பேக் பண்ணி அனுப்பினாள்.

நம் சமையலை சாப்பிடுவார்களா, அல்லது உன்னை யார் சமைக்க சொன்னது என்று சண்டை போடுவார்களா என்று நினைத்தபடியே கேத்ரினுக்கு குழைவான சாதத்தில் ரசத்தைக் கரைத்து கொடுத்தாள். ஜுரம் இறங்கி யிருந்ததில் கேத்ரினின் உடலெல்லாம் வியர்த்திருந்தது. ஒரு டவலால் அவள் முகத்தைத் துடைத்த நந்தினி பேனை முழுவேகத்தில் சுழலவிட்டாள்.

மாலையில் வேலைமுடிந்து வீட்டிற்கு வந்த தேவ சகாயம் மனைவியைப் பார்த்ததும் திடுக்கிட்டார். ''உடனே மருத்துவமனைக்கு போகலாம்'' என்றபோது கேத்ரின் மறுத்துவிட்டாள்.

''எனக்கு இப்ப ஜுரமே இல்லை. இரண்டு நாள் ரெஸ்ட் எடுத்தா சரியாயிடும். ஒருவேளை திரும்ப காய்ச்சல் வந்தால் வேண்டுமானால் போகலாம்.''

தேவசகாயத்தின் பின்னே வந்த டிரைவர் காரிலிருந்த பொருட்களை உள்ளே கொண்டு வந்து வைக்கவும், நந்தினி ஆர்வத்துடன் ஓடி அவற்றை எடுத்து வைத்தாள். மதியம் சாப்பாடு அனுப்பியிருந்த பாத்திரங்களை திறந்து பார்த்தபோது காலியாக இருந்தது. நந்தினியைப் பார்த்தபடி

உள்ளே வந்த ராபர்ட் "மதியம் உன் சமையலா நந்தினி? சூப்பர்ப்" என்றான் பாராட்டாக.

"மாமாவுக்கு பிடித்ததா அண்ணா?" என்றாள் நந்தினி.

"பிடித்திருக்கும் என்றுதான் நினைக்கிறேன். ஆனால் எதையும் காட்டிக் கொள்ளாமல் எப்போதும்போல் சாப்பிட்டார். அதுசரி நந்தினி, உனக்கு எங்கம்மா அப்பா, அத்தை மாமாவாகி விட்டார்கள். என்னை அண்ணா என்றால் சரியாக இருக்குமா?" என்றான் ராபர்ட்.

"என்னுடன் பிறந்தவர்கள் யாரும் இல்லை அண்ணா. அதனால் எனக்கு ஜோசபின், ஷெரின், உங்களை எல்லாம் அண்ணா அக்கா என்று கூப்பிடப் பிடிக்கிறது."

"நீ எப்படி முறை வைத்துக் கூப்பிட்டாலும் நாங்களும் உன்னை எங்கள் தங்கையாகத்தான் நினைக்கிறோம் நந்தினி" என்றான் ராபர்ட்.

நந்தினி இரவு உணவை பரிமாறியபோது தேவசகாயம் அமைதியாக சாப்பிட்டுவிட்டு எழுந்து போனார். கேத்ரினை நான்கு நாட்கள் ஓய்வெடுக்கச் சொல்லிவிட்ட நந்தினியே வீட்டைப் பராமரித்தாள். தன் வீட்டு வழக்கப்படியே சமைத்து, தனக்கு தெரிந்த விதத்தில் வீட்டை அழகுபடுத்தினாள்.

யாரும் எந்த குறையும் சொல்லாமல் இருந்தார்கள். காய்கறியோ, சமையல் பொருட்களோ வாங்கும் போது கேத்ரினிடம் எவ்வளவு வாங்க வேண்டும் என்று நந்தினி கேட்டுக் கொள்வாள். கேத்ரினும் சலித்துக் கொள்ளாமல் சொல்லித் தர, நான்காம் நாள் கேத்ரின் குணமடைந்து



சமைக்கத் தொடங்கவும் நந்தினி இயல்பாய் கூட நின்று உதவி செய்யத் தொடங்கினாள்.

தனிமையில் தேவசகாயம் மனைவியை கிண்டல் செய்தார்.

"இன்னும் நாலுநாள் நல்ல சாப்பாடு சாப்பிட நினைத்தேன். அதற்குள் உனக்கு குணமாகிவிட்டதா?" என்று.

"மருமகள் கையால் சாப்பிட வேண்டும் என்ற பிரியமிருந்தால் அவளையே தினமும் சமைக்கச் சொல்லுங்கள். அதற்காக நான் நோயாளியாக முடியாது" என்றாள் கேத்ரின் பதிலுக்கு.

சிங்கப்பூரிலிருந்து முருகேசன் ஒருமுறை தேவசகாயத்திற்கு டெலிபோன் செய்திருந்தார். நந்தினி அங்கிருப்பது தெரிந்ததும் அவருக்கு அளவிடமுடியாத சந்தோஷம். அவர் மனைவி, இந்து, கதிரின் அண்ணிகள் என எல்லோரும் நந்தினியிடம் மாறிமாறி பேசினர். "எங்களுக்கு ரொம்ப சந்தோஷம்" என்றார்கள் ஒரே குரலாய். "ஆக மாமனார் வீட்டுடன் போகும் குஷியில்தான் எங்கிட்டக் கூட சொல்லாம ரெண்டு பேரும் கிளம்பிட்டீங்களா?" என கதிர் கிண்டல் செய்தான்.

"நந்தினி, நீயும் கெமியும் இல்லாம எங்களுக்கு வெறிச்சோடிப் போயிருக்கு. சீக்கிரமா உங்க பெற்றோர்களை தாத்தா பாட்டியாக்கிட்டு இங்கே வந்துடுங்க" என்றாள் வசந்தா.

அவர்கள் பேச்சிலிருந்து கெமி சிங்கப்பூரிலிருந்து கிளம்பிய பிறகு அவர்களை தொடர்பு கொள்ளவே இல்லை என்று தெரிந்தது. எனவே கெமியிடம்

பேசவேண்டும் என்று கதிர் சொன்னதும், ''கெமி ஊரில் இல்லை. வந்ததும் பேசச் சொல்கிறேன்'' என்றபடி போனை வைத்தாள் நந்தினி.

அம்மாவுக்கு உடம்பு சரியானதும் திரும்பி வந்த ஜோசபினும், மகளைப் பார்க்கப் போன ஷெரினும் வீட்டுக்குள் நுழைந்ததும் அசந்து போனார்கள். தேவசகாயம் இயல்பாய் மருமகளிடம் பேசுவதையும், கேத்ரினும் நந்தினியும் அன்றைய சமையலைப் பற்றி விவாதிப்பதையும் பார்த்த ஷெரின் வேகமாக வெளியே ஓடினாள்.

''என்ன ஷெரின்?'' என்றாள் கேத்ரின் திகைப்புடன்.

''இல்ல மம்மி. வீடுமாறி வந்துட்டேன்னு நினைக்கிறேன். எதற்கும் வெளியே போய் தெருப்பெயர், டோர் நெம்பர் எல்லாம் சரிதானான்னு செக் பண்ணிட்டு வந்துடறேன்.''

ஷெரினின் கணவர் சிரித்தபடி அவள் காதைத் திருகினார். ''என்ன இருந்தாலும் நந்தினி இந்த குடும்பத்து பெண். அத்தைக்கும் மாமாவுக்கும் அந்த பாசம் இல்லாமல் போகுமா?'' என்றார்.

அதற்கு பிறகு எல்லோரும் ஜோசபின் அம்மாவைப் பற்றி விசாரிக்கத் தொடங்கவே பேச்சு திசைமாறியது.

நந்தினி இப்போதெல்லாம் தயங்கி நிற்காமல் கேத்ரினிடமோ, ஜோசபினிடமோ கேட்டு ஏதாவது செய்யத் தொடங்கினாள்.

''நந்தினி அந்த சேனைக்கிழங்கு ரோஸ்ட் செய்து கொடேன்'' என்று ஷெரினும், ''நந்தினியை மிளகு குழம்பு வைக்கச் சொல்'' என ராபர்ட்டும் கேட்டு வாங்கி சாப்பிட்டார்கள்.



''நந்தினி நீ வெக்கற ரசம்தான் எனக்கு பிடிச்சிருக்கு. தக்காளி ரசம், பருப்பு ரசம், மிளகு ரசம்னு எனக்கு இப்படியெல்லாம் வெரைட்டியா வெக்கத் தெரியாது. பெரும்பாலும் நான்வெஜ்ஜே செஞ்சு பழகினதால ரசம் பிரமாதமா வெக்க நான் ஆர்வம் காட்டியதில்லை.'' என்றாள் கேத்ரின் வெளிப்படையாக.

கேத்ரினின் பாராட்டில் மகிழ்ந்து போன நந்தினி, ''எனக்கு உங்களை மாதிரி மீன்குழம்பு செய்ய சொல்லித் தறீங்களா அத்தை?'' என்றாள் நந்தினி.

''நீயோ அசைவம் சாப்பிடுவதில்லை. பிறகு ஏன் செஞ்சி கஷ்டப்படணும் விடு'' என்றாள் கேத்ரின்.

''நீங்க வேற மம்மி. கெமிக்கு பிடிக்குமேன்னு சமைக்க ஆசைப்படறா? அப்படித்தானே நந்தினி?'' என ஷெரின் கேட்டதும் பதில் பேசாது சிரித்தாள் நந்தினி.

அதற்குமேல் தடைஎதுவும் சொல்லாமல் கேத்ரின் மருமகளுக்கு அசைவ உணவு வகைகள் சமைக்கக் கற்றுக் கொடுத்தாள்.

நந்தினிக்கு முதலில் என்னவோ போலிருந்தாலும், கற்றுக்கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்தில் நந்தினி விரைவில் நன்றாகவே சமைக்கத் தொடங்கிவிட்டாள். சில சமயங்களில், ''நந்தினியை மீன்குழம்பு வைக்கச் சொல்லேன்'' என தேவசகாயமே மனைவியிடம் சொல்ல ஆரம்பித்தார்.

...HARA PUBLIC LIB...

''நந்தினி இனி நான் சமையல்கட்டு பக்கமே வரப் போவதில்லை. டைனிங்ஹாலுடன் நின்றுவிடப்போகி றேன்'' என்றாள் ஜோசபின்.

ஒருவேளை தம்முடைய முக்கியத்துவம் குறைந்துவிட்ட தாக ஜோசபினுக்கு நம்மீது கோபமா என்று எண்ணியபடி நந்தினி அவளை நிமிர்ந்து பார்த்தாள்.

''நீ என்னவோன்னு நினைச்சிக்காதே நந்தினி. இவளுக்கு எப்போதும் சாப்பிடுவதில்தான் ஆர்வம் அதிகம். இத்தனை நாள் வேறு வழியில்லாமல் சமைக் கிற மாதிரி ஆக்டிங் செய்து கொண்டிருந்தாள்'' என ராபர்ட் கிண்டலடிக்கவும் கூட சேர்ந்து ஜோசபின் சிரித்ததை பார்த்ததும் தான் நந்தினிக்கு நிம்மதியாய் இருந்தது.

கேத்ரின் ஜோசபினை கூப்பிடும் குரல் கேட்டதும், ''நீங்க பேசிட்டு இருங்க. அத்தை டீ போட்டுட்டு இருந் தாங்க. மாமாவுக்கு கொடுத்துவிட்டு நம்ம மூணுபேருக் கும் இங்கேயே கொண்டு வருகிறேன்'' என்றபடி ஜோச பின் எழுந்து உள்ளே போனாள்.

ராபர்ட் ஷெரினுடன் பேசுவதுபோல் நந்தினியிடமும் சகஜமாக பேசியதால், நந்தினி தான் கேட்க நினைத் திருந்த கேள்வியைக் கேட்டாள். ''ராபர்ட் அண்ணா நான் இங்கே வந்த பிறகு கெமியிடமிருந்து போன் ஏதும் வந்ததா? மும்பையிலிருந்து வருவதாக தகவல் வந் ததா?''

நந்தினியின் ஆவல் நிறைந்த முகத்தைப் பார்த்த ராபர்ட் அவளை ஏமாற்ற மனம் வராமல் பதில் சொல் லாமல் இருந்தான். புரிந்து கொண்ட நந்தினி, ''போன்



ஏதும் வரவில்லை. அப்படித்தானே அண்ணா?'' என்றாள் வாடிய முகத்துடன்.

''புதிய இடத்தில் வேலையில் பொருந்துவற்கு சிறிது காலம் ஆகத்தான் செய்யும். உனக்கு தெரியாதா நந்தினி? இதற்கு போய் வருந்துவார்களா?'' என்றான் ராபர்ட் சமாதானமாய்.

''இல்லை அண்ணா, கெமியும் நானும் சந்தித்த இந்த இரண்டு வருடங்களில் ஒருநாளும் பேசாமல் இருந்த தில்லை. கெமி வெளியூர் போனாலும் கூட அங்கிருந்து போன் செய்துவிடுவான். திருமணமான பிறகு கெமி ஏதாவது கோபத்தில் இருந்தால் கூட நானே கௌரவம் பார்க்காமல் போய் பேசி சமாதானப்படுத்தி விடுவேன்.'' நந்தினியின் குரல் கரகரக்க ராபர்ட்டுக்கும் வருத்தமாக இருந்தது.

''கெமி ரொம்ப நல்லவன் நந்தினி. ரொம்ப பாசம் உள்ளவனும் கூட. நான் குடும்பத்திற்கு மூத்த பிள்ளை யாதலால் பெரும்பாலும் பெற்றோரை அனுசரித்து அவர்கள் சொல்கிறபடி நடந்து கொள்வேன். ஆனால் கெமி தானாய் எதையும் யோசித்து தீர்மானமாய் முடிவெடுத்து, எடுத்த முடிவில் உறுதியாய் நிற்பவன். அதனால்தான் அவன் திருமணம் செய்து கொண்டதாக தகவல் சொன்னபோது கூட அப்பா அம்மா அளவுக்கு நான் கோபப்படவில்லை. உங்க கல்யாணத்தைப் பார்க்க முடியவில்லையே என்ற வருத்தம் மட்டும்தான் இருந்தது. நாளடைவில் அந்த வருத்தமும் மறைந்து போய் கெமி விரும்பிய பெண் எப்படியிருப்பாள்? எல்லோருக்கும் செல்லப் பிள்ளையாய் இருந்த கெமி

எப்படி பொறுப்பாய் குடும்பம் நடத்துகிறான் என்று பார்க்க வேண்டும் போல் ஆசையாக இருக்கும். என் தம்பியைப் பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். அவனால் உன்னைப் பிரிந்து ரொம்பநாள் இருக்க முடியாது. நீங்கள் இருவரும் சந்தோஷமாய் குடும்பம் நடத்தி எங்கள் ஆசையை நிறைவேற்றி வைக்கப் போகிறீர்கள் பாரேன்!''

''கெமி நல்லவன் என்று எனக்கும் தெரியும் அண்ணா'' என்றபடி எழுந்த நந்தினி, ஜோசபின் டீ கோப்பைகளுடன் எதிரே வரவும் தனக்கு ஒரு கப் எடுத்துக் கொண்டு ஹாலுக்குச் சென்று அமர்ந்தாள். டி.வி.யை ஆன் செய்துவிட்டு எங்கோ கவனமாய் கப்பி லிருந்த டீயை பருகிய நந்தினியை பார்த்த ஜோசபின் ''என்ன விஷயம்?' என்றாள் கணவரிடம்,

''ம்.. உன் தங்கைக்கு என் தம்பியைப் பார்க்க வேண்டுமாம்'' என்றான் ராபர்ட் சிரித்தபடி.

ஜோசபினின் முகமும் வாடியது. ''இருக்காதா பின்னே! பத்துநாள் உங்களை விட்டுவிட்டு போய் வர எனக்கே கஷ்டமாக இருந்தது. புதுசா கல்யாணமானவங்க, மாசக் கணக்கில் தொடர்பே இல்லாமல் இருந்தால் எவ்வளவு வருத்தமாக இருக்கும்?''

தனது டீயை பருகியபடி ''சமயம் பார்த்து அப்பாவின் காதில் போட்டு வைக்க வேண்டும் என்றான் ராபர்ட்.''

ஷெரினுடன் அவள் வீட்டிற்கு இரண்டுமுறை போய் வந்தாள் நந்தினி. ஷெரினுடையது பெரிய கூட்டுக் குடும்பமாக இருந்தது. அவள் மாமியார், நாத்தனார், ஷெரின் கணவரின் அண்ணன் தம்பி மனைவிகள் என



சூழ இருந்தோரை சமாளிக்க நந்தினி திணறிப்போனாள். ஆனால் ஷெரின் நந்தினியையும் விட்டுக் கொடுக்காமல் வீட்டிலுள்ளவர்களையும் எடுத்தெறிந்து பேசாமல் ஷெரின் சமாளித்ததைப் பார்த்த நந்தினிக்கு அவள் மீது ரொம்பவும் மதிப்பு ஏற்பட்டது. தனிமையில் ஷெரி னிடம் நந்தினி கேட்டாள். ''கெமியின் மனைவி என்று உங்கள் வீட்டில் இருக்கும் நிலைமையிலேயே இப்படி துருவுகிறார்களே, நாங்க திருமணம் செய்து கொண்ட போது உங்க வீட்டினருக்கு நீங்க எப்படியெல்லாம் பதில் சொல்லி சமாளித்தீர்களோ பாவம்'' என்றாள் நந்தினி உண்மையான பரிதாபத்துடன்.

''இதெல்லாம் வெறும் சுவாரஸ்யத்துக்காக பேசப்படும் வம்பு நந்தினி. பொல்லாத்தனம் இருக்காது. கெமிக்கு எங்க குடும்பத்துக்குள்ளேயே ஒரு பெண்ணை பார்த்து முடித்திருந்தாலும் கூட அதில் ஏதாவது குறைகளை தேடிப் பிடித்து பேசத்தான் செய்வார்கள். நாம் முக்கியத் துவம் தராமல் விட்டாலே அதன் வீரியம் குறைந்து விடும்.''

''உண்மைதான்'' என்றாள் நந்தினியும்.

''நந்தினி ஒரு விஷயம் சொல்லட்டுமா? ஜோசபின் திருமணமாகி வந்த பிறகும் எங்களிடம் பழக ஆரம்பித்து, நாங்க அவளை புரிந்து கொண்டு நேசிக்க ஆரம்பிப்ப தற்கு கொஞ்சநாள் ஆனது. ஆனால் நீ வந்த சிறிது நாட்களிலேயே எல்லோரும் உன்னிடம் பிரியம் வைக்கத் தொடங்கிவிட்டார்கள். கெமி மீதுள்ள பாசமும், உன் போலித்தனமில்லாத குணமும்தான் அதற்கு காரணம்'' என்றாள் ஷெரின். பிறகு ஷெரின் ஊட்டியில் படிக்கும்

தனது மகளைப் பற்றி, வரப்போகும் தன் மைத்துனர் பெண் திருமணம் பற்றி என ஏதேதோ பேசிக் கொண்டிருந்தாள்.



## 14

''நந்தினி கதவைத் தாழ் போட்டுக்கோ'' என்றபடி படியிறங்கினாள் ஜோசபின். டேவிட் தேவசகாயம், கேத்ரின், ராபர்ட், டில்சன், வேலைக்காரப் பெண் மேரி எல்லோருமாய் ஞாயிறு பிரார்த்தனைக்கு தேவாலயத்துக்கு கிளம்பியிருந்தனர். எல்லோரும் ஒன்றாக செல்கையில் தான் மட்டும் இந்த வீட்டில் தனிமைப்பட்டு நிற்பதாய் தோன்றியது நந்தினிக்கு. சட்டென்று கெமியும் இப்படித்தான் உணர்ந்திருப்பான் என்று தோன்றியது. பழக்கமற்ற விஷயங்களில் முரண்பட்டு, தனிமைப்படுத்தப்பட்டு மனதிற்குள் தவித்திருப்பான்.

கேத்ரின் திரும்பி, ''ஜாக்கிரதையா இரு, போய் வருகிறோம்'' என்றதும் ''நானும் வரலாமா?'' என்றாள் தன்னையறியாமல்.

அனைவரும் ஆச்சரியமாய் பார்க்க, ''வாயேன்'' என்றார் டேவிட் தேவசகாயம்.



துப்பட்டாவை சுற்றி தலையை முக்காடிட்டபடி அவர்களுடன் நடக்கையில் நந்தினி புது அவதாரம் எடுத்திருப்பதாக உணர்ந்தாள். தேவாலயத்தின் சுத்தத்திலும், அமைதியிலும் மனதைப் பறிகொடுத்து தன்னையறியாமல் கண்கள் மூடி பிரார்த்தித்தாள். பிரார்த்தனை முடிந்து வெளியே வருகையில் பலர் நந்தினியைப்பார்த்து வியப்புடன் விசாரித்தனர்.

தங்கள் நண்பர்களிடமும் உறவினர்களிடமும் ''கெமியின் மனைவி'' என கேத்ரினும் தேவசகாயமும் அறிமுகம் செய்து வைத்தனர்.

''பெண் அழகாக இருக்கிறாள். நல்ல படிப்பு வேறயாம். கெமியின் செலக்ஷன் சூப்பர்'' என்ற புகழுரைகளில் இருவர் முகமும் மலர்ந்து போனது. எல்லோரும் பேசி சிரித்தபடி வீடு திரும்புகையில் நந்தினி இது என் குடும்பம் என்று உரிமையுடன் உணரத் தொடங்கினாள். உண்மையில் கெமியின் வீட்டில் எழுதப்படாத சட்டம் என்று எதுவும் இல்லை. விருப்பம் போல் உடையணியலாம். விரும்பிய மாதிரி உண்ணலாம். மாமனார் மாமியாரிடம் மரியாதைகாட்டி ஒதுங்கி நிற்காமல் மருமகள்கள் இருவரும் அருகே அமர்ந்து அரட்டை அடித்தனர். நந்தினியை பார்க்க வந்த அவள் பெற்றோர் இருவரும் ரொம்ப சந்தோஷமானார்கள். ''எனக்கு மருமகளும் இன்னொரு மகள்'' என்று முன்பொருமுறை தேவசகாயம் சொன்னது சத்தியமான உண்மை என்று உணர்ந்தார்கள்.

மகளின் முகத்தை வழித்து திருஷ்டி கழித்த சுந்தரி ''நந்தினி இவ்வளவு சமர்த்தா இருப்பான்னு நான் எதிர்பார்க்கவே இல்ல'' என்றாள்.

"அனுபவம்தான் பெரிய கல்வி. அது எல்லாவற்றையும் கற்றுக் கொடுக்கும் சுந்தரி" என்றார் சதாசிவம் மகளைப் பார்த்தபடி.

அன்று கேத்ரினின் அறையில் பெண்கள் மூவரும் சுத்தம் செய்வதில் ஈடுபட்டிருந்தனர். கேத்ரின் வேண்டாத பொருட்களை ஒழித்துப்போட, ஜோசபின் தேவையான பொருட்களை துடைத்து கொடுக்க, நந்தினி அலமாரியில் அடுக்கிக் கொண்டிருந்தாள். கீழ் அடுக்கிலிருந்த ஒரு போட்டோ ஆல்பத்தை எடுத்த நந்தினி "அத்தை இது யாருடைய போட்டோ?" என்றாள் கேத்ரினிடம்.

"உன் கணவனுடையதுதான்"என்றாள் கேத்ரின்.

உடனே கைவேலையை மறந்து ஆர்வத்துடன் கீழே அமர்ந்து ஆல்பத்தை பிரித்தவளைப் பார்த்து சிரித்துவிட்டு தங்கள் வேலையை தொடர்ந்தனர் மற்ற இருவரும்.

கெமி குழந்தையில் எடுத்த போட்டோக்களில் டில்சனின் சாயல் அப்பட்டமாய் தெரிந்தது. சுருண்ட முடியும், குண்டு கன்னங்களுமாய் அழகான கொழு கொழு குழந்தையாய் இருந்தான். கல்லூரியில் படிக்கும் போது எடுத்த போட்டோக்களில் ஒல்லியாய் உயரமாய் தெரிந்தான். குடும்ப விழாக்களில், பர்த்டே பார்ட்டிகளில்.. என ஒவ்வொரு போட்டோவாய் பார்த்தவள், கடைசியாய் அவன் சிங்கப்பூர் கிளம்பும் சமயம் எடுத்த போட்டோவை பார்த்ததும் அதிலிருந்து பார்வையைத் திருப்ப முடியவில்லை. சிங்கப்பூரில் அவளது அலுவலகத்தில் அவனை எதிர்பாராமல் சந்தித்தபோது அவன் கிட்டத்தட்ட இதே கலர் சட்டைதான் அணிந்திருந்தான். "உலகம் ரொம்ப சின்னதுதான் இல்லையா நந்தினி?" என படத்திலிருந்த கெமி கேட்பதாக தோன்ற, தொடர்ந்து அவனுடன் பேசி சிரித்ததும், துரத்தி பிடித்து காதலித்ததும் கண்முன் படமாய் விரிந்தது.



வார்ட்ரோபின் கதவை, சாத்திவிட்டு திரும்பிய கேத்ரினும் ஜோசபினும் நந்தினியை பார்த்ததும் திகைத்துப் போனார்கள். கண்களிலிருந்து பெருகிய கண்ணீர் படத்தை நனைக்க அமர்ந்திருந்தவளைப் பார்த்த ஜோசபினுக்கும் கண்கலங்கியது. தன் மனவாட்டத்தை வெளியே காட்டாமல் "நந்தினி வா போகலாம்" என்றபடி கேத்ரின் முன்னால் நடந்தாள். சிறிதுநேரத்தில் நந்தினியை சமாதானப்படுத்தி விட்டு மாமியாரை தேடி வந்த ஜோசபினிடம் "உன் மாமாவிடம் இவர்களைப் பற்றி பேசவேண்டும் ஜோசபின்" என்றாள் கேத்ரின்.

நந்தினியை தங்கள் உறவுக்குள் அறிமுகப்படுத்தும் பொருட்டு எல்லா விழாக்களுக்கும் பார்ட்டிகளுக்கும் குடும்பத்தினர் நந்தினியுடன் போய் வந்தார்கள். ஷெரினின் மைத்துனர் பெண் திருமணத்திற்கு புடவை எடுக்க அவர்கள் குடும்பத்துடன் சென்ற கேத்ரின் மருமகள்கள் இருவருக்கும் ஒரே மாதிரியான டிசைனில் விலையுயர்ந்த டிசைனர் புடவை வாங்கி வந்தாள். டெய்லரை வரச்சொல்லி அப்போதே இருவருக்கும் ப்ளவுஸ் தைக்கக் கொடுத்தார்கள். இரண்டு நாளில் ப்ளவுஸ் தைத்து வந்ததும் அந்த ஞாயிற்றுக்கிழமை மருமகள்கள் இருவரையும் புதுப்புடவை அணிந்து வரச் சொன்னார் கேத்ரீன். ரோஸ்நிற புடவையில் ஜோசபின்

அடக்கமாய் ஜொலிக்க, நீலப்புடவையில் நந்தினி பளிரென்று எல்லோர் கவனத்தையும் கவர்ந்தாள்.

''புடவை ரொம்ப நல்லா இருக்கு அத்தை'' என ஜோசபின் மென்மையாய் சிரிக்க, ''வாவ் ரியலி சூப்பர்ப். எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கு'' என்றபடி நந்தினி கேத்ரினின் தோளை அணைத்துக் கொண்டாள். மாமியாரும் மருமகளும் சிரித்தபடி அணைத்துக் கொண்டிருக்கையில் உள்ளே நுழைந்த ஷெரின் ''என்ன இதெல்லாம்?'' என்றாள் அதட்டலாக.

''எதெல்லாம்?'' என்று நந்தினி திகைத்தாள்.

''நீ இப்படியெல்லாம் எங்கம்மாவிடம் கொஞ்சிக் கொண்டிருந்தால் அப்புறம் எங்கம்மா என்னை ஒரேயடியாக மறந்து விடுவார்கள். மாமியார் மருமகள் என்றால் சண்டையும் சலிப்புமாக இருக்க வேண்டும். அப்போது தான் வீட்டில் பிறந்த பெண்களுக்கு முக்கியத்துவம் ஏற்படும்'' என்றாள் ஷெரின் சிரித்தபடி.

''போடி, உன் முக்கியத்துவத்துக்காக நானும் அப்பாவும் நிம்மதி கெட வேண்டுமா?'' செல்லமாய் அவள் தலையில் குட்டினான் ராபர்ட்.

''நந்தினி எனக்கும் இதே டிசைனில் ஆரஞ்சு கலரில் ஒரு புடவை எடுத்தேன். ஆனால் நம்ம மூணு புடவையிலும் உன்னுடையதுதான் ரொம்ப அழகா இருக்கு. நா எப்படி மிஸ் பண்ணேன்னு தெரியல. முதலில் பார்த்திருந்தால் இந்த கலர்தான் எடுத்திருப்பேன்'' என்றாள் ஷெரின்.

''எப்பவும் இவளுக்கு அடுத்தவங்க புடவைதான் பிடிக்கும்'' என்றாள் ஜோசபின் சிரித்தபடி.



''ஆமாம் நந்தினி. ஒருமுறை வெளியே போனபோது ஷெரின் தெருவில் போன ஒரு பெண்ணின் புடவை பிடித்திருக்கிறதென்று அவள் பின்னாடியே போக, அந்த பெண் பயந்து ஓட... ஒரே கலாட்டவாகி விட்டது.'' ராபர்ட் கிண்டலடிக்க எல்லோரும் அடக்க முடியாமல் சிரித்தனர்.

''நம்ம ரெண்டுபேருக்கும் ப்ளவுஸ் ஒரே அளவாத்தான் இருக்கும். நீங்க அப்புறமா இந்த புடவையை எடுத்துக் குங்க அக்கா'' என்றாள் நந்தினி.

''எனக்கு வெச்சுக்க வேண்டாம். எப்பாவாவது வெளியே போகும்போது எடுத்துக்கறேன்'' என்றாள் ஷெரின்.

''ஷெரின் ஆசைப்பட்டு கட்டிட்டு அப்புறம் அவஸ்தைப் படக்கூடாது'' என்றாள் ஜோசபின் சீரியசாய்.

''இதில் என்ன அவஸ்தை ஜோசபின்?''

''இல்ல. நந்தினி அழகா இருக்கறதால புடவையும் அழகா இருக்கு. நீ கட்டிப்பாத்துட்டு புடவை நல்லாவே இல்லைன்னு அது மேல பழியை போடக் கூடாது பார்!''

''ஜோசபின் நீயும் ராபர்ட்டோட சேர்ந்துட்டியா?'' என ஷெரின் அழுவது போல் சிணுங்க, மறுபடி எல்லோரும் சிரித்தனர்.

தேவசகாயம் வந்ததையே கவனிக்காமல் இவர்கள் பேச்சில் மூழ்கி இருக்க, அவர் அமைதியாக மனைவியின் அருகில் அமர்ந்து அவர்கள் கலாட்டாவை ரசித்துக் கொண்டிருந்தார். திரும்பிப் பார்த்த மனைவியிடம்,

''முருகேசனும் அவன் மனைவியும் திரும்ப திரும்ப சொன்ன மாதிரி நந்தினி நல்ல பெண்தான் கேத்ரின். நாமே பார்த்து செய்திருந்தால் கூட குற்றம் குறைகள் இருந்தால் என்ன செய்வோம்? மனைவி அமைவது அவனவன் அதிர்ஷ்டத்தைப் பொறுத்ததுதான். அந்த அதிர்ஷ்டத்தை கடவுள்தான் தீர்மானிக்கிறார். எல்லா பொறுப்பும் நம் கையில் இருப்பதாக நினைத்தது எவ்வளவு முட்டாள்தனம்? நீ என்ன சொல்கிறாய் கேத்ரின்?'' என்றார்.

நந்தினி பளீரென்ற பற்கள் மின்ன ஷெரினுடன் ஏதோ பேசி சிரிப்பதையும் அடர்ந்த நிற புடவையில் தந்தமாய் ஒளிர்ந்த உடலையும் ஒரு நிமிடம் பார்த்த கேத்ரின் ''கெமி அதிர்ஷ்டசாலிதான். கடவுள் அவனுக்கு நல்ல துணையைத்தான் கொடுத்திருக்கிறார். ஆனால் அதை தக்க வைத்துக் கொள்ளுமளவு புத்திசாலித்தனம் இருக்கிறதா என்றுதான் தெரியவில்லை'' என்றாள் யோசனையுடன்.

தங்கையை மும்முரமாய் கலாட்டா செய்துகொண்டிருந்த ராபர்ட்டின் செல் சிணுங்கியது. போனை எடுத்து பேசியவன், உடனே அப்பாவிடம் சென்று விபரம் சொன்னான். அவர் ஏதோ சொல்லவும், அந்த தகவலை போனில் தெரிவித்தான். ஏதோ வியாபார விஷயம் போலும் என பெண்கள் தங்கள் பேச்சை தொடர்ந்தனர். அப்பாவிடம் பேசி முடித்துவிட்டு அவர்களிடம் வந்த ராபர்ட், ''அப்பாவும் நானும் வியாபார விஷயமாய் பேச வேண்டியிருக்கிறது. அதற்காக ஒருவரை எதிர்பார்க்கிறோம். நீங்கள் எல்லாம் உள்ளே போய் பேசிக் கொண்டிருங்கள்'' என்றான்.



அடிக்கடி வியாபார விஷயமாய் வீட்டிற்கு யாராவது வந்துபோவது வழக்கம்தான் என்பதால் பதில்பேசாது பெண்கள் கலைந்து சென்றனர். ராபர்ட்டும், தேவ சகாயமும் வரப்போகும் விருந்தாளிக்காக காத்திருந்தனர்.

மேலே தன் அறைக்கு வந்த நந்தினிக்கு தான் இங்கு வந்து ஒரு மாதத்திற்கு மேலாகிறது என்பது நினைவு வந்தது. அவள் விஷயமாய் சியான்சாங் மெயில் அனுப்பியிருந்தார். அநேகமாய் இன்னும் சில நாட்களில் இந்தியாவிலேயே அவளுக்கும் கிடைத்துவிடும் என்றிருந்தார். கெமி கூட இல்லாதபோது எங்குதான் இருந்து என்ன செய்வது என்று அலுப்பாக இருந்தது. நல்லவேளை அப்பா புத்திசாலித்தனமாய் முடிவெடுத்து அவளை இங்கு கொண்டு வந்து சேர்த்தார். இல்லை எனில் அப்பாவும் அம்மாவும் அவளைப் பார்த்தே துக்கத்தில் கரைந்து போய் இருப்பார்கள். இப்போது மகள் எப்படியும் கணவனுடன் சேர்ந்து விடுவாள் என்ற நம்பிக்கையில் இருக்கிறார்கள்.

புடவையை மாற்றலாம் என்று எழுந்து வார்ட்ரோபை திறந்தபோது கெமி முதன் முதலாய் புடவை கட்ட சொன்னது நினைவு வந்தது. அன்று நள்ளிரவு வரை லானில் அமர்ந்து பேசியதும், அறைக்குப் போன பிறகு போன் செய்து புடவையில் அழகாய் இருப்பதாக பாராட்டியதும் நினைவு வர கண்கலங்கியது. கெமிக்கு அவளை புடவையில் பார்க்க விருப்பம் அதிகம் என்று தெரிந்தாலும், சௌகர்யம் கருதி அவள் அதிகமாய் புடவை அணிந்ததில்லை. ஒவ்வொரு சின்ன விஷயமும் கெமியை நினைவு படுத்துகையில் தன்னால் கெமியை விட்டு

இருக்க முடியுமா? அபிப்ராய பேதம் ஏற்பட்டு விலகிப் போனவனை குடும்பத்தினர் மூலமாய் அப்பா மாற்ற முயற்சிப்பது சரிவருமா?

கெமி ஏன் இத்தனை நாளாய் வீட்டினரைக் கூட போனில் தொடர்பு கொள்ளவில்லை? நந்தினி ஏதோ யோசனையில் மூழ்கியிருந்த போது கூடத்தில் பேச்சுக் குரல்கள் கேட்டன. மாமாவின் வியாபார நண்பர் வந்து விட்டார் போலும் என்று நினைத்தபடி ஒரு மேகஸினை கையில் எடுத்தாள்.

சில நொடிகளில் தேவசகாயத்தின் குரல் உரத்துக் கேட்டது.

"எங்களை வேண்டாம் என்று முறித்துக் கொண்டவன், எந்த தைரியத்தில் வந்து நிற்கிறாய்?" என அவர் கத்து வதைக் கேட்டதும் நந்தினி தன்னை மீறிய ஆர்வத்தில் எட்டிப் பார்த்தாள்.

தேவசகாயம் சோபாவில் அமர்ந்திருக்க, அவருக்கு அருகே கேத்ரின் அமர்ந்திருந்தாள். கேத்ரின் அருகே ராபர்ட் நின்றிருக்க ராபர்ட்டின் எதிரே நிற்பது யார்? நந்தினிக்கு படபடத்தது. கெமி. கெமியா அது? இத் தனை நாளில் மிகவும் இளைத்துப் போயிருந்தான். முகத்தில் மித மிஞ்சிய சோர்வு தெரிந்தது. கால்கள் தொய்வடைய அப்படியே படியில் சரிந்து அமர்ந்தாள் நந்தினி.

"ம்.. சொல்லு, எப்படி எங்கள் நினைவு வந்தது உனக்கு?"

"நான் உங்களை எல்லாம் மறக்கவே இல்லை அப்பா. பிறகெப்படி புதுசாய் நினைவு வரும்?"



"மறக்காதவன்தான் எங்களை வேண்டாம் என்று ஒதுக்கிவிட்டு திருமணம் செய்து கொண்டாயா?"

"நான் திருமணம் செய்து கொண்டது உங்களை வேண்டாம் என்பதற்காக அல்ல. நந்தினி வேண்டும் என்பதற்காகத்தான்."

"வேண்டும் என்று தேடி மணந்தவன், பிறகேன் அவள் இல்லாமல் வந்து நிற்கிறாய்?"

ஒரு நிமிடம் கெமியின் தலைகுனிந்தது. "எனக்கு உங்களை எல்லாம் விட்டுவிட்டு இருக்கமுடியவில்லை. திருமணத்திற்கு முன்பு நான் தூசாக நினைத்து ஒதுக்கிய விஷயங்கள் எல்லாம் மணமான பிறகு தூணாய் மாறி கண்களை உறுத்தத் தொடங்கியது.

எது தப்பு எது சரி என்று புரியாத பிரேமையில் ஒரு மாதம் முன்பு மும்பை ஆபீசுக்கு டிரான்ஸ்பர் வாங்கிக் கொண்டு கிளம்பினேன். உங்களை உடனே வந்து பார்க்க துணிவில்லை. நந்தினியையும் என்னால் விட்டுவிட்டு இருக்க முடியவில்லை. சிங்கப்பூரில் என் அலுவலகத் திற்கு தொடர்பு கொண்ட போது நந்தினி நான் கிளம்பிய இரண்டு நாட்களிலேயே இந்தியா வந்துவிட்டதாக சொன்னார்கள். நான் மும்பையில் இருப்பது தெரிந்தும் நந்தினி என்னை சந்திக்கவில்லை. என் சென்னை அலுவலக நண்பன் செந்தில் மூலமாய் அவள் பெற்றோர் முகவரியை விசாரிக்க முயற்சித்தேன். செந்தில் வேலை விஷயமாய் கனடா போயிருப்பதாகவும், நந்தினி அவள் பெற்றோர் வீட்டில் இல்லை என்ற தகவல்தான் கிடைத் தது.

மனைவி எங்கே இருக்கிறாள் என்று தெரியாத கணவனின் அவல நிலையை நினைத்து நொந்து

போனேன். அலுவலகத்தில் நேற்றுதான் நான் கேட்ட விடுமுறை கிடைத்தது. உடனே உங்களைப் பார்க்க வந்தேன்.''

''ஓகோ, உன் மனைவியைத் தேடிக் கண்டு பிடிக்கப் போகிறாயா?''

''ஆமாம்.''

''நாங்கள் அவளை ஏற்க மறுத்தால்? நம் சமூகத்தைச் சேராத ஒருத்தியை உள்ளே அனுமதிக்க முடியாது என்றால்?''

''அப்பா உங்கள் பார்வையை நீங்கள் விரிவாக்கிக் கொள்ள வேண்டும்.''

''காதலித்து மணந்து கொண்ட உனக்கே அந்த விரிவான பார்வை இல்லாதபோது எங்களிடம் நீ அதை எப்படி எதிர்பார்க்கலாம்? உனக்கு பரந்த மனசும், சகிப்புத் தன்மையும் இருந்திருக்குமானால் இப்படி மனைவியை தொலைத்து விட்டு வந்து நிற்கமாட்டாய்.''

பதில் பேச முடியாத கெமி ஒரு நிமிடம் அமைதியானான்.

''உண்மைதான் அப்பா. முன்பு என் கண்களில் ஏதோ திரை விழுந்திருந்தது. உங்கள் அனைவரின் அன்பும் குடும்பத்திற்கான என் ஏக்கமும் திரையாய் மாறி என் கண்களை மறைத்தது. நான் செய்த அந்த தவறால் நந்தினியை பிரிந்து தண்டனையை அனுபவிக்கிறேன்.

அதே தவறை நீங்களும் செய்து என்னைப் பிரிக்காதீர்கள்'' என்றான் குரல் கம்ம.



''போதும் விடுங்கள்'' என்றாள் கேத்ரின் தன் கணவரைப் பார்த்து கண் கலங்க.

தேவசகாயம் அமைதியான குரலில் கெமியிடம் சொன்னார்.

'''பிறர் உனக்கு என்ன செய்ய வேண்டும் என்று நினைக்கிறாயோ, நீ அதை திருப்பி அவருக்கு செய்து விடு' என்கிறார் நம் யேசுபிரான். தனக்குத் துன்பம் தந்தவர்களுக்கும் திருப்பி சந்தோஷத்தைத் தருவதைத் தான் கிறிஸ்துவ மதம் கற்பிக்கிறது. இத்தனை நாள் என் குழந்தைகளை நல்ல கிறிஸ்துவர்களாக வளர்த்திருப்பதாகத்தான் நான் நினைத்திருக்கிறேன். உன் மீது கொண்ட அன்பிற்காக எதையும் தியாகம் செய்யவும், சகித்துக் கொள்ளவும் உன் மனைவி தயாராக இருந்தால் பைபிளின் வார்த்தைப்படி அவளும் கிறிஸ்டியன் தான்.

ஆனால் தன்னை நேசித்தவளுக்குத் துன்பத்தைக் கொடுத்த நீ யார் என்று உன்னை நீயே கேட்டுக் கொள்.''

தேவசகாயம் அதற்கு மேல் எதுவும் பேசாமல் எழுந்து ஜெபமாலையுடன் தேவாலயத்தை நோக்கி நடந்தார்.

சிலையாய் படிகளில் அமர்ந்திருந்த நந்தினி சட்டென உணர்வு பெற்றாற் போல் எழுந்தாள். தான் பயந்தது போல் கெமி தன்னை வெறுக்கவில்லை. அப்பாவை எதிர்த்துக் கொண்டேனும் இணைவதில் உறுதியாக இருக்கிறான் என்ற உண்மை அளவிட முடியாத சந்தோஷத்தைத் தந்தது. கூடவே மாமனார் ஒரு தகப்பனின் நிலையில் நின்று தனக்காக மகனிடம் பேசியது அவர் மீது மிகுந்த

மரியாதையை ஏற்படுத்தியது. அறைக்குள் சென்று கட்டிலில் அமர்ந்தவள், 'எங்கள் அன்பு சத்தியமானது. அவ்வளவு சுலபத்தில் பிரிந்து விடாது' என கண்களில் நீருடன் திரும்பத் திரும்ப சொல்லிக் கொண்டாள். தப்பான ஒருவனிடம் நான் என் அன்பை விரயமாக்க வில்லை.

அப்பாவின் முருகனும் மாமாவின் கர்த்தரும் எனக்கு நல்ல குடும்பத்தை, நல்ல கணவரைத்தான் காட்டியிருக் கிறார்கள் என்ற எண்ணம் நிறைவாக இருந்தது.

தேவசகாயம் வெளியே சென்றதும், செய்வதறியாது நின்றிருந்த கெமியின் அருகே வந்தான் ராபர்ட். ''அப்பா உன் நல்லதுக்குதான் சொல்லுவார்னு தெரியாதா கெமி? நீ ரொம்பவும் களைத்துத் தெரிகிறாய். மேலே உன் அறைக் குப் போ. எதைப் பற்றியும் நினைக்காதே. பிறகு பேசிக் கொள்ளலாம்'' என்றான் அவன் தோளை அணைத்து. கெமி அம்மாவைப் பார்க்க, ''ராபர்ட் சொல்வது சரிதான். நீ போய் ரெஸ்ட் எடு. நான் உன் ரூமுக்கு சாப்பாடு அனுப்பி வைக்கிறேன். பிறகு நிதானமாய் பேசலாம்'' என்றாள் கேத்ரின்.

கெமி சோர்வுடன் படிகளில் ஏறிச் செல்லவும், மறைந்து நின்ற ஷெரினும், ஜோசபினும் வாய்விட்டுச் சிரித்தனர். 'ஷ்' என புன்னகையுடன் அவர்களை அதட்டினான் ராபர்ட்.

இரண்டு வருடங்களுக்கு பிறகு இந்த அறையில் நுழைகிறோம் என்ற நினைவுடன் சார்த்தியிருந்த கதவை கெமி தொட்டதும் கதவு திறந்து கொண்டது. கட்டிலில் சாய்ந்திருந்த நந்தினி ''ஹாய்'' என்றாள் கண்களை சிமிட்டி.



திடுக்கிட்ட கெமி சுற்றிலும் ஒரு பார்வை பார்த்து விட்டு ஒருவேளை பிரமையோ என்று நினைத்தபடி கதவைத் தாளிட்டுவிட்டு வந்தான். நந்தினி எழுந்து அவன் அருகில் வரவே, கண் முன் தெரிவதை நம்ப முடியாமல், நம்பாமலும் இருக்க முடியாமல் தலையை உலுக்கினான். அப்போதும் கலையாமல் நந்தினியின் உருவம் எதிரே நிற்க, குழப்பத்துடன் தலையைப் பிடித்தபடி நாற்காலியில் சரிந்தான். அவன் அருகே வந்த நந்தினி முகவாயைப் பற்றி அவன் தலையை நிமிர்த்தினாள். அவள் தொடு உணர்ச்சியை உணர்ந் ததும், ''நந்தினி நிஜமா நீயா?'' என்றான் நம்பமாட் டாமல்.

''உன் வீட்டில், உன் படுக்கையறையில், உன் மனைவி இல்லாமல் வேறு யார் இருக்க முடியும் கெமி?''

''எனக்கும் அதுதான் நம்ப முடியவில்லை. என் வீட் டில் உன்னை நான் கற்பனையில் கூட கண்டதில்லை. இப்ப கூட இது, போன ஜென்ம நினைவோன்னு இருக்கு!''

''நம்பு கெமி. நாம ஜென்ம ஜென்மத்திற்கும் சேர்ந் திருக்கப் போவது உண்மைதான். ஆனா இந்த ஜென்மத் தில் நீ கெமி. நான் நந்தினி. நாம சென்னையில் உன் வீட்டில் இருக்கிறோம்.''

நந்தினி விளையாட்டாய் சொல்லவும், ''எனக்கு ரொம்பக் குழப்பமா இருக்கு நந்தினி. கீழே அப்பாவோ, யாருமே நீ இங்கிருப்பதை காட்டிக் கொள்ளவே இல்லையே! நீ எப்படி இங்கு வந்தாய்? என் வீட்டினர் நான் கூட இல்லாமல் வந்த உன்னை எப்படி ஏற்றுக் கொண் டார்கள்?''

கெமி உண்மையாலுமே குழம்பிப் போவதைப் பார்க்க நந்தினிக்கு பாவமாக இருக்கவே, ''சரி கெமி, நான் எல்லா விஷயத்தையும் ஆரம்பத்திலிருந்து சொல்கிறேன். ஆனா நான் கேக்கறதை நீ கொடுக்கணும்'' என அவனிடம் பேரம் பேசினாள்.

''ம்.''

''பத்தாது. வாயைத் திறந்து சரின்னு சொல்லணும்.''

''சரி... சரி... சரி... போதுமா? இப்ப சொல்?''

நந்தினி சிங்கப்பூரிலிருந்து கெமி போன பிறகு தொடங்கி இன்று வரை நடந்ததை எல்லாம் ஒன்று விடாமல் சொல்லி முடித்தாள். ''உன் கூடவே இருந்தும் நீ விலகிப் போகிறவரை உன்னை புரிந்து கொள்ளாமல் இருந்தோமே என்று ரொம்ப வருத்தப்பட்டேன் கெமி. நம் பெற்றோர்களின் மனதை நோகடித்து விட்டு மணந்து கொண்டதால்தான் நாமும் வேதனைப்படும்படி ஆயிற்றோ என்று நினைத்தேன். ஆனால் இங்கு வந்த பிறகு தான் புரிந்து கொண்டேன். நம் பெற்றோர்கள் நம்மீது கொண்ட பாசத்திற்காக, அவர்கள் சிறு வயதிலிருந்து, பின்பற்றி வரும் கொள்கைகளையும், நம்பிக்கைகளையும் கூட விட்டுக் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள் என்று. நீ மட்டும் சிங்கப்பூரிலிருந்து கிளம்பியிரா விட்டால் எனக்கு இந்த மாதிரி அருமையான குடும்பத்தைப் பற்றி, அவர்களுடன் சேர்ந்து வாழும் அற்புதமான வாழ்க்கையைப் பற்றி தெரியாமலே போயிருக்கும்'' என்றாள் நந்தினி உணர்ச்சியுடன்.



நந்தினி முடிக்கும் வரை வியப்புடன் கேட்டிருந்த கெமி,

''எப்படியோ என்னைக் கவிழ்த்த மாதிரியே. என் மொத்த குடும்பத்தையும் கவிழ்த்து விட்டாய். என் அப்பாவே உனக்காக என்னைத் திட்டும்படி ஆயிற்று'' என்றான்.

''அவர் உண்மையைத்தானே சொன்னார்? ஒரு வேளை நம் திருமணத்திற்கு முன்பே இவர்களை கன்வின்ஸ் செய்ய முயற்சித்திருந்தால் எல்லோரும் சங்கடமின்றி இருந்திருக்கலாம்'' என்றாள் நந்தினி.

''கணவன் மனைவியாகி விட்டதால், அதுவும் பிரச்சனை என்று வந்து நின்றதால் பெற்றோராய் பொறுப்பேற்றுக் கொண்டார்கள் நந்தினி. முன்பே சொல்லியிருந்தால் வக்கரித்துக் கொண்டிருப்பார்கள்.''

''எது எப்படியிருந்தாலும் நம் பெற்றோர்களுக்கு நம் மீதுள்ள அன்பு தன்னலமற்றது கெமி. நாம் எந்தச் சூழ்நிலையில் திரும்பி வந்தாலும் நம்மை வெறுக்க முடியவில்லை பார்.''

''உண்மைதான்'' என்ற கெமி, ''மாலையில் உன் வீட்டிற்குப் போகலாம் நந்தினி. நான் உன் பெற்றோரைப் பார்த்துப் பேச வேண்டும்'' என்றான்.

''போகலாம்'' என்றாள் நந்தினி மகிழ்ச்சியுடன். ''கெமி உனக்கு தெரியுமா? நான் இப்ப சூப்பரா நான் வெஜ் சமைக்கக் கத்துகிட்டேன். உங்கப்பாவுக்கு நான் செய்யும் மீன் குழம்பு ரொம்பப் பிடிக்கும். சிங்கப்பூரில் நீ வில்லியம்ஸ் வீட்டில் சாப்பிட்டதிலிருந்தே கற்றுக் கொள்ள வேண்டும் என்று நினைத்திருந்தேன்.

இப்ப உங்கம்மா கைப்பக்குவம் எல்லாம் பழகிட் டேன்.''

கெமி வருத்தத்துடன் நந்தினியின் விரல்களை வருடினான். ''இந்த சமையல், குழம்புன்னு சாதாரண விஷயங்களுக்காக தாம்பத்யம்ங்கிற அசாதாரண பந்தத்தை இழக்க இருந்தேனே! நான் ஒரு முட்டாள் நந்தினி'' என்றான்.

''நான் கூட முதலில் அப்படித்தான் நினைத்தேன் கெமி. இது போல சாதாரண விஷயங்களுக்காகப் பிரிந்து போகிற அளவு மேலோட்டமானதா நம் அன்பு என்று கலங்கிப் போனேன். வெளியூரில் தனியாய் வசிக்கும் போது, நாம் பாஷை பேசும் லட்சணமான பெண்ணிடம் நெருங்கிப் பழக இயற்கையாய் ஏற்படும் ஆர்வம் தான் உனக்கும் ஏற்பட்டு, அவசரப்பட்டு கல்யாணம் வரை போய் விட்டாயோ என்று கூட நினைத்தேன். ஆனால் இங்கு வந்த பிறகு உன் வீட்டுச் சூழலில் பொருந்தாமல் நான் தனித்து நின்றபோதுதான் உன் மனநிலையை புரிந்து கொண்டேன்'' என்றாள் நந்தினி.

''நந்தினி நீ சொன்னதெல்லாம் சரிதான். ஒரு விஷயம் தவிர. நான் உன்னை அவசரப்பட்டு திருமணம் செய்யவில்லை. இதுவரை உனக்கே தெரியாமல் உன்னைப் பார்த்த முதல் நாளை மனசுக்குள் பதிந்து வைத்திருக் கிறேன். திருச்சி கல்யாணத்தில்தானே நான் உன்னை முதலில் சந்தித்ததாக நினைத்திருக்கிறாய்? அதற்கு முன்பே உன் கல்லூரி வாசலில் என் பைக்கை நீ கடந்து போனாய். அப்போதுதான் முதன் முதலாய் உன்னைப் பார்த்தேன். ஆனால் நீ என்னைப் பார்க்கவில்லை. பார்த்த வுடனேயே நீ என் மனதில் பதிந்தும் போனாய். பிறகு பல



முறை உன் கல்லூரி வழியாகச் சென்றும் நான் உன்னைப் பார்க்க முடியவில்லை. ஒரு நாள் எதிர்பாராமல் திருச்சியில் உன்னை சந்தித்தேன். உன்னிடம் விடைபெறக் கூட முடியாமல் மறைந்து போய் மீண்டும் சிங்கப்பூரில் பார்த்தேன். மூன்று முறை உன்னை என் கண்களில் காட்டிய கடவுள் நாலாவது முறையும் காட்டா விட்டால் என்ன செய்வது என்ற பயத்தில்தான் உடனே திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்று நினைத்தேன். ஆனால் உன்னைக் காதலித்த உன்னுடன் வாழ்ந்த இத்தனை நாட்களில், உன்னைப் பிரிந்த இந்த நாட்களில்தான் நீயில்லாமல் என்னால் வாழ முடியாது என்பதை உணர்ந்து கொண்டேன்.''

கெமி சொன்னதைக் கேட்டு ஆச்சரியமான நந்தினி. ''என்னை முன்பே பார்த்திருப்பதாக நீ சொன்னதே இல்லையே!'' என்றாள் வியப்புடன்.

''உன்னைப் பற்றிய ஒரு விஷயம் உனக்கேத் தெரியாத இனிய ரகசியமாக எனக்குள் வைத்துக் காப்பாற்ற வேண்டும் என்று நினைத்தேன். ஆனால் நான் அவசரப் பட்டு அரைகுறையாய் முடிவெடுத்து உன்னை திருமணம் செய்து கொண்டதாக இன்னொரு முறை நீ நினைக்கக் கூடாது. அதனால்தான் சொன்னேன்.''

மேற்கொண்டு பேசும் முன் யாரோ கதவைத் தட்டவே, நந்தினி கதவைத் திறந்தாள். மேரி இருவருக்குமான சாப்பாட்டு பாத்திரங்களுடன் நின்றிருந்தாள். ''அம்மா கொடுக்கச் சொன்னாங்க'' என்றபடி அவள் சாப்பாட்டை மேஜை மீது வைத்து விட்டு அகன்றதும் ''கெமி சாப் பிடலாமா?'' என்றாள் நந்தினி.

''இல்ல நந்தினி. இன்னும் நேரம் போகட்டும். எனக்குப் பசி என்று ஒன்றிருப்பதாகவே நினைவில்லை.''

''அது மட்டுமா நினைவில்லை? நான் என்ன கேட்டாலும் தருவதாகச் சொன்னாயே. அதைக் கூட மறந்து விட்டாய்.''

''நான் மறந்து விட்டதாக யார் சொன்னது?''

''பிறகு ஏன் அதைப் பற்றி கேட்கவே இல்லை?''

''எனக்குத் தெரியும், உனக்கு என்ன வேண்டுமென்று. அதனால் கூட கேட்காமல் இருக்கலாம்.''

''தெரியுமா? அப்ப நான் என்ன கேட்பேன்னு சொல் பார்க்கலாம்!''

''குழந்தை தானே!'' அவள் அருகே வந்து காதருகே முணுமுணுத்தான் கெமி.

நந்தினி சிவந்த முகத்தைத் திருப்பியபடி சொன்னாள்.

''ஆமாம். குழந்தைதான். ஆனா அதை நீ தருவாய்னு தான் எனக்கு நம்பிக்கை இல்ல?''

''அடிப்பாவி. ஏன்?''

''பின்னே, வந்ததிலிருந்து பேசிப் பேசியே பொழுதை கழிப்பதைப் பார்த்தால்...

நந்தினி முடிக்காமல் எழுந்து ஓட, கெமி சிரித்தபடி அவளைத் துரத்தத் தொடங்கினான்.

p. 229 [illegible] 10/2/09
...MARA PUBLIC LIBRARY
1 0 FEB 2009